# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## 2017

# வெளிநாட்டுஅலுவல்கள் அமைச்சு

| உள்ளடக்கம் | பக்க இல. |
|---|---|
| 01. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தொலைநோக்கு செயற்பணி, விடயங்கள் மற்றும் தொழிற்பாடுகள் | 1 |
| 02. முன்னுரை | 3 - 7 |
| 03. அமைச்சின் நிறுவனசார் வரைபடம் | 9 - 10 |
| 04. சுருக்கம் | |
| பிரிவுகளின் முன்னேற்ற அறிக்கை | |
| - ஆபிரிக்க விவகாரங்களுக்கான பிரிவு | 11 - 26 |
| - கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு | 27 - 36 |
| - கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பிரிவு | 37 - 102 |
| - பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகப் பிரிவு | 103 - 113 |
| - ஐரோப்பிய ஒன்றியம், பல்தரப்பு நேச உடன்படிக்கை மற்றும் பொதுநலவாயப் பிரிவு | 115 - 124 |
| - நிதிப் பிரிவு | 125 - 131 |
| - பொது நிருவாகப் பிரிவு | 132 - 136 |
| - சட்டப் பிரிவு | 137 - 144 |
| - மத்திய கிழக்கு | 145 - 176 |
| - சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்ற பிரிவு | 177 - 189 |
| - வெளிநாட்டு நிருவாகப் பிரிவு | 191 - 199 |
| - வெளிநாட்டில் வதியும் இலங்கையர் பிரிவு | 201 - 206 |
| - கொள்கை திட்டமிடல் பிரிவு | 207 - 210 |
| - உபசரணைப் பிரிவு | 211 - 222 |
| - பொது தொடர்பாடல் பிரிவு | 223 - 227 |
| - தெற்கு ஆசியா மற்றும் சார்க் பிரிவு | 229 - 247 |
| - ஐக்கிய நாடுகள், பல்தரப்பு விவகாரங்கள், மனித உரிமைகள், மாநாடு மற்றும் நல்லிணக்கப் பிரிவு | 249 - 256 |
| - ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளுக்கான பிரிவு | 257 -269 |
| - மேற்குப் பிரிவு | 271 - 307 |
| 05. வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்களின் வலையமைப்பு | 309 |
| 06. 2017 ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் உள்ள இராஜதந்திர தூதரகங்களினால் சேகரிக்கப்பட்ட வருவாய்கள் | 311 - 314 |
| 07. 2017 ஆம் ஆண்டில் இலங்கை தூதுவராலயங்களினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கொன்சியூலர் செயற்பாடுகள் | 315 - 317 |

## தொலைநோக்கு

சர்வதேச சமூகத்திற்குள் பொறுப்புள்ள நாடாகவும் சகல நாடுகளுடனும் நட்புறவுத் தொடர்புகளை பேணுகின்ற நாடாகவுமிருத்தல்

## செயற்பணி

"அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைக்கு ஏற்ப, இலங்கையின் தேசிய நலன்களை ஊக்குவித்தல், திட்ட ஏற்பாடு செய்தல் மற்றும் பாதுகாத்தல் அத்துடன் இலங்கையின் தேசிய நலன்களுக்கு அமைவாக வெளிநாட்டு உறவுகளை முகாமை செய்வதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல்"

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் விடயங்களும் பணிகளும்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டில் இலங்கையின் பிரதிநிதித்துவம், சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் நேச உடன்படிக்கைகள், இலங்கையில் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் என்பவற்றின் பிரதிநிதித்துவம், வெளிவாரியான பிரசாரம், இராஜதந்திர சட்டவிலக்களிப்புக்கள், சிறப்புரிமைகள் மற்றும் கொன்சியூலர் பணிகள் என்பவை தொடர்பான அரசியல் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்

# முகவுரை

இலங்கையின் வெளிநாட்டு கொள்கையை வகுத்தளித்தல் மற்றும் நிறைவேற்றுதல் போன்றவற்றிற்கு பொறுப்பளிக்கப்பட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் நிறுவகம் **"எல்லோரிடமும் நட்பு மற்றும் யாரிடமும் பகைமை இல்லை"** என்ற மிகவும் முக்கியமான வெளிநாட்டு கொள்கையின் கீழ் அரசியல் பொருளாதாரம் சமுதாய மற்றும் கலாசாரம் என்பனவற்றை தொடர்ந்தும் முன்னேற்றம் அடையச் செய்து மற்றும் பாதுகாத்து வருகின்றது. ஜனநாயக மேம்பாடு நல்லாட்சி மனித உரிமைகள் சட்டத்தின் நல்லாட்சி நல்லிணக்கம் மற்றும் நீடித்த அபிவிருத்தி என்பனவற்றின் திசையில் தேசிய ஒற்றுமை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக இலங்கையின் சர்வதேச ஈடுபாடுகள் இலங்கையை ஒரு சர்வதேச சமுதாயத்தில் பொறுப்பான ஒரு அங்கத்தவராகவும் மற்றும் சர்வதேச சமுதாயத்தில் அதனுடைய உரிய இடத்தையும் மதிப்பையும் பெற்று அதன் மூலம் மக்களுக்கு அநேக நன்மைகளை பெற்றுத் தருகின்றது.

மேற்கூறப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர், மற்றும் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ இராஜாங்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோர் பல பிராந்தியங்களில் உள்ள அநேக நாடுகளுடனான எங்களது உறவுகளை வலுப்படுததுவதில் முக்கியமானவர்களாக திகழ்கின்றார்கள். அதன் விளைவு எங்களது வெளிநாட்டு உறவுகளில் உறுதியான மற்றும் ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற எல்லா சர்வதேச பங்காளிகள் மற்றும் நிறுவகங்களுடன் இலங்கையினது நேர்மையான மற்றும் வெளிப்படையான ஈடுபாடல்கள் என்பன கூட்டுறவு சார்ந்த பங்காளித்துவத்தை பல சிறந்த துறைகளாக மாற்றுவதற்கு வழிவகுத்துள்ளது.

இலங்கை தெற்கு ஆசியாவில் உள்ள நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை விருத்தி செய்ய தொடர்ந்தும் ஒரு உயர்ந்த முன்னுரிமையை வழங்குகின்றது. அதுபோல இந்தியா இலங்கையுடனான உறவில் உயர்ந்த மட்டத்தில் வழமையான தொடர்பாடல்கள் என்பன பல துறைகளில் அதிகறித்த கூட்டுறவை கண்டுள்ளது. அதுபோல பாக்கிஸ்தான் பங்களாதேஷ் பூட்டான் ஆப்கானிஸ்தான் மற்றும் மாலைதீவுகள் என்பன பிராந்திய கூடடுறவுக்கான தெற்கு ஆசியா சங்கத்தில் உள்ள எமது நண்பர்களது பரஸ்பர நம்பிக்கை மற்றும் இனிய நட்பை எங்களது நண்பர்களான பிராந்திய கூட்டுறவுகளுக்கான தெற்கு ஆசிய சங்கம் (சார்க்) பிராந்தியத்தில் புதுப்பிக்க வழிவகுக்கின்றது.

இலங்கை மற்றும் சீனா என்பனவற்றின் உயர்மட்ட விஜயங்கள் சரித்திரமுக்கியம் வாய்ந்த மற்றும் சிநேகபூர்வ உறவுகளை இரு நாடுகளுக்கமிடையே மேலும் பலப்படுத்தி அதன் மூலம் பொருளாதார துறை அடங்கலாக பல துறைகளில்

கூட்டுறவை அதிகரத்துள்ளது. இரண்டு நாடுகளுக்கிடையே ஒரு பரந்த கூட்டுவாணிகத்தை நிர்மாணித்து ஜப்பான் உடனான உறவு ஒரு மைல்கல்லை எட்டியுள்ளது. இலங்கையின் இராஜதந்திர உறவுகள் அதாவது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா, மலேசியா மற்றும் கொரிய ஜனநாயக குடியரசு என்பன பல துறைகளில் ஒத்துழைப்புடன் தொடர்ந்து விஸ்தீரணம் அடையச் செய்கின்றது. இலங்கை ரஷ்யா இடையே உள்ள உறவுகள் இரு நாடுகளுக்குமிடையே கூட்டுறவை மேலும் அதிகரிக்க பங்களிக்கும் பல புதிய செயற்திட்டங்களை புதிதாக ஆரமபித்து புதிய வளர்ச்சிகளை கண்டுள்ளது.

2016ஆம் ஆண்டு முதல் ஐக்கிய அமெரிக்காவுடனான இலங்கையின் உறவு இரண்டு நாடுகளுக்கு இடையே உயர்மட்ட ‘‘கூட்டு வணிக உரையாடல்’’ என்பதனை ஸ்தாபித்து பல துறைகளில் பரந்த கூட்டுறவு மற்றும் புரிந்துணர்வு என்பனவற்றின் ஈடுபாட்டின் ஒரு புதிய எல்லைக்குள் பிரவேசித்துள்ளது. இலங்கையில் நல்லிணக்கம் சமாதானம் மற்றும் சமுதாய பொருளாதார முன்னேற்றம் என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட உதவியுடன் மற்றும் அமெரிக்க காங்கிரஸ் மற்றும் நிர்வாகம் என்பனவற்றுடன் இரு நாடுகளுக்குமிடையிலான வழமையான உரையாடல்கள் என்பன இருதரப்பு உறவை வலுவடையச் செய்துள்ளன. பிரேசில் கனடா அடங்கலாக அமெரிக்காஸ், லத்தீன் அமெரிக்கா பிராந்தியத்திலுள்ள நாடுகளுடனான இலங்கையின் வழமையான உரையாடல்கள் இருதரப்பு உயர்மட்ட விஜயங்கள் மற்றும் பரஸ்பர நன்மை வழங்கும் துறைகளின் கூட்டுறவு என்பனவற்றை மேலும் விஸ்தீரணம் அடையச் செய்துள்ளன.

இலங்கையின் ஐரோப்பிய நாடுகளுடனான ஈடுபாடு ஐக்கிய இராஜ்யம், ஜேர்மனி, ஒஸ்தீரியா, சுவீடன, இத்தாலி, பிரான்ஸ, ஸ்லோவினா, நோர்வே சுவிஸ்லாந்து மற்றும் போலந்து போன்ற ஐரோப்பிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் இருதரப்பு உறவை விருத்தி செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் உறுதியான நன்மைகளை பிரதிபலிக்கின்றன. மீளாய்வு காலப்பகுதியில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மார்க்கமாக அடைந்த ஒரு பெரிய சாதனை ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஜிஎஸ்பியை திரும்பவும் பெற்றுக்கொள்ள தகுதி பெற்றமையாகும்.

இலங்கையின் மத்திய கிழக்குடனான முக்கியமாக சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜ்யம, கத்தார், குவைத் என்பனவற்றுடனான விஸ்தரிப்பு வணிக கூட்டுறவு சுற்றுலா மற்றும் திறமை வாய்ந்த ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர்பான கூட்டுறவை விஸ்தரிக்க உயர்மட்ட குழுக்களின் விஜயங்களில் கனிசமான முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது. இலங்கை ஆபிரிக்க பிராந்தியத்தில் நெருங்கிய தொடர்புகளை மேற்கொள்ளும் அதேவேளையில் தென் ஆபிரிக்காவுடனான அதன் உறவு ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பான முன்னேற்றத்தை கொண்டுள்ளது. இலங்கையின் ஆபிரிக்க ஒன்றியத்திற்கான அவதானிப்பாளராக இருக்கும்

அங்கத்துவம் ஆபிரிக்க பிராந்தியத்துடனான பலவித கூட்டுறவு என்பனவற்றை மேலும் வலுவடையச் செய்கின்றது.

பலதரப்பட்ட இராஜதந்திரத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் புதிய அரசு எல்லா நாடுகளுடனும் நல்லுறவை பேணி மற்றும் ஐக்கிய நாடுகள் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளுடன் ஒத்தாசைகளை அதிகரிக்க பொறுப்பேற்றுள்ளது இந்த முயற்சியில் இலங்கை ஐக்கிய ஒன்றியத்தின் பலவித நிகழ்வுகளில் தீவிரமாக பங்குபற்றி அதனூடாக நாட்டிற்கு அதிகமான நன்மைகளை பெற்றுத் கனிசமான முன்னேற்றத்தை கண்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு “ நல்லுறவை மேம்படுத்தல், பொறுப்புக்கூறல், மற்றும் இலங்கையில் மனித உரிமைகள்” என்ற தலைப்பில் 2017ம் ஆண்டு மார்ச் மாதம் மற்றும் 2015ம் ஆண்டு தீர்மானத்தில் அடங்கியுள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் பொறுப்பை கொண்டுள்ளது. மக்கள் பூர்வீகம், பால்வேறுபாடு, சமூக நிலைப்பாடு, வயது மற்றும் ஏனைய அடையாளங்கள் என்பனவற்றை பொருட்படுத்தாது நாட்டின் எல்லா குடிமக்கள் தொடர்பான போரின் தாக்கங்களை பாதிக்கப்பட்டோர்களுக்கான அணுகுமுறையுடன் உண்மை போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பணம் நீதி பாதிக்கப்பட்டவர்கள் திரும்பவும் அதே நிலையை எதிர்கொள்ளாது இருத்தல் என்பன அடங்களாக அரசாங்கத்தின் நல்லிணக்கம் சம்பந்தமான நிரல் தொடர்பான விவகாரங்களை ஒருங்கமைக்க தொடர்ந்தும் செயற்படுகின்றது.

இலங்கை பொறுப்பேற்கப்பட்ட பலவித மனித உரிமை உடன்படிக்கைகளுக்கான பொறுப்புகளை நிறைவேற்ற வெளிநாட்டு அலுவலக அமைச்சின் ஒப்புதலுடன் வேறு முகவர்கள் மற்றும் அமைச்சுகளுடன் இணைந்து அவை அமைச்சர்களால் நிர்மாணிக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான இடை - அமைச்சு குழுவின் திட்டத்தின் தேசிய மனித உரிமைகள் செயல்திட்டம் 2017-2021யை வகுத்தளித்துள்ளது.

இலங்கை பல சகாப்தகாலமாக ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படைகளின் முயற்சிகளுக்கு பங்களித்துள்ளது. அத்துடன் அதன் ஊடாக ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படைக்கும் தனது பங்களிப்பை அதிகரிப்பதற்கு திரும்பவும் உறுதிபூண்டுள்ளது. அமைதி காக்கும் படையினருக்கு சிறந்த பங்களிப்பை வழங்க வாக்குறுதி வழங்கியுள்ளது. தற்சமயம் 8 அமைதி காக்கும் 328 இராணுவ ஆளணிகள் சேவைக்கு அமர்தப்பட்டுள்ளார்கள். அத்துடன் ஆபிரிக்காவில் உள்ள அமைதிகாக்கும் நிலையங்களில் 32 ஊர்காவற் துறையினர்கள் சேவையில் உள்ளார்கள். 02 அதிகாரிகள் நிவ்யோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் சேவை செய்கின்றனர். பொதுநலவாய பகுதிகளில்

காலணித்துவ அங்கத்தவர்களுடன் உரையாடல்களை அதிகரிக்க இலங்கை பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உலகலாவிய உபகரண வணிக நடவடிக்கைகளின் பகுதியின் இந்து சமுத்திரத்தின் ஒரு கேந்திர மையமாக விளங்கும் இலங்கையின் இந்த முக்கியமான சிறப்புப் பெருமையை கருத்தில் கொண்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இலங்கையின் அமைவிடத்திலிருந்து ஆகக்கூடிய பயன்களை பெற பலவித இராஜதந்திர முயற்சிகளால் சமாதானமான உரையாடல்களின் நோக்கை மேம்படுத்த மேற்கொண்டள்ளது.

இதனை மேற்கொள்ள இந்து சமுத்திர விளிம்பு கழகத்தின பல சந்திப்புகளில் அதிகமாக பங்குபற்றுதல் அத்துடன் பொருளாதார கூட்டுறவு மற்றும் பலவித துறைகளுக்கான வங்காள விரிகுடா முயற்சிகள் என்பன இந்தத் துறையில் நாட்டின் நோக்கங்களை முன்னேற்றமடையச் செய்யும் ஒரு சொற்பொழிவு மேடையாக அமைந்துள்ளது.

நாட்டின் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வணிகர்கள் என்பவர்களை நாட்டுக்கு ஈர்த்தெடுக்க மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்த மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அதிகரிக்க நாட்டை ஒரு அமைதியான மற்றும் பாதுகாப்பான நாடாக எடுத்துக்காட்ட அமைச்சு தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. பிராந்தியத்தின் முக்கிய பொருளாதார நடைபாதைகளின் உலகலாவிய பெறுமதி மிக்க தொடர்புகளுடன் இணைப்புகளை ஸ்தாபிக்க நன்றாக அடையாளம் காணப்பட்டதாக செயற்படும். பொருளாதாரத்துடன் குறிப்பாக சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட வர்த்தகம் மற்றும் பொருளாதார கொள்கை தீர்மானங்கள் உடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் சர்வதேச வர்த்தக முகவர்களுடன் ஒருங்கிணைகின்றது.

சிறந்த மற்றும் வினைத்திறனுடனான கொன்சுயுலர் சேவையை வழங்க ஒரு வணிக பொறியியல் செயல்முறை மேற்கொள்ளப்பட்டு மற்றும் ஒரு புதிய எண்முறைமை 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் விளைவாக கணனி உதவி வடிவமைப்பு தன்னியக்கமயமாக்கப்பட்ட உடனடியான மற்றும் திறமையான அத்துடன் ஒன்றுக்கொண்டு தொடர்புபட்டு செயல்படுதல் போன்ற சேவைகளை நாட்டின் பொருளாதார நன்மைகளுக்கான அந்நிய நாட்டு செலவாணியை சம்பாதிக்கும் மக்களுக்கு வழங்குகின்றது. ஒரு வரலாற்று நகர்வில் அமைச்சின் கொன்சுயுலர் பிரிவின் அலுவலகங்களின் கிளைகள் வடமாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டு மற்றும் இந்த மாகாணங்களில் வாழும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய மீளாய்வு காலப்பகுதியில் தென் மாகாணத்தில் ஒரு கிளையை ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக குடியேற்றவாசி பணியாளர்களுக்கு மற்றும் அவர்களது


குடும்பங்களுக்கு வெளியூரில் உள்ள இலங்கை தூதரங்களில் ஊடாக வழங்கப்படும் கொன்சுயுலர் சேவைகளை மேம்படுத்தும் குறிக்கோளுடன் அமைச்சும் திட்டங்களை நிறைவேற்றி உள்ளது. குடும்ப அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நஷ்டஈடு கொலைக்கான தண்டணைப்பணம் மற்றும் ஏனைய கொடுப்பணவுகள் என்பனவற்றை பகிர்ந்தளிப்பதற்காக 2017ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஏறத்தாழ 252 மில்லியன் ரூபாவை பெற்றுள்ளது. அதன்படி 122 குடும்பங்களுக்கு 195 மில்லியன் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சுயுலர் பிரிவு வழங்கும் சேவையை பாராட்டும் முகமாக அரசதுறை மற்றும் தனியார்துறை பிரிவின் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற 19வது தேசிய சிறந்த தர ஐசிடி விருதுகள் விழாவில் தங்க விருது மற்றும் அரசதுறையில் ஐசிடி சாதனை விருது வழங்கப்பட்டது.

2016ஆம் ஆண்டில் எதியோப்பியா அடிஸ் அபாபாவில் ஒரு வதிவிட தூதரகத்தையும் 2015ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இத்தாலியில் மிலானில் கொன்சுயுலர் அலுவலகங்கள் அமைத்து அத்துடன் நிக்கோசியா சைப்பிரஸில் ஒரு புதிய கொன்சுயலர் ஜெனரல் ஆகியோரை ஆரம்பித்து இலங்கையின் இராஜதந்திர வலையதளத்தை விஸ்தரிக்க அமைச்சினால் திட்டங்கள் தீட்டப்பட்டன.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் மற்றும் பிரயாணம் செய்வோர்களது தேவைகள் என்பனவற்றை மற்றும் இலங்கையின் தேசிய நன்மைகள் இறைமை அதன் அடையாளம் என்பனவற்றை பாதுகாத்து மேன்மைபடுத்த அமைச்சு தொடர்ந்து செயற்பட்டு வரும். நாட்டுக்கும் மற்றும் இலங்கை மக்களுக்காக பெரிய முன்னேற்றத்தை நோக்கி செயல்படும் இலங்கை அரசாங்கத்தின் இலக்கிற்கு இந்த முக்கியமான அம்சங்கள் ஏதுவாக அமைந்துள்ளன.

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**
**குடியரசுக் கட்டிடம்**
**கொழும்பு 01**

# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அமைப்பு விளக்கப்படம்



# ஆபிரிக்க விவகாரங்களுக்கான பிரிவு

**ஆபிரிக்க பிராந்தியம்**

**எகிப்து**

**அ. இருபக்க உறவுகள்**

I. 2018-2021 பதவிக்காலத்திற்கான திரு. பிரசாத் காரியவசம் அவர்கள் அனைத்து புலம்பெயர் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி ஐநா குழுவின் இலங்கை அபேட்சகருக்கு எகிப்தின் ஆதரவு வழங்கப்பட்டது.

II. 2017-2019 பதவிக்காலத்துக்காக ஐநா மனித உரிமைகள் மன்றம் மற்றும் 2017-2020 பதவிக்காலத்துக்காக மனித உரிமைகள் பற்றிய ஐநா குழுவுக்கான எகிப்து அபேட்சர்கருக்கு இலங்கை ஆதரவளித்து.

III. எகிப்தில் இஸ்லாமிய விவகாரங்களுக்கான உயர்பீட மன்றத்தின் 27ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்கு தபால் மற்றும் தபால் சேவைகள் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் எம்.ஏ. ஹலீம் எகிப்துக்கு விஜயம் செய்தார்.

I. எகிப்தில் ''சினாய் என்பது சமயச் சுற்றுலாவின் தலைநகரம்'' மாநாட்டில் கலந்து கொள்வதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க கௌரவ இராஜங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி விஜயம் செய்தார்.

**ஆ. பொருளாதார உறவுகள்**

I. விவசாயத்திற்றான எகிப்து சர்வதேச நிலையம் விவசாய முகாமைத்துவத்தின் பல்வேறு துறைகளின் மூன்று மாதகால பயிற்சிக்காக இலங்கை விவசாய அலுவலர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குகின்றது.

II. கெய்ரோவில் உள்ள றம்சஸ் ஹில்டன் ஹோட்டலில் உலக இலங்கை தேனீர் விருந்துபசாரம் எகிப்தின் தேயிலை வர்த்தக சங்கத்தினரின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

III. 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கெய்ரோ சர்வதேச சந்தையில் இலங்கை தேயிலைச் சபையினால் செயற்படுத்தப்பட்ட பொருட்காட்சி கூடமொன்றுடன் இலங்கை பங்குபற்றியது.

IV. கெய்ரோ மற்றும் பரவோனிக் கிராமத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் ஒக்டோபர் 6 அன்று கெய்ரோவில் உள்ள பிரிட்டி பல்கலைக்கழகத்தில் உள்ள இளைஞர்களை இலக்காகக் கொண்டு மூன்று பல்கலைக்கழகங்களில் சுற்றுலா ஊக்குவிப்பு ஒழுங்கமைக்கப்பட்டது.

V. இலங்கையில் DSI கம்பனிக் குழுவின் உறுப்பினர் ஒருவரான சம்சொன் கொம்பவுன்ட் நிறுவனத்துக்கும் இறப்பர் மோட்டார் உதிரிப்பாகங்களில் விசேடத்துவம் பெற்ற எகிப்து தெகாசி குழுவிற்கும் இடையில் கூட்டு முயற்சி கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆபிரிக்க கண்டத்தில் வாகனத் தாயரிப்பாளர்களுக்கு தெகாசி குழுவில் சந்தை நுழைவு அனுகூலம் இதில் கிடைக்கப் பெறுவதுடன் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட வாகன உதிரிப்பாகங்களை எவ்வாறு தயாரிப்பது பற்றிய தொழில்நுட்ப அறிவு DSI குழுவுக்கு கிடைக்கும்.

VI. இலங்கையில் முதலீட்டு சூழல் மற்றும் முதலீட்டு எதிர்பார்ப்பு போன்றவற்றில் பூர்வாங்க ஆய்வொன்றுக்காக ஹொரஸ்கொன் கம்பனி குழுக்களின் தலைவர் திரு.நஹிபு சுவரிஸிற்கான வர்த்தக அபிவிருத்தி ஆலோசகர் திரு. கைதம் எம். கம்மால் 2016 ஒக்டோபர் 10-16 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.

### உ. கலாசார உறவுகள்

I. 2017 ஏப்ரலில் மேளம் மற்றும் மரபுக் கலைகளுக்கான சர்வதேச பண்டிகையில் இலங்கை இராணுவ கலாசார குழுவில் இருந்து 13 மேளதாரர்கள், நாட்டியதாரர்களைக் கொண்ட குழுவொன்று பங்குபற்றியது. சமூகத்தின் நலனுக்காக தூதரகத்திலும் அவர்கள் அரங்கேற்றினர்.

II. இலங்கையின் அதிமேதகு சனாதிபதி பதவியேற்ற சனவரி 8ஆம் திகதிய ஆண்டு நிகழ்வு கலாசார நிகழ்வு ஒன்றினைத் திறந்து வைத்தலுடன் தூதரகத்தில் கொண்டாடப்பட்டது.

III. சுதந்திர தினக் கொண்டாட்டங்கள். பெப்ரவரியில் சுதந்திர தினம் இலங்கை சமூகத்தின் பங்களிப்புடன் தூதுரகத்தில் நடைபெற்றது. இராஜதந்திர சமூகம், வர்த்தக, கைத்தொழில், சுற்றுலா பிரதிநிதிகள் மற்றும் ஊடகஙக்ளின் பங்களிப்புடன் றிச் கால்டன் ஹோட்டல் பொது வரவேற்பு ஒன்று நடாத்தப்பட்டது.

IV. சிங்கள, தமிழ் புதுவருடம், வெசாக் நிகழ்வு, இப்தார் நிகழ்வுகள் போன்றன இலங்கை சமூகத்தின் பெரும் எண்ணிக்கையிலானோரின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

### ஊ. ஊழியர் நலனோம்புகை

I. 2016 நவம்பரில் பவுனின் பெறுமதி குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து எகிப்தின் தொழில் நிலமை ஸ்திரமற்றதாக தோற்றம் பெற்றது. வீட்டுப் பணியாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளம் ஸ்டேர்லிங் பவுண் 500-600

குறைக்கப்பட்டுள்ளன. அல்லது பவுண்கள் பழைய விகிதத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இது எகிப்தில் பணியாற்றுகின்ற பல வீட்டுப் பணியாளர்கள் இலங்கைக்கு திரும்ப வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. வீசா இல்லாமல் எகிப்தில் தங்கியுள்ள அல்லது மேலதிக காலத்தை மீறி தங்கியிருந்தவர்களுக்கான தண்டப்பணத்தை எகிப்து அரசாங்கம் அதிகரித்துள்ளது. எகிப்தில் வீசா இன்றி சட்டத்துக்கு புறம்பாக பணியாற்றுகின்ற பல இலங்கையர் நாட்டுக்கு திரும்புவதற்கு காரணமாக அமைந்தது.

## 1. எத்தியோப்பியா

### அ. இருபக்க உறவுகள்

I. அடிஸ் அபாபாவைத் தளமாகக் கொண்ட இராஜதந்திர சமூகம், எத்தியோப்பிய மற்றும் ஆபிரிக்க ஒன்றியத்தின் சிரேஷ்ட அலுவலர்கள், இலங்கை புலம்பெயர் வாழ் சமூக அங்கத்தவர்கள், ஊடகங்கள் போன்றவற்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஏறக்குறைய 120 அதிதிகளின் பங்கேற்புடன் 2017 பெப்ரவரி 02 அன்று இலங்கை மற்றும் எத்தியோப்பிய வெளிநாட்டு அமைச்சர்களினால் தூதரகம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

II. இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஒருவர் மூலமான எத்தியோப்பியாவுக்கான முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை குறிக்கும் முகமாக 2017 ஜனவரி 30 – பெப்ரவரி 3 வரை கௌரவ மங்கள சமரவீர முன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எத்தியோப்பியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமென்றை மேற்கொண்டார். இவ்விஜயத்தின் போது எத்தியோப்பிய பிரமுகர்களுடன் சந்திப்புகளை நடாத்தினார். (எத்தியோப்பிய அதிதேமகு சனாதிபதி, கௌரவ சபாநாயகர், கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், கௌரவ வெளிநாட்டு முதலீடுகளுக்கு பொறுப்பான அமைச்சர்)

III. எத்தியோப்பியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு மீது இணைந்த ஆணைக்குழுவொன்றினை தாபிப்பதற்கான உடன்படிக்கையும் எத்தியோப்பியவுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர ஆலோசனைகள் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையும் இலங்கை வெளிநாட்டு அமைச்சரின் விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்டன.

IV. எத்தியோப்பியாவில் இலங்கைக்கான முதலாவது வதிவிட தூதரகப் பிரதானியாக தூதுவர், இரண்டு நாடுகளுக்கும் இடையில் உறவுகளை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் எத்தியோப்பிய அரசியல் பிரமுகாகளுடன் சந்திப்புகளை நடாத்தினார். (எத்தியோப்பிய அதிதேமகு சனாதிபதி, எத்தியோப்பிய கௌரவ பிரதம அமைச்சர்,

கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், பிரதம அமைச்சருக்கும் வெளிநாட்டு முதலீட்டுக்கும் ஆலோசகரான அமைச்சர் கலாநிதி அர்கபே ஒக்குவாபே)

V. மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியின் போது தூதரகமானது தொடர்புடைய ஆபிரிக்க நாடுகளுடன் இலங்கையின் இருபக்க உறவுகளை மேம்படுத்துவதற்காக அடிஸ் அபாபாவில் உள்ள ஆபிரிக்க தூதுவர்களுடன் பல எண்ணிக்கையிலான கூட்டங்களை நடாத்தியது.

VI. இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செப்டெம்பர் 18-29 வரை இலங்கையில் நடைபெற்ற இராஜதந்திர பயிற்சி நிகழ்ச்சியொன்றில் எத்தியோப்பிய வெளிநாட்டு சேவை அலுவலர் ஒருவர் பயிற்சி பெற்றார்.

**ஆ. பல்பக்க உறவுகள்**

I. 2017 பெப்ரவரி 2 அன்று எத்தியோப்பியாவுக்கான அவரது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் முன்னாள் அமைச்சர் ஆபிரிக்க ஒன்றிய தலைவியுடன் சந்திப்பொன்றை நடாத்தினார்.

II. அடிஸ் அபாபாவில் உள்ள ஆபிரிக்க ஒன்றியத்துக்கான இலங்கையின் வதிவிட நிரந்தரப் பிரதிநிதியாக தூதுவர் ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவி / பிரதித்தலைவி மற்றும் ஆணையாளருடன் சந்திப்புகளை நடாத்தினார்.

III. ஒன்றியத்தின் ஆபிரிக்க ஒன்றிய உறுப்பினர் அல்லாத உறுப்பினர் ஒருவராக (பங்காளிக் குழு) மற்றும் நிரந்தர பிரதிநிதியாக, தூதுவர் 2017 ஜனவரி மற்றும் ஜூனில் நடைபெற்ற ஆபிரிக்க ஒன்றிய உச்சிமாநாடுகளிலும் பல்வேறு தலைப்புகளில் ஆபிரிக்க ஒன்றியத்தில் நடைபெற்ற கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களிலும் தூதுவர் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

**இ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

VII. 2017 பெப்வரி அன்று எத்தியோப்பிய முதலீட்டு ஆணைக்குழுவின் வெளிநாட்டு முதலீடு பற்றிய அமைச்சரும் பிரதம அமைச்சருக்கான விசேட ஆலோசகருமான கலாநிதி ஆர்காபே ஒக்வபே முன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சந்திப்புகளை நடத்தினார்.

VIII. வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை அதிகரிப்பதற்காக எத்தியோப்பிய முதலீட்டு ஆணைக்குழுவின் தூதுவர் பெரும் எண்ணிக்கையிலான கூட்டங்களை நடத்தினார்.

IX. 2017 ஜுன் 20 அன்று இரு இலங்கைக் கம்பனிகளின் உற்பத்தி தொழிற்பாடுகள் அதாவது இசபெல்லா காலுறைத் தயாரித்தல் கம்பனி மற்றும் கிருதாமணி காமன்ஸ் பி.எல்.சி. என்பன எத்தியோப்பியாவில் ஹவாசா கைத்தொழில் பூங்காவில் எத்தியோப்பிய பிரதமர் மற்றும் இலங்கைத் தூதுவர் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

X. தற்போது எத்தியோப்பியாவின் சில கம்பனிகள் இலங்கைக் கம்பனிகள் அமையப் பெற்றுள்ளதுடன் சுமார் 350 இலங்கையர்கள் எத்தியோப்பியாவில் பணி புரிகின்றனர்.

XI. எத்தியோப்பிய இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற சாத்தியத்தினை கண்டறிவதற்காக 2017 ஜுன் முதன் வாரத்தின் போது இலங்கையின் தேசிய இரத்தினக்கல் ஆபரணங்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையிலான 9 பேர் கொண்ட வர்த்தக பேராளர் குழு எத்தியோப்பியாவுக்கு விஜயம் செய்தது.

XII. பெரும் எண்ணிக்கையிலான இலங்கை கம்பனிகளான அதாவது டேவிட் பீரிஸ்,ஸ்மார்ட் சேர்ட்ஸ், சவிந்தா எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிட்டெட், காமினி, இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனம் போன்ற கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பேராளர் குழுவொன்று எத்தியோப்பியாவில் தமது வர்த்தக செயற்பாடுகளை தாபிப்பதற்கான சாத்தியங்களை கண்டறிவதற்காக எத்தியோப்பியாவுக்கு விஜயம் செய்தது. இலங்கையில் வர்த்தக பங்குடமைகளை தாபிப்பதற்காக பல எண்ணிக்கையிலான எத்தியோப்பியாவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

XIII. கொழும்புக்கு அடிஸ் அபாபாவுக்கும் இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிப்பதற்கு எத்தியோப்பிய எயார்லைனுடன் கலந்துரையாடுவதற்கு எத்தியோப்பிய சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்துடன் தூதுவர் 2017 ஜுலை 26 அன்று சந்திப்பொன்றினை நடத்தினார்.

XIV. இலங்கைக்கும் எத்தியோப்பியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேலும் அதிகரிப்பதற்கு தூதுவர் எத்தியோப்பிய வர்த்தக சம்மேளனத்தின் முக்கிய அலுவலர்களுடன் சந்திப்புகளை நடாத்தினார். (அடிஸ் அபாபா வர்த்தக சம்மேளனம் மற்றும் துறைசார் அமைப்பின் செயலாளர் நாயகம், ஒன்றிணைந்த ஆபிரிக்க வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின்

நிறைவேற்றுப் பணிப்பாளர்,எத்தியோப்பிய வர்த்தக சம்மேளனம் துறைசார் அமைப்பின் செயலாளர் நாயகம் )

**ஈ. கலாசார உறவுகள்**

I. எத்தியோப்பியாவில் வாழ்கின்ற இலங்கை புலம்பெயர் சமூகம் தூதரகத்தின் வழிகாட்டலின் கீழ் 2017 மே 2 அன்று ஹவாசாவில் சிங்கள தமிழ் புதுவருடத்தினை ஏற்பாடு செய்தது.

**உ. தொழிலாளர் நலனோம்புகை**

I. தற்போது எத்தியோப்பியாவில் 350 இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர். இலங்கையர்களின் நலனோம்புகை வசதிகளை மேம்படுத்துவதற்கும் எத்தியோப்பியாவில் வாழ்கின்ற மற்றும் பணியாற்றுகின்ற புலம்பெயர் இலங்கை சமூகத்துடன் தொடர்புடைய ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் எத்தியோப்பிய முதலீட்டு ஆணைக்குழு மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களுடன் தூதரகம் பல எண்ணிக்கையிலான கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

II. 2017 மார்ச் மூன்றாவது வாரத்தின் போது சோமாலிய கடற்கொள்ளையர்கள் எயார்ஸ் 13 கப்பலையும் அதன் இலங்கை பணிக்குழுவினையும் கடத்தினார்கள். சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் இருந்து பணிக்குழுவினர்களை பாதுகாப்பதற்காக தூதரகம் சோமாலிய அரசாங்கத்துடனும் தொடர்புடைய முகவராண்மையுடனும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

III. 2017 ஜுன் 30 அன்று அடிஸ் அபாபாவில் உள்ள போலே சர்வதேச விமான நிலையத்தில் நிர்க்கதியான இலங்கை சமாதான படைப்பிரிவிற்கு 48 அலுவலர்களை தூதரகம் உதவி வழங்கியது.

**3.கென்யா**

**அ. இருபக்க உறவுகள்**

I. இலங்கை நடுத்தர மற்றும் நீண்டதூர பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சி பற்றறையொன்றுக்காக உயர்ஸ்தானிகரின் அழைப்பின் பேரின் கென்யா விளையாட்டு அமைச்சு 2017 பெப்ரவரி 17 அங்கத்தவர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்று பங்குபற்றியது.றியாரா பல்கலைக்கழகம் மற்றும் உயர்ஸ்தானிகராலயத்தினால் ஆபிரிக்க பெண் பிள்ளைகள் பற்றிய குழுக் கலந்துரையாடல் ஒன்று 2017 ஜுன் 10 அன்று இணைந்து ஏற்பாடு

செய்யப்பட்டது. இலங்கையின் தேசிய சிறுவர் அதிகாரசபையின் தாபகர் கலாநிதி கிரந்தி விஜயமான அதிதி பேச்சாளராக பங்கேற்றார்.

**ஆ பல்பக்க உறவுகள்**

I. உயர்ஸ்தானிகராலயமானது ஐ.நா வாழிடம் மற்றும் ஐ.நா சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் ஆகிய இரண்டுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய நிரல் முகவராண்மைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதுடன் வருடம் முழுவதும் நைரோபயில் ஐ.நா அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் பங்கேற்றது.

II. பிரதி நீதி அமைச்சர் கௌரவ சாரதி துஸ்மந்த மைத்திரிபால அவர்களின் தலைமையிலான இலங்கை மேலாளர் குழு நைரோபியில் 2017 ஆம் ஆண்டு 1-5 வரை நடைபெற்ற ஆசிய – ஆபிரிக்க சட்ட ஆலோசனை அமைப்பின் 66ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்கு சென்றது.

III. அமெரிக்க வாழிட அமைப்பின் ஆளுகை மன்றத்தின் 26ஆவது அமர்வு 2017 மே 8-12 தொடக்கம் நைரோபியில் நடைபெற்றது. வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் செயலாளர் திருவதி டபிள்யு.கே.கே. அத்துகோரள தலைமையிலான இலங்கை பேராளர் குழு பங்கேற்றது.

**4. நைஜீரியா**

**அ. இருபக்க உறவுகள்**

i. தூதரகம் பின்வரும் நிகழ்வுகளுக்கு தூதரகம் வசதியளித்தது.

- 2017 ஆகஸ்டில் நடைபெற்ற கருத்தரங்களில் இரண்டு இராணுவ அலுவலர்கள் பங்கேற்பு
- நைஜீரியாவிடம் இருந்து மசகு எண்ணெய் கொள்வனவு செய்வதற்கான சாத்தியப்பாடடை கண்டறிவதற்காக இலங்கையின் முன்னாள் பெற்றோலிய கௌரவ அமைச்சரின் நைஜீரியாவுக்கான விஜயம்.
- உயர்கல்வி மற்றும் பயிற்சிகளுக்காக நைஜீரியாவில் இருந்து ஆயுதப்படை ஆளணியினரின் இலங்கைக்கான விஜயம்.

ii. உயர்ஸ்தானிகர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரையும் வெளிநாட்டு செயலாளரையும் உபசரணைப் பிரதானியையும் சந்தித்து இலங்கையின் அபிவிருத்திகள் பற்றி அவர்களுக்கு விளக்கமளித்தார்.

### ஆ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்

I. தூதரகத்தின் இலங்கையின் 150 தேயிலை நிகழ்வினை தூதரகம் ஏற்பாடு செய்து நைஜீரியாவின் இலங்கை தேயிலைப் பற்றிய விழிப்புணர்வை தோற்றுவித்தது.

II. இலங்கை பொருட்களுக்கான மிக விரிவான சந்தை ஆய்வொன்றினை தூதரகம் மேற்கொண்டது. நைஜீரியாவில் இலங்கைப் பொருட்களை பிரபல்யப்படுத்துவதற்கு இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கான உதவிகளாக இது அமைந்திருந்தது.

### இ. தொழிலாளர் நலனோம்புகை

I. நைஜீரியாவின் இலங்கை பணியாளர்கள் பெருமளவில் காணப்படவில்லை. வழங்கப்படாத சம்பள நிலுவைகளைப் பெற்றுக் கொள்ள தூதரகம் தலையிட்ட சில சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் நிர்க்கதிக்குள்ளான சிலர் இலங்கையர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கு வசதியளிக்கப்பட்டது.

II. இரண்டு தடவைகள் லெபனினிலில் இருந்து நிர்க்கதியான சில கடலோட்டிகளை நாட்டுக்கு திருப்பி அனுப்புவதில் தூதரகம் முக்கிய பங்காற்றியது.

## 5. சீசல்ஸ்

### அ. இருபக்க உறவுகள்

III. சீசல்ஸ் ஜனாதிபதி அதிமேதகு டேனி பௌரே இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு சுற்றுலா, விவசாயம், கடற்றொழிலில், நீதித்துறை மற்றும் சட்ட அலுவல்கள் போன்ற துறைகளில் ஒத்துழைப்பினை அதிகரிப்பது பற்றி இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

IV. சீசல்ஸின் உப ஜனாதிபதி கௌரவ வின்ஸன் மெரிட்டன் போதைப்பொருள் கடத்தல், பிராந்திய பாதகாப்பு, கல்வி, சுற்றுலா மற்றும் சட்டம் ஒழுங்கு போன்ற விடயங்கள் பற்றி இலங்கையின் பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். இது தொடர்பில் இணைந்த ஆணைக்குழுவினை நியமிப்பதற்கு சீசல்ஸ் உப ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு உடன்பாடு ஏற்பட்டது.

III. இளைஞர் மற்றும் கலாசார அமைச்சர் திருமதி இன்டிக் அலெக்சாண்டர் தலைமையிலான பேராளர் குழு ஐ.நா வெசாக் தின நிகழ்வு 2017 பங்குபற்றுவதற்கு இலங்கைக்கு விஜயம் செய்தது.

**ஆ. பல்பக்க உறவுகள்**

V. இலங்கையின் கொழும்பில் நடைபெற்ற இந்து சமுத்திர இரண்டாவது மாநாட்டில் சீசல்ஸ், மொரிசியஸ் மற்றும் மடகஸ்கார் போன்ற நாடுகளில் இருந்து உயர் மட்ட பேராளர் குழு பங்குபற்றியது.

VI. உயர்ஸ்தானிகர் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தி சோமாலிய கரைகளுக்கு அப்பால் கடற்கொள்ளை பற்றிய 20ஆவது பிளனெரி தொடர்பு குழுவில் பங்கேற்றார்.

**இ பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

பின்வருவனவற்றுக்கு தூதரகம் வசதியளித்தது.

I. சுற்றுலா / சீசல்ஸ் மற்றும் கொழும்புக்கும் இடையில் ஸ்ரீலங்கன் நேரடி விமான சேவையை வாரத்துக்கு நான்கு தடவைகள் பயன்படுத்தி இலங்கையில் உள்ள பங்காளி வைத்தியசாலைகளுடன் மருத்துவச் சுற்றுலா ஊக்குவிப்பு.

II. சீசல்ஸில் உள்ள முழுமையான இலங்கை கம்பனியான பியுச்சர் கோல்டிங் பிரைவேட் நிறுவனம் ஆய்வுகூட சேவைகளை வெளியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு வசதியளிப்பதற்கு சீசல்ஸ் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டது.

III. சீசல்ஸ் சுகாதார அமைச்சுடன் இணைந்து மெடிக்கல் டுவரிசம் பிரைவேட் நிறுவனம் மருத்துவ சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக இலங்கையில் இருந்து மருத்துவ விசேட வைத்தியர்களை கொண்டு வந்து சீசல்ஸ் நோயாளர்களுக்கான பல இலவச சிகிச்சைகளை ஏற்பாடு செய்தது.

IV. ஹேமாஸ் ஹொஸ்பிட்டல் பிரைவேட் லிமிட்டர், மெடிக்கல் டுவரிசம் பிரைவேட் நிறுவனம் ஆகியன கூட்டாக இணைந்து இரண்டு வார காலத்துக்கு சீசல்ஸ் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் இருவர் பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு முழுமையான புலமைப்பரிசில் வழங்கியது.

V. சீசல்ஸிற்கு விவசாய, நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை இலங்கையில் இறக்குமதி செய்வதற்கும் சீசல்ஸிற்கு நுகரத்தக்க மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் மொத்தமாக விநியோகிப்பதற்கும் உள்நாட்டு மீனவர்களிடம் இருந்து உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கும் இலங்கை கம்பனிகளால் இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கும் கடற்றொழிலில் பனிக்கட்டி தொழிற்சாலை மற்றும் குளிர் அறை கட்டிடத்தொகுதி ஒன்றினை பிரதானமாக உள்ளடக்குகின்ற கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் இலங்கையில் இருந்து தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதற்கும் இலங்கை மற்றும் சீசல்ஸ் நாடுகளின் வர்த்தகர்களினால் தனிப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

VI. வர்த்தகம் மற்றும் வியாபாரத்தினை ஊக்குவிப்பதற்காக ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் கௌரவ தயா கமகே தலைமையிலான பேராளர் குழு மடகஸ்காருக்கான விஜயம்.

**ஈ. கலாசார உறவுகள்**

I. கொழும்பு கற்புல மற்றும் அரங்கேற்றல் கலைகள் பல்கலைக்கழகத்தில் இருந்து உபவேந்தர் பேராசிரியர் ஆரியத்ன களுவாராச்சி என்பவரின் தொழில்சார் நடனக்குழுவொன்று இவ்வாண்டில் நடைபெற்ற சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது இலங்கையின் பாரம்பரிய நடனத்தினை அரங்கேற்றியது.

II. கொழும்பின் கற்புல மற்றம் அரங்கேற்றல் கலைகள் பல்கலைக்கழகத்தின் வரைதல் திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் தலைவர் சீசல்ஸ் கலை மற்றும் வடிவமைப்பு நிறுவனத்தின் ஒருவார விசேட செயலமர்வு ஒன்றினை நடாத்தினர்.

III. சீசல்ஸ் பௌத்த அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட தியான நிகழ்ச்சியொன்றுடன் இலங்கை பௌத்த மதகுருக்களின் பிரசன்னத்துடன் வெசாக் மற்றும் பொசன் போயா தினங்களின் போது சீசல்ஸில் சமய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

**டி. தொழிலாளர் நலனோம்புகை**

I. சீசல்ஸ் உள்ள இலங்கை தொழிலாளர்களின் நலனோம்புகையை உறுதி செய்வதற்காக உயர்ஸ்தானிராலயம் தொழில் அமைச்சுடன் நெருங்கி பணியாற்றியது.

II. சீசல்ஸுக்கு இலங்கை தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதற்காக முன்னணி மனிதவள ஆட்சேர்ப்பு கம்பனியுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

**2. தென்னாபிரிக்கா**

**அ. இருபக்க உறவுகள்**

I. பின்வருவனவற்றில் உயர்ஸ்தானிகர் கலந்து கொண்டார்.
- கேப்டவுனில் பாராளுமன்ற திறப்பு வைபவம்
- தென்னாபிரிக்காவின் வெளிநாட்டு அமைச்சர் தலைமை வகித்த இராஜதந்திர புருன்ஞ் மற்றும் வருடாந்த உம்புண்டு விருது வழங்கள் வைபவம்
- ஆசிய நாடுகளின் தூதரகங்களின் பிரதானிகளின் கூட்டம்
- பிரிட்டோரியாவில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் பிரிட்டோரியா பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய சின்ன நிகழ்வுகள், கலாசார நிகழ்வுகள்.
- தென்னாபிரிக்கா வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ மைட்டி குவாங்கா மசபானே அவர்களின் அழைப்பின் பேரில் கேப்டவுனில் வரவுசெலவு திட்ட உரை.
- ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மற்றும் தென்னாபிரிக்க சனாதிபதியினால் விருந்தளிக்கப்பட்ட நிகழ்வு.
- இம்புலங்கா மாகாணத்தில் நடைபெற்ற சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு கௌரவ அமைச்சர் மைட்டி குவாங்கா மசபானே ஏற்பாடு செய்யப்பட்ட நெல்சன் மண்டேலா தினம்.

II. 2017 ஏப்ரல் அன்று சிரேஷ்ட அலுவலர்கள் மட்ட பங்குடமை மன்றத்தின் ஆறாம் சுற்று பேச்சுவார்த்தை பிரிட்டோரியாவில் இடம்பெற்றது.

III. இலங்கைக்கும் தென்னாபிரிவுக்கும் இடையிலான இருபக்க உறவுகள் பற்றி உம்புண்டு வானொலிக்கு உயர்ஸ்தானிகர் நேர்காணல் ஒன்றினை வழங்கினார்.

**ஆ பலபக்க உறவுகள்**

I. பலபக்க உறவுகளை மேம்படுத்தும் நோக்குடன் ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகரினால் விருந்தளிக்கப்பட்ட பொதுநலவாய நிகழ்வு தினத்தில் உயர்ஸ்தானிகர் பங்கேற்றார். பிரிட்டோரியாவில் 8வது வருடாந்த பிரான்கோ போன் பண்டிகை நிகழ்வில் இடம்பெற்ற வரவேற்பொன்றிலும் பங்கேற்றார்.

II. அனைத்து புலம்பெயர் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகளை பாதுகாத்தல் 2018- 2020 மீதான குழுவுக்கு இலங்கையின் அபேட்சகம் தொடர்பில் தகவல்கள் பரப்பப்பட்டன.

III. இந்து சமுத்திர சுற்றுவட்டார அமைப்புக் கூட்டத்தில் இலங்கை பங்கேற்பதற்காக ஆயத்த பணிகள் (2017 ஒக்டோபர் 17 - 22 வரை தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெற்ற அமைச்சு சிரேஷ்ட அலுவலர்கள், வர்த்தக மன்றம், கல்விசார் மன்றம்)

**இ பொருளாதார உறவுகளும் நேரடி முதலீடுகளும்**

I. பின்வருவனவற்றை தூதரகம் ஏற்பாடு செய்தது / பங்கேற்றது

- ஜொஹானஸ்பேர்கில் வர்த்தக முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கு
- சர்வதேச வர்த்தக சந்தைகள். அதாவது கொஸ் டெக்ஸ் 2017 மற்றும் சைடெக்ஸ் 2017.
- இலங்கை தேயிலை சுவைத்தல் மற்றும் மாதிரிகளை வழங்குதல் ஊக்குவிப்பு நிகழ்வு –பிரிட்டோரியா.
- டேர்பனில் இலங்கை தேயிலையின் 150 ஆவது ஆண்டைக் குறிக்கும் முகமாக இலங்கைத் தேயிலையின் தேநீர் விருந்துபசாரம்.
- இலங்கை தேயிலை ஊக்குவிப்பு வாரம் சான்டொன்னில் இடம்பெற்றது.
- 2017 ஜுலை 26 அன்று ஜொஹானஸ்பேக் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தில் ‘‘இலங்கையுடன் வர்த்தகம் செய்தல்’’ என்ற தலைப்பிலான கருத்தரங்கு.

II. தென்னாபிரிக்காவுக்கு ஆறு இலங்கை கம்பனிகளின் விஜயத்துக்கும் இலங்கைக்கு 4 தென்னாபிரிக்க கம்பனிக்கு தூதரகம் வசதியளித்தது.

III. பத்து கண்காட்சிகளை ஊக்குவித்து இலங்கை மற்றும் தென்னாபிரிக்க கம்பனிகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற 24 வர்த்தக முதலீட்டு விசாரணைகளுக்கு பதில் அளித்தது.

IV. கிவ்குர்ஜி எக்போ பிரைவேட் லிமிட்டட் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. ஹெகமட் குர்ஜி உயர்ஸ்தானிகரை சந்தித்து இலங்கைக்கும் தென்னாபிரிக்காவும் இடையில் ஏற்றுமதி இறக்குமதி பற்றி கலந்துரையாடினார்.

V. தென்கொரிய தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தக மன்றத்தில் 2017 ஆகஸ்ட் 3 அன்று உயர்ஸ்தானிகர் பங்கேற்றார்.

**ஈ. கலாசார உறவுகள்**

I. ஜொஹானஸ்பேர்க் (தாய்லாந்து) உயர்ஸ்தானிகர், இலங்கை சமூகத்துடன் பௌத்த தியான நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் கிரமமாக பங்குபற்றுகின்றார்.

II. இலங்கையர்களுக்கும் இராஜதந்திர சமூகத்துக்கும் தேசிய தின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

III. வெசாக் தினத்தை குறிப்பதற்காக சமய / கலாசார நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

IV. வருகை தரு பாடசாலை கிரிக்கட் அணியொன்றினை கௌரவிப்பதற்கு கேப்டவுனில் நடாத்தப்பட்ட வைபவம் ஒன்றில் உயர்ஸ்தானிகர் கலந்து கொண்டார்.

V. சர்வதேச இராஜதந்திர துணைவர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு பிரிட்டோரியாவில் நிகழ்ந்த அறக்கட்டளை சந்தையொன்றுக்கு தூதரகம் உதவியளித்தது. இலங்கை தேயிலையை ஊக்குவிப்பதற்காக தேயிலைக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்து.

VI. தென்னாபிரிக்க கிரிக்கட்டினால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் வைபவம் ஒன்றில் 2017 மேயில் பங்கேற்கப்பட்டது.

VII. நீதி மற்றும் சீர்த்திருத்த சேவை அமைச்சினால் மெமலோடிங் அடக்கஸ்தலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கலோஸ் உடல் தோண்டி எடுத்தல் சட்டத்தின் உயர்ஸ்தானிகர் பங்கேற்றார். உடல் தோண்டி எடுத்தலானது தென்னாபிரிக்காவில் உள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இது இலங்கைக்கு சமாந்தரமாக கவனத்தினை ஈர்த்தது.

**உ. ஏனையவை**

I. உயர்ஸ்தானிகர் அங்கோலா, சுவாசிலாந்து, மொசாம்பிக் மற்றும் மாலாவி நாடுகளில் நியமனக் கடிதங்களைக் கையளித்தார்.

II. சுவாசிலாந்தின் மன்னரினால் விருந்தளிக்கப்பட்ட சுவாசிலாந்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உயர்ஸ்தானிகர் கலந்து கொண்டார்.

****

# கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு

## கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு

1. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பொதுமக்களுடன் தொடர்புகள் கொன்சியூலர் பிரிவானது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற இலங்கைப் பிரஜைக்கு உதவிகளை கொடுக்கின்றது. 1981 ஆம் ஆண்டின் 04 ஆம் சட்டத்தின் 2006ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தம் ஆகியவற்றுக்கு அமைவாக கொன்சியூலர் அலுவல்கள் பிரிவானது வெளிநாடுகளிலுள்ள தனது தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள், கொன்சுலேற்று நாயகங்களின் அலுவலகங்கள் மற்றும் கௌரவ கொன்சுலோற்று அலுவலகங்கள் மற்றும் பிற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் / அதிகார சபைகள் மூலமாக புலம்பெயர்ந்த இலங்கையர்களினதும் உரிமைகளையும் நலன்களையும் உறுதிப்படுத்துகின்றது.

2. கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு அதன் பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்தை 2017.01.26 அன்று யாழ்ப்பாணத்தில் மாவட்டச் செயலகத்தில் திறந்துள்ளது. எனவே, வடக்கில் உள்ள பொதுமக்கள் கொழும்புக்கு வருகை தராது கொன்சியூலர் அலுவல்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

3. கொன்சியூலர் அலுவல்கள் பிரிவானது அதன் கொன்சியூலர் பணிகளை ஐந்து (5) பெரிய முழுமையாக ஒத்திருக்கும் பிரிவுகள் மூலமாக அதாவது (1) ஆவண சான்றுறுதிப்படுத்தல் பிரிவு, (2) தாய் நாட்டிற்கு திரும்பவும் அனுப்பும் பிரிவு (3) நட்டஈட்டு பிரிவு (4) மரணப் பிரிவு (5) பல்லினப் பிரிவு போன்ற ஐந்து முக்கிய பிரிவுகள் மூலமாக அதன் கொன்சியூலர் செயற்பாடுகளை செயற்படுத்துகின்றது.

### அ. ஆவணங்களை உண்மையானவை எனச் சான்றுப்படுத்தும் பிரிவு

4. உண்மையென சான்றுப்படுத்தும் பிரிவானது மிக முக்கிய பிரிவாக இருப்பத்துடன், இப் பிரிவில் கல்வி மற்றும் தனிப்பட்ட ஆவணங்களை வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்காக உண்மையென சான்றுப்படுத்துவதற்கு நாளாந்தம் பெரும் எண்ணிக்கையில் மக்கள் வருகை புரிகின்றனர். பிறப்பு, திருமண, இறப்பு, மருத்துவ மற்றும் கல்விச் சான்றிதழ்கள், பொலிஸ் அறிக்கைகள், சத்தியக் கூற்றுக்கள், அற்றோணித் தத்துவப் பத்திரம், நீதிமுறை ஆவணங்கள் மற்றும் இலங்கையின் வியாபார நிறுவனங்களினால் முன்வைக்கப்படுகின்ற வணிக ஆவணங்கள் என்பன அடிக்கடி சான்றொப்பம் இடப்படுகின்ற ஆவணங்களாகும்.

5. நாளாந்தம் வேலை நாட்களின் போது கொன்சியூலர் அலுவல்கள் பிரிவுக்கு 600 விண்ணப்பதாரிகள் வருகை தருகின்றனர் எனவும், 1000 இற்கு மேற்பட்ட ஆவணங்களுக்கு சான்றொப்பமிடப்படுகின்றது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு, 2017 பெப்ரவரி 06ஆந் திகதியன்று இலத்திரோனிக் ஆவணங்கள் அத்தாட்சிப்படுத்தல் முறைமையினை அறிமுகப்படுத்தியுள்ளது.

6. 2017 நவம்பர் மாதம் இடம்பெற்ற 7 ஆவது இலத்திரனியல் சுபாபிமானி 2017 இல் “அரசாங்கம் மற்றும் பிரசைகள் ஈடுபாடு” பிரிவில் இலத்திரனியல் சான்றொப்பமிடும்

முறைமை(e-DAS) விருதினை வென்றெடுத்தது. மேலும் 19 ஆவது தேசிய சிறந்த தர ICT விருதுகள் விழாவில் அரசாங்க மற்றும் பொதுத்துறை பிரிவில் தங்க விருதையும், பொதுத்துறையில் மிகச்சிறந்த துறை பிரிவில் ICT சாதனை விருதையும் மற்றும் டிஜிட்டல் அரசாங்கத்திற்காக ஆசிய கடற்பிராந்திய கணனித்துறை அமைப்பு விருதையும் வென்றுள்ளது.

7. இலங்கையிலுள்ள பொதுத்துறை நிறுவன அமைப்பொன்றில் முதற்தடவையாக ஆவணச் சான்றுறுதிப்படுத்தல்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக பொதுமக்கள் மத்தியில் கடன்/பற்று அட்டைகள் அறிமுகம் செய்யப்பட்டதுடன், பொதுமக்களின் பரந்தளவிலான பாராட்டுக்களையும் பெற்றிருந்தது.

8. உண்மையென சான்றுறுதிப்படுத்தும் பிரிவு 2017 சனவரி 01 தொடக்கம் 2017 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏறத்தாழ ரூபா 122,565,605.00 (யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் உள்ளடங்கலாக) வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இக்காலப்பகுதியில் உண்மையென சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 267,755 ஆகும்.

**ஆ. மக்களை தாய்நாட்டுக்கு அழைத்து வரும் பிரிவு**

9. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பும் பிரிவின் பிரதான பொறுப்பு வெளிநாடுகளில் நிர்க்கதியான நிலையிலுள்ள அல்லது நாடு கடத்தப்படவுள்ள மற்றும் சிறையிலிடப்பட்டுள் அனுபவிக்கும் இலங்கையர்களை அவர்களின் நெருங்கிய உறவினர்களின் கோரிக்கைக்கமைவாக, தாய்நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகும். இத்தகைய நபர்களை சாத்தியமான வரை துரிதமாக நாட்டிற்கு கொண்டு வரும் நோக்கில் இயைபுள்ள அதிகாரிகளுடன் ஒன்றிணைந்து வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களை/நிலையங்களை தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவற்றிற்கு ஆலோசனை வழங்குவதனூடாக அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்குமான தலையீடுகளில் ஈடுபட்டு வருகிறது.

10. தமது தொழில் ஒப்பந்தத்தினைக் கடைப்பிடிக்காது மற்றும்/அல்லது நாட்டின் சட்டம் மற்றும் வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தை மீறி தொழிலை விட்டோடுகின்ற புலம்பெயர் பணியாளர்களை நாட்டுக்கு திருப்பிக் கொண்டு வருவதில் கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு இடர்களை எதிர்நோக்குகின்றது. இவ்விடயம் தொடர்பில் இலங்கை மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு ஆகியவற்றுக்கிடையே இருதரப்பு கைதிகளைப் பரிமாற்றிக்கொள்ளும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், இருநாடுகளுக்குமிடையே சிறைக்கைதிகளை கைமாற்றுவதற்கான வசதியளித்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

11. இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாது வெளிநாடுகளுக்கு புலம்பெயரும் நபர்கள் தொடர்பான விடயங்களையும் இந்தப் பிரிவு கையாள்கிறது.

2017 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரை தாய் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான உதவியை நாடி இரத்த உறவுகளினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 561 ஆகும்.

12. அத்தோடு வெளிநாடுகளில் பல்வேறு தவறுகளைப் புரிந்தமைக்காக சிறைத்தண்டனை அனுபவிக்கும் அல்லது தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள இலங்கையர்களின் நெருங்கிய உறவுகளிடமிருந்து முறைப்பாடுகளும் இந்தப்பிரிவுக்கு கிடைக்கப் பெறுகின்றன. அவர்களை முன்கூட்டியே விடுவிப்பதற்கும் மற்றும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கும் குறிப்பட்ட நாடுகளின் உரிய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு இந்தப் பிரிவினால் அடிக்கடி ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

13. மேலும் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவினை மேற்கொள்ளாது, வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்லும் இலங்கையர்களின் நாடு திரும்பல் குறித்து, இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்திடமிருந்து உரிய உதவிகளை பெறத்தவறும் நெருங்கிய உறவினர்களின் கோரிக்கைகளின் பேரில் , தனது பணிப்பாணைக்கும் அப்பால் தனது மனிதாபிமான பின்னணியில் குறித்த நபர்களை நாட்டிற்கு திரும்பக்கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளிலும் இப்பிரிவு பங்குபற்றுகிறது.

14. இத்தகைய விடயங்களிலிருந்து நிர்க்கதி நிலைக்கு ஆளாகியிருந்த 102 இலங்கையர்கள் மற்றும் சிறைவாசம் அனுபவிக்கும் 48 இலங்கையர்கள் ஆகியோர் 2017 இல் தாய் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக, 2017 யூலை மாதம் குவைத் மற்றும் லெபனான் நாடுகளில் இருந்து முறையே 51 புலம் பெயர்ந்த பணியாளர்களுக்கும் 33 புலம்பெயர்ந்த பணியாளர்களும் தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

15. 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சோமாலியக் கடலில் சோமாலிய கிளர்ச்சியாளர்களின் பிடியிலிருந்த இலங்கை மாலுமிகளை விடுவிப்பதற்கு கொன்சூலர் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

16. தமது தொழில் ஒப்பந்தத்தினைக் கடைப்பிடிக்காது விலகி ஓடிய பணியாளர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்புவதில் கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு இடர்களை எதிர் நோக்குகின்றது. தமது சட்டபூர்வமான ஒப்பந்தத்திற்கு வெளியே அவர்கள் தொழிலைத் தேடுவதனால் நாட்டின் சட்டத்தினை அவர்கள் மீறுகின்றனர். இதன் விளைவாக, விசா ஒழுங்குவிதிகளை அல்லது ஒப்பந்த வேலைவாய்ப்பு சட்டத்தினை மீறியமைக்காக தொடர்புடைய அதிகாரிகளினால் இவ்வாறான சிலர் மீது குற்றம் சுமத்தப்பட்டு அவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றது.

17. மேலும், தாய் நாட்டுக்கு திருப்பி அழைத்து வரப்படவுள்ள இலங்கையர்கள் மத்தியில் ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் உள்ளனர். ஆட்கடத்தல் வழக்குகளில், பெரும்பாலானோர் ஐக்கிய அரபு இராச்சியம் ஊடாக ஓமானுக்கு

கடத்தப்பட்டவர்களாகும். ஐக்கிய அரபு இராச்சியம் ஊடாக ஓமானுக்கு கடத்தப்பட்ட இப் புலம்பெயர் பணியாளர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாயப்பு பணியகத்தில் பதிவு செய்யபபடாதவர்களாவர். இந்நிலையில் முகவர் நிலையங்களின் அல்லது முகவர்களின் வதிவிடங்களைக் கண்டுபிடிப்பதிலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதிலும் கொன்சியூலர் பிரிவு இடர்களை எதிர் நோக்குகின்றது.

18. குறித்த காலப்பகுதியில் இந்தப் பிரிவு மூலம் கையாளப்பட்ட விசேட நடவடிக்கைகள்: (1) ஐக்கிய அரபு இராச்சியத்தில் சார்ஜா பிராந்திய கடல் பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்த M/T ஒமேகா கப்பலில் நிலைகொண்டிருந்த இலங்கையர்களை டுபாயிலுள்ள கொன்சியூலர் பிரிவுடன் ஒருங்கிணைந்து நாட்டு திரும்ப அழைத்து வந்தமை (2) பல ஆண்டுகளாக நீண்டகால பிரச்சினையாகவிருந்த இஸ்லாமாபாத்திலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்துடன் ஒருங்கிணைப்புகளை மேற்கொண்டு பாகிஸ்தானிலிருந்து சயிட் அப்துல்லா ஹுசைனை தாய் நாட்டுக்கு திரும்ப் அனுப்பியமை (3) பஹ்ரேனிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் ஒருங்கிணைந்து 2017 டிசம்பர் 1 ஆம் திகதி பஹ்ரேனில் கடுமையாக நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்த நோயாளியை இலங்கைக்கு திரும்ப அழைத்து வந்தமை போன்றவையாகும். இந்த பிரிவானது உறைவிடம், பராமரிப்பு மற்றும் எதிர்கால நலன்புரி ஆகிய வசதிகளை வழங்கும் நோக்கில் சமூக சேவை திணைக்களம் (மேல் மாகாணம்) உடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

19. மனித ஆட்கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்களை தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்புதல் தொடர்பான செயற்பாடுகளிலும் இப்பிரிவு ஈடுபட்டுள்ளதுடன், ஆட்கடத்தப்பட்டவர்கள் மத்தியில் பெரும்பாலானோர் ஐக்கிய அரபு இராச்சியம் ஊடாக ஓமானுக்கு கடத்தப்பட்டவர்களாக விருப்பத்துடன் இவர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்படாதவர்களாகவும் உள்ளனர். இலங்கையர்களை உரிய காலத்திற்கு முன்னரே நாட்டுக்கு திரும்பிப் பெறுகின்ற நோக்கில் குறித்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் தொடர்புடைய குடிவரவு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பல்கேரியா(4) டென்மார்க்(01) ஆகிய நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்ட விரோதமாக புலப்பெயர்ந்துள்ள நபர்களுடன் ஸ்கைப் (SKYPE) ஊடாக நேர்முக உரையாடல்களை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

**இ. நட்டஈட்டுப் பிரிவு**

20. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் நஷ்டஈட்டு பிரிவானது, இறந்தவர்களின், பிரதானமாக புலம்பெயர்ந்த பணியாட்களின் நெருங்கிய உறவினர்களுக்கு பரிகாரம் வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இத்தகைய உரிமைக் கோரிக்கைகளில் அநேகமானவை வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் / துணைத் தூதரகங்களின் ஆதரவுடன் சட்ட நடவடிக்கை மூலமாகப் பெறப்படுகின்றன.

21. இந்தப் பிரிவானது வெளிநாடுகளில் மோசமாக நடத்தப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு செலுத்தப்படாத சம்பளங்கள் மற்றும் நிலுவைகளையும் பெற்றுக்கொடுப்பதிலும் உதவிபுரிகின்றது. இதற்கு மேலதிகமாக, வெளிநாடுகளில் முன்பு பணியாற்றிய பணியாட்கள் தமது ஓய்வூதிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இப்பிரிவை நாடுகின்றனர். வெளிநாடுகளில், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் கொலை சம்பவங்கள் இடம்பெறும் போது குற்றவாளிகளிடமிருந்து கொலைக்கான நட்டஈட்டை பரிகாலமாக பெறப்படுவதையும் உறுதி செய்கின்றது. வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் தொழிலாளர்களின் சம்பளங்கள் அல்லது ஏனைய நிலுவைகளைச் செலுத்தாமை தொடர்பாக அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. அத்துடன் அத்தகைய செலுத்தப்படாத நிலுவைகளைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கான இயைபுள்ள தூதரகங்களுடன் மேற்கொள்ளப்படுகின்றது

22. இந்தப் பிரிவானது வெளிநாடுகளில் மோசமாக நடத்தப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு செலுத்தப்படாத சம்பளங்கள் மற்றும் நிலுவைகளையும் பெற்றுக்கொடுப்பதிலும் வசதிப்படுத்தி கொடுக்கின்றது. இதற்கு மேலதிகமாக, வெளிநாடுகளில் முன்பு பணியாற்றிய பணியாட்கள் தமது ஓய்வூதிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இப்பிரிவை நாடுகின்றனர். வெளிநாடுகளில், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் கொலை சம்பவங்கள் இடம்பெறும் போது குற்றவாளிகளிடமிருந்து "கொலைககான நட்டஈடு" வழங்கப்படுவதை நட்டஈட்டுப் பிரிவு உறுதி செய்கின்றது. வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் தொழிலாளர்களின் சம்பளங்கள் அல்லது ஏனைய நிலுவைகளைச் செலுத்தாமை தொடர்பாக அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. அத்துடன் அத்தகைய செலுத்தப்படாத நிலுவைகளைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு உரிய தூதரகங்களுடன் தொடர்பு மேற்கொள்ளப்படுகின்றது

23. 2017 ஆம் ஆண்டில் குடும்ப அங்கத்தவர்கள் அல்லது பாதிப்படைந்தவர்கள் ஆகியோரிடையே நட்டஈடாக அல்லது கொலைக்கான நட்டஈடாகவும் பிறவருமதிகளாகவும் மற்றும் ஏனைய நிலுவைகள் ஏறத்தாழ 252 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 209 குடும்பங்களுக்கிடையே 371 மில்லியன் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**ஈ. மரணப் பிரிவு**

24. வெளிநாட்டில் மரணமடையும் இலங்கையர்களின் சரியான நெருங்கிய உறவினர்களை கண்டறிவதற்கும் வெளிநாட்டில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் தொடர்புடைய தரப்புக்களின் உதவியுடன் சாத்தியமான வரை துரிதமாகவும் சடலத்தை இலங்கைக்கு கொண்டு வரல் அல்லது புதைத்தல் அல்லது தகனம் செய்தல் ஆகியனவே இந்த மரணப் பிரிவின் பிரதான பொறுப்பாகும். தனிப்பட்ட சொந்த கரிசனைகள் காரணமாக, இறந்தவரின் சடலத்திற்கு உரிமை கோருவதற்காக கொன்சியூலர் அலுவல்கள் பிரிவில் பலரும் வருகை தருகின்றனர். ஆகவே, மனித எச்சங்களுக்கு பல்வேறு தரப்பினரும் கோரலைப் பெற

முற்படுவதால் சரியான தரப்பினை இனங்காண்பதற்கு மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இரத்த உறவினரினால் வழங்கப்படும் ஒப்புதலுக்கமைய, மனித உடல் எச்சங்களை நாட்டிற்கு மீளக்கொண்டு வரல்/புதைத்தல் அல்லது தகனம் செய்வது தொடர்பில் குறித்த தூதரகங்களுக்கு இந்த கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு அறிவுறுத்துரைகளை வழங்கி வருகிறது.

25. நெருங்கிய உறவினர்களின் சம்மதத்துடன் மனித உடல் எச்சங்களை தாய் நாட்டுக்கு அனுப்புவதற்கு/ நல்லடக்கம் செய்வதற்கு அல்லது தகனம் செய்வது தொடர்பில் கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு தூதரகங்களுக்கு அறிவுறுத்துரைகளை வழங்குகின்றது.

26. வெளிநாடுகளிலிருந்து மொத்தமாக 458 இறப்புக்கள் மரணப் பிரிவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. அதில் 229 ஆண்களும், 105 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதில் 65 விபத்து மரணங்களாகவும், 349 நோய்களுடன் தொடர்புடைய மரணங்களாகவும், 10 கொலை மரணங்களாகவும் 28 தற்கொலை மரணங்களாகவும் மற்றும் 9 இயற்கை மரணங்களாகவும் உள்ளன. அத்தோடு இப் பிரிவானது, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திலிருந்து இறப்புச் சான்றிதழ்களையும் மற்றும் காப்புறுதிக் கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வதற்கும் வசதி செய்து கொடுக்கின்றது.

27. மேற்கூறிய மரணங்களுக்கு மேலதிகமாக, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள்/ துணைத் தூதரகங்கள் மேலதிகமாக 10 மரணங்கள் பற்றி நேரடியாக அறிவித்துள்ளன. இந்த அனைத்து மரண சம்பவங்களுக்கும் குறித்த நாடுகளிலுள்ள தூதரகங்கள் ஊடாக குடும்ப உறுப்பினர்கள் தமது சம்மதத்தை வழங்கி மனித உடல் எச்சங்களை இலங்கைக்கு திரும்ப கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

28. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து காப்புறுதிக் கொடுப்பனவுகளையும் மற்றும் மத்திய பதிவு அறையிலிருந்து இறப்புச் சான்றிதழையும் பெற்றுக்கொள்வதற்கான வசதியை நெருங்கிய உறவினர்களுக்கு இந்த மரணப்பிரிவு ஊடாக வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

29. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இறந்த நபர் தம்மை பதிவு செய்யாதிருக்கும் சந்தர்ப்பங்களில், மனிதாபிமான அடிப்படையில் நெருங்கிய உறவினர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளில் இறந்த 09 இலங்கையர்களின் இறந்த உடல்களை நாட்டுக்கு அனுப்புவதற்கு/ நல்லடக்கம் செய்வதற்கு/ அல்லது தகனம் செய்வதற்காக ஏறத்தாழ 3,640,185.00 இலங்கை ரூபாவை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு செலவு செய்துள்ளது.

**இ. புல்லினப் பிரிவு**

30. வெளிநாடுகளில் வாழ்கின்ற மற்றும் வேலை செய்யும் இலங்கையர்களின் முறைப்பாடுகளை கையாள்வது இப்பிரிவின் பிரதான பணியாகும். தொந்தரவு, அடிப்படை வசதிகளை வழங்க மறுத்தல், சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படாமை, தாய்நாட்டுக்கு திருப்பியனுப்ப வேண்டிய நிர்க்கதி நிலையிலுள்ள இலங்கையர்கள், நீண்டகால சிறைத் தண்டனை அல்லது மரண தண்டனையை எதிர்நோக்கிய நிலையிலுள்ள இலங்கையர்கள் பற்றிய பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படுவதற்காக இப்பிரிவின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, இலங்கையர்களுக்குச் சொந்தமான மீன்பிடிக் கப்பலொன்று வேறொரு நாட்டின் எல்லைக்கு உட்பட்ட கடற்பிரதேசத்துக்கு அடித்துச் செல்லப்படுகின்ற போது அல்லது கரையொதுங்கி அதனை அந்நாட்டின் கடற்படை அல்லது கடற்கரை அதிகார சபைகள் தடுத்து வைக்கின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய கப்பல்கள் மற்றும் மீனவர்களையும் விடுவிப்பதற்கான உதவிகளையும் இப்பிரிவு கையாள்கின்றது. நடுக்கடலில் தடுத்து வைக்கப்படும் கப்பல்கள் உள்ளடங்கலாக ஆட்கடத்தல்களும் விடயங்களும் இப்பிரிவிற்கு உட்பட்டவையாகும். வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பொலிஸ் இசைவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகின்ற இலங்கையரின் விண்ணப்பங்களை கையாள்வதிலும் இப்பிரிவு உதவுகிறது.

பல்வகைக் கருமங்கள் பிரிவு, பின்வரும் விடயங்களில் உதவியளித்துள்ளது:

- தமது வாழ்க்கைத் துணைகளை கைவிட்டுச் சென்று வெளிநாடுகளில் வாழுகின்றவர்களிடமிருந்து பராமரிப்புச் செலவு கோரிக்கைகள்.
- வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் பற்றிய தகவல் கோரிக்கைகள்.
- வெளிநாடுகளில் குற்றங்களை இழைத்த பின்னர் இரகசியமாக இலங்கைக்கு திரும்பிய இலங்கையர்கள் தொடர்பிலான தகவல் கோரிக்கைகள்.
- வெளிநாடுகளில் கற்பழிப்புகளை மேற்கொண்ட இலங்கையர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கான மேன்முறையீடுகள்.
- வெளிநாடுகளில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட நபர்கள் பற்றிய தகவல்களை அனுப்பல்.
- இலங்கை அரசாங்கத்திற்கு வருமதியாகவுள்ள கொடுப்பனவு நிலுவைகளை செலுத்தாமல் தவிர்த்த முன்னாள் இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்களை கண்டுபிடிப்பதற்கு உதவுவதற்காக வெளிநாடுகளின் வெளிநாட்டு அமைச்சுகளின் ஈடுபாட்டுடன் தொடர்புடைய கோரிக்கைகள்.
- வெளிநாடுகளில மகவேற்புச் செய்யப்பட்டவர்களின் உயிரியல் ரீதியான/ இயற்கைப் பெற்றோர் தொடர்பிலான தகவல் பற்றிய கோரிக்கைகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களிடமிருந்து இவையை ஒத்த பிற கோரிக்கைகள் கிடைக்கப்பெறுகின்ற போது அவை பற்றியும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**2017 சனவரி 1 முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் வழங்கப்பட்ட கொன்சியூலர் உதவிகளின் விபரங்கள்**

| | |
|---|---|
| மொத்த மாதாந்த விண்ணப்பக்காரர்கள் (உறுதிப்படுத்தல்) | 109,607 |
| மொத்த பண சேகரிப்பு (உறுதிப்படுத்தல்) (ரூ.) | 137,119,600 |
| அறிக்கையிடப்பட்ட மரணங்கள் | 458 |
| இலங்கைக்கு திருப்பி அழைத்து வருவதற்கு உதவியை நாடி பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை (சாதாரண வழக்குகள்) | 431 |
| தடுத்து வைப்பு தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை (சிறை வழக்குகள்) | 129 |
| தடுத்து வைப்பு தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை (வெளிநாடுகளில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கையர்கள்) | 27 |
| தூதரகங்கள்/நிலையங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற மொத்த பிறப்புச் சான்றிதழ்கள் | 854 |
| பிறப்புப் பதிவு தொடர்பான முறைப்பாடுகள் | 48 |
| பொலிஸ் இசைவு அறிக்கைகளுக்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் | 407 |
| பயனடைந்த குடும்பங்கள் (எண்ணிக்கை) (நஷ்டஈடு) | 209 |
| மொத்தமாக செலுத்தப்பட்ட நஷ்டஈடுகள் (ரூ.) | 371 மில்லியன் |
| பல்லின விசாரணைகள் (எழுத்து மூலம்) | 164 |
| தாய்நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை | 40 |
| வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மீன்பிடி கப்பல்களின் எண்ணிக்கை | 6 |
| இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற மூன்றாம் தரத்தவர் அறிவித்தல்களின் எண்ணிக்கை | 84 |
| அனுப்புவதற்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள்/ நிலையங்களிலிருந்து கிடைத்த கல்விச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | 18 |

****

# கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பிரிவு

**அளாவப்பட்டுள்ள நாடுகள்**:

அவுஸ்திரேலியா, பூரூணை, தாருஸ்ஸலாம், சீனா, கம்போடியா, கொரிய சனநாயக மக்கள் குடியரசு, பிஜி, இந்தோனேசியா, ஜப்பான், கொரிய குடியரசு, லாவோஸ், மலேசியா, பிலிப்பைன்ஸ், பப்புவா நியுகினியா, சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம், வனுவாட்டு, சொலோமன்ஸ் தீவுகள், திமோர் லைஸ்தே, கிரிபத்தி, சமோவா, துவளு, நாஉறு, கொங்கா

**வதிவிட தூதரகங்களின் எண்ணிக்கை:**

11 அவுஸ்திரேலியா, சீனா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேசியா, மியன்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லந்து, வியட்நாம்

**கொன்சுலேற்றுகளின் எண்ணிக்கை:**

நான்கு (04) அவுஸ்திரேலியா- சிட்னி, மெல்போர்ன், சீனா – சங்காய், குவான்சு)

**ஒருப்பாட்டு ஓப்புதலளிப்புகள்**:

அவுஸ்திரேலியா (கன்பரா) - பிஜி,நியூசிலாந்து. பப்புவாநியூகினி, வனுவாட்டு, சொலமன் தீவுகள்

சீனா– கொரிய சனநாயக மக்கள் குடியரசு, மொங்கோலியா

சிங்கப்பூர் - புரூணை, தாருஸ்ஸலாம்

தாய்லாந்து – கம்போடியா, லாவோஸ்

**பலதரப்பு பிராந்திய அமைப்புகளின் எண்ணிக்கை ஆசியான் பிராந்திய அரங்கு, சங்கிலிகளால் டயலொக் கிழக்கு ஆசியா மற்றம் பசுரிக் பிலதான வேலைப் பிரிவுகனை பின்வறுமாறு விரிவாக வகைப்படுத்தலாம்:**

i. புவியியல் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் தொடர்பில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை வழிக்காட்டல்களை வகுத்தமைத்தல்.

ii. அரசாங்கத்தின் கொள்கை தீர்மானங்கள் மற்றும் புவியியல் பிராந்தியங்களிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கு ஆலோசனை வழங்கி அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட நாடுகளில் ஆக்கப்பூர்வமாக இலங்கையின் தோற்றப்பாட்டை மேம்படுத்துவதற்கும் படம்பிடித்துக்காட்டுவதற்கும் அவற்றிற்கு வழிக்காட்டுதல்

iii. புவியியல் பிராந்தியத்தில் உள்ள இலங்கையின் தூதரகங்களுக்கு பொருளாதார இராசதந்திரத்திலும் அரசாங்க இராசதந்திரத்திலும் செயல்வினையுடன் ஈடுபடுவதற்கும் இலங்கையர்களுக்கும் இலங்கையை பூர்வீக இடமாகக் கொண்ட நபர்களுக்கும் உதவி வழங்குவதற்கு வழிகாட்டுதல்.

iv. இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரமுகர்களுக்கும் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும் பிரமுகர்களுக்கும் அவர்களுடைய விஜயங்கள் தொடர்பில் வசதிகளை செய்தல்.

v. புவியியல் பிராந்தியத்திலுள்ள நாடுகளுடனும் அமைப்புகளுடனும் இருதரப்பு உடன்படிக்கைகளில் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

vi. ஆசியான் பிராந்திய அரங்கு ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு பாலி நடைமுறை ஆகியன தொடர்பிலான செயற்பாடுகளைக் கூட்டிணைத்தல்.

vii. கொழும்பில் அமைந்துள்ள கிழக்காசியாவினதும், பசுபிக் பிராந்தியத்தினதும், வெளிநாட்டுத் துாதரகத்தினதுடனும் நெருக்கமானதும் நட்புறவு ரீதியானதுமான தொடர்புகளைப் பேணிவைத்திருத்தல்

**கிழக்காசிய மற்றும் பசுபிக் பிரிவிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் செயலாற்றுகை**

**01. அவுஸ்திரேலியா**

இலங்கை அவுஸ்திரேலியாவில் மூன்று வதிவிட தூதரகங்களை வைத்திருக்கின்றது. அவை பெயரளவில் கன்பராவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயமும் மெல்போர்னிலுள்ள கொன்சுலேற்று நாயகத்தின் அலுவலகமும் சிட்னியிலுள்ள கொன்சியுலேற்று நாயகத்தின் அலுவலகமும் ஆகும்.

1. **இலங்கை உயர்ஸ்தானிகராலயம் / கன்பரா**

அவுஸ்திரேலியாவிலுள்ள உயர்ஸ்தானிகராலயம் நியுசிலாந்திற்கும் பிஜி நாட்டிற்கும் சொலமன் தீவுகளுக்கும் சமோவாவனுவாட்டுவிற்கும் பப்புவா நியூகினியாவிற்கும் சமகால ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**அ. இருதரப்புத் தொடர்புகள்**

2017ஆம் ஆண்டு இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவிற்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட இராசதந்திரத் தொடர்புகளின் 70ம் ஆண்டாகவுள்ளது. இந்த நிகழ்வை வைபவரீதியாகக் கொண்டாடுவதற்கு பொறுப்பேற்கப்பட்டுள்ள செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

i. 2017 மே மாதத்தில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ விஜயமானது இலங்கை நாட்டின் அரசாங்கத் தலைவரொருவரால் மேற்கொள்ளப்பட்ட முன்னர் எப்போதும் நிகழாத விஜயமாகவிருந்தது. இந்த விஜயத்தின்போது நாட்பட்ட கொடிய சிறுநீரக நோயைத் தடைசெய்வதற்காக சனாதிபதி சிறப்புப் படையணிக்கும் அவுஸ்திரேலிய அணு விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைப்பிற்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டதுடன் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கும் அவுஸ்திரேலிய புவிச்சரிதவியல் விஞ்ஞான அமைப்பிற்குமிடையே விருப்பத்தைத் தெரிவிக்கும் நிரூபமொன்றும் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டன. மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு,

பொருளாதாரத் தொடர்புகள், அபிவிருத்தி ஒத்துழைப்பு, கல்வி மற்றும் மக்களுக்கு மக்கள் என்ற இணைப்புக்கள் போன்ற பல முன்னுரிமைத் துறைகளை அடிக்கோடிட்டுக் காண்பிக்கின்ற இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்புத் தொடர்புகளை அதிகரிக்கும் அதிகரித்த ஒத்துழைப்பு மீதான கூட்டுப் பிரகடனமொன்றும்கூட கையொப்பமிடப்பட்டுள்ளது.

ii. இலங்கையின் மாண்புமிகு பிரதம அமைச்சர் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே தாபிக்கப்பட்ட இராசதந்திர தொடர்புகளின் 70வது ஆண்டு விழாவை நினைவு கூருவதற்காக 2017 பெப்புருவரியில் ஆவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்துள்ளார். இருதரப்புக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதையடுத்து கூட்டுக் கூற்றொன்று வெளியிடப்பட்டது. அக் கூற்றில் குடிவரவு தொடர்பில் பலமான ஒத்துழைப்பு வழங்குதல், ஆட்களின் சட்டவிரோத ஆட்கடத்தல்கள், கல்வி, மக்களுக்கு மக்கள் என்ற இணைப்புகள், பிராந்திய வியாபாரத்தையும் பாதுகாப்பு ஈடுபாட்டையும் மேற்கொள்ளுதல், அபிவிருத்தி ஒத்துழைப்பையும் விளையாட்டு ஒத்துழைப்பையும் மேற்கொள்ளுதல் ஆகிய விடயங்களை துலாம்பரமாக எடுத்துக் காண்பிக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி ஒத்துழைப்பு பங்களித்துவம் மீதும் விளையாட்டுத் துறையில் ஒத்துழைப்பு வழங்குதல் மீதுமாக இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன.

iii. மேற்போந்த உயர்மட்ட விஜயங்கள் மார்ச் மாதத்தில் அவுஸ்திரேலியாவிற்கு பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட விஜயத்துடன் நிறைவு செய்யப்பட்டன. இந்த விஜயத்தின்போது கைத்தொழில், கணிப்பொருள் படம் வரைதலில் புதுமை புகுத்தலும் விஞ்ஞானமும் ஆகியவற்றில் உதவியை நாடுவதன் பொருட்டு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அவுஸ்திரேலிய அணு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பவியல் அமைப்புகளுடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பு இலங்கையில் காட்டப்பட்ட கடுமையான சிறுநீரக நோயின் தொற்றுத்தன்மை பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சியில் மேலும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான அத்திவாரத்தையும் காட்டப்பட்டுள்ளது.

iv. செத்தெம்பர் 6ஆந் திகதியன்று மக்களை சட்ட விரோதமாக கடத்துதல் மற்றும் சருவதேச குற்றங்கள் மீதான கூட்டு தொழிற்படு தொகுதியின் 4வது அமர்வு கன்பராவில் நடாத்தப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் பேராளர் குழுவிற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் தலைமை வகுக்கப்பட்டுள்ளதுடன் பேச்சுவார்த்தைகளின் பக்கசெயற்பாடாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களினால் தலைமை வகுக்கப்பட்டுள்ளதுடன் பேச்சு வார்த்தைகளின் பக்க செயற்பாடாக பாதுகாப்பு அமைச்சிற்கும் குடிவரவு மற்றும் எல்லை பாதுகாப்பு திணைக்களத்துக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று செய்யப்பட்டுள்ளது.

v. நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்திற்கு இடையே கன்பெராவில் இடம்பெற்ற வெளிநாட்டு அலுவலகம் சிரேஸ்ட அதிகாரிகளின் இரண்டாவது அமர்வில் பேச்சு வார்த்தைகள் நிகழ்ந்தன. இலங்கை தூதுக்குழுவுக்கு மேலதிக செயலாளர் திரு சுமித் நாகந்தல மற்றும் அவுஸ்திரேலிய தூதுக்குழுவுக்கு வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தகம் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மேற்கு ஆசியாவின் முதலாவது உதவி செயலாளர் திருமதி கெதிகுளுமன் தலைமை தாங்கினர்.

vi. நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் உணவு கலைத்திறன்கள், மற்றும் கலாச்சாரம் என்பனவற்றை ஊக்குவித்து தூதரகத்தினால் வெளிநாட்டு பிரதிநிதிகள் (சான்சரி) வளாகத்தில் ‘‘இலங்கை பண்டிகை’’ ஏற்பாடு செய்யப்பட்டது. 70வது இராஜதந்திர உறவுகளை கருத்திற்கொண்டு கலைத்திறன் பணிப்பாளர் ரவிபந்து வித்தயாபதியின் தலைமையில் தேசிய நடனக்குழுவின் நிகழ்வு அரங்கேற்றப்பட்டது. நாட்டிய குழுவுக்கு அனுசரணை வழங்கியவர்கள் இலங்கை உள்ளக அலுவல்கள அமைச்சு மற்றும் இலங்கை வாயம்ப அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**ஆ. பொருளாதார தொடர்புகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

i. உயர்மட்ட விஜயங்களின் போது பொருளாதார தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கான தேவை துலாம்பரமாக எடுத்துக் காண்பிப்பதுடன் சக்தி, கணிப்பொருள், மணல்கள் மற்றும் காரீயத்துறைகளில் அவுஸ்திரேலிய முதலீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ii. கொழும்பு இரும்புப்பொருள் பரிமாற்ற நிறுவனத்துடன் மற்றும் பிணையங்கள் பரிமாற்ற ஆணைக்குழுவுடனும் உடனிணைந்து முதலீட்டு அரங்கொன்றுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இலங்கைக்கு அவுஸ்திரேலியாவிடமிருந்து முன்னெப்போதும் இல்லாத வகையில் உயர்ந்த முதலீட்டு உட்பாய்ச்சல் கிடைத்துள்ளமை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

iii. இலங்கை யானைகள், பாலூட்டிகள், பறவைகள் என்பனவற்றை கவனத்தில்கொண்டு இலங்கை சுற்றுலா மற்றும் வனஜீவியம் என்பனபற்றி நிபுணர்களால் வழங்கப்பட்ட ஈர்ப்புத்தன்மைவாய்ந்த இரு சொற்பொழிவுகளுடன் கன்பராவை தளமாகக்கொண்ட சுற்றுலா மற்றும் பிரயாணம் சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் பிரயாணம் வனஜீவியம் என்பனவற்றில் அக்கறையுள்ள குழுக்கள் மற்றும் பொதுமக்கள் என்போரை இலக்காக வைத்து தூதரகம் பல தொடர்ச்சியான சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு உரையாடல்களை முன்னெடுத்துள்ளது.

iv. நவம்பர் மாதத்தில் SOTs யின்போது பொருளாதார உறவுகளை விருத்தி செய்யும் சாத்தியங்களும் மேலும் கலந்துரையாடப்பட்டன. இது நவம்பர் மாதம் கையொப்பமிடப்பட்ட வணிகம் மற்றும் முதலீடு வர்த்தகம் மற்றும் முதலீட்டு திட்ட ஒழுங்கமைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும். முதலாவது கூட்டம் 2018

ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**இ. கலாசாரத் தொடர்புகள்**

i. கன்பராவிலுள்ள உயர் ஸ்தானிகராலயம் தேயிலை மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு கடையொன்றை திறந்து கன்பரா பல்கலாசார விழாவில் பங்கு பற்றியுள்ளது.

ii. 70 ஆண்டுகால இராசதந்திரத் தொடர்புகளை கொண்டாடுவதற்காக கௌரவ பிரதமர் விஜயம் செய்திருந்தபோது ஒரு சிநேகபூர்வ கிரிக்கட் விளையாட்டு இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர் X1 இடையே கன்பெராவில் நடைபெற்றது.

iii. தேசிய நடன குழு நவம்பர் மாதத்தில் இலங்கை வைபவ விழாவில் நடன நிகழ்ச்சிகளை அரங்கேற்றி மேலும் நடன நிகழ்வுகளை மெல்போர்ன், பிரிஸ்பேன் மற்றும் சிட்னி என்பனவற்றிலும் நிறைவேற்றின.

**ஈ. தொழிளாலார்களின் நலனோம்புகை**

பிஜியில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய சாத்தியங்களின் தரவுகள் பற்றிய விசாரணைகளுக்கு உயர்ஸ்தானிகராலயம் அனுசரனை வழங்கியுள்ளது.

**2. ஏனையவை**

i. வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர்ந்தவர்களை ஈடுபடுத்தல். கன்பராவிலுள்ள உயர்ஸ்தானிகராலயமும் சிட்னியிலும் மெல்போர்னில் உள்ள கொன்சுலேற்று நாயகங்களும் இலங்கையர்களுக்கிடையே பாலங்களைக்கட்டி எழுப்புவதில் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து அங்கு வசிக்கும் இலங்கை புலப்பெயர்வு சமூகத்துடன் தொடர்பு கொண்டு இலங்கையின் அபிவிருத்திப்பணியில் இலங்கை அரசாங்கத்துடன் ஈடுபட்டு பணியாற்றுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளிக்கின்றது.

ii. **கொன்சுலேற்று நாயகத்தின் அலுவலகம் / மெல்போர்ன்**

அ. இலங்கை அமைச்சர்களினால் / உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் விஜயங்களுக்கு சிட்னியிலுள்ள அரசாங்க அரசியல் பிரமுகர்களுடன் / உத்தியோகத்தர்களுடன் அவர்களினால் செய்யப்பட்ட சந்திப்புகளும் இருதரப்பு அரசியல் தொடர்புகளை பலப்படுத்தியுள்ளன.

i. 2017 மார்ச் 22ஆந் திகதியிலிருந்து 25ஆந் திகதி வரை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேராவினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்.

ii. 2017 மார்ச் 30ஆந் திகதியிலிருந்து 01ஆந் திகதிவரை இலங்கை பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு கலாநிதி. ரா த சில்வா அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்

iii. 2017 யூன் 25ஆந் திகதியிலிருந்து 28ஆந் திகிதி வரை தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல், மற்றும் அரசகருமமொழி அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு மனோ கணேசன் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்

iv. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பொது நிருவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன அவர்களது விஜயம் ( 2017ம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி – 2017 ஆம் ஆண்டு நவம்பர் 04 ஆம் திகதி

**ஆ. பொருளாதார தொடர்புகளும் வெளிநாட்டு முதலீடுகளும்- வர்த்தகமும் முதலீடும்**

i. மாண்புமிகு இலங்கை பிரதம அமைச்சர் அவர்களுக்கும் விக்டோரியாவின் சிறு வர்த்தக, புத்தாக்க மற்றும் வர்த்தக அமைச்சர் மாண்புமிகு பிலிப் டலிடாக்கிஸ், பா.உ அவர்களுக்குமிடையே 2017 பெப்ருவரி 16ஆந் திகதியன்று சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

ii. இலங்கையின் அப்போதைய பிரதிவெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு ஹர்ஷ தி சில்வா அவர்களுடன் பின்வரும் சந்திப்புகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன.

(2017 மார்ச் 30 ஆந் திகதியிலிருந்து ஏப்பிரல் 1ஆந் திகதிவரை)

i. ஆசிய இணைப்பில் வட்ட மேசை கலந்துரையாடல், மெல்போர்ன், பல்கலைக்கழகம்
ii. அவுஸ்திரேலிய வர்த்தக மன்றத்துடனான சந்திப்பு
iii. (KOOKAI) கூகெய்யிற்கான விஜயம் (அவுஸ்திரேலிய பெண்களின் நவீன ஆடை வடிவமைப்பு கைத்தொழில்)
iv. விக்டோரியா பிரதி வர்த்தக செயலாளர் திரு. ஜேமிக் அவர்களுடனான சந்திப்பு

**இ. சுற்றுலா ஊக்குவிப்பு**

மீளாய்வு காலப்பகுதியில் பின்வரும் பெரிய சந்திப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

i. இலங்கை சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான இலங்கை விழாவொன்று நடாத்தப்பட்டது.
ii. அவுஸ்திரேவியாவிற்கு பிரதம அமைச்சர் மேற்கொண்ட விஜயத்தின்போது 2017 பெப்ருவரி 16ஆந் திகதியன்று ஒழுங்கு படுத்தப்பட்ட வர்த்தக மதிய போசனத்தின் போது இலங்கையை பிரயாண.'. சுற்றுலா சேரிடமென்றாக கொள்வதற்கு ஊக்குவிப்பு வழங்கும் நிகழ்ச்சி
iii. 2017 மார்ச் 23ஆந் திகதியன்று மெல்போர்னிலுள்ள முதலீட்டாளர்களுக்கான முதலீட்டாளர் அரங்கில் இலங்கையை ஓர் பிரயாண.'. சுற்றுலா சேரிடமாக கொள்வதற்கு ஊக்குவிப்பு வழங்கும் நிகழ்ச்சி
iv. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் வீதி பொருட் காட்சி நிகழ்வுக்கு வசதியளித்தல். நிகழ்வை 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதியில் நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

v. பொது முகாமையாளர் செல்வி நிக்கி கென்யோன் உடனான சந்திப்பு மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் அதிகாரிகளின் விக்டோரியாவுககான விஜயம் என்பனவற்றை ஏற்பாடு செய்தல்.

### iii. கொன்சுலேற்று நாயகத்தின் அலுவலகம் ∴ சிட்னி

**அ. இருதரப்பு தொடர்புகள் - விஜயங்கள்**

i. பிரதி வெளிநாட்டு அமைச்சர் மாண்புமிகு கலாநிதி ஹர்ஷ தி சில்வா அவுஸ்திரேலியாவிற்கு 2017 மார்ச் 2ஆந் திகதியிலிருந்து ஏப்பிரல் 2ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட தமது விஜயத்தின் போது சிட்னிக்கும் விஜயம் செய்துள்ளனர்.

ii. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றம் அரசகரும மொழிகள் அலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு மனோகணேசன் அவர்களினால் 2017 யூன் 21 ஆந் திகதியிலிருந்து 28ஆந் திகதி வரை அவுஸ்திரேலியாவிற்கு மேற்கொள்ளப்பட்ட அவருடைய விஜயத்தின்போது அவுஸ்திரேலிய அதிகார பீடத்தினர்களுடன் அவர் சந்திப்புகளை நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

iii. 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வரை நடைபெறும் 2017 ஆம் ஆண்டு கடல் சக்தி மாநாட்டில் கலந்துகொள்ள உப கப்பல் படைத் தலைவர் டி டபில்யு பரத்தின் அழைப்பை ஏற்று இலங்கை கப்பற்படை கொமாண்டர் டிரவிஸ் சின்னையா பிரிஸ்பேனுக்கு மற்றும் சிட்னிக்கு விஜயம் செய்தார்.

iv. சிட்னியில் நடைபெற்ற 2017 காக்காடு பயிற்ச்சியின் திட்டமிடல் மாநாட்டில் இலங்கை கடற்படையிலிருந்து இரு அதிகாரிகள் பங்கு பற்றினார்கள்.

v. அதிமேதகு சனாதிபதியின் அவுஸ்திரேலிய இராஜாங்க விஜயத்தின்போது உத்தியோகபூர்வ சந்திப்புகளுடன் சமுதாய சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்களாக சிட்னியில் வசிக்கும் இலங்கை மக்களின் ஒரு குழுவினரை சந்தித்தார்.

vi. பின்வருவன தொடர்பாக 2017ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொன்சுயுளர் அலுவலகம் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்துடன் (DFAT) தொடர்புகளை மேற்கொண்டது.

- அவுஸ்திரேலிய விருதுகள் பெற்று சிட்னியில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுடன் இணைந்து மத்தியாண தேநீர் விருந்தொன்றை வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் (DFAT) அரசாங்க அலுவலகம் ஏற்பாடு செய்தது.
- 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாட்ட கூட்டத்தில் பங்குபற்றல்

- மார்ச் மாதம் 22 ஆம் திகதி "வெளியூர் முதலீட்டுகள் கொள்கை" யின் சிறு கூட்டத்தில் பங்குபெறுதல்
- 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்10 ஆம் திகதி சிட்னியில் வாழும் இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர் குழுக்களிடம் ஒரு சந்திப்பை அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மான்புமிகு பிரைஸ் அட்ஸனுக்காக ஏற்பாடு செய்தல். இந்த நிகழ்வில் ஏறத்தாழ எட்டு அமைப்புகள் கலந்து கொண்டன.
- வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் (DFAT) உள்நாட்டில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மற்றும் அரசசார்பற்ற வீட்டுவேலைக்கான பணிப்பாளர்களை சேவையில் அமர்த்துவது பற்றிய ஒரு சிறு கூட்டத்தில் கலந்துகொண்டமை.
- 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி சிட்னியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அவுஸ்திரேலியாவின் முதலாவது சர்வதேச இணயதள இண்டர்நெட் வலையமைப்பு தொடர்பாடல்கள் ஒப்பந்த மூலோபாயம் மறறும் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி பிரிஸ்பேன் மருத்துவ ஆராயச்சி நிருவனத்தில் அரசாங்கத்தின் சுகாதார நிறுவனத்தை அங்குரார்ப்பணம் செய்தல் என்பனவற்றில் கலந்து கொண்டமை.

**ஆ. பொருளாதாரத் தொடர்புகளும் வெளிநாட்டு முதலீடுகளும் - வர்த்தகமும் முதலீடும்**

i. இலங்கையில் வெளிநாட்டு அபிவிருத்தி முதலீடுகளை மேம்படுத்துவதற்காக பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் உடனுழைப்புடன் சிட்னியில் "இலங்கை முதலீட்டாளர் அரங்கில் முதலீடு செய்க"

ii. இலங்கையில் கிளை அலுவல்களை / வர்த்தகத்தை தாபிப்பதன் பொருட்டு மென்கலம், நிதிமுகாமைத்துவம் தகவல்தொழிநுட்ப பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் கல்வித்துறை ஆகிய துறைகளில் வளவாய்ப்புள்ள அவுஸ்திரேலிய முதலீட்டாளர்களுக்கு கொன்சுலேற்று அலுவலகம் சாத்தியமான உதவியை வழங்கியுள்ளது.

iii. அவுஸ்திரேலிய - இலங்கை வர்த்தககூடத்தின் எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் பேராளர் குழு இலங்கைக்கு விஜயம் செய்து ஏறத்தாழ 500,000 அவுஸ்திரேலிய டொலர்களைக் கொண்ட முதலீட்டிற்கு இலங்கை தகவல் தொழிநுட்ப கம்பனிகளுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளதுடன் இது தகவல் தொழிநுட்பத்துறையில் 15 வேலை வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது.

iv. தொழில்நுட்பம், நிதி முகாமைத்துவம், மற்றும் சுற்றுலா துறை என்பன அடங்களாக பலவித துறைகளிலுமுள்ள அவுஸ்திரேலிய முதலீட்டாளர்களிடமிருந்து மேலதிக விபரங்களுக்காக பெறப்பட்ட வினாக்களுக்கு கொன்சுலேட் போதுமான முதன்மை தகவல்களை வழங்கியது.

v. கொன்சுயுலேட் நாயகம் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை நடைபெற்ற தரமான உணவு பொருட் கண்காட்சி மைதானத்தில் பொருட்களை காட்சிபடுத்தும் கூடாரங்களை

இலங்கை தேயிலை சபை மற்றும் தேங்காய் அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்தது.

vi. கொன்சுயுலேட் நாயகம் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி தேயிலை சபையுடன் இணைந்து இலங்கை தேயிலை வர்த்தகத்திற்காக ஒரு வணிக தொடர்பாடல் வலையமைப்பை சிட்னியில் ஏற்பாடு செய்தது. தேயிலை வர்த்தகர்கள் நிவ் சவுத்வேல்ஸ் வர்த்தக அவையின் அங்கத்தவர்கள், அவுஸ்திரேலியா இலங்கை வர்த்தக பேரவை, அவுஸ்திரேலிய நிகழ்வுகளுக்கான உணவுகளை வழங்குதல் / சிற்றுண்டிசாலை கைத்தொழில சங்கம், அவுஸ்திரேலிய ஏற்றுமதி பேரவை மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியளாளர்கள் அடங்களாக 35 அங்கத்தவர்கள் வலையமைப்பு செயலமர்வில் பங்குபற்றினார்கள்.

**இ. சுற்றுலா**

சிட்னியிலுள்ள இலங்கை கொன்சுலேற்று நாயகத்தின் அலுவலகம் 2017 யூலை 13ஆந் திகதியன்று சுற்றுலா கம்பனியாகிய பரடைஸ் ஐலன்ட் லீசரின் உடனுழைப்புடன் ராட்டர்ஸ்அல்ஸ் களரியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சியொன்றை நடாத்தியுள்ளது.

- கொன்சுலேட் நாயகம் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து சிட்னியில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 -26 லிருந்து மற்றும் 2017 இலங்கை உணவு மற்றும் கலாச்சார வைபவிழா மற்றும் இலங்கை சுற்றுளா நுகர்வோர் ஊக்குவிப்பு நிகழ்வு என்பனவற்றை நடத்தியது.
- கொன்சுலேற்று நாயகத்தின் அலுவலகம் இலங்கை தேயிலை ஊக்குவிப்பு சபையுடன் SLTPB ஒன்றிணைந்து சிட்னி ஐஹார்ட் ரீஜன்சி ஹோட்டலில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி ஒரு வர்த்தக தொடர்பாடல் வலையமைப்பு / வீதி பொருட்காட்சி என்பனவற்றை 35 அங்கத்தவர்கள் அடங்கிய இலங்கை சுற்றுலா வர்த்தக தூதுக்குழுவுக்கு ஏற்பாடு செய்தது. நிவ்சவுத்வேல்ஸை தளமாகக் கொண்ட வெளிச்செல்லும் பயண ஏற்பாடு இயக்குனர்கள் மொத்த வர்த்தகர்கள் மற்றும் சில்லரை அங்கத்தவர்கள் அடங்களாக 150 பேர் இணையதள இன்டர்நெட் வலையமைப்பில் பங்குபற்றினார்கள்.

- **02. சீனமக்கள் குடிரசு**

இலங்கை சீனாவில் மூன்று வதிவட தூதரகங்களை ∴ அலுவலகங்களை வைத்திருக்கின்றது. பெயரளவில் அவை பீஜிங்கிலுள்ள இலங்கை தூதரகம் மற்றும் குவாங்சூவிலும் ஷங்காயிலுமுள்ள கொன்சுலேற்று நாயகங்களின் அலுவலகங்களுமாகும்.

## I. பீஜிங்

### அ. இருதரப்பு தொடர்புகள்

I. இருதரப்பு தொடர்புகளையும் அதிகரிப்பதற்க்காக வெவ்வேறு மாகாணங்களிலுள்ள வளைவுப் பதிவுகள் மற்றும் வீதி தொடர்பிலான ஆரம்ப நடவடிக்கைகள் தொடர்பில் இத்தூதரகம் நிகழ்ச்சி திட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது.

II. 2017 மே மாதம் மாதத்தில் பீஜிங்கில் நடாத்தப்பட்ட சர்வதேச ஒத்துழைப்பிற்கான வளைவுப்பகுதிகள் மற்றும் வீதிகள் அரங்கில் இலங்கையின் மாண்புமிகு பிரதம அமைச்சர் பங்குபற்றியுள்ளார்.

III. வறுமையைக் குறைத்தல் மீதான இலங்கையின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் தொடர்பான கருத்தரங்கொன்றை பீஜிங்கில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

IV. இலங்கை கரையோர பட்டு வீதியுடன் தொடர்புடையதாக இருப்பதால், தூதரகம் வளைவுப்பகுதிகள் மற்றும் வீதிகள் நிகழ்வில் பங்குபெற அழைப்பிதல் வழமையாக விடப்பட்டு மற்றும் தேவைப்படும்போது இதில் தூதரகம் கலந்துகொண்டு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது.

V. தூதரகம் திருமதி ஓர்ஜில்மா டுலுன்ஜினை இலங்கையின் கௌரவ துணைத் தூதுவராக உடன்பாடர், மொன்கோலியாவில் நியமிப்பது தொடர்பாக தேவையான கடிதத்தொடர்புகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் மங்கோலியா தரப்பினருக்கு இடையே மேற்கொண்டுள்ளது. வடகொரியா (DPRK) வின் முன்னேற்றங்களை உன்னிப்பாக கவனித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அறிவிப்பதை மேற்கொண்டுள்ளது.

VI. கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன சீனாவின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ வேங் ஈ யின் அழைப்பினை ஏற்று இராஜதந்திர உறவுகளின் 60வது ஆண்டு விழா மற்றும் இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையே உள்ள பொருளாதார உறவின் 65 வது ஆண்டு விழாவில் கலந்து கொள்ள ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி பீஜிங் சென்றடைந்தார். 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி இரண்டு கௌரவ அமைச்சர்களும் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள். மற்றும் நவம்பர் மாதம் 1 ஆம் திகதி கௌரவ அமைச்சர் சீனாவின் உப பிரதமர் கௌரவ வேங் ஹேனை சொன்னான்ஹெய், சிகுஹன்கீ பீஜிங்வில் சந்தித்தார்.

VII. இலங்கையின் தனிப்பட்ட பொருளாதார வலயத்தில் சீன விஞ்ஞான ஆய்வு கப்பல் சியங் ஹேங் ஹொங் 03 யின் “நீரியல் விஞ்ஞான ஆய்வு” தொடர்பான 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதியிலிருந்து 11

ஆம் திகதிவரை நடைபெற்ற ஒரு சந்திப்பில் கெப்டன் பி கே வர்ணகுலசூரிய மற்றும் ஏனய இரண்டு சிரேஸ்ட கப்பல் அதிகாரிகளும் பங்கு பற்றினார்கள்

VIII. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை சீனாவின் பீஜிங் மக்கள் பாதுகாப்பு பணியகத்தின் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட " தென் கிழக்கு சீனா மற்றும் அயல் நாடுகள் தலைநகரங்கள் சட்ட அமுழாக்க ஒத்துழைப்பு மாநாடு" என்பனவற்றிற்கு இரு பொலிஸ் அத்தியட்சர்கள் மற்றும் பொலிஸ் தலைமைசெயலக பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு டி ஆர் எல் ரணவீர என்பவர்களும் கலந்து கொண்டார்கள்.

IX. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து 24 ஆம் திகதி வரை பீஜிங்கில் நடைபெற்ற AOF செயற்திட்டம் 2017 லின் 4வது PMR சந்திப்பில் கப்பல்படை உயர் அதிகாரி (எயார் கொமாண்டோ) RHKP ரணசிங்க மற்றும் நான்கு வான்படை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

X. பலதரப்பட்டவைகள் - இராணுவ கலாச்சார படை சீனாவுக்கு விஜயம் செய்தது. அது தூதரகத்திலுள்ள பாதுகாப்பு பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்டது.

**இலங்கைக்கான விஜயங்கள்**

1. கொழும்பு கோள்பேஸ் ஹோட்டலில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதிவரை நடைபெற்ற காலி சம்பாசனை சர்வதேச கரையோர மாநாட்டிற்கு கிழக்கு கடல் கப்பல் குழுவின் பிரதி கப்பல்படைத் தலைவர் குயி உஸ்ஹொங் மற்றும் சீன PLA கப்பற படை என்போர் வருகை தந்திருந்தனர்
2. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மேஜர் ஜெனரல் சீ சொங் வு மற்றும் 20 PLA அதிகாரிகள் இலங்கையின் இராணுவ தளங்களுக்கு கல்வி சுற்றுலா பயணிகளாக வருகை தந்திருந்தனர்

**விளையாட்டு**

3. தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்டு இலங்கைக்கு இரண்டு தொழில் வாண்மையாளர்களான மேசைவரிப்பந்தாட்ட (டேபில் டெனிஸ்) பயிற்சியாளர்கள் அனுப்பப்பட்டார்கள்.

4. இந்த தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்டு பாதுகாப்பு சேவையாளர்களிடமிருந்து இரண்டு பயணத்துறை விளையாட்டு வீரர்கள் சிறந்த முன்னேற்றகரமான பயிற்சிகளுக்காக சீனாவுக்கு விஜயம் செய்தார்கள்.

**ஏனய விஜயங்கள்**

- 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரை 2013- 2022 அங்கவீனமுற்ற விசேட தேவையுள்ள நபர்களின் ஆசிய மற்றும் பசுபிக் இடை மைய மீளாய்வின் கூட்டத்திற்கு வருகை தர 04 அதிகாரிகள் மற்றும் நலண்புரி மற்றும் கண்டி மரபுரிமையின் சமுதாய வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளர், சமன் தேவபிரிய உடவத்த என்பவர்கள் சமூகமளித்தார்கள்.
- சீன இலங்கை காலம் கடந்த சிறுநீரக பாதிப்பு ஊமுனுரு ஆய்வு நன்கொடை கருத்திட்டத்தின் கீழ் நகரதிட்டமிடல் மற்றும் நீர் வழங்கள் அமைச்சின் செயலாளர் திரு சரத் சந்திரசிரி விதான மற்றும் 9 உத்தியோகபூர்வ அதிகாரிகள் பீஜிங்குக்கு விஜயம் செய்தார்கள்.

**மீளாய்வுக் காலப்பகுதியில் பின்வரும் உடன்படிக்கைகள் ∴ புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டுள்ளன**

I. இயற்கை வளத்துறையில் இலங்கை நிறைவேற்று நிலை மற்றும் வனராசிகள் அமைச்சிற்கும் சீனா அரசாங்க காட்டியல் நிருவாகத்திற்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று செய்யப்பட்டுள்ளது.

II. தெற்கிலங்கை நீடிப்பு மற்றம் கண்டி வடக்கு பார்த்ததும் புற நீர்வழங்கல் கருத்திட்டம் ஆகியவற்றின் ஆலோசனைச் சேவைகளுக்கு கடனொன்று வழங்குவதற்கான கட்டமைப்பு உடன்படிக்கை

III. 400 மில்லியன் யென் (RMB) வழங்குவதற்கான தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை

IV. முதலீடு, பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பிற்கான நடுத்தர மற்றும் நீண்ட தவணைக்கால அபிவிருத்தித்திட்டத்தின் முக்கியமான அம்சங்கள்

V. முதலீட்டிற்கும் பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பிற்கான கட்டமைப்பு உடன்படிக்கை

VI. மொனராகலைக்கும் சீனாவின் ஜிசான், ஷான்சி மாகாணத்திற்கும்மிடையே சகோரத்துவ நகரத்தொடர்பை நிறுவுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை

ஆ. பலதரப்பு தொடர்புகள்

பம்பு மற்றும் ரட்டான் என்பனவற்றிற்கான சர்வதேச இணையத்தள வலையமைப்பு

பீஜிங்வில் உள்ள பம்பு மற்றும் ரட்டான் என்பனவற்றின் சர்வதேச தொடர்பாடல் இணையத்தள வலையமைப்பின் செயலகத்துடன் தூதரகம் வழமையான தொடர்புகளை பேணுகின்றது. அத்துடன் பம்பு மற்றும் ரட்டான் என்பனவற்றிற்கான சர்வதேச இணையத்தள வலையமைப்பு

(INBAR) செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்கின்றது.

- UNGA வில் அவதானிப்பாளர் அந்தஸ்தில் INBAR விண்ணப்பத்திற்கு இலங்கையின் ஒத்தாசையை பெறுவது தொடர்பாக தூதரகம் MOFA மற்றும் INBAR இடையே தேவையான கடித பரமாற்றல் பணியை மேற்கொண்டுள்ளது

**ஆசியா மற்றும் பெசிபிக் என்பனவற்றிற்கான பொருளாதார மற்றும் சமூக பணிகள்**

சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமை அமைச்சின் பேராளர்கள் குழு் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 01 ஆம் திகதி வரை பீஜிங்வில் நடைபெற்ற 2013 – 2022 அங்கவீனமுற்ற விசேட தேவையாளர்களின் ஆசியா மற்றும் பசுபிககின் நடுநிலை ஆய்வு தொடர்பாக நடந்த உயர் மட்ட இரு அரசு தரப்பினர்களின் கூட்டத்தில் தூதரகம் சமூக்மளித்திருந்தது.

**ஆ. பொருளாதாரத் தொடர்புகளும் மற்றும் முதலீடு**

I. **வர்த்தகம்**

- இத்தூதரகம் தேயிலை, இரத்தினகற்களும், ஆபரணங்களும், கைப்பணிப்பொருட்கள் ஆகியவற்றிற்கு ஊக்குவிப்பு வழங்கி அநேக வர்த்தக சந்தைகளில் பங்குபற்றியுள்ளது.

- 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் / நவம்பர் மாதங்களில் பீஜிங்வில் நடைபெற்ற சீன சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் பொருட்காட்சியில் 20 கம்பனிகள் பங்குபற்ற தூதரகம் வசதிகள் வழங்கியுள்ளது.

II. **சுற்றுலா**

2017 செத்தம்பர் மாதம் வரை சீனாவிலிருந்து 268, 952 உல்லாசப்பிரயாணிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். குவாங்சூ, லீ்ான், ஷங்காய் மற்றும் பீஜிங்கில் நடாத்தப்பட்ட சுற்றுலா பொருட்காட்சிகளில் ஏறத்தாழ 15லிருந்து 20 இலங்கைக் கம்பனிகள் பங்குபற்றியுள்ளன

- தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல சுற்றுளா பிரயாணத்துறை பொருட்காட்சிகள் மற்றும் வீதி பொருட் காட்சிகள் என்பனவற்றிற்கு இலங்கையிலிருந்து 20 முன்னனி சுற்றுலா பிரயாணத்துறை முகவர்கள் பங்குபற்றினார்கள். அத்துடன். அவை இலங்கையை சீன ஊடகங்கள் மற்றும் பிரயாண துறை என்பனவற்றிற்கு விளம்பரப்படுத்தி

முன்னேற்றமடையச் செய்ய ஏறாழமான வீதி பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. பொருட்காடசிகள் பின்வருமாறு :

- பீஜிங் சர்வதேச பிரயாண 2017 மற்றும் பீஜிங் வீதி பொருட்காட்சி
- வுஹான் சர்வதேச சுற்றுலா பொருடகாட்சி 2017 – மக்களுக்கு இலங்கை சுற்றுளா துறையை ஊக்குவித்து வெளியக ஊக்குவிக்கும் பொருட் காட்சி
- சங்சா இலங்கை பிரயாண வீதி பொருட்காட்சி
- செங்டு சர்வதேச பிரயாண பொருட்கண்காட்சி 2017.

III. **முதலீடு**

முதலீட்டுவாய்ப்புகளை பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்வதற்காக குறிப்பாக கமத்தொழில், தொழிநுட்பவியல் மற்றும் உற்பத்திதுறைகளில் அநேக முதலீட்டு பேராளர் குழுக்களும் தனிப்பட்ட கம்பனிகளும் இலங்கைக்கு விஜயம செய்துள்ளன.

- இரு நாடுகளுக்கும் இடையே உள்ள இருதரப்பு ஆண்டுவிழாக்களுக்காக கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சீனாவுக்கு விஜயம் செய்திருந்தபோது தூதரகத்தினால் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி முதலீட்டு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது
- இலங்கையின் வர்த்தகம், சுற்றுலா, மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை சிறப்பம்சகளாக பிரசித்திபடுத்தி காட்டும் இருதரப்பு ஆண்டு நிறைவுகளின் நிகழ்வில் இலங்கை தொடர்பான நினைவுகூறும் வெளியீட்டை பிரசுரிப்பதற்கு தூதரகம் ஒரு முதலீட்டு ஆலோசணை வழங்கும் நிறுவனமான லுக்வீ உடன் ஒருங்கிணைந்தது. அந்த வெளியீடு வர்த்தக சமூகம் மற்றும் நுகர்வோர் மத்தியில் பரவலாக வழங்கப்பட்டுவருகின்றது.
- ஆடை ஜவுளித்துறையில் பலதரப்பட்ட ஜவுளி கைத்தொழில் பூங்கா மற்றும் பயிற்சி வழங்கும் ஸ்தாபணங்களை நிறுவது தொடர்பாக ஒரு கருத்திட்ட முன்மொழிவை கலந்தாலோசிக்க தூதரகம் சீன ஆடை ஜவுளி சங்கத்திலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்ய ஒரு தூதுக்குழுவை ஏற்பாடு செய்தது.
- தூதரகம் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலீடு மற்றும் செயற்திட்ட கூட்டுறவு தொடர்பாக கலந்தாலோசிக்க வடமேல் மாகாண சபைக்கு ஒரு தூதுக் குழுவை CCPIT கிங்கெயிலிருந்து ஏற்பாடு செய்திருந்தது.

iv **அபிவிருத்தி உதவி**

- இலங்கைக்கு சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியிலிருந்து ஒரு உத்தியோக பூர்வ தூதுக்குழு விஜயம் செய்திருந்த காலப்பகுதியில் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி தெற்கு அதிவேகவீதி கருத்திட்டத்தின் விஸ்தீரணம் தொடர்பான சமுதாய பணிகளின் கட்டிடவடிவமைப்பு மேற்பார்வைக்காக தல்பிட்டிகல வாவி செயற்திட்டம் கண்டி வட பாத்ததும்பர ஒன்றிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் ஆலோசனை சேவைகள் என்பனவற்றிற்கான நிதி உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன

**கலாச்சார உறவுகள்**

- தூதரகம் சீனாவில் இலங்கையின் கலாச்சாரம் மறறும் பாரம்பரியத்தை ஊக்குவித்தல் என்ற எண்ணக் கருத்துடன் கலாச்சாரம் தொடர்பான நிகழ்வுகளில் மிகவும் ஆர்வமாக கலந்து கொள்கின்றது.

- 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி பீஜிங்வில் இராஜதந்திர உறவுகளின் 60 வது ஆண்டுவிழா மற்றும் இலங்கை மற்றும் சீனாவுடனான பொருளாதார உறவுகளின் 65 வது ஆண்டுவிழா என்பன கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, சீனாவின் வெளிநாட்டு விவகார உதவி அமைச்சர் கௌரவ சென் சியோ டொங் மற்றும் சீனாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கருணாசேன கொடிதுவக்கு என்பவர்களது கௌரவ பங்குபற்றலுடன் கொண்டாடப்பட்டது.

- 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி சீனாவில் இராஜதந்திர சஞ்சிகையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2017 இராஜதந்திர தேசிய ஆடை போட்டியில் பீஜிங்கில் உள்ள இலங்கை தூதரகம் மிகவும் ஆக்கத்திறனுக்கான விருதை வென்றது.

**ஏனயவை**

i உள்ளூர் ஊடகங்களுடன் உரையாடல்

இலங்கையின் வர்த்கம், சுற்றுலா, முதலீடு, மற்றும் கலாச்சாரம் என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக மற்றும் தூதரக நிகழ்வுகளுக்காக பாராட்டு விளம்பரங்களைப் பெற சீன அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுடன் இலங்கை தூதரகம் மிகவும் நெருங்கி செயலாற்றுகின்றது.

தூதரகம் பலவித பயிற்ச்சி திட்டங்கள் மற்றும் பயிற்ச்சி செயலமர்வுகள் என்பனவற்றை ஒருங்கிணைத்து மற்றும் தூதரக பங்களிப்பு என்பனவற்றை வழங்கி தேவைப்படும்போது அதாவது 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி ஆசிய கூட்டுறவு உரையாடல்களுக்காக நீர் வழங்கல்

முகாமைத்துவத்திற்கு பயிற்சி அளித்தல், மற்றும் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி சீனா ஆபிரிக்க ஊடக மத்திய கருத்திட்டம் மற்றும் சீனா தெற்காசிய மற்றும் தென் கிழக்கு ஆசியா ஊடக மைய கருத்திட்டம் மற்றும் 1வது சீன தென்கிழக்கு தேசிய இலக்கிய அரங்கு (5-9- நவம்பர் 2017). என்பனவற்றை தூதரகம் ஒருங்கிணைத்துள்ளது.

ii குன்மிங் மரதன்

சாங்காய் கூட்டத்தாபன நிறுவனம் மற்றும் யுன்னன் மாகாண சபை என்பனவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட SCO குன்மிங் சர்வதேச மரதன் ஓட்டப்போட்டி என்பனவற்றில் இரண்டு ஓட்டபந்தய வீரர்கள் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம திகதி பங்குபெறுவதற்காக தூதரகம் ஏற்பாடு செய்தது. இந்த மரதன் ஓட்டப் போட்டியில் இரண்டு ஓட்ட வீராங்கனைகளில் ஒருவரான செல்வி வேலுகிரிசாந்தினி நான்காவது இடத்தை பிடித்தார். (42.195km)

II. **குவாங்சூ**

**அ. இருதரப்பு தொடர்புகள் - விஜயங்கள்**

கொன்சுலேற்று அலுவலகம் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பின்வரும் விஜயங்களுக்கு வசதியளித்துள்ளது.

I. 2017 மே மாதம் 7 ஆந் திகதியிலிருந்து 20ஆந் திகதிவரை சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் குவாங்கி மக்கள் காங்கிரசின் நிலையியற் குழுவின் தவிசாளருமாகிய பெங்குவின் குவா அவர்களினாலும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவினாலும் மேற்கொள்ளப்ப்ட விஜயத்திற்கும் அத்துடன்

II. தேசிய நீர்வழங்கல் முகவர் நிலையத்துடனான

III. உடனுழைப்பு நிகழ்ச்சி திட்டமொன்றை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ந்து அறிந்து கொள்வதற்காக 2017 மே மாதம் 23ஆந் திகதியிலிருந்து 25ஆந் திகதி வரை சீனா விஞ்ஞான கல்விக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான சீனா- இலங்கை கூட்டு மத்திய நிலையத்தின் பேராசிரியர் டொங்சியா வோவாங் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் பேராளர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விஜத்திற்கும் இலங்கை கொன்சுலேற்று பணியகம் உதவி வழங்கியுள்ளது.

**ஆ. பொருளாதாரத் தொடர்புகளும் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளும்**

பின்வரும் விடயங்களில் இலங்கை பின்பற்றுவதற்கு கொன்சுலேற்று நாயகத்தின் அலுவலகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

i 2017 பெப்புருவரி 23ஆந் திகதியிலிருந்து 25ஆந் திகதிவரை நடாத்தப்பட்ட குவாங்கோ, சருவதேச பிரயாணப் பொருட்காட்சியில் 19 இலங்கை பிரயாண மற்றும் உல்லாசப்பிரயாண இயக்குனர்களும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினர்களும் பங்குபற்றியுள்ளமைக்கும்

ii ஷென்சேனிலும் குவாங்சோவிலும் குவாங்சோ சருவதேச வியாபார பொருட்காட்சியின் பக்கவாட்டு நிகழ்வாக நடாத்தப்பட்ட இரண்டு சுற்றுலா வீதிப்பொருட்காட்சிகளில் இலங்கை பங்குபற்றுவதற்கும்.

iii வர்த்தக சமூகத்திற்கும் பணியகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குமாக 2017 பெப்புருவரி 8ஆந் திகதியன்று குவாங்டொங் மாகாணத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு முன்வைக்கப்பட்ட நிகழ்வில் இலங்கை பங்குபற்றுவதற்கும்.

iv மார்ச் 15 ஆந் திகதியன்று தெற்காசிய வர்த்தக மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு நிறுவப்படுவதற்கும்

v 2017 மார்ச் 25 ஆந் திகதியன்று சுத்தமான இலங்கை கறுவா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நடாத்தப்பட்ட வேலைக்களத்தில் இலங்கை பங்குபற்றுவதற்கும்

vi 2017 மே மாதம் 26 ஆந் திகதியிலிருந்து 29ஆந் திகதிவரை நடாத்தப்பட்ட அக்குவாரமா வியாபாரச்சந்தையில் இலங்கைப் பங்குபற்றுவதற்கும்

vii இலங்கை தேயிலையின் 150வது ஆண்டு விழா

viii குவாங்சி மாகாணத்திலுள்ள நானிங்கில் செத்தம்பர் 12ஆந் திகிதியிலிருந்து 15ஆந் திகதி வரை திகதிவரை நடாத்தப்பட்ட 14வது சீனா ஆசியான் வியாபார எக்ஸ்போ பொருட்காட்சியில் இலங்கைப் பங்குபற்றுவதற்கும்

ix செத்தெம்பர் 21 ஆந் திகதியிலிருந்து 24ஆந் திகிதி வரை நடாத்தப்பட்ட குவாங்டொங் 21வது நூற்றாண்டு கடற்பிரதேச பட்டுப்பாதை சருவதேச பொருட்காட்சியில் 7 இலங்கை கம்னிகள் பங்குபற்றுதல் மேற்கொள்ளப்படுதற்கும் ஒழுங்கு செய்துள்ளது.

**இ. கலாசாரத்தொடர்புகள்**

i. இலங்கைக்கும் சீனாவிற்குமிடையே நிலவுகின்ற 60 ஆண்டுகால இராசதந்திர உறவுகளை நினைவு கூருவதற்காக இலங்கை எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட 260 ற்கும் மேற்பட்ட நூல்களைக்கொண்டுள்ள இலங்கைப் பிரிவொன்று குவாங்ஷோ பொது நூல்நிலையத்தில் 2017 மார்ச் 23ஆம் திகதியன்று நிறுவப்பட்டுள்ளதுடன் இருதரப்புத் தொடர்புகளை படம்பிடித்துக் காட்டுகின்றதும் “இலங்கையின் பரந்த கணநேரத் தோற்றம்” எனத் தலையங்கமிடப்பட்ட நிழற்படங்கள் பொருட்காட்சியொன்றும் காண்பிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு நாடத்தப்பட்டுள்ளது.

ii. 2017 ஏப்ரல் 2ஆந் திகதியன்று இலங்கைச் சிறுவர்களினால் நன்கு அறியப்பட்ட வலும் பேர்பெற்றவருமான திரு. நூறிவித்தாச்சியுடன் சிறுவர்கள் வேலைக்களமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

**ஆ. பலதரப்புத்தொடர்புகள்**

i. இந்துசமுத்திர விளிம்பு சங்கத்தின் 20 ஆவது ஆண்டின் ஞாபகார்த்தமாக ஜகார்த்தாவில் நடாத்தப்பட்ட இந்துசமுத்திர விளிம்புச் சங்கத்தின் தலைவர்களின் உச்சிமாநாட்டில் அதிமேதகு சனாதிபதி மைத்திரிப்பால சிறிசேன பங்குபற்றியுள்ளார். (2017 மார்ச் 7 ஆந் திகதி)

ii. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீரவும் பேராளர் குழுவுக்கும் இந்துசமுத்திர விளிம்புச்சங்கத்தின் அமைச்சர்களின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு வசதியளிக்கப்பட்டது. (2017 மார்ச் 6 ஆந் திகதி)

iii. மான்புமிகு தூதுவர் பின்வரும் நிகழ்வுகளில் பங்குபற்றினார்.
சிரேஸ்ட அலுவலரகளது உத்தியோகபூர்வ கூட்டம் - 2017 மார்ச் மாதம் 5 ஆம் திகதி / சிரேஸ்ட அலுவலர்களது இரண்டாவது IORA அமைச்சின் நீல பொருளாதார மாநாடு 2017 ஆம் ஆண்ட மே மாதம் 9ஆம் திகதி ஆசிய ஆபிரிக்க மாநாட்டின் 62வது ஆண்டுநிறைவு 2017 ஏப்ரில் 18 / ஆசிய ஆபிரிக்க கொடிகள் உயர்த்தும் வைபவம் மற்றும் அனு ஆயுத பரவலாக்கல் அற்ற தொடர்பான உடன்பாடின் 2017 – 13 – 14 மார்ச் 2017 பிராந்திய உரையாடல்கள் மற்றும் ஆலோசணை

iv பாலி ஜனநாயக அரங்கில் இலங்கை கைளரவ வசந்த சேனாநாயக்காவினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

**ஷங்காய்**

**அ. பொருளாதாரத் தொடர்புகள்**

ஆ. பீங்ஜியாங் மாகாணத்தின் தலைநகரமாகிய ஹாங்சோவில் இலங்கை - சீனா வர்த்தகமொன்று நிறுவப்பட்டுள்ளது.

இ. அன்கூய மாகாணத்திலும் ஷங்காயிலும் இலங்கை கடலுணவுமற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. கலாசாரத் தொடர்புகள்**

வின்ஜாச நடனக்குழு விஜயம் செய்து ஷங்காயில் நடன நிகழ்ச்சியை நிகழ்த்தியுள்ளது.

**இ. தேயிலை மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு**

சுற்றுலா வீதிபொருட்காட்சி, ஷங்காய் உலக பிரயாணபடபொருட்காட்சி உலக தேயிலைப் பொருட்காட்சி மற்றும் ஷோசானில் 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சருவதேசத் தீவுகள் சுற்றுலா பொருட்காட்சி ஆகியவற்றிற்கு உதவி புரிந்துள்ளது.

3. **இந்தோனேஷியா**

**அ. இருதரப்புத்தொடர்புகள்**

i. அதிமேதகு சனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில் 2017 மார்ச் 8 ஆம் திகதியன்று அதிமேதகு சனாதிபதி மைத்திர்பால சிறிசேன இந்தோனேஷியாவிற்கு உத்தியோக விஜயத்தைச் செய்துள்ளார். இருதரப்பு கலந்துரையாடலின் பெறுபேறுகள் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான துறையில் தொடர்புகளின் வளைப்பாதைக்கு முக்கியமான வழிகாட்டலை வழங்கியுள்ளது.

ii. இந்த விஜயத்தின் போது பின்வரும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டுள்ளது

- இலங்கை தேசிய கைத்தொழில் மற்றும் சிறிய. மற்றும் மத்திய தொழில்முயற்சிகள் என்பனவற்றிற்கான சந்தைப்படுத்தும் சேவை முகவர் மற்றும் கூட்டுறவுகள் (SMESCO) என்பனவற்றிற்கு இடையே
- இலங்கை கடற்தொழில நீரியல்வளம் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இந்தோநேஷியா நீரியல் மற்றும் கடற்தொழில் என்பனவற்றின் நீரியல் கடற்தொழில் கூட்டுத்தாபனம் என்பனவற்றிற்கு இடையே

iii சட்டவிரோத ஒழுங்கற்ற மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடிப்பு மற்றும் நீடித்து நிலைத்து இருக்கக்கூடிய ஆளுமையை மேம்படுத்த மற்றும் சுயமான சர்வதேச ஒத்துழைப்பு என்பதற்கான கூட்டறிக்கை

iv பாதுகாப்பு ஒத்துளைப்பு: பாதுகாப்பு தொடர்பான கற்கைநெறி மற்றும் கருத்தரங்குகள் என்பனவற்றில் பங்குபெற பல உத்தியோகத்தர்களுக்கு வசதியளித்தல்.

v அதிமேதகு சனாதிபதியின் இந்தோநேஷியாவுக்கான இராஜாங்க விஜயத்தைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் அதிமேதகு இந்துநேஷிய சனாதிபதியின் இலங்கை விஜயத்தின் ஏற்பாடு தொடர்பாக 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி வெளிவிவகார அலுவல்கள் அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர் வசந்த சேனானாயக்க ஜகார்த்தாவில் அதிமேதகு சனாதிபதி ரெட்னோ மார்சூடியை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்

vi கௌரவ வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்தா சேனாநாயக்காவுக்கான இருதரப்பு சந்திப்புகள் புருனீ தாருசலாமின் தூதுக்குழுவின் தலைமைகள் ஒழுங்கு செய்து மற்றும் கரகஸ்தான், ஜோர்தான், தீமர் லெஸ்டீ, மற்றும் சாமோ என்ற நாடுகளின் அமைச்சர்களுடன் கலந்துரையாடி ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

**ஆ. பல்வகை தொடர்புகள்**

இந்துசமுத்திர விளிம்பு சங்கத்தின் (IORA) 20 வது ஆண்டை நினைவுகூறும் முகமான 2017 மார்ச் 5 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட இந்து சமுத்திர விளிம்புச் சங்கத்தின் தலைவர்கள் மாநாட்டில் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குகொண்டார்.

ii வெளிவிவகார அமைச்சர் கௌரவ மங்கள சிரிசேன மற்றும் தூதுக்குழு IORA பேரவை அமைச்சர்கள் கூட்டத்தில் பங்குபெற வசதிகள் வழங்கப்பட்டது.

iii. மேன்மைதங்கிய தூதுவர் பின்வரும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளார்

சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் கூட்டம் 2017 மே மாதம் 9 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட இந்துசமுத்திர விளிம்புச் சங்க அமைச்சர்கள் மட்டத்திலான நீலபொருளாதார மாநாட்டிலன் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் கூட்டம் 2017 ஏப்ரல் 18 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட ஆசிய ஆபிரிக்க கொடிகள் ஏற்றும் வைபவம் மற்றும் 2017 மார்ச் 13 ஆம் திகதியிலிருந்கு 14 ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட “2017 பிறெப் கொம்மை நோக்கி” அணுப்பெருக்கமற்ற உடன்படிக்கை மீதான பிராந்திய கலந்துரையாடலும் ஆலோசனை வைபவம்

iv பாலி சனநாயக அரங்கில் பன்முகத்தன்மை, பாதுகாப்பு, சமயுரிமை மற்றும் சமுதாய நீதி என்பனவற்றின் முகாமைத்துவம்” என்ற கருப்பொருள் கொண்ட அமைச்சின் குழு விவாதத்தில் கலந்துரையாடலில் பங்குபற்றிய கௌரவ வசந்தா சேனாநாயக்காவினால் இலங்கை பிரதிநுவப்படுத்தப்பட்டது.

**இ. பொருளாதாரத்தொடர்புகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

i. இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும்/ முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை, வர்த்தக உடன்படிக்கை மற்றும் தொடர்புடைய கலந்துரையாடலையும் தொடர்வதற்கு 2017 ஓகத்து 24 ஆம் திகதியன்று கொழும்பில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை இலங்கை வர்த்தக கூடத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. (ஓகத்து 23 ஆம் திகதி)

ii.வர்த்தக பொருட்காட்சி : 2017 மார்ச் 24 ஆந் திகதியிலிருந்து 26 ஆம் திகதி வரை ASTINDO பிரயாண பொருட்காட்சியில் இலங்கைக் கம்பனிகளுடனும் இலங்கை உல்லாச பிரயாண ஊக்குவிப்பு பணியகத்துடனும் பங்குபற்றியுள்ளது.

iii. இலங்கை ஜாகர்த்தா சருவதேச ஆபரண பொருட்காட்சியில் தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையுடனும் ஏழு கம்பனிகளுடனும் பங்குபற்றியுள்ளது. 2017 ஏப்பிரல் 20 ஆந் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரை அத்துடன் வைரப்பட்டைகள் விடயத்தில் இலங்கைக்கு வருகை புரியுமாறு இந்தோனேசிய பொற்கொல்லர் மற்றும் ஆபரணங்கள் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் ஐஐ உறுப்பினர்கள் தேசிய இரத்தினகற்கள் மற்றும் அதிகாரசபையுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு இலங்கைக்கு வருகை புரிவதற்கு இலங்கை உதவி செய்துள்ளது.

iv.இலங்கையிலுள்ள சீலைன் தொகுக்கும் பிரிசமுடெரா மற்றும் இந்துனேசியாவிலுள்ள அகாடமி மரிசைம் டியாஜாட் கடற்கரையோர பயிற்சி நிறுவகத்திற்குமிடையே கூட்டுறவுதொழில் மற்றும் முதலீட்டுக் கலந்துரையாடல் நிலை நிறுப்பட்டுள்ளது

v. சுற்றுலா, உணவு, சிற்றுண்டிச்சாலைகள், கடற்கரையோரப் பரப்பும் அணியாதரவு, உள்நாட்டு விமானச் சேவை போன்ற பல துறைகளில் முதலீடு செய்தல் மீதான வர்த்தக கலந்துரையாடல் செய்யப்பட்டுள்ளன.

vi. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்துநேஷியா எக்ஸ்போ 2017 ல் பங்குபெற இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தூதுக்குழுவுக்கு வசதிகள் வழங்கப்பட்டது.

vii. இந்துநேஷியா எக்ஸ்போ 2017 – 2017 ஒக்டோபரில் னில் பங்குபெறும் இலங்கை கம்பனிகளுக்கு வர்தக கலந்துரையாடல் அமர்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

viii. அதிமேதகு இநதுநேஷிய சனாதிபதியின் உத்தியோகபூர்வ இலங்கை விஜயத்தின்போது வர்த்தக கூட்டுறவுகளை அதிகரித்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்காக பேரம்பெசி கைச்சாத்திட இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் KADN இந்துநேஷியா இடையே கலந்துரையால்களில் ஈடுபட்டமை

ix. வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான செயற் குழு மற்றும் PTA/FTA இருதரப்பு உரையாடல்கள் என்பனவற்றின் இறுதி நிறைவேற்றம் என்பனவற்றிற்காக இந்துநேஷிய முகவர்களுடன் பேரம்பேசி கலந்துரையாடல்

x. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேச WIC சந்தையில் இலங்கை தேயிலை மற்றும் கைவினைதிறன் பொருட்களை வழங்குதல்

**ஈ. வியாபாரத்திற்கும் வர்த்தகத்திற்கும் வசதியளித்தல்**

புதிய உணவு மற்றும் தாவர நாடுகளின் மீதான குறிப்பாக இலங்கைத் தேயிலை மீதான புதிய இந்தோனேஷீய ஒழுங்கு விதியின் கீழ் உணவு மற்றும் பாதுகாப்பு பற்றி பரிசோதனை செய்யும் பரிசோதணைக்கூடம் உயர் தொழிநுட்ப பதிவு நடைமுறையை பெற்றுக் கொள்வதற்கு இத்தூதரகம் வசதியளித்துள்ளது. இதற்கமைவாக வரையறுக்கப்பட்ட SGS கம்பனிக்கும் இலங்கை தேயிலைச் சபைக்கும் காலநீடிப்பு செய்யப்படத்தக்கதாக மூன்று ஆண்டுக்காலப்பகுதிக்கு தேயிலைக்கான பரிசீலணைச் சான்றிதழ் வழங்குவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

- கனிப்பொருள் மணல், வீதி அபிவிருத்தி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலயத்தில் விமானநிலய ஹோட்டல், தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமான கப்பல்சேவை, அரசாங்க தொழில்வாண்மையாளர்களுக்கான விடுதிகள், புகையிரத நிலையங்கள், பலதரப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள், கடல்நீரிலிருந்து உப்பை வேறாக்குதல் என்பன தொடர்பாக விலைமனுக்கள்கள் (டென்டர்) பத்திரங்கள் மற்றும் இலங்கை நிகழ்வுகள் என்பன ஊக்குவிக்கப்பட்டன.

உ. **கலாச்சாரத் தொடர்புகள்**

- இலங்கை சமூகத்துடன் இணைந்து 2017 சனவரி 09 ஆந் திகதியன்று தேசிய நல்லிணக்கத் தினம் நினைவுகூறப்பட்டுள்ளது.
- பல்லின பன்முகத்தன்மையை கொண்டாடுதல: வெசாக் (மே 2017) மற்றும் ரமஸான் இக்தார் (ஜுன் 2017) என்பனவற்றை நினைவுகூறுதலை பின்பற்றுதல். தூதரகம் தீபாவளி (2017 ஒக்டோபர் 21) மற்றும் கிரிஸ்மஸ் பண்டிகை (2017 டிசம்பர் 03) என்பன இலங்கையின் பல்லின பன்முகத்தன்மை மற்றும் பாரிய ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வை கட்டி எழுப்ப ஒரு தொடர்ச்சியான செயற்பாடாக உள்ளது.

ஊ. **கொன்சியூலர் மற்றும் தொழிளாலர் நலனோம்பல்**

மொடனில் தடுப்புக்காவலில் வைத்திருக்கப்பட்ட 17 இலங்கை அகதிகளினதும் 28 சட்ட விரோத புலம்பெயர்ந்தவர்களையும் தாய்நாட்டிற்கு திருப்பு அனுப்புவதற்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

**04. ஜப்பான்**

**அ. இருதரப்பு தொடர்புகள்**

1. இலங்கையின் பிரதம அமைச்சர் 2017 ஏப்பிரல் 10ஆந் திகதியிலிருந்து 16ஆந் திகதிவரை ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ளார். ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான விரிவான பங்காளித்துவத்தை ஆழமானதாகவும் விரிவானதாகவும் ஆக்குதல் எனத் தலையங்கமிடப்பட்ட கூட்டுக் கூற்றொன்று வெளியிடப்பட்டது. இத்துடன் கூடுதலாக மேலெழுந்து கொண்டிருக்கின்ற பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் களுகங்கை நீர்வழங்கல் விரிவாக்கக் கருத்திட்டம் சம்மந்தப்பட்ட இரண்டு யென் கடன் கருத்திட்டங்கள் தொடர்பிலான குறிப்புகளும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்தின் மானிய உதவிக் கருத்திட்டத்திங்கான குறிப்பும் கையொப்பமிடப்பட்டு பரிமாற்றம் செய்யப்பட்டன.

ii. ஜப்பான் பிரதி அமைச்சரின் விசேட ஆலோசகராகிய கலாநிதி ஹிரட்டோ இசுமியும் பேராளர் குழுவொன்று 2017 ஓகத்தில் இலங்கைக்கு விஜயம் செய்து இருதரப்பு ஒத்துழைப்பு பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

iii ஜப்பானின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அழைப்பை ஏற்று கௌரவ ருவான் விஜேவர்தன, இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதிவரை டோக்கியோவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அழைப்பின் நோக்கம் சம்பந்தப்பட்ட சகபங்காளிகளுடன் கலந்துரையாடல் மூலம் ஜப்பானைப்பற்றிய அபிப்பிராயத்தை மேலும் ஆழமாக பதியச் செய்வதாகும்.

iv விஜயத்தின்போது 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி கௌரவ இராஜாங்க அமைச்சர் அவரது சக பங்காளியான ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சர் இட்டுநோரி ஒனோடெராவை சந்தித்து பாதுகாப்பு கூட்டுறவு குறிப்பாக கடல் கரையோர பாதுகாப்பு கூட்டுறவு தொடர்பான விவகாரங்கள் மற்றும் பரஸ்பர பயனுள்ளவைகள் என்பனபற்றி கலந்துரையாடல்களை நடத்தினார். கௌரவ அமைச்சர்கள் கரையோர நாடுகள் இரண்டிற்குமிடையே மிகவும் வலிமையான பாதுகாப்பு கூட்டுறவின் முக்கியத்துவத்தை பற்றி கலந்துரையாடினார்கள்.

V இந்த விஜயத்தின்போது அமைச்சர் ஜப்பானின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ கசுயுகி நாகன், பாராளுமன்ற உறுப்பிணர் திரு ஹிரோகி மியசாவ, மற்றும் கப்பற்படை தலைவர் சடோஸி நகஜிமா, ஜப்பானிய கரையோர காவல் தலைவர், திரு வட்டாரு டக்கேஸ்சிட்டா பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் திரு யுக்கோ ஒபிசி பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் ஜப்பான் சிரிலங்கா பாராளுமன்ற அங்கத்தவர்கள் அமைப்பு என்பவர்களிடமும் சந்திப்புகளை ஏற்படுத்தினார்

vi ஜப்பானிய அரசாங்கத்தால் இலங்கை கடலோர பாதுகாப்பு கண்காணிப்பு படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 30அ வகை ரோந்துசெல்லும் கப்பலை முதன் முதலாக அங்குராப்பணம் செய்யும் வைபவத்தில் கௌரவ இராஜாங்க அமைச்சர் விஜேவர்தனவும் கலந்துகொண்டார்.

vii விஜயத்தின்போது இராஜாங்க அமைச்சர் மற்றும் தூதுக் குழு கோடோ, ஹிரோஸிமா, ஹொனோமிசி மற்றும் ஜப்பானிய கரையோர சுய பாதுகாப்பு படைத்தளம் என்பனவற்றிற்கு விஜயம் செய்தார்.

viii கொள்கை ஆலோசனைகளுக்காக 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 24 – 29 ஆம் திகதிவரை திரு கெயிசி ஹிஸி, காணி மற்றும் உட்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் சுறறுளா அமைச்சர் அவருடன் பயணிக்கும் தூதுக்குழு என்பவர்களது விஜயத்தை தூதரகம் வசதிகள் வழங்கி இலகுபடுத்தியது.

**ஆ.பொருளாதாரத் தொடர்புகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

மாண்புமிகு பிரதம அமைச்சரின் தொழிற்பாட்டு விஜயத்தின் போது இரண்டு தலைவர்களும் 2015 ஒக்றோபரில் ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட கூட்டு விரிவான பங்காளித்துவம் மீதான கூட்டுப்பிரகடனம் மீதான தங்களுடைய பொறுப்பேற்றை வலியுறுத்திக் கூறியுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் விரிவான பங்காளித்துவம் பொருளாதார நிகழ்ச்சி நிரலின் கீழ் முன்னோடியாகக் கருதப்பட்ட மூன்று (03) பிரதான நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

- **வெளிநாட்டு முதலீடுகள், கருத்தரங்குகள் மற்றும் ஊக்குவிப்புகள்**

2017 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை விரிவாக்குவதற்கான ஜப்பானிய அதிகார

சபைகள், வர்த்தகத்திற்கு ஒத்தாசை வழங்கும் சம்மேளனங்கள், மற்றும் வர்தக பேரவைகள் என்பனவற்றுடன் தூதரகம் தொடர்ந்து ஈடுபாடல்களைக் கொண்டள்ளது.

2017 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் தூதரகம் முன்னொருபோதும் இல்லாதவாறு 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜப்பானின் பாரிய வர்த்தக தூதுக்குழுவுக்கு தூதரகம் வசதிகள் வழங்கி அவர்களது விஜயத்தை இலகுவாக்கியது

ஜப்பானின் நிதி அமைச்சின் தரகுகளுக்கு அமைவாக 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது இலங்கைக்கான ஏற்றுமதி 1 விகிதாசாரத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. அதே தரவுபடி 2017 – 2016 ல் வருடாந்த ஏறறுமதியின் வளர்ச்சி 7.9 வீதமாக பதிவாகியுள்ளது. (2017 ஆம் ஆண்டில் 2 கோடி ஜப்பானிய நாணயம் ஹென்னை சேர்த்து) முதலீட்டு சபை தரவுபடி 2017ம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டில் ஜப்பானின் வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) அமெரிக்க டொலர் 30 mn மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் முழு ஆண்டில் ஜப்பானின மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு FDI அமெரிக்க டொலர் 30 mn மில்லியனாக ஆக இருந்தது.

**இ. முதலீட்டு ஊக்குவிப்பு**

இத்தூதரகம் பின்வருவனவற்றை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்திருந்தது

i. டோக்கியோ, நகோயா, சிபா மற்றும் ஜமானாரீ ஆகிய இடங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்குகள்

ii. இலங்கைக்கு சுற்றுலா, கடற்றொழில் மற்றும் நிதித்துறைகளில் நான்கு பெரிய வளவாய்ப்புள்ள கம்பனிகள் விஜயம்.

iii. ஜப்பானில் இலங்கை வைபவ விழா மற்றும் உலகளாவிய இலங்கைத் தேயிலை விருந்து

iv. டோக்கியோவில் 2வது இலங்கை இரத்தினக்கல் கொண்டாட்ட விழா

v. நான்கு சருவதேச வர்த்தகப் பொருட்காட்சிகளில் இலங்கையின் பங்குபற்றுதல். இலங்கையில் முகவர் நிலையத்தின் திறன் அபிவிருத்தி மற்றும் கடற்றொழில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான இரண்டு தொழிநுட்ப உதவிக் கருத்திடட்டங்கள்.

vi. ஏறத்தாழ எழுபது வியாபார மற்றும் முதலீடு தொடர்பிலான விசாரணைகளுக்கு அனுசரணை வழங்கியதுடன் இரண்டு வர்த்தகம் தொடர்பிலான முறைப்பாடுகள் தொடர்பிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

vii. தூதரகம் உள்ளக வர்த்தகம் மற்றும் வெளியக வர்த்தக தூதுக்குழுக்களுக்கு வசதகளை ஏற்படுத்தி கொடுத்தது. தூதரகம் நாகயா தேயிலை கண்காட்சியில் இலங்கை தேயிலை சபையை பிரதிநிதித்துவப்படுத்தியது.

viii. தூதரகம் வர்த்தக கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தது மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வசதிப்படுத்தியது

ix PPP திறன்களை கட்டி எழுப்புதல் மற்றும் பசுமை சக்தி என்பன தொடர்பான இரண்டு தொழில்நுட்ப உதவி முயற்சிகளுக்கு தூதரகம் வசதியளித்தது.

x வர்த்தகத்திற்கு ஒத்தாசை நல்கும் 06 நிறுவனங்களுடன் ஈடுபாடலுடன் இருந்து மற்றும் இந்த தூதரகம் 24 வர்த்தக முதலீடு தொடர்பான வினாக்களுக்கு பதிலளித்து மற்றும் அதனைத்தொடர்ந்து எழும் விவகாரங்களுக்கும் முகங்கொடுத்து செயற்பட்டுள்ளது.

## 05. மலேசியா

### அ. இருதரப்பு தொடர்புகள்

2017 மார்ச்சில் உயர் ஆணையாளர் மெலக்காவின் முதலமைச்சர் தாதுக் செரி உத்தமாயிர் ஹிஜே ஐதிரிஸ் பின் ஹிகே ஹரோன் அவர்களை சந்தித்துள்ளதுடன் இருதரப்பினர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களைப்பற்றி குறிப்பாக மெலக்கா நகரத்திற்கும் அம்பாந்தோட்டைக்குமிடையிலான நெருக்கமான ஒத்துழைப்பைப்பற்றி கலந்துரையாடியுள்ளதுடன் 2017 செத்தெம்பரில் மெலக்காவின் முதலமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட விஜயத்திற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

### ஆ. வர்த்தகமும் பொருளாதார தொடர்புகளும்

உலக தேநீர் விருந்து விழா 2017: உலக தேநீர் விருந்து விழா மலேசிய தேயிலை வர்த்தக சங்கத்தின் உடனுழைப்புடன் நடாத்தப்பட்டது.

உயர்ஸ்தானிகராலயம் பின்வருவனற்றிக்கு வசதி வழங்கியுள்ளது.

i 2017 ஓகத்தில் / மலேசியாவில் நடாத்தப்பட்ட சருவதேச உணவு மற்றும் பானங்கள் பொருட்காட்சியில் இலங்கை தேயிலைச்சபையினதும் 6 ஏற்றுமதிக் கம்பனிகளினதும் பங்கு பற்றுதலுக்கு உதவி செய்துள்ளது.

ii 2017 ஏப்பிரல் நடாத்தப்பட்ட மலேசிய சருவதேச கலால் காட்சி கண்ணாடிப்பெட்டி பொருட்காட்சியில் இலங்கையின் பேராளர் குழு பங்கு பற்றுதலுக்கு உதவிபுரிந்துள்ளது.

iii 2017 யூலையில் இலங்கையில் வர்த்தகம் புரிதல் மீதான தொழில் முயற்சியாளர்களின் மலேசிய வலையமைப்பின் உடனுழைப்பு மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டத்தில் பங்குபற்றுதல்.

### இ. கலாசாரத் தொடர்புகள்

மலேசியாவுடனான இராசதந்திரத் தொடர்புகளின் 60 ஆண்டுகாலப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டதை நினைவு கூறுவதற்காக இந்த ஸ்தானிகராலயம பின்வரும் விடயங்களை ஒழுங்கு செய்திருந்தது.

i மலேசியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து தேசிய நூதன சாலையில் ஓர் கலாசார நிகழ்ச்சியை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்திருந்ததுடன் இதில் 21 நாடுகள் பங்குபற்றியுள்ளன.

ii 2017 யூனிலிருந்து ஓகத்துவரை இலங்கையில் இளைஞர் முகாமொன்றையும் 2017 யூலையில் உலக பௌத்தர்களின் ஒன்றுகூடலையும் 2017 யூலையில் உலக பௌத்த சங்க இளைஞர்கள் உச்சி மாநாட்டையும் ஒழுங்கு செய்திருந்தது.

**ஈ. தொழிலாளார் நலனோம்பல்**

உயரஸ்தானிகராலயம் பணிக்கொள்வோரினாலும் ஆட்சேர்ப்பு முகவர் நிலையங்களினாலும் பணியாளர்களினாலும் செய்யப்பட்ட முறைப்பாடுகள் மீது கவனம் செலுத்தி அவற்றிற்கு தீர்வுகளையும் வழங்கியுள்ளது.

02. **சுற்றுலா ஊக்குவிப்பு**

i இலங்கையின் சுற்றுலா ஊக்குவிப்பு சபையுடன் சிறீ லங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைக்கம்பனியுடனும் சேர்ந்து 12 இலங்கை பிரயாண முகவர்கள் மாட்டா (ஆயுவுவுயு) பொருட்காட்சியில் பங்கு பற்றியுள்ளனர்.

ii 2017 செத்தெம்பரில் கோலாலம்பூரில் நடாத்தப்பட்ட சுற்றுலா வேலைக் களத்தில் 12 இலங்கை பிரயாண முகவர்கள் பங்குபற்றியுள்ளனர்.

## 06. மியன்மார்

### அ. இருதரப்பு தொடர்புகள் - விஜயங்கள்

இத்தூதரகம் மியன்மாருக்கு பின்வரும் பேராளர் குழுக்கள் மேற்கொண்ட விஜயங்களுக்கு உதவி புரிந்துள்ளது.

i 2017 மார்ச் 7ஆந் திகதியிலிருந்து 10ஆந் திகதிவரை மேற்கொண்ட இலக்க சுகாதார மாநாட்டில் பங்குபற்றுவதற்கு மாண்புமிகு சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர மருத்துவர் ராஜித சேனாரத்தின அவர்களும் பேராளர் குழுவும் விஜயம் செய்வதற்கு உதவி வழங்கியுள்ளது.

ii மாண்புமிகு நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ அவர்களினால் 2017 மார்ச் 14 ஆந் திகதியிலிருந்து 15ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட விஜயத்திற்கும் உதவி வழங்கியுள்ளது.

iii மாண்புமிகு பிரிதி பௌத்த சாசன அலுவல்கள் அமைச்சர் திரு.எஸ். துமிந்த அவர்கள் 2017 ஓகத்து 6ஆந் திகதியன்று ''சமாதான நல்லிணக்கத்திற்கும் மற்றும் பாதுகாப்பிற்குமான கலந்துரையாடல்'' என்ற விடயத்தில் பங்குபற்றுவதற்காக செய்த விஜயத்திற்கும் உதவி வழங்கியுள்ளது.

iv மியன்மார் அரசாங்கத்தால் மியன்மாரில் ஏற்பாடு செய்யப்பட்ட "தேசிய நல்லிணக்கம் மற்றும் சமாதான செயற்பாடு" தொடர்பான நடவடிக்கையிலும் தூதரகம் பங்குபற்றியது

**ஆ. பொருளாதாரத் தொடர்புகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

மியன்மாரில் சனாதிபதியின் ஆலோசகருடன் அநேக முன்னனியிலுள்ள கப்பற் சேவைக்கம்பனிகளுடனும் இலங்கைக்கு நேரடியான கப்பற்சேவைகளை ஆரம்பிக்குமாறு கோரி கலந்துரையாடல்கள் செய்யப்பட்டுள்ளன.

**இ. கலாசாரத் தொடர்பு**

இத்தூதாரகம் பின்வரும் விடயங்களில் உதவி புரிந்துள்ளது.

I. 2017 மே மாதத்தில் இலங்கையில் நடாத்தப்பட்ட வெசாக்கின் 14 வது ஐக்கிய தேசிய தினத்தின் சருவதேச பௌத்த வைபவ விழாவில் மியன்மார் பேராளர் குழுவின் பங்குபற்றலுக்கு உதவி வழங்கியுள்ளது.

II. அனுராதபுரத்திலுள்ள சம்புத்த ஜயந்தி மகா விகாரைக்கு 5அடி உயரமுள்ள பளிங்கு கல்லினால் உருவாக்கப்பட்ட புத்த பெருமான் சிலையொன்றை அனுப்பியுள்ளது.

III. யங்கோனிலுள்ள சுவேடகோன் பகோடாவில் இலங்கையின் பௌத்த ஊடக வலையமைப்பின் (செல்வழி) 10வது ஆண்டு விழாவை கொண்டாடுவதன் பொருட்டு சமய வைபவமொன்றை ஒழுங்கு செய்துள்ளது.

IV. கண்டியிலுள்ள புனித தந்த நினைவுச்சின்னக் கோவிலுக்கு ( தலதா மாளிகை) தந்த யானையொன்று மியன்மாரில் வழங்கப்படுவதற்கு உதவி புரிந்துள்ளது.

V. மதத் தொடர்புகளைப் பயன்படுத்துவதன் பொருட்டு யங்கேனிலுள்ள சுவேடகோன் பகோடாவிற்கு கண்டியிலுள்ள புனித தந்த நினைவுச்சின்னக் கோவிலுக்கும் (தலதாமாளினை) இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடுவதற்கு உதவி புரிந்துள்ளது

VI. மியன்மாரின் நில அடையாளமாக உள்ள பிரசித்திபெற்ற நிபுனித செவ்டகன் பௌத்த கோயிலின் சரிபடிவ சிலை இலங்கையில் மாத்தளையில் மியன்மாரின் பக்தர்கள் மற்றும் ஹங் ஸா புயு என்பவர்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடையில் கட்டப்படவுள்ளது. நன்கொடை 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இலங்கை மாத்தலையிலுள்ள முனுகுனுவெல அநுருத்ததேரோவிடம் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

07.பிலிப்பைன்ஸ்

அ. இருதரப்புத் தொடர்புகள் விஜயங்கள்

24வது ஆசியான் பிராந்திய அரங்கிலும் ஆசியானின் 50வது ஆண்டு விழாவிலும் பங்குபற்றுவதற்காக 2017 ஓகத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இராஜாங்க அமைச்சின் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு வசந்தா சேனாநாயக்க அவர்கள் 2017 ஓகத்தில் பிலிப்பைன்சிற்கு விஜயம் செய்துள்ளார். இத்தூதரகம் பிலிப்பைன்சு குடியரசின் சனாதிபதி அதிமேதகு ஹொட்ரிக்கோ றோவதுாதேர்தே அவர்களுடன் இராஜாங்க அமைச்சர் குறுகிய கால சந்திப்பொன்றை மேற்கொள்வதற்கு உதவி புரிந்துள்ளது. அமைச்சின் பிலிப்பைன்சின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பல இருதரப்பு சந்திப்புகளையும் கூட மேற்கொண்டுள்ளார்.

- இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்களுக்கான விசா தள்ளுபடி உடன்படிக்கை பதிவு 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

- விவசாயத்துறை தொடர்பில் பிலிப்பைனுடன் இணைவதை தீவிரப்படுத்துதல் மற்றும் இலங்கை விஞ்ஞானிகளை மரக்கன்றுகளை பெருக்குதல், விவசாய பொருளாதாரங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய பாடங்கள் தொடர்பான பட்டபின்படிப்பு (PhD) மற்றும் முதுமானி (msc) மட்டம் என்பனவற்றை 2018 ஆம் ஆண்டு வருடந்தோரும் ஆரம்பமாகும் பிலிப்பின்ஸ் லொஸ் பானொஸ் பல்கழைக்கழகத்தில் பயிலுவதற்கு ஏற்பாடுகளை பூர்த்தி செய்தல்.

- இலங்கை வனஜீவராசிகள் பற்றி ஒரு ஆவணப்படத்தை தயாரிக்க “ மூர்க்கத்தனமாக வாழப் பிறந்தோம்” குழுவின் பிலிப்பைன்ஸ் GMA வலையமைப்புடன் கலந்துரையாடல்களை தொடருதல்

ஆ. பல்தரப்பு தொடர்புகள்

I. கொழும்புதிட்ட பதவியினர்கள் கல்லூரியின் ஆட்சிச்சபையின் தவிசாளராக இலங்கை அங்கம் வகித்து 3270 நன்மை பெறுபவர்களுடன் கொழும்புதிட்ட பதவியினர்கள் கல்லூரியின் நிகழ்ச்சி திட்டங்களை 40 நிகழ்ச்சிதிட்டங்களாக அதிகரிக்க கூடியதாகவிருந்தது. அத்துடன் குறைந்த வருமானத்தையுடைய இலங்கை சமுர்த்தி உறுப்பினர்களுக்கு குறுந்தவணைக்கால தேர்ச்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்தை வழங்குவதற்கான கலந்துரையாடல்கள்.
II. சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்துடன் விருந்தோம்பல் நாட்டு உடன்படிக்கையை பூர்த்தி செய்வதற்காக சர்வதேச ஆராய்ச்சி நிறுவகத்துடன் கமத்தொழில் அமைச்சுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.
III. ஆசிய அங்கத்துவ நாடுகளிலுள்ள எல்லா தூதரகங்களின் தலைமைகளுடன் ஆசியாவின் சம்பாஷணை பங்காளியாக இலங்கை விண்ணப்பிக்க எண்ணியுள்ளது தொடர்பான கலந்துரையாடல்கள்.

IV. முதல் தடவையாக ஒரு இலங்கையர் கொழும்புதிட்ட பதவியினர்கள் கல்லூரிக்கு ஒரு புதிய ஆட்சி சபையின் பீட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். மற்றும் கொழும்புதிட்ட பதவியினர்கள் கல்லூரிக்கு சர்வதேச அனுபவத்திற்கான தொழிலவாண்மையாளர் தொழில் பயிற்சி காலப்பகுதியின் நிகழ்ச்சி திட்டத்திற்காக ஒரு இலங்கையர் தெரிவானார்.

V. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் காட்டு மிருகங்கள், இடம்விட்டு இடம் செல்லும் இனங்கல், என்பனவற்றின் பரிபாலணம் தொடர்பான உடன்படிக்கையின் தரப்பிணரின் மாநாட்டின்போது இலங்கை திமிங்கிலம் பரிபாலணம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் மனிலாவில் கைச்சாத்திட்டது.

**இ. பொருளாதாரத் தொடர்புகள்**

I. 1980ம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட பிலிப்பைன்சு - இலங்கை வர்த்தக உடன்படிக்கையையும் வருமானம் மீதான வரிகளின் தொடர்பில் ஏற்கனவேயுள்ள இரட்டை வரி விதிப்பைத் தவிர்த்தல் உடன்படிக்கையையும் பொது நிதி செலுத்தாமல் நழுவுதலையும் தடை செய்வதற்காக பிலிப்பைன்சு இலங்கை வர்த்தக உடன்படிக்கைக்கு மீள் உயிரூட்டுவதற்காக இத் தூதரகம் பிலிப்பைன்சில் வர்த்தக மற்றும் கைத்தொழில் திணைக்களத்துடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளது.

II. ஜோன்ஸ் தேயிலையை பிலிப்பைன்சுக்கு ஏற்றுமதி செய்வதற்காக இத் தூதரகம் றெசோஜ்ரார் Inc உடனும் (பிலிப்பைன்சு கம்பனி) வரையறுக்கப்பட்ட ஏ.எப்.ஜோன்ஸ் சிலோன் ரீ கம்பனியுடனும் (இலங்கைக் கம்பனி) நடாத்தப்பட்ட வர்த்தக கலந்துரையாடல்களை இத் தூதரகம் பூர்த்தி செய்துள்ளது.

III. 2017 ஜீலை 27ந் திகதியிலிருந்து 28ந் திகதி வரைக்கும் 25வது மெட்ரோ மனிலா வர்த்தக மாநாட்டில் பங்குபற்றியுள்ளது. இலங்கைத் தேயிலைக்கு ஊக்குவிப்பு வழங்குவதன் பொருட்டு 2017 மார்ச் 16ந் திகதியிலிருந்து 18ந் திகதிவரை பிலிப்பைன்சின் ஜோர்ஜ்ச் ஸ்ருவாட்ஸ் இலக்கோஸ்சூர், விகான் வட லுசோன் உலக உணவு எக்ஸ்போ பொருட்காட்சியில் பங்குபற்றியுள்ளது.

IV. 2017 ஆம் ஆண்டு இருதரப்பு வர்த்தகத்தில் இரட்டிப்பு மொத்தமாக அமெரிக்க 60 மிலியனாக இருந்தது. மற்றும் ஏழு வருடங்களுக்குப் பின் வர்த்தகம் இலங்கைக்கு சாதகமாக அமைந்தது.

V. 2017 ஆம் ஆண்டு இலங்கைக்கு பிலிப்பினோ நாட்டவரது வருகை 32.1 வீதத்தால் அதிகரித்துள்ளது. இது ஒவ்வொரு ஆண்டிற்குமான அதி உயர்ந்த அதிகரிப்பு மற்றும் 2017 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டு கனிசமான வளர்ச்சியை கொண்டுள்ளது.

VI. 1980 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட பிலிப்பைனஸ் -இலங்கை வர்த்தக உடன்படிக்கையை உறுதி செய்யவும் மற்றும் தற்போதய உடன்படிக்கையிலுள்ள இரட்டை வரி தவிர்ப்பு மற்றும் சட்டரீதியான கடப்பாடு மற்றும் தற்போது நிலவும் நியதிகள் நடைமுறைகளுடன் பொது நிதி செலுத்தாமல் நழுவுதலை தடுத்தல் என்பன தொடர்பாக பிலிப்பைன்சின் வர்த்தக மற்றும் கைத்தொழில் திணைக்களத்துடன் கலந்துரையாடல்களை நடத்தியது.

VII. பிலிப்பின்ஸ் மற்றும் தெற்கு ஆசிய வலயத்திற்கு இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவாக்கல் செய்வதின் வழிவகைகளை கலந்தாலோசிக்க 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிலிப்பின் - தெற்கு ஆசிய பொருளாதார வட்டமேஜை யில் பங்குபெற்றமை

VIII. இலங்கையிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் பங்காளிகளை அடையாளம் காண 2017 ஆம் ஆண்டின் ஆசிய வர்த்தக மற்றும் முதலீட்டு உச்சி மாநாடு மற்றும் 2017 ஆம் ஆண்டின் AGRIlink/FoodLink/Aqalink என்பனவற்றில் பங்குபற்றியமை.

IX. ஜோர்ஜ் ஸ்டுவரட்ஸ் பிலிப்பின்ஸ் மற்றும் பஸிலூர் தேயிலை உடன் பங்காளிகளாகி 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற 51வது சர்வதேச சந்தையில் இலங்கை தேயிலையை காட்சிபடுத்தல்.

X. இலங்கையில் முதலீடுகள் செய்யக்கூடிய செல்வாக்கான முதலீட்டாளர்களை கண்டறிய முதலீட்டு சபையின் கியுநோகுலான் விருதுகள் மற்றும் பிலிப்பின்ஸில் முதலீடு செய்தல் என்ற நிகழ்வில் கலந்து கொள்ளல்.

**ஈ. வெளிநாட்டு முதலீடுகள்**

சாந்த அந்தோனி கம்பனியுடன் வியாபார நடைமுறையை இலங்கையில் வெளிவாரியாகவுள்ள சகோதர கம்பனியொன்றுடன் நிலைநாட்டுவதற்கு உலகளாவிய பரிமாற்றக் கம்பனியின் (ரிரான்ஸ்கொம்) பிராந்திய பொது முகாமையாளரின் ஆரம்ப ஒத்திசைவு பெறப்பட்டுள்ளது.

**உ. சுற்றுலா**

1. விருந்தோம்பல் பண்பு முகாமைத்துவத் துறையில் பயிற்சி என்பது தொடர்பான விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவதன் பொருட்டு சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு ஜோன் அமரதுங்க 2017 யூன் 20ந் திகதியன்று பிலிப்பைன்ஸ்சிற்கு விஜயம் செய்து பிலிப்பைன்ஸ் சுற்றுலாத் திணைக்களத்தின் செயலாளராகிய மாண்புமிகு வன்டா கொறாசோன் துல்போ-ரெயோ அவர்களைச் சந்தித்துள்ளார்.

2. பிலிப்பைன்ஸ்சின் அதிகார பீட மட்டங்களுடன் இத்தூதரகம் ஒரு போக்குவரத்து உடன்படிக்கையைப் பூர்த்தி செய்துள்ளது.
3. இத்தூதரகம் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து பிலிப்பைன்சு GMA வலையமைப்பிலிருந்து பத்திரிகையாளர்களின் இரண்டு தொகுதியினர்களை இலங்கையின் வன ஜீவராசிகள் மற்றும் இலங்கையின் கலாசாரம் மீது இரண்டு உண்மை விளக்கப் படங்களை தயாரிப்பதற்காக இலங்கைக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகள் செய்யும் வேலையைப் பூர்த்தி செய்துள்ளது.

ஊ. கலாச்சாரத் தொடர்புகள்

i. ஆசியாவின் அதிஉயர்ந்த விருதாக கருதப்படும் ராமன் மக்சேசே விருதைப் போர் மற்றும் வன்செயல் என்பனவற்றால் ஏற்பட்ட உளரீதியான காய வடுக்களிலிருந்து நீங்கி புது வாழ்க்கையை கட்டியெழுப்புதல் தொடர்பான மாபெரும் பணியை ஆற்றிய இலங்கையரான திருமதி கெத்சீ சண்முகத்திற்கு வழங்கப்பட்டது.

ii. 2016 ஆம் ஆண்டு முதல் சுற்று அரசியல் ஆலோசனைகள் என்பதன் பக்கச்செயற்பாட்டில் இலங்கை மற்றும் பிலிப்பின்சுக்கு இடையே கலாச்சார ஒத்துழைப்பின் நிறைவேற்று நிகழ்ச்சி திட்டங்களை தொடர்ந்து பின்பற்றுவதற்காக கைச்சாத்திடப்பட்டது. இலங்கையிலிருந்து ஒரு பேராசிரியருடன் எட்டெனோ டி பல்கலைக்கழகத்தில் முதற் தடவையாக புத்த தர்மத்தை கற்பிக்கும் நிகழ்வு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

iii. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மனிலாவில் சர்வதேச அறிவுடமை Inc. (UWF1) அமைப்பிற்கு புத்தபெருமானின் சிலை இலங்கையின் புத்தசாசன கௌரவ அமைச்சர் மற்றும் நீடித்த பேண்தகமை அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் கௌரவ அமைச்சர் என்பவர்களால் பரிசாக வழங்கப்பட்டது.

iv. 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பிலிப்பைன்ஸின் அடம்சன் பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "அடம்ஸனில் உலகின் இனிமையான சுவை அனுபவம்" என்ற தொனிப்பொருளில் அமைந்த நிகழ்வில் இலங்கையின் அருசுவை உணவின் மரபுரிமையை காட்சிபடுத்தப்பட்டது

v. 2017 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸின் வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட " ஆசிய பெசிபிக்வின் வர்ணங்கள் " என்ற தொனிப்பொருளில் அமைந்த நவீன ஆடை வடிவமைப்பு பொருட்காட்சியில் இலங்கை பாரம்பரிய கைத்தறிதுணிகளை காட்சி படுத்தியது.

எ. தொழிலாளர்களின் நலனோம்பல்

I. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனாநாயக்காவிற்கும் பிலிப்பைன்ஸ் தொழில் மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் செயலாளராகிய (அமைச்சர்) மாண்புமிகு சில்வெஸ்டர் எச்.பெல்லோ III விற்கும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் நலனோம்பல் நிர்வாக நிறுவனத்தினதும் பிலிப்பைன்சு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினதும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தேர்ச்சிகள் அபிவிருத்தி அதிகார சபையினதும் உத்தியோகத்தர்களுக்குமிடையே சந்திப்புகளை ஏற்படுத்துவதற்கு இத் தூதரகம் உதவி புரிந்துள்ளது.

II. நெருக்கடி நிலையில் வெளிநாடுகளிலுள்ள நாட்டின் இனத்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் தொடர்பாக 2017 மே 23 லிருந்து 24ந் திகதி வரை மனிலாவில் நடாத்தப்பட்ட கொழும்பு நடைமுறைப் பிராந்திய வேலைக்களத்தில் இலங்கை பங்கு பற்றுவதற்கு இத் தூதரகம் உதவி புரிந்துள்து.

ஏ. ஏனையவை

இலங்கையின் தற்போதைய நிலைமைகளுக்கு விசேட அழுத்தம் வழங்குகின்ற "இலங்கை இந்து சமுத்திரத்தின் முத்து" என்ற தொனிப்பொருளில் பிலிப்பைன்ஸ்ப் பல்கலைக்கழகத்தின் பிலிப்பைன்ஸ்மிரியம் கல்லூரியினதும் மாணவர்களுக்காக கருத்தரங்கொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

ஐ. பாதுகாப்புத் தொடர்புகள்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு வசந்த சேனநாயக்கவினால் 2017 ஓகத்து 03ஆந் திகதியன்று மனிலாவில் நடாத்தப்பட்ட 24வது ஆசியான் பிராந்திய அரங்கில் பங்குபற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின்போது இவர் இந்த அரங்கின் ஓர் பக்கவாட்டு நிகழ்வாக பிலிப்பைன்ஸ்சின் தேசிய பாதுகாப்பு பிரதிச் செயலாளராகிய மாண்புமிகு கார்டோசோ.எம்.லுனா அவர்களுடன் கலந்துரையாடலொன்றை நிகழ்த்தியுள்ளார். பரஸ்பர கரிசனைக்குரிய பாதுகாப்பு விடயங்கள் பற்றி கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டுள்து.

கல்வி

பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்தும் வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களத்திலிருந்தும் கடலோடி பயிற்சி மற்றும் நலனோம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் முதுமானிப் பட்டத்தை (MSc) அல்லது கலாநிதிப் பட்டத்தை (PhD) பெறுவதற்காக இலங்கையர்களாகிய கமத்தொழிலியர்களுக்கு பிலிப்பைன்ஸ் புலமைப் பரிசில்களை வழங்குவது தொடர்பில் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருடன் இத் தூதரகம் கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளது.

8. கொரியக் குடியரசு

அ. இருதரப்புத் தொடர்புகள்

அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிரிசேனவின் கொரிய குடியரசிற்கான இராஜாங்க விஜயம்

I. அதிமேதகு மைத்திரிபால சிரிசேனவின் கொரிய குடியரசிற்கான இராஜாங்க விஜயம் கொரிய குடியரசின் அதிமேதகு சனாதிபதி மூன் ஜாயயின் அழைப்பை ஏற்று 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதிவரை இடம் பெற்றது.

II. 2017 ஆம் ஆண்டின் மே மாதம் அதிமேதகு சனாதிபதி மூன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து அந்நாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்ட 3வது வெளிநாட்டு தலைவர் அதிமேதகு மைத்திரிபால சிரிசேன ஆவார். இரு நாடுகளும் 40 வருட இராஜதந்திர உறவுகளின் முக்கியமான மைல்கல்லை கொண்டாடியதின் உண்மை என்னவெனில் அதிமேதகு மூன் நிர்வாகத்தினால் இலங்கைக்கும் தெற்கு ஆசியாவுக்கும் உள்ள முக்கியத்துவத்தை மிகவும் துள்ளியமாக எடுத்துக்காட்டுவதாகும்.

III. இராஜாங்க விஜயத்தின்போது இரு நாடுகளின் தலைவர்கள் இடையிலான உச்சிமாநாடு அத்துடன் இராஜாங்க இராப்போசணம் மற்றும் அத்துடன் கொரியாவின் நான்கு பெரிய வர்த்தக சங்கங்களால் (Kbiz, KCCi, FKi, KITA, AHPEK) இணைந்து வழங்கிய உத்தியோகபூர்வ வர்த்தக மதியபோசணம் அதனைத் தொடர்ந்து B2N அமர்வுகள் ஜோக்யிஸா புத்த கோயிலுக்கான விஜயம் மற்றும் மிகவும் உயர்வாக கருதப்படும் சில்ஜோங் ஜோய்யிலாவின் தலைவருடனான சந்திப்பு (பௌத்த ஆலயத்திற்கு அதிமேதகு மூனும் விஜயம் செய்திருந்தார்). கொரியாவில் வாழும் இலங்கை மக்களுடன் ஒரு சந்திப்பு மற்றும் சியோல் அலுவலகததிற்கு விஜயம் மற்றும் சியோல் நகரினால் பேணப்படும் ஆசியாவின் முதல் முன்னேற்றமான போக்குவரத்து அமைப்பு பற்றி சுருக்கமாக எடுத்துக் காட்டி அதிமேதகு சனாதிபதிக்கு சியோல் நகரின் குடியுரிமையை வழங்கிய சியோல் மேயருடனான ஒரு சந்திப்பு.

IV. தூதரகம் கொரிய தேசிய பேரவையின் கொரியா இலங்கை நட்புறவு குழுவின் தலைவர் கௌரவ ஜூங் சுங் ஹு மற்றும் அதன் அங்கத்தவர்கள் மற்றும் ICAPP கொரிய பாராளுமன்ற அவையின் கௌரவ பார்க் யங் சங் என்பனவர்களுக்கு மரியாதை விஜயங்களை மேற்கொள்ள வசதிகள் வழங்கியது.

V. இலங்கையின் கௌரவ கொன்சுலாக பூசானில் 11 வருடங்கள் சேவையாற்றி விலகிச் செல்லும் திரு ஜின் ஜூங் டாகவின் சேவையை பாராட்டி அவருக்கு அதிமேதகு சனாதிபதி சிரிசேனவினால் ஒரு பாராட்டு சின்னம் வழங்க தூதரகம் ஏற்பாடு செய்தது. அத்துடன் அதிமேதகு சனாதிபதியை மரியாதை நிமித்தம் விஜயம் செய்ய கொரியாவில் கடற்தொழில் கூட்டுறவுகளின் தேசிய சம்மேளனத்தின் தலைவரும் பூசானில் புதிய கொன்சியுலாக பதவி ஏற்கும் திரு கிம் இம் குவானுடனான ஒரு சந்திப்பையும் தூதரகம் ஏற்பாடு செய்தது.

VI. 29 ஆம் திகதி நடைபெற்ற உச்சி மாநாடு மற்றும் இராஜாங்க இரவுபோசணம் என்பனவற்றில் இரு தரப்பு உறவுகளை அதிகரிப்பதற்கான வழிகள் பற்றிய கலந்துரையால்களை நடத்தி இரு நாட்டு தலைவர்களும் தங்களது உறவுகளை ஆழமானதொன்றாக அமைத்தார்கள்.

VII. விஜயத்தைத் தொடர்ந்து கலந்துரையாடல்களின் முக்கிய அம்சங்களான அரசியல், பொருளாதாரம், மற்றும் கலாச்சாரம் என்பன ஒரு கூட்டு ஊடக அறிக்கையாக வெளியிடப்பட்டது.

VIII. இரு நாடுகளின் பாராளுமன்றங்கள், மற்றும் உயர் மட்ட அரசாங்க அதிகாரிகளின் அதிகரித்த பரிமாற்றங்கள்

- பிராந்திய உரையாடல்களின் பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்புகள் அடங்களாக பாதுகாப்பில் பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுவடையச் செய்தல்.
- பொருளாதார துறையில் கூட்டுறவை வலுவடையச் செய்தல். –

இருதரப்பு முதலீடு வர்த்தகம் மற்றும் சுற்றுலா என்பனவற்றை மேம்படுத்துதல் தொடர்பாக ஒரு கூட்டு ஆணைக்குழுவை ஸ்தாபிக்க ஏதுவாக இருக்கும் பொருளாதார கூட்டுறவு பற்றிய உடன்படிக்கை மற்றும் முதலீட்டை விஸ்தரிக்க முதலீட்டு சபை மற்றும் KOTRA இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவற்றில் கைச்சாத்திடல்

- மேற்கு பிராந்திய பெருநகர் செயற்திட்டத்தின் கீழ் கூட்டுறவு மற்றும் இலங்கையில் பாரிய உட்கட்டமைப்பு செயற்திட்டங்களில் கொரிய கம்பனிகளுக்கு வாய்ப்புகள்

- KOICA மற்றும் அதிகரித்த EDCF ஏற்பாடுகளின் கீழ் அபிவிருத்தி கூட்டுறவுகளை விரிவாக்கல்

- தொழில் அனுமதிப்பத்திரம் அமைப்பின் கீழ் ஒத்துழைப்பு

- ஐஊவு மற்றும் மருத்துவ துறைகள், விஞ்ஞானம் தொழில்நுட்பம், நவீனமயம் மற்றும் ICT விவசாயம் மற்றும் மீன்பிடிதொழில்கள் என்பனவற்றின் ஒத்தாசைகள்.

- சுற்றுலா மற்றும் அதிகரித்த இணையதள இன்டநெட் இணைப்பின் கீழ் கூட்டுறவு

- கல்வித் துறையின் கீழ் ஒத்தாசை

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவை பிரேரணைகள் என்பனவற்றிற்கு அமைவாக வடகொரிய விவகாரத்தில் சுமூகமான தீர்வு

- கொரிய குடியரசினால் நடத்தப்பட்ட பியாங்காங் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகள்

- தெற்கு ஆசியா மற்றும் ஆசிய நாடுகளுடனான “முதலாவது மக்கள்” உறவுகள் மற்றும் செல்வங்களின் தூண்களை கட்டுவதற்காக அதிமேதகு சனாதிபதி மூனின் புதிய தெற்கு கொள்கையின் உரையாடல்கள் அடங்களாக பிராந்திய விவகாரங்கள்

- பலதரப்பட்ட ஒத்தாசைகள்

- இலங்கையில் நல்லிணக்க செயல்முறைகளுக்கான ஒத்தாசை

- கொள்கை ஆலோசணைகள்

- பரஸ்பர வசதியான வேளையில் இலங்கைக்கு விஜயம் செய்ய அதிமேதகு சனாதிபதி மூனுக்கு அழைப்பிதல்

IX. அதிமேதகு சனாதிபதி மற்றும் ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அடங்கிய தூதுக்குழுவில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரப்பன, சிறப்பு பணிகள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம. அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் கௌரவ மலிக் சமரவிக்ரம, நீதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல எரிவாய்வு மற்றும் சக்தி மீளப்பெறுதல் அமைச்சர் கௌரவ ரஞ்சித் சியாம்பலபிட்டிய மற்றும் முதன்மை கைத்தொழில்கள் அமைச்சர் கௌரவ தயா கமகே ஆகியோர்.

X. இத் தூதரகம் பல்வேறு துறைகளில் பரந்த தோற்றப்பாடொன்றின் மீதான அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பில் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையத்துடனும் கொரிய எக்சிம் வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்துடனும் ஈடுபட்டிருந்தது. இத்தூதரகமானது புதிய கட்டமைப்பு உடன்படிக்கையில் கையொப்பமிடுவது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்துடனான ஈடுபாட்டை தொடர்ந்து வைத்துக்கொண்டிருந்தது.

XI. 2017 மார்ச்சில் கொரிய தேசிய பேரவையில் புதிய கொரிய இலங்கை நட்புறவுத் தொகுதியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

XII. இடம்பெற்றுக்கொண்டிருக்கும் உடனுழைப்பின் கீழ் இத்தூதரகம் இலங்கையிலும் கொரியாவிலுமுள்ள பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் உயர்மட்ட விஜயங்கள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் கூட்டிணைந்து பணியாற்றியுள்ளது.

XIII. இலங்கையிலுள்ள இயைபுள்ள நிறுவனங்களுடன் விஞ்ஞானம், தொழிநுட்பவியல், புத்தாக்க ஒத்துழைப்பு தொடர்பில் இத் தூதரகமானது விஞ்ஞான மற்றும் தொழிநுட்பவியல் கொள்கை நிறுவனத்துடனான உடனுழைப்பை தொடர்ந்து கொண்டிருந்தது.

XIV. கல்வித் துறையிலான உடனுழைப்பின் கீழ் கொரியாவின் கல்வியமைச்சு வருடாந்த ந -கற்கை பூகோளமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2017 ஓகத்தில் இலங்கையிலிருந்து சென்ற 25 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

XV. இத் தூதரகமானது கொரியாவிலுள்ள இயைபுள்ள பல்கலைக்கழகங்களுடனும் கொரிய நிறுவனங்களுடனும் கூட்டிணைந்ததன் மூலமாக இத் தூதரகம் புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கு வசதியளித்துள்ளது. இத் தூதரகம் தென்கொரியாவிலுள்ள இலங்கை மாணவர்கள் சங்கத்தின் 7வது வருடாந்த பொதுக் கூட்டத்துடன் இணைந்த கொரிய குடியரசில் தொழில்சார் இலங்கையர்களின் கூட்டமொன்றை இத்தூதரகத்தில் செத்தெம்பர் 09 ஆந் திகதியன்று நடாத்துவதற்கு ஒழுங்கு செய்திருந்தது.

XVI. தூதரகம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் அதனது தொடர்பான அமைப்புகள் கொரிய நிறுவகங்கள், வர்த்தக கம்பனிகள் அதுபோல தேசிய பேரவையின் அங்கத்தவர்கள் அடங்களாக கொரிய குடியரசின் அரசியல் தலைமைத்துவம் என்பவர்களோடு சிறந்த நட்புறவை பேணிவருகின்றது.

XVII. தூதரகம் கொரிய குடியரசில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை உன்னிப்பாக கண்காணித்து கொழும்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவ்வப்போது நிகழும் தகவல்களை / சுருக்க உரைகள் என்பனவற்றை உடனுக்குடன் வழங்குகின்றது.

XVIII. தூதரகம் வெளிவிவகார அமைச்சிற்கு கொரியாவில் உள்நாட்டு அரசியல் நிலவரத்தின நிகழ்வுகள் தொடர்பான செய்திகள் மற்றும் வடகொரிய ஏவுகணை மற்றும் அணுசக்தி பரிசோதனைகள் தொடர்பாக கொரிய வலைகுடாவில் அதிகரிக்கும் பதட்ட நிலை மற்றும் புதிய அரசாங்கத்தின் வெளியுறவு கொள்கை என்பனவற்றின் தகவல்களை தொடர்ந்தும் சீராக வழங்கி வருகின்றது.

XIX. தெற்கு ஆசியா ( இலங்கை அடங்களாக) இந்தியா மற்றும் ஆசியா என்பனவற்றை அதிக கவனத்தில் கொண்டுள்ள அதிமேதகு சனாதிபதி மூனின் புதிய தெற்கு கொள்கையின் ஆரம்பத்தினை தூதரகம் தொடரந்து அவதானத்து வருகின்றது.

XX. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு அட்டவணைப்படுத்தி உள்ள ஆண்டுநிறைவுடன் இராஜதந்திர உறவுகளின் 40 வது ஆண்டு நிறைவின் கொண்டாட்டத்துடன் தொடர்புடைய ஊக்குவிப்பு பணியுடன் தூதரகம் தொடர்நதும் செயற்படுகின்றது.

**இருதரப்பு ஒத்தாசைகள் மற்றும் ஏனய பிரிவுகள்**

- தூதரகம் உட்கட்டமைப்பு ஆளுமை கல்வி கைத்தொழில மீன்படிதொழில்கள் எரிபொருள் விவசாயம் மனிதவள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம் என்பன அடங்களாக பரந்தளவில் அபிவிருத்தி ஒத்தாசை தொடர்பாக கொரியா சர்வதேச கூட்டுறவு முகவர் மற்றும் கொரியா எக்சிம் வங்கி - பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவு நிதியம் என்பனவற்றுடன் நெருங்கி ஈடுபட்டு வருகின்றது.

- தூதரகம் அடுத்த 3 ஆண்டுகளுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கான புதிய கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் அடங்களாக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவு நிதியம் (நுனுஊகு) துடன் தொடர்ந்தும் ஈடுபாடல்களுடன் செயற்பட்டு வருகின்றது.
- தற்போது நிலவும் இணைந்த செயற்பாட்டின் கீழ் உயர்மட்ட விஜயங்கள், பயிற்ச்சி, நிகழ்ச்சி திட்ட பரிமாற்றங்கள் என்பனவற்றிற்காக இலங்கையில் மற்றும் கொரிய குடியரசில் பாதுகாப்பு தொடர்பான நிறுவனங்கள் என்பனவற்றுடன் தூதரகம் ஒருங்கிணைந்துள்ளது.
- தூதரகம் விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் நவீனமயம் ஒத்தாசை தொடர்பாக விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞானம் தொழில்நுட்பம் நவீனமயம் என்பனவற்றின் ஒருங்கிணைப்பு செயலகம் என்பன அடங்களாக இலங்கையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தூதரகம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கொள்கை கோட்பாடு நிறுவனத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதை முன்னெடுத்து வருகின்றது.

- தூதரகம் கொரியாவின் தேசிய நிறுவகத்தின் சர்வதேச கல்வித் தலைவர் திரு சோங் கிடோங் என்பவரை 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி கல்வித்துறையில் ஒன்றிணைந்து செயற்படுவதின் கீழ் சந்தித்து. உலகளாவிய கொரிய புலமைபரிசு திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களில் ஒரு சிறிய வீழ்ச்சி இருப்பதால் எதிர் வரும் காலகட்டத்தில் இராஜாங்க விஜயத்தின்போது பட்டதாரிகள் கருத்திட்டத்தின் கீழ் புலமைப்பரிசுகள் வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பான விடயம் பற்றியும் கலந்துரையாடல் செய்தது.
- இலங்கையுடன் தொடர்புடைய பல்கழைக்கலகங்கள் மற்றும் உயர் கல்வி அமைச்சின் புழுளுடு அதிகாரிகள் அடங்களாக அத்துடன் கொரியாவில் இலங்கை மாணவர்களது சங்கம் என்பனவற்றிற்கு அவர்களது அங்கத்தவர்கள் மத்தியில் செய்திகளை பரவலாக்க கொரியாவில் 4 புலமைப்பரிசில்கள் கருத்திட்டங்கள் மற்றும் பயிற்ச்சி வாய்ப்புகள் என்பனவற்றை தூதரகம் வழங்கியது.
- தூதரகம் கொரியாவில் உள்ள இலங்கை மாணவர்கள் சங்கம் என்பனவற்றுடன் வூஜிங் புலமைப்பரிசில்களுக்காக கலந்தாலோசித்து அத்துடன் அதனைத் தொடர்ந்து தூதரகத்தால் நேரடியாக பெறப்பட்ட மீளாய்வு விண்ணப்பங்களை அடுத்து தகுதிவாய்ந்த மாணவர்களை நியமித்தது.
- தூதரகம் 2017 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற ஏழாவது வருடாந்த பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து கொரியாவில் உள்ள இலங்கை மாணவர்கள் சங்கத்துடன் தொடர்பை பேணித்து வருவதுடன் இலங்கை நிபுணர்கள் அடங்கிய ஆலோசணை குழுவை உறுவாக்கி சம்பந்தப்பட்டதாக கருதப்படும் மாணவர் சங்கத்திற்கு அறிவுரை மறறும் ஒத்தாசை வழங்குமாறு வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்ட முன்மொழிவு என்பனவற்றையும் பேணி வருகின்றது.
- 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரு நிறுவகங்களுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து ஆய்வில் இணைந்து செயற்படுவதின் கீழ் தூதரகம் கொரிய குடியரசின் வின் KNDA மற்றும் இலங்கையின் BIDTI என்பனவற்றிற்கு இடையே ஒத்தாசை முயற்ச்சிகளை தொடர்ந்து முன்னெடுத்தது.
- தூதரகம் வெளிநாட்டு அலுவல்கள் நிறுவகம் மற்றும் தேசிய பாதுகாப்பு ROK மற்றும் BIDTI மற்றும் இலங்கையின் LKI என்பனவற்றிற்கு இடையே இணைந்து செயற்படுவதை முன்னெடுத்தது.
- நீரியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப செயலாற்றலை கட்டி எழுப்புதல் மற்றும் நாரா - இலங்கை மற்றும் ஏனய GOSL நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதை பலப்படுத்த தூதரகம் ஆய்வு சமுத்திர விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப கொரிய நிறுவனத்துடன் ஈடுபாடலை மேற்கொண்டது.
- தூதரகம் இலங்கை கௌரவ கொன்சுல் மற்றும் அவர்களது அலுவலகங்களுடன் தொடர்ந்து ஈடுபாடலை மேற்கொண்டது. ஐசெங் மீன்பிடி கம்பனி மற்றும் கொரியாவின் மீன்பிடி கூட்டுறவுகளின் தேசிய சம்மேளனம் என்பனவற்றின் தலைவரான திரு கிம் இக் குவான் என்பவரை பூசானில் இலங்கைக்கான புதிய கௌரவ கொன்சுலாக 2017 ஆம்

ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தூதரகம் நியமித்தது. இலங்கை மற்றும் கொரிய குடியரசின் வெளிவிவகார அமைச்சுக்களுடன் ஹாவசின் சிபிங் மற்றும் எயார்கார்கோ தலைவர் திரு சியோமிஞ்ஞா என்பவரை ஜிஹோன்சன்நாம் மாகாணத்தின் புதிய கௌரவ கொன்சுளாக நியமித்தது.

- 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 – 22 திகதியிலிருந்து நடத்தப்பட்ட தூதரக கணக்காய்விற்கு தூதரகம் வசதிகள் வழங்கியது.

- 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13- 22 ஆம் திகிவரை கணக்காளர் நாயகம் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கணக்காய்விற்கு தூதரகம் ஒத்தாசை வழங்கியது.

    - கொரிய குடியரசின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் கௌரவ சொங் யங் மூ வின் அழைப்பை ஏற்று இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ருவான் விஜேவர்தன ஒக்டோபர் 16 -18 ஆம் திகதிவரை விண்வெளி மற்றும் பாதுகாப்பு பொருட் கண்காட்சியில் பங்குபெற கொரியக் குடியரசிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவரது விஜயத்தின்போது ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் விஜேவர்தன கொரிய குடியரசின் பாதுகாப்பு அமைச்சருடன் இருதரப்பு சந்திப்பில் கலந்து கொண்டார். இதில் இருதரப்பினர்களும் இலங்கை கடற்படைக்கான கூட்டுறவு பயிற்சி வாய்ப்புகள், பரிமாற்றங்கள் அடங்களாக பாதுகாப்பு துறையில் ஒத்தாசைகளை மேலும் வலுப்படுத்த இணக்கம் தெறிவித்தார்கள்.
    - 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி சோலில் நடைபெற்ற ஆசியா மற்றும் பசிபிக் என்பனவற்றிற்காக யுனுடீ.ஃமுநுஊனு ஊழல்கள் எதிர்ப்பு செயல் முயற்சியின் பிராந்திய ஊழல்கள் எதிர்ப்பு மாநாட்டில் பங்குபெருவதற்காக பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் கௌரவ ரஞ்ஜித் மத்துமபண்டார கொரிய குடியரசிற்கு விஜயம் செய்தார். இலங்கையில் ஊழல்கள் மற்றும் இலஞ்சம் என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்களை தீவிரமாக விசாரிப்பதற்காக ஆணைக்குழுவிலிருந்து ஒரு குழுவும் மாநாட்டில் பங்குபற்றியது. . .

I. உயர்மட்ட விஜயங்கள்:

- கொரிய குடியரசிற்கு 2017 மார்ச் 15ந் திகதியிலிருந்து 16ஆந் திகதிவரை கொரிய குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு யுன்பயுங்டசே உத்தியோகபூர்வ விஜயமொன்றைச் செய்துள்ளார். இது 31 ஆண்டுகாலப் பகுதியில் கொரியக் குடியரசிலிருந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரொருவரினால் செய்யப்பட்ட முதலாவது இருதரப்பு விஜயமாகவிருந்தது.
- கொரியாவின் மனிதவள அபிவிருத்திச் சேவையின் தலைவராகிய பேராசிரியர் யார்க்யங்பும் 2017 யூன் 28ந் திகதியிலிருந்து 29ந் திகதிவரை இலங்கைக்கு விஜயம் புரிந்துள்ளார்.

- கொரியா தேசிய இராஜதந்திர கல்விக் கழகத்தின் வேந்தரும் பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமாகிய கௌரவ சோ பயுங் ஜாஏ அவர்கள் இந்து சமுத்திர மாநாட்டில் (இது கொழும்பில் 2017 ஓகத்து 31 ஆந் திகதியிலிருந்து செத்தெம்பர் 02 ஆந் திகதிவரை நடாத்தப்பட்டது) பங்குபற்றுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

ix. இலங்கைக்கும் கொரிய குடியரசிற்குமிடையிலான இராஜதந்திர தொடர்புகளின் 40ஆம் ஆண்டுவிழாவில் தூதரகம் இராஜதந்திரத் தொடர்புகளின் 40வது ஆண்டைக் கொண்டாடுவதன் பொருட்டு பின்வரும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது.

- 2017 மே 11ந் திகதியிலிருந்து 30 ஆந் திகதிவரை ''இலங்கை : கருவூலத் தீவு'' என்ற தொனிப் பொருளிலான ஓர் இலங்கை நிழற்படப் பொருட்காட்சி.
- சியோலிலுள்ள் தேசிய தியேட்டரிலும் குவாங்யூஓனிலுள்ள ஆசிய கலாச்சார மத்திய நிலையத்திலும் முறையே மே மாதம் 19ந் திகதியிலும் 21ந் திகதியிலும் மாஸ்டர் வரிபந்து வித்தியாபதி அவர்களினாலும் அவருடைய குழுவினாலும் இரண்டு நடன நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- **இலங்கையின் நவீன கட்டிடக்கலைக்கான ஒத்தாசை** - 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி வரை குவான்ஜூவில் ஆசிய கலாச்சார மையத்தினால் ஜெப்ரி பாவா – வெலன்டைன் குணசேகர என்போர்களை பாராட்டி ˙ஆசிய கலாச்சார நிறுவகத்தினால் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
- இலங்கை மற்றும் கொரிய குடியரசு இரண்டிற்கும் இடையே நிலவும் இராஜதந்திர உறவுகளின் 40 வது ஆண்டு நிறைவை குறிக்க 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி ஒரேவேளையில் கொரிய தபால் மற்றும் இலங்கை தபாலினால் நினைவுகூறும் முத்திரைகள் வெளியிடப்பட்டன.

x. இரு தரப்பு உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு உடன்படிக்கைகள்:

பின்வரும் உடன்படிக்கைகளை கையொப்பமிடப்படுவதற்கு இத் தூதரகம் உதவி புரிந்துள்ளது.

- கொரிய தேசிய இராசதந்திரக் கல்விக் கழகத்திற்கும் பண்டாரநாயக்க சர்வதேச இராசதந்திர பயிற்சி நிறுவகத்திற்குமிடையிலான ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2017 மார்ச் 15 ஆம் திகதியன்று கையொப்பமிடப்படுவதற்கு
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கும் கொரியாவின் KDI அரசாங்க கொள்கை மற்றும் முகாமைத்துவப்

பாடசாலைக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2017 செத்தம்பர் 21 ஆந் திகதியன்று கையொப்பமிடப்படுவதற்கு.

- இலங்கை கொரிய குடியரசு இடையே பொருளாதார ஒத்தாசை தொடர்பான உடன்படிக்கை
- 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கான உட்கட்டமைப்பு உடன்படிக்கை (EDCF கூட்டுத்தாபனம் - கொரிய எக்ஸிம் வங்கி)
- கலாச்சாரம் கலை கல்வி இளைஞர் மற்றும் விளையாட்டு துறைகளுக்கான ஒத்தாசையின் உடன்படிக்கை
- தொழில் அனுமதி முறைமையின் கீழ் கொரிய குடியரசிற்கு தொழிலாளர்களை அனுப்புதல் மற்றும் திரும்ப பெறுதல் தொடர்பாக கொரிய குடியரசின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு என்பதற்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- இலங்கை முதலீட்டு சபை மற்றும் கொரிய வர்த்தக முதலீட்டு ஊக்குவிப்பு முகவர் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- கொழும்பு பங்கு சந்தை மற்றும் கொரிய பங்கு சந்தை இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

**ஆ. பல்தரப்பு தொடர்புகள்**

I. இத் தூதரகமானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடனும் கொரிய குடியரசில் அமைந்துள்ள பிற கொரிய அரசாங்க நிறுவனங்களுடனும் பல் தரப்பு நிறுவனங்களுடனும் அதாவது யுனெஸ்கோ பசுமை காலநிலை நிதியம், உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவகம் இயைபுள்ள தூதரகங்களுடனும் பல்தரப்பு விடயங்கள் மீதான ஒத்துழைப்பு தொடர்பில் கிரமமாக கூட்டிணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

II. இத் தூதரகமானது கொழும்பு மாநகரசபையினால் 2017 City Net Congress இன் விசேட கொண்டாட்டம் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் சியோல் மாநகர அரசாங்க இடப்பரப்பிலுள்ள City நேவ செயலகத்துடன் கூட்டிணைந்து பணியாற்றியுள்ளது. (கொழும்பில் 2017 நவம்பர் 05 – 08).

III. பல்தரப்பு விவகாரங்கள் பற்றிய கூட்டுறவு தொடர்பாக தூதரகம் கொரிய குடியரசை தளமாகக்கொண்ட அதாவது UNESCAP பசுமை காலநிலை நிதியம் உளகலாவிய பசுமை வளர்ச்சி நிறுவகம் சம்பந்தப்பட்ட தூதரகங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு என்பனவற்றுடன் தூதரகம் ஒருங்கிணைந்தது.

IV. தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கையின் உலகலாவிய பசுமை வளர்ச்சி நிறுவகத்திற்கான அங்கத்துவம் பற்றிய கலந்துரையாடல்கள் அடங்களாக 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாத ஆரம்பத்தில் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிராங்க் ரிஜ்ஸ்மனின் இலங்கை விஜயம்போது தூதரகம் அவருடன் நெருங்கிய தொடர்புகளை தொடர்ந்து ஏற்படுத்தி சம்பந்தப்பட்ட GoSL சார்பாக உள்ள அங்கத்தவர்களுடன் சந்திப்புகளை மேற்கொள்ள வசதிகள் வழங்கியது.

V. பசுமை காலநிலை நிதியத்திற்கான DFCC வின் அங்கீகாரம் தொடர்பாக தூதரகம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. தற்போது விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

VI. தூதரகம் வட கொரிய அனு விவகாரம் மற்றும் அது தொடர்பான விளைவுகள் தாக்கங்கள் மற்றும் வளைகுடாவில் பதற்றங்களின் அதிகரிப்பு என்பனவற்றை உண்ணிப்பாக அவதானித்து அதனை பின்பற்றி அவ்வப்போது நிலவும் நிலமைகள் பற்றிய முறையான தகவல்களை தூதரகம் கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வழங்குகின்றது.

VII. கொழும்பில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 -08 ஆம் திகதிகள் வரை 2017 ஆம் ஆண்டின் சிட்டிநெட் கொங்கிரஸ் நிகழ்வை கொழும்பு மாநகர சபையால் நடத்துவது தொடர்பாக சியோல் மெட்ரோபொலிடன் அரசாங்கத்தின் தலமையகத்தை கொண்டுள்ள சிட்டிநெட் செயலகத்துடன் தூதரகம் ஒருங்கிணைந்தது. சிட்டிநெட் கொங்கிரஸிற்கு 85 சர்வதேச அமைப்புகள் அதாவது யுனெஸ்கோ யுஎன்ஹெப்பிடட் எடிபி ஏஜஜபி மற்றும் ஜிஜிஜிஜ அடங்களாக 16 நாடுகளிலிருந்து 350 பேர் பங்குபற்றினார்கள். 27 நகர்பிதாக்களும் (மேயர்) பங்குபற்றினார்கள். பங்குபற்றுபவர்களுக்கு விசா வழங்கல்கள் அடங்களாக கொங்கிரஸின் ஒருங்கிணைப்புடன் தூதரகம் சிட்டிநெட் செயலகத்திற்கு ஒத்தாசை வழங்கியது. சியோல் நகர்பிதா (மேயர்) கௌரவ பார்க் வொன்சூன் சிட்டிநெட் செயலகத்தின் தலைவர் சிட்டிநெட் கொங்கிரஸில் பங்குபெற இலங்கைக்கு விஜயம் செய்தார். அவரது விஜயத்தின்போது அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிரிசேனவை சந்திப்பதற்காக மரியாதை நிமித்த விஜயம் ஒன்றை மேற்கொண்டார் அத்துடன் அவர் மான்புமிகு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் சந்தித்தார்

VIII. தூதரகம் பசுமை காலநிலை நிதியத்தின் சலுகை மற்றும் சிறப்புரிமை பற்றிய வரைபு உடன்படிக்கையை புழுளுடு வுடன் ஒருங்கிணைத்தது. வரைபு உடன்படிக்கை (முன்மொழியப்பட்ட திருத்தங்களுடன்) தற்போது இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நிலுவையிலுள்ளது.

**இ. இருதரப்பு பொருளாதாரத் தொடர்புகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பிற்கான புதிய வழிவகைகளை ஆராய்வதற்காக இலங்கைக்கும் கொரிய குடியரசிற்குமிடையே பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பிலான கூட்டு ஆணைக்குழுவொன்றை நிறுவுவது தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

i. 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ந் திகதியன்று இத் தூதரகத்தின் ஆதரவுடன் கொரிய இறக்குமதியாளர்கள் சங்கம் கொரிய இறக்குமதியாளர் சங்கத்தின் வர்த்தக ஊக்குவிப்பு பங்காளிக் குழுவை இலங்கையில் நிறுவியுள்ளது.

ii. கொரிய இறக்குமதியாளர்கள் சங்கத்திலிருந்து 16 உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்று அதன் தவிசாளராகிய திரு.மயோங் ஜின் சின் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் 2017 செத்தம்பர் 5ந் திகதியிலிருந்து 7ஆந் திகதிவரை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. இலங்கையில் கருத்திட்டங்களிலும்

வளவாய்ப்புள்ள முதலீட்டிலும் ஈடுபடுவது தொடர்பிலான முதனிலைக் கைத்தொழில்கள் அமைச்சர் மாண்புமிகு தயாகமகே (2017 யூலை) 06 – 09) மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு நிரோஷன் பெரேரா (2017 செப்தம்பர் 04 – 07) ஆகியோர் கொரிய குடியரசின் உச்ச கம்பனிகளாகிய Lotte (Lotte Engineering and Construction) மற்றும் SK Energy கம்பனிகளுடன் அவற்றின் பிரதித் தலைவர் மட்டத்தில் இலங்கையில் கருத்திட்டங்களிலும் வளவாய்ப்புள்ள முதலீட்டிலும் ஈடுபடுதல் பற்றி நடாத்தப்பட்ட கூட்டங்களுக்கு இத் தூதரகம் உதவி புரிந்துள்ளது.

iii. தூதுக்குழுவானது இலங்கையிலுள்ள சூரிய வெளிச்ச உற்பத்திதுறைக்குழுவில் முதலீடு செய்வது தொடர்பில் போட்டோவால் ரெய்க் கைத்தொழில் சங்கத்தின் (KOPIA) தலைவருடன் OCIapd; தலைவருடன் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருடனும் சந்திப்பை நடாத்தியுள்ளது.

iv. தூதரகம் மேலும், இலங்கையில் சூரியப்படல் தயாரிப்புத் துறையில் முதலீடு செய்வதற்காக பொடொவொல்டிக் தொழில் சங்கத்தின் (கே.ஓ.பி.ஐ.ஏ) தவிசாளர் மற்றும் ஓ.சி.ஐ. இன் தவிசாளர் ஆகியோரை சந்தித்தது.

v. தேயிலை, கறுவா மற்றும் மூலிகைகள் சார்பான துறையில் கொரியாவின் தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் பங்களிப்பிற்கான வலையமைப்பு அமர்வு ஒன்று 2017 ஆகஸ்ட் 07ஆந் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது.

vi. 2017 ஜனவரியிலிருந்து கொரியக் குடியரசிற்கு மீன்களை ஏற்றுமதி செய்வதற்காக இலங்கையின் 3 மீன்வள நிறுவனங்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு கொரியாவின் உணவு மற்றும் மருந்துப் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து வசதியளிக்கப்பட்டது.

vii. 2017 ஜூன் மாதத்தில் சியோலில் நடைபெற்ற ஆசிய மற்றும் மேற்கு பசுபிக் ஒப்பந்தக்காரர்கள் சங்கத்திற்கான சர்வதேச ஒன்றியத்தின் 43 சாசனங்களின் ஏற்பாட்டாளர்களுக்கு இலங்கை அதில் பங்குபற்றுவதற்காக தூதரகம் உதவிகளை வழங்கியது. இலங்கையின் கட்டுமானத் துறையிலிருந்து 150 ற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந் நிகழ்வில் பங்குபற்றினர்.

viii. கொழும்பில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப நகரத்தின் திட்டம் பற்றி சுருக்கமாக கலந்துரையாடுவதற்காக 2017 மே 19ஆந் திகதி தொடக்கம் இரண்டு வாரங்களுக்கு கொரியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த நிபுணர் குழுவிற்கு தூதரகம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. இதன் பிரதி விஜயமாக 2017 ஜூலை மாதத்தில் 10 இலங்கை உத்தியோகத்தர்கள் கொரியாவிற்கு விஜயம் செய்தனர்.

ix. இலங்கையின் முதலாவது இலத்திரனியல் காரினை தயாரிப்பதற்காக கொரியக் குடியரசின் முதன்மை நிறுவனங்களில் ஒன்றான எஸ்.கே. குரூப்புடன் இலங்கையின் மைக்ரோ கார் ஹோல்டிங்க்ஸ் பங்குடைமையை நிறுவியது. இந்த வருடத்தில் 30 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், அடுத்த இரண்டு வருடங்களில் 20 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இலங்கையின் மைக்ரோவுடன் இணைந்து முதலீடு செய்வதற்கு எஸ்.கே. குரூப் திட்டமிட்டுள்ளது.

ix. "முதலீட்டாளர்கள் அமைப்பு: இலங்கையில் வியாபார வாய்ப்புக்கள்" என்ற நிகழ்வை கொரிய வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவரில் 2017 ஜூன் 27ஆந் திகதி நடாத்துவதற்கு கொரிய வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவரிற்கு தூதரகம் உதவிகளை வழங்கியதுடன், 2017 ஜூலை 21ஆந் திகதி சியோலில் வர்த்தக அமைப்பொன்றை முன்னெடுப்பதற்கு கொரிய காணி மற்றும் வீட்டு நிறுவனத்திற்கு உதவிகளை வழங்கியது.

xi. சுற்றுலா ஒருங்கிணைப்பு தொடர்பில், இலங்கையில் 2017 ஜூன் மாதத்தில் 'நெக்சசினால்' கொரியாவின் 'அனுபவியுங்கள்' என்ற பிரயாணத் தொடரின் கீழ் 'இலங்கையில் அனுபவியுங்கள்' என்ற தலைப்பில் முதலாவது கொரிய மொழி பிரயாண வழிகாட்டியை அச்சிடுவதற்கு வசதியளித்தது.

xii. கொரியாவில் சர்வதேச ஆடைச் சந்தை, கொயாங்கில் சர்வதேச ஹோர்டிகலாச்சார கண்காட்சி, கொரிய சர்வதேச பிரயாண காட்சி, சியோல் உணவுக் கண்காட்சி, கொரிய இறக்குமதி பொருட்கள் சந்தை, சியோல் நட்புறவு சந்தை, கொரிய உலக பிரயாண சந்தை, ஜீ கொண்டாட்டம், சியோல் சர்வதேச பௌத்த கண்காட்சி மற்றும் மைங்கொன் சர்வதேச தேயிலை கண்காட்சி ஆகியவற்றுக்கு சந்தை வசதியளித்தது.

இலங்கையின் அதிமேதகு சானாதிபதி மைத்திரபால சிரிசேனவின் கொரிய குடியரசின் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது பொருளாதாரம் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன

- சியோலில் கிரேண்ட ஐயாட் ஹோட்டலில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி கொரிய வர்தக கைத்தொழில்கள் சபை இணைந்து வழங்கப்பட்ட வர்த்தக அரங்கிற்கு 2017 ஆம் ஆண்டு உத்தியோபூர்வ விஜயத்தை மேற்கொண்ட அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிரிசேனவுடன் 37 அங்கத்தவர்கள் அடங்கிய வர்த்தக தூதுக்குழுவும் பங்குபற்றியது. உத்தியோக பூர்வ விஜயத்துடன் இணைந்து கொரிய குடியரசின் சம்பந்தப்பட்ட முகவர்களுடன் இணைந்து தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருளாதாரம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி கொரிய வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அவை மற்றும் கொரிய கைத்தொழில் சம்மேளணம் கொரிய சர்வதேச வர்த்தக சங்கம் மற்றும் கொரிய உயர்ந்த வியாபார சங்கம்

என்பனவற்றுடன் இணைந்து சிறிய மற்றும் நடுத்தரமான வர்த்தக கொரிய சம்மேளனத்தினால் ஒரு வர்த்தக கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலே குறிப்படப்பட்டதுபோல ஒவ்வொரு வர்த்தகத்தையும் பிரதிநிதித்துவத்தவப்படுத்தும் ஏறாழமான கொரிய முன்னனி கம்பனிகள் பங்குபற்றின.

- 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மத்தியானம் கொரிய இறக்குமதியாளர்களுடன் இணைந்து கொரிய வர்த்தக முதலீட்டு ஊக்குவிப்பு முகவர்களால் வர்த்தக சந்திப்பைத் தொடர்ந்து ஒரு B2B அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை வர்த்தக குழுவில் இலங்கை முதலீட்டு சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு இலங்கை கப்பல்துறைமுக அதிகாரசபையிலிருந்து சிரேஸ்ட அதிகாரிகளும் மற்றும் இலங்கையின் 24 தனியார் துறை கம்பனிகளும் மொத்தமாக 37 அங்கத்தவர்கள் ( இலங்கை வர்த்தக அவையின் அங்கத்தவர்கள் மற்றும் இலங்கை – கொரியா பொருளாதார கூட்டுறவு குழு) என்பன அடங்கும். B2B அமர்வு 70 கொரிய கம்பனிகளின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் வெற்றிகரமாக நடந்தேறியது. அத்துடன் பெரிய எண்ணிக்கையில் வர்த்தக கூட்டங்கள் இருதரப்பு மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்காக வர்த்தக தொடர்பு இணைப்புகளை நிறுவ கொரிய கம்பனிகள் மற்றும் விஜயம் செய்துள்ள இலங்கை கம்பனிகள் என்பனவற்றிற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன

### xii **கொரிய குடியரசு மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு இடையிலான பொருளாதார கூட்டுறவு பற்றிய உடன்படிக்கை**

வர்த்தகம் முதலீடு மற்றும் சுற்றுலா மேம்பாடுகள் அடங்களாக இருதரப்பு பொருளாதார ஒத்தாசையின் புதிய வழிகளை மேலும் ஆராய இலங்கை மற்றும் கொரிய குடியரசிற்கு இடையில் பொருளாதார ஒத்தாசை பற்றிய ஒரு கூட்டு ஆணைக்குழுவை நிறுவும் எண்ணத்துடன் தூதுக் குழு கொரிய குடியரசின் வெளிவிவகார் அமைச்சு மற்றும் இலங்கை மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் என்பனவற்றுடன் தூதரகம் கலந்துரையாடல்களை நடத்தியது. இந்த முயற்சிகளின் பயனாக அதிமேதகு சனாதிபதியின் கொரியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இலங்கை மற்றும் கொரிய குடியரசிற்கு இடையில் பொருளாதார கூட்டுறவு உடன்படிக்கையில் இலங்கையின் மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மற்றும் கொரிய குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

### xiii **கொரிய எக்ஸிம் வங்கி பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவு நிதியம்**

அதிமேதகு சனாதிபதியின் கொரிய குடியரசிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது கைச்சாத்திடுவதற்காக உட்கட்டமைப்பு உடன்படிக்கையில் இறுதிமுடிவை ஏற்படுத்த தலையீடு செய்து 2017 ஆம் ஆண்டில் கலந்துரையாடல்களுக்கு வசதிகள் வழங்கியது. இந்த உடன்படிக்கை கொரிய எக்யிம் வங்கி பொருளாதார அபிவிருத்தி கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து தற்போதய 300 மில்லியன் அமெரிக்க டொலரை 500 மில்லியன் அமெரிக்க

டொலராக அடுத்த மூன்று வருட காலப்பகுதியில் அதிகரிப்பதற்கான உடன்படிக்கையாகும்.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

- இராஜாங்க விஜயத்தின்போது இரண்டு முதலீட்டு முகவர்களது தலைவர்களுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு மேம்படுத்தலின் கூட்டுறவுக்கான இலங்கை முதலீட்டு சபை மற்றும் கொரியா வர்த்தக முதலீட்டு மேம்படுத்தல் முகவர் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தூதரகம் வசதியளித்தது.
- கொரியா மற்றும் இலங்கை மூலதன அபிவிருத்தி சந்தை கைத்தொழில் என்பனவற்றிற்கான இரண்டு பங்கு சந்தைகளின் இடையே ஒரு கூட்டுறவுடனான உறவை தாபிக்க 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி சியோலில் KRX அலுவலகத்தில் கொரிய பங்கு சந்தை மற்றும் கொழும்பு பங்கு சந்தைக்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கொரியாவுக்கான இலங்கை தூதுவரது முன்னிலையில் சியோலில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கொழும்பு பங்கு சந்தை தலைவர் ரே அபேவர்தன மற்றும் கொரிய சந்தை KRX தலைவர் ஜீவன் ஜுங் ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டது.

**xiv மேம்படுத்தலுக்கான நடவடிக்கைகள்**

அ. ஜயவர்தன பல்கலைக்கழகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு என்பனவற்றுடன் இணைந்து சுகாதாரம் சத்துணவுகள் மற்றும் உள்நாட்டு மருந்துவகைகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரம்பரிய மற்றும் எகியுபன்சர் மருந்து கல்விசார் பொருட்காட்சி மற்றும் வர்த்தக சந்தை தொடர்பான சர்வதேச கூட்டத்தில் கொரிய குடியரசிலிருந்து தேயிலை கைத்தொழில் அதிபர்கள் மற்றும் கொரிய உணவு ஆய்வு நிறுவகத்திலிருந்து இறக்குமதியாளர்கள் பேராசிரியர்கள் கல்விமான்கள் அடங்களாக 10 கொரிய தூதுக்குழுக்கள் கொழும்பில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 – 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற டிரட்மெட் சர்வதேசம் 2017 க்கு வருகை தந்து பங்குபெறுவதற்கான வசதிகள் வழங்கின. அத்துடன் சிரி ஜயவர்தனபுர பல்கழைக்கழகம் இலங்கை தேயிலை மற்றும் இலங்கை கறுவா வேறுபடுத்தல் என்பன தொடர்பாக ஒரு தனியார் அரசாங்க பங்காளித்துவத்தை சிரி ஜயவர்தனபுர பல்கழைக்கழகம் மற்றும் கொரிய குடியரசிற்கு இடையே மேற்கொண்டது.

ஆ. மீளாய்வு காலப்பகுதியில் உயிரியல் கைத்தொழில் எக்ஸ்போ 2017 ஜெலாநம் டு சர்வதேச விவசாய பொருட்காட்சி மற்றும் 16வது சியோல் சர்வதேச சிற்றுண்டிசாலை பொருட்காட்சி, உலக உணவு எக்ஸ்போ கொரியா, சியோஙட்பக் உலக பியர் விழா மற்றும் ஐடிவான் உலகளாவிய கிராம விழா என்பதற்கான இலங்கையின் பங்குபற்றுதலுக்கான தேவைகளுக்கு தூதரகம் வசதியளித்தது.

இ. பெருநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளின் இரண்டு அமைச்சுகளுக்கு இடையே இணைந்த செயற்பாட்டிற்காக இலங்கையின் பெருநகர் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் காணி உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து கொரிய அமைச்சர் என்பவர்களுக்கு இடையே 2016 ஆம் ஆண்டு மே மாதம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக காணி உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து என்பனவற்றினால் நியமிக்கப்பட்ட ஒரு நிபுணத்துவ குழு இலங்கைக்கு பல தடவைகள் விஜயம் செய்து ஹோமாகமவில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நகருக்காக ஒரு தெளிவான செயற்திட்டத்தை ஏற்படுத்தியது. (ஹோமாகம தொழில் நுட்ப நகரம்) இந்த விரிவான செயற்திட்டம் மேல்மாகாண அபிவிருத்தி மற்றும் பெருநகர் என்பதற்கான கௌரவ அமைச்சரின் பங்குபற்றுதலுடன் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி ஒரு சம்பிரதாயபூர்வ வைபவத்தில் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஈ. மீளாய்வு காலப்பகுதியின் கீழ் தூதரகம் கொலோன் குலோபல் என்ற பெயருடனான இலங்கையில் குறிப்பிடத்தக்க வர்த்தக ஆர்வங்களுடனான ஒரு பிரசித்திபெற்ற கொரிய கம்பனியின் தலைமைத்துவத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொரிய வர்த்தக மற்றும் கைத்தொழில் அவையில் கொரிய இலங்கை பொருளாதார ஒத்தாசை குழுவை தூதரகம் திரும்பவும் தாபித்தது. அதன்படி கொரிய வணிகம் மற்றும் கைத்தொழில் அவையில் கொரிய அவை KCCI வில் கொரிய இலங்கை பொருளாதார ஒத்தாசை குழுவில் கோலன் குலோபலின் தலைவர் இருக்கையாக (தலைவராக ) உள்ளார். அவர் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அதிமேதகு சனாதிபதியின் விஜயத்தை கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்த வர்த்தக கூட்டத்திற்கு கொரிய வணிகம் மற்றும் கைத்தொழில் அவையை பிரதிநிதித்துவப்படுத்தினார். 2018 ஆம் ஆண்டில் வர்த்தக மேம்பாடுகளை ஏற்பாடு செய்ய கொரியா மற்றும் இலங்கை பொருளாதார கூட்டுறவு குழுவுடன் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.

**கலாச்சார உறவுகள்**

I. இலங்யையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 14வது ஐக்கியநாடுகள் வெசாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள சமூக அலுவல்கள் பணிப்பாளர் வென் ஜுங் மூன் தலமையிலான கொரிய புத்ததர்மத்தின் ஜோகி கட்டளையிலிருந்து 7 அங்கத்தவர்கள் அடங்கிய தூதுக்குழுவுக்கு விஜயம் செய்ய தூதரகம் வசதிகள் வழங்கியது. இராஜாங்க விஜயத்தின்போது கலாச்சாரம் கலைகள் கல்வி இளைஞர் மற்றும் விளையாட்டு என்பன பற்றிய உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதற்கு தூதரகம் முயற்சிகள் எடுத்து வசதிபடுத்தியது.

II. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி கொரிய தேசிய நூதனசாலை இலங்கை தொல்பொருளியல் பட்டப்படிப்பு நிறுவனம் பணிப்பாளர் பேராசிரியர் ஜகத் வீரசிங்கவை "இலங்கையில் பௌத்த மரபுரிமைகளை பேணல் : சரித்திரம் மற்றும் சவால்கள் என்பன பற்றிய ஒரு சொற்பொழிவை கொரிய தேசிய நூதனசாலையில் வழங்க அழைத்திருந்தது.

III. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07 – 08 திகதிகளில் டாகு நகரில் சிரி லங்காராமய பௌத்த ஆலயத்தின் ( வென் வீஜித்தவன்ச தேரோ தலைமையில்) ஐதினா சமய சடங்குகளில் இலங்கை தூதுவர் கலந்து கொண்டார். டாகு விஜயத்தின்போது தூதுவர் டொங்வாஸ் பௌத்த ஆலயம் மற்றும் டாகுவில் சியோபொன்சா பௌத்த ஆலயம் என்பவற்றிற்கு விஜயம் செய்து இரண்டு பௌத்த ஆலயங்களின் தலைமை பௌத்த தலைவர்களை சந்தித்தார். டொங்வாசா ஆலயம் கொரியன் புத்த தர்மத்தின் ஜோகீ கட்டளையின் ஒம்பதாவது மாவட்டமாகும். மற்றும் அது அமைந்துள்ள இடம் பல்ோன் சான். சியோபொன்சோ ஆலயம் ஒரு ஜொகி ஆலயம் மற்றும் இது டாகுவில் அமைந்துள்ளது. இது பௌத்த கலாச்சார சொத்துக்களை பேணி பாதுகாப்பதில் பிரசித்தி பெற்றுள்ளது. தூதுவர் டோங்வாசாவிலுள்ள தலைமை புத்தமதகுரு மற்றும் சியோபொன்சா ஆலயத்திலுள்ள தலைமை பௌத்த பிக்குனி ஆகியோரையும் தமது விஜயத்தின்போது சந்தித்தார். இதனுடன் தூதுவர் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி பியொங்டாக் நகரின் மஹாவியாரையிலுள்ள (எவன் தர்மகிடிதேரோ தலமையில்) வருடாந்த கடினா சமய சடங்குகளில் பங்குபற்றினார்

IV. தூதரகம் இலங்கை அநுராதபுரத்திலுள்ள பௌத்த ஆலயத்தின் தலைமை பிக்கு வென் தர்மகீர்த்தி தேரோவை தூதரகத்திற்கு வரவேற்றது. அங்கு அவர் தூதுவர் மற்றும் ஊழியர்களுடன் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவது தொடர்பாக கலந்துரையாடினார்

V. 2017 ஆம் ஆண்டு இலங்கை இட்டாயிவொன் குலோபல் கிராம திருவிழாவில் இலங்கை தேயிலை இலங்கை ஸ்பா மற்றும் அழகுசாதனப்பொருட்கள் என்பனவற்றை பொருட்காட்சி கூடாரத்தில் காட்சிப்படுத்தி இலங்கை பங்குபற்றியது. இது 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 -15 வாரவிடுமுறை நாட்களில் அநேக கொரிய விருந்தாளிகளை கவர்ந்தது.

**VI. சனசமுக உறவுகள்**

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதியின் இராஜாங்க விஜயத்திற்கு சமமாக தூதரகம் ஒரு சனசமூக கூட்டத்தை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வில் அதிமேதகு சனாதிபதி மற்றும் இலங்கையின் 6 அமைச்சரவை அமைச்சர்கள் பங்கு பற்றினார்கள். கொரியா முழுவதிலும் உள்ள பௌத்த ஆலயங்களை பிரதிநிதித்துவத்துவப்படுத்தி இலங்கை பௌத்த சமயகுருக்களும் பங்குபற்றியது அடங்களாக ஊழியர்கள், இலங்கை நிபுணத்துவர்கள், இலங்கையின் வர்த்தக சமுதாயம் மற்றும் கொரியாவிலுள்ள இலங்கை மாணவர்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் அடங்களாக ஏறத்தாழ 125 இலங்கையர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்கள். சந்திப்பின்போது அதிமேதகு சனாதிபதியால் இலங்கை தூதரக இணையதளத்தில் சிங்கள மொழிபெயர்ப்பு முதன் முறையாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

VI. கொரியாவிலுள்ள இலங்கை ஊழியர்களுக்கு இலங்கை சேமிப்பு வங்கி ஒத்தாசை வழங்குதல் அதாவது, இலங்கை அரசாங்கத்தால் இலங்கை ஊழியர்களுக்கு மீண்டும் ஒன்றிணைதல் செயற்திட்டத்திற்கான ஒத்தாசைகள் தொடர்பான கடன் கருத்திட்டங்கள் என்பனபற்றிய விடயங்களை கலந்தாலோசிக்க தூதரகம் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர் மற்றும் அவர்களுடைய பிரதிநிதிகளை தூதரகத்தில் சந்தித்தது. எதிர்காலத்தில் கொரியாவில் இலங்கை ஊழியர்களுக்காக தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட “தெரியமகா” என்னும் விழிப்புணர்வு கருத்திட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் செயல்ஆற்றல்மிக்க நபர்களால் ஒத்தாசை வழங்க இணக்கம் செய்யப்பட்டது.

VII. 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் டாகு நகரத்தில் இலங்கையின் 70 வது ஆண்டு நிறைவு வைபவங்களை ஏற்பாடு செய்வது தொடர்பாக மாகு நகரத்தில் உள்ள சிரி லங்காராமய பௌத்த ஆலயம் மற்றும் ஹம்ஜிஹனம்சேசங் கொரிய சங்கத்திடம் தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

VIII. தூதரகம் கொரிய குடியரசில் இலங்கை சமூகம் மற்றும் அதனுடைய பிரதிநிதிகள் மற்றும் இலங்கை அமைப்புகள் என்பனவற்றை கொரிய குடியரசுடன் தொடர்புகளை ஏற்படுத்தி ஈடுபட வைக்கின்றது.

**கொன்சியூலர்ல் தொடர்புகள்**

IX. தூதரகத்தின் கொன்சுல் பிரிவு கொன்சுல் சேவைகளை முறையாக வழங்கி வருகின்றது. அதாவது பிரயாண கடவுச்சீட்டுக்கள் / அவசரதேவை பிரயாண ஆவணங்கள் என்பனவற்றை வழங்கள் கடவுச் சீட்டுக்களை புதுப்பித்தல் இறப்பு பிறப்பு பதிவுகள் திருமண பதிவாக்கல் பூர்த்தி செய்தல் சாரதி உரிமம் உறுதிப்படுத்துதல் சட்ட ஆவணங்களை கைச்சாட்டிடுதல் அத்துடன் விசா வழங்கள் என்பனவற்றிற்கான வழமையான கொன்சுயுலர் நேரங்களைத் தவிர ( திங்கள் - வெள்ளி காலை 9.00 - பிற்பகல் 5.00 மணிவரை சனிக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணிவரை.)

X. மீளாய்வின் கீழ் உள்ள காலப்பகுதியில் அரச விடுமுறை நாட்கள் மற்றும் வாரயிறுதி நாட்களில் சியோவில் தெறிவு செய்யப்பட்ட பிராந்தியங்களில் நான்கு (4) கொன்சுல் நடமாடும் சேவைகளை தூதரகம் நடாத்தியது. கொரியாவில் வாழும் இலங்கை பிரஜைகளுக்கு 04 நீதிமன்ற அழைப்பாணைகள் / ஆவணங்கள் என்பனவற்றை ஒப்படைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

XI. மீளாய்வு காலப்பகுதியில் கலந்துரையாடல் / பேசி இறுதிமுடிவெடுத்தல் என்பன மூலம் செலவுகள் என்பன அடங்களாக ஐந்து மரணித்த இலங்கை ஊழியர்களது பூதஉடல்களை இலங்கைக்கு அனுப்ப தூதரகம் ஏற்பாடு செய்தது. மேலும் இக்காலப் பகுதியில் மீன்பிடித்துறை ஊழியர்கள் மத்தியில் 02 காணாமல் போனோர் விவகாரங்கள் அறிவிக்கப்பட்டு அதன் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த இரு விடயங்கள் தொடர்பாக தூதரகம் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

XII. மீளாய்வு காலப்பகுதியின் கீழ் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அறிவுறுத்தல்களின் கீழ் ஈ - டாஸ் அமைப்பை (e-das) நடைமுறைப்படுத்த தூதரகம் தொடர்ந்தும் செயப்பட்டு வருகின்றது.

**ஊடகம்**

XIII. தூதரகத்தின் புதிய வலைத்தளம் (ஆங்கிலப் பதிப்பு) 2017 மே 25ஆந் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன், கொரிய மற்றும் சிங்கள மொழி மூலமான பதிப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

XIV. கொரியன் ஊடகம் நீல இல்லம் ஊடகம் (அதிமேதகு சனாதிபதி அலுவலகம்) மிகவும் பிரசித்திபெற்ற செய்தி அலைவரிசைகள் அதாவது எரரேங் தொலைகாட்சி செய்திகள் யொன்சொப் செய்திகள் மறறும்

கொரிய டைம்ஸ் கொரிய ஹெரல்ட் மற்றும் ஹன்குகில்போ போன்ற கொரிய செய்திபத்திரிகைகள் என்பனவற்றை மிகவும் தீவரமாக பேணியது. தூதரகம் அதிமேதகு சனாதிபதியின் இராஜாங்க விஜயத்தின்போது அவரோடு சென்ற உத்தியோகபூர்வ ஊடக தூதுக்குழுவுக்கு ஒத்தாசை நல்கியது.

XV. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி சனசமூக கூட்டத்தில் பங்குபற்றியபோது தூதரகத்தின் புதிய இணையதளம் (சிங்கள பதிப்பு) அதிமேதகு சனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அத்துடன் ஆங்கிலம், சிங்களம் மற்றும் கொரிய மொழிகளில் வலைத்தளம் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. அத்துடன் வலைத்தளத்தின் கையடக்கத்திற்கு ஒப்பான பதிப்பு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

XVI. தூதரகம் கொரியாவிலுள்ள இலங்கை மக்களிடம் சிங்களத்தில் உறவாட மற்றும் கொன்சுள் மற்றும் தொழில் நலன்புரி தொடர்பான செய்திகளை பரவலாக்க தொடர்ந்தும் தூதரக முகநூலின் பக்கத்தை சிங்களத்தில் புதுப்பிப்பதை தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றது. இந்த தூதரகம் இலங்கை வர்த்தகம், முதலீடு, சுற்றுளா, மற்றும் கலாச்சாரம் என்பனவற்றை மேம்படுத்த டுவிட்டர் கணக்கு மற்றும் யு டியுப் வீடியோ கணக்கு என்பனவற்றை பேணிவருகின்றது. இந்த தளங்கள் தூதரகத்தினால் முறையாக புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

**உ. தொழிலாளர் நலன்புரி**

மீளாய்வு காலப்பகுதியின் கீழ் கொரியாவில் உற்பத்தி மீன்பிடி கட்டிடநிர்மானம் மற்றும் கமத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர கம்பனிகளுக்கு கூலி வேலைகள் மற்றும் அதனோடு தொடர்பான தொழில்களுக்கு இலங்கை தொழிலாளர்களை தொழில் அனுமதிபத்திரத்தின் கீழ் தொடர்ந்து தொழிலுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி காலப்பகுதியில் 27,000 இலங்கையர்கள் கொரிய தொழில்வழங்குணர்களால் தொழிலில் அமர்த்தப்பட்டிருந்தார்கள். இந்த துறைகளில் தொழில்களை மேற்கொண்டுள்ள பெரும்பாலான தொழிலாளிகள் சாதகமான நல்ல தொழில் தொடர்பான சூழ்நிலைகளை அனுபவிக்கின்றார்கள். ஆயினும் கொரியாவில் ஏறத்தாழ 30,000 இலங்கையர்கள் தொழில்புரிந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தூதரகம் தொழில் அனுமதிப் பத்திரத்தின் கீழ் கொரியாவில் இலங்கை தொழிலாளர்களது நலன்புரி தொடர்பாக கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவை மற்றும் கொரிய தொழில் அமைச்சு போன்ற சம்பந்தப்பட்ட முகவர்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பை தூதரகம் தொடர்ந்தும் பேணி வருகின்றது. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 31 ஆம் திகதிவரை கொரியாவை வந்தடைந்த தொழிலாளர்களது எண்ணிக்கை 3460.

i. **நலன்புரி**

பின்வரும் புள்ளி விபரங்கள் 2017 ஒக்டோபர் மாதம் 1ஆந் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி காலப்பகுதியில் தொழில் மற்றும் நலன்புரி பிரிவினால் கையாளப்பட்ட நலன்புரி பணிகள் என்பனவற்றின் பொழிப்புரையை காட்டுகின்றது.

| | |
|---|---|
| தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொழில் சார் முறைப்பாடுகளின் எண்ணிக்கை | - 394 |
| வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | - 27 |
| சிறைக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை ( சிறையிலுள்ள இலங்கை கைதிகள்) | - 11 |
| மீன்பிடி துறையில் காணாமல் போனோர் எண்ணிக்கை | - 02 |
| தொழில் மற்றும் நலன்புரி நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை | - 12 |

**i. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

மீளாய்வு காலப்பகுதியின் கீழ் புலம்பெயர் ஊழியர்களுக்கான உதவி நிலையங்கள் மற்றும் கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவைகள் என்பனவற்றுடன் இணைந்து கொரியக் குடியரசின் பல்வேறு பிராந்தியங்களிலும் தொழில் புரியும் இலங்கை ஊழியர்களுக்கு மூன்று “திரிய மக” விழிப்புணர்வு மற்றும் உளவள ஆலோசனை நிகழ்ச்சிகள் தூதரக தொழில் மற்றும் நலன்புரி பிரிவின் ஊழியர்களினால் நடாத்தப்பட்டன. இந்த வர்த்தகத்தோடு இணைந்த நிகழ்ச்சிதிட்டம் செலுமையான வர்த்தகம் மற்றும் சிறுதொழில் முயற்ச்சிகள் திறனாய்வு என்பனவற்றை இலங்கை திரும்பும் தொழிலாளிகள் படிப்படியாக திரும்பவும் இலங்கையில் தொழில்களில் ஒன்றிணைதல் என்பதனை உறுதிப்படுத்த அறிமுகப்படுத்தப்படுகின்றது.

- மீளாய்வு காலப்பகுதியின் கீழ் தூதரகத்தின் இ டபில்யு பிரிவின் உத்தியோகத்தர்கள் புதிதாக வருகை தந்துள்ள இலங்கை தொழிலாளிகளுக்கு பயிற்ச்சி நிலயங்களில் சிறிய மற்றும் மத்திய தொழில்முனைவாளர்கள் (SMEs) கொரிய சம்மேளனம் மற்றும் மீன்பிடி ஒத்தாசையாளர்கள் தேசிய சம்மேளணம் மற்றும் கொரிய கட்டிடமைப்பு சங்கம் என்பனவற்றுடன் ஒன்றிணைந்து ஒம்பது விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தியது. இந்த நிகழ்வில் அடங்கியுள்ள செய்திகள் பொறுப்பான மற்றும் மாதிரி வெளியூர் தொழிலாளர்களை உறுவாக்குவது மற்றும் அவர்கள் தங்களது எதிர்கால இலட்சியங்களை அடைவதில் ஊக்குவிப்பு மற்றும் முக்கியமாக கொரியாவில் அவர்கள் சட்டவிரோதமாக வாழ்வதை தடுத்தல் என்பனவற்றை கருத்தில் கொண்டு இதில் அடங்கியுள்ள தகவல்கள் பரவலாக வழுங்கப்படுகின்றது.

**ii விஜயங்கள்**

- 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி இரு நாடுகளின் தலைவர்களுக்கிடையே நடைபெற்ற மாநாட்டில் அதிமேதகு இலங்கையின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொழில் அனுமதி பத்திரம் முறைமையின் கீழ்

கொரியாவில் இலங்கை இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கியதற்காக பாராட்டி நன்றி தெறிவித்தார். இரு நாடுகளின் பொருளாதாரத்திற்கு இலங்கை தொழிலாளிகள் வழங்கும் பங்களிப்பினை பாராட்டி இரு நாடுகளின் தலைவர்கள் தொழில் அனுமதி முறைமையின் கீழ் ஒத்தாசைகளை அதிகறிக்க இணக்கம் தெரிவித்தார்கள். அதிமேதகு சனாதிபதியும் தொழில் அனுமதி முறைமையின் கீழ் மேலதிக தொழில் வாய்ப்புகளை இலங்கை தொழிலாளர்களுக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதற்கு கொரிய அரசாங்கம் இவ்விடயத்தை கருத்தில்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்தது.

- மாநாட்டை தொடர்ந்து நடைபெற்ற கைச்சாத்திடல் வைபவத்தில் இருநாட்டு தலைவர்கள், முன்னிலையில் கௌரவ தலதா அத்துகோராள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு பணியக அமைச்சர், மற்றும் கொரியாவின் கௌரவ கிம் யங் ஜூ தொழில் அமைச்சர் என்பவர்களால் தொழில் அனுமதி முறைமையின் கீழ் தொழிலாளர்களை கொரிய குடியரசிற்கு அனுப்புதல் மற்றும் மீண்டும் அவர்கள் சொந்த நாட்டிற்கு திரும்புதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

### iii கூட்டங்கள்

இலங்கை தொழிலாளர்களுக்கு தொழில் அனுமதி முறைமையின் கீழ் அதிக தொழில் வாய்ப்புகளை பெறுதல் மற்றும் இலங்கை தொழிலாளர்களது நலண்புரி நடவடிக்கைகள் என்பனவற்றை கலந்தாலோசிக்க இரண்டு (2) கூட்டங்கள் கொரிய வேலை மற்றும் தொழில் அமைச்சுடன் நடத்தப்பட்டது.

### iv தொழில் மேம்பாடுகள்

மீளாய்வு காலப்பகுதியின் கீழ் 39 கம்பனிகளுக்கு விஜயம் செய்து தொழில் ஊக்குவிப்பு மூலோபாயமாக அவர்களுக்கு பாராட்டு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

### v மீன்பிடி துறைக்கான தூர நிகழ்ச்சி திட்டங்கள்

இந்த துறையின் தொழிலாளர் தொடர்பான விவகாரங்களின் கலந்துரையாடல் அத்துடன் இலங்கை மீன்பிடி துறை தொழிலாளிகளை சந்திக்கும் அதே வேளையில் இலங்கைக்கு திரும்பிச் செல்வதற்கு முன்பான பயிற்ச்சி திட்டத்தின் விபரங்களை பகிர்ந்து கொள்வதற்காக பிராந்தியங்களில் உள்ள மீன்பிடி சங்கங்களின் மூலம் மீன்பிடி துறை தொழில் வழங்குணர்களை சென்றடைவதற்கு மற்றும் இலங்கை மீன்பிடி துறை தொழிலாளர்களை தொழிலுக்கு உள்ளீர்ப்பு செய்வதை மேம்படுத்துவதற்காக மீன்பிடி துறை அடங்கிய பிராந்தியங்களின் NFFC பிராந்திய கிளைகள் மற்றும் தொழில் மையங்கள் என்பனவற்றிற்கு தூதரகத்தின் E & W பிரிவு இரண்டு (2) விஜயங்களை மேற்கொண்டது.

**vi SLBFE பதிவு**

தொழில் இடம் மாறும் 12 SLBFE பதிவு (KRW 1,368,000) மற்றும் SLBFE பதிவின் புதுப்பித்தல் (KRW 648,000) என்ற இரு வகைகளின் கீழ் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை SLBFE சட்டத்தின் கீழ் SLBFE பதிவு கட்டணமாக மொத்த வருமானம் கொரியன் வொன் 2,016,000 (இலங்கை நாணயம் LKR 220,800.00) பெறப்பட்டது.

vii **பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்**

தூதரகம் உற்பத்தி மற்றும் மீன்பிடி துறைகள் தொடர்பானவற்றை விசேட கவனத்தில் கொண்டு கைத்தொழில் மற்றும் ஏனய விபத்துக்களை தவிர்க்க இலங்கை தொழிலாளர்களால் பின்பற்றக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை தொடர்ந்தும் பரவலாக அனுப்பி வருகின்றது. இந்தச் செய்தி விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள் ஊடாக மற்றும் தூதரக முகநூல் பக்கம் மூலம் பரவலாக வழங்கப்படுகின்றது. இந்தச் செய்திகள் ஊளியர்கள் இடையே பரந்தளவில் பகிர்ந்து கொள்ளப்பட்டு மற்றும் அமோக வரவையும் பெற்றுள்ளது. இது இந்த மூலோபாயத்தின் வெற்றியை பிரதிபலிப்பதாகும்.

**ii. திரும்பி வருவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி**

கொரியக் குடியரசின் பல்வேறு பிராந்தியங்களிலும் தொழில் புரியும் இலங்கை ஊழியர்களுக்கு கொரிய எச்.ஆர்.டி. மற்றும் புலம்பெயர் ஊழியர்களுக்கான உதவி நிலையங்களின் உதவியுடன் பதின்மூன்று "திரிய மக" விழிப்புணர்வு மற்றும் உளவள ஆலோசனை நிகழ்ச்சிகள் தூதரக ஊழியர்களினால் நடாத்தப்பட்டன.

**iii. புதிதாக வருகை தந்துள்ள ஊழியர்களுக்கான நிகழ்ச்சிகள்**

கொரிய கூட்டமைப்பு, மீன்பிடி நிறுவனங்களுக்கான தேசிய கூட்டமைப்பு மற்றும் கொரியாவின் கட்டுமான நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து புதிதாக வருகை தந்துள்ள இலங்கை ஊழியர்களுக்கான 41 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தூதரகத்தினால் நடாத்தப்பட்டன.

அதிகமான இலங்கை ஊழியர்களை பணியமர்த்துவதற்காக தூதரகம் மீன்பிடி நிறுவனங்களுக்கான தேசிய கூட்டமைப்பின் பிராந்தியக் கிளைகளுக்கும், பிராந்தியங்களிலுள்ள மீன்பிடித் துறையின் தொழில்சார் நிலையங்களுக்குமான 7 விஜயங்களை மேற்கொண்டது.

**iv. தொழில் மற்றும் நலன்புரி உறவுக் கூட்டங்கள்**

அதிகமான தொழில் வாய்ப்புக்கள், நலன்புரி அளவீடுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதற்காகவும், இலங்கை ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியை உறுதிப்படுத்துவதற்காகவும் கொரிய அதிகாரிகளால் 6 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**9. சிங்கப்பூர்**

**அ. இருதரப்பு உறவுகள்**

பின்வரும் விஜயங்களுக்கு தூதரகம் உதவியளித்துள்ளது:

i. 2017 ஜூலை 17 - 20 வரையான காலப்பகுதிக்கான சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சரின் இலங்கைக்கான விஜயம். சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கிடையில் இலங்கையில் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சிகளுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

ii. கொழும்பில் நடைபெற்ற 2ஆவது இந்து சமுத்திர மாநாட்டிற்கான கூட்டத்தில் இணைத் தவிசாளராக அமைச்சர் பாலகிருஷ்ணன் அவர்களின் 2017 ஆகஸ்ட் 31 - 2017 செப்டெம்பர் 1ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான இலங்கைக்கான விஜயம்

iii. 2017 மே / ஜூன் காலப்பகுதியில் சிங்கப்பூரின் வாணிப மற்றும் தொழில் அமைச்சர் மாண்புமிகு எஸ். ஈஸ்வரன் அவர்களின் இலங்கைக்கான விஜயம். சிங்கப்பூரின் சர்வதேச நிறுவனம் மற்றும் சிங்கப்பூரின் வியாபார கூட்டமைப்பு ஆகியவற்றால் தலைமை தாங்கப்பட்டதும், பின்னர் அமைச்சரவை பேராளர் குழு இணைந்து கொண்டதுமான இலங்கையில் வியாபார வாய்ப்புக்களை கண்டறிவதற்கான 28 சிங்கப்பூர் நிறுவனங்களின் வியாபார பிரதிநிதித்துவம்

iv. 2017 ஜனவரி 9ஆந் திகதி வெளிநாட்டலுவல்கள் பிரதியமைச்சர் மாண்புமிகு (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள் சிங்கப்பூருக்கு விஜயம் செய்தார்.

v. 2017 மே மாதத்தில் சிங்கப்பூர் வெளிவிவகார இரண்டாம் நிரந்தர செயலாளர் திரு. அல்பேர்ட் சுவா இலங்கைக்கு விஜயம் செய்தார்.

vi. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெருநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பாட்டாளி சம்பிக்க ரணவாக்கயின் சிங்கப்பூர் விஜயத்திற்கு தூதரகம் வசதிவழங்கி இலகுவாக்கியது.

vii. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர்' மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 1 ஆம் திகதிவரை அதிமேதகு உயர் ஸ்தாணிகர் புருணி தாருசலத்திற்கு ஒரு

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பிரதம மந்திரி அலுவலகத்தில் கௌரவ பியின் டாடோ லிம் ஜொக் செங் மற்றும் புருணி டாருசலத்தின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தகத்தின் இரண்டாவது அமைச்சரை சந்தித்து பரஸ்பர பயன்களின் அம்சங்கள் என்பனபற்றி கலந்தாலோசித்து ஒத்தாசைகளை அதிகரிக்க அரசியல் ஆலோசனை தொடர்பாக இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சுக்களுக்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்மொழியப்பட்டது.

viii. சிங்கப்பூர் தரப்பினரால் பெரும்பான்மையான நிதி வழங்கப்படும் இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக ஒரு விரிவான அரசதுறை பயிற்ச்சி திட்டத்தை விருத்தி செய்வதற்கான செயற்பாட்டில் தூதரகம் சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகளை ( பிரதமர் அலுவலகம் மற்றும் இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவகம்) பின்பற்றியது.

சிங்கப்பூரினால் இலங்கை உத்தியோகத்தர்களுக்கான 70க்கும் மேற்பட்ட பயிற்சி வாய்ப்புக்களை தூதரகம் ஏற்பாடு செய்தது.

**ஆ. பல்தரப்பு உறவுகள்**

சிங்கப்பூரில் இடம்பெற்ற ஐ.ஐ.எஸ்.எஸ். ஆசியா பாதுகாப்பு ஒன்றியம், சங்க்ரி லா கலந்துரையாடல், ஆசியாவில் கப்பல்களுக்கு எதிரான கடல் கொள்ளை மற்றும் இராணுவ கொள்ளை போன்றவற்றை எதிர்ப்பதற்கான கூட்டிணைவு ஒப்பந்தம் மற்றும் இம்டெக்ஸ் ஆசியா (பாதுகாப்பு சார்பான) மாநாடு மற்றும் ஏனையவை போன்ற பல முக்கிய பல்தரப்பு விடயங்களில் இலங்கையின் பங்குபற்றுதலை தூதரகம் உறுதிப்படுத்தியது.

**இ. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்**

அ. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பலசுற்று இணக்கப்பாடுகளுக்கு தூதரகம் வசதியளித்தது.

ஆ. 2017 பெப்ரவரி 22 - 25 வரையான காலப்பகுதியில் மாண்புமிகு பிரதமர் மற்றும் ஏனைய பல சிரேஷ்ட அமைச்சர்களின் பங்குபற்றலுடன் கூடிய வியாபார பங்குடைமைகள் மற்றும் இலங்கையின் முதலீடுகள் தொடர்பான கலந்துரையாடல்களுக்காக சிங்கப்பூரின் சுர்பானா ஜூரொங்கின் தலைமையின் கீழான தூதுக்குழுவுக்கு தூதரகம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. மேற்படி விஜயத்தைத் தொடர்ந்து, சிங்கப்பூரின் சுர்பானா ஜூரொங் மற்றும் இலங்கையின் முதலீட்டுச் சபை ஆகியன இணைந்த வாணிப உடன்படிக்கையை இறுதிப்படுத்தியது.

இ. சிங்கப்பூரின் சர்வதேச வர்த்தக நிலையம் தூதரகத்தின் உதவியுடன் 2017 ஏப்ரல் 24 - 25 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கான முதலாவது விஜயத்தை மேற்கொள்வதற்காக ஐ.இ. யின் பணிப்பாளர்கள் சபையை ஏற்பாடு செய்தது.

iv 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகியிலிருந்து 10 ஆம் திகதி வரை உயர்ஸ்தானிகராலயம் IE சிங்கப்பூர், சிங்கப்பூர் வர்த்தக சம்மேளனம் மற்றும் சிங்கப்பூர் இந்திய வர்த்தக அவை என்பனவற்றுடன் இணைந்து மூன்று வர்த்தக / முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளுக்கு வசதியளித்தது.

v சிரிலங்கா எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகம் சிங்கப்பூர் என்பனவற்றுடன் இணைந்து இலங்கை மாநாடு பணியகத்தினால் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி சிங்கப்பூர் ஹோர்சர்ட் ஹோட்டலில் இலங்கையில் சந்திப்பு MICE ஊக்குவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது

**ஈ. கலாச்சார உறவுகள்**

சிங்கப்பூர் தேசிய கலை நிலையத்தின் அனுசரணையின் கீழான நடன குழுவொன்றின் இலங்கைக்கான விஜயத்திற்கு 2017 மார்ச்சில் வசதியளிக்கப்பட்டது.

**10. தாய்லாந்து**

**அ. இருபக்க விஜயங்கள்**

i. **தாய்லாந்திற்கான விஜயங்கள்:**
முன்னாள் கௌரவ நீதி மற்றும் பௌத்தசாசன அமைச்சர் மாட்சிமைதாங்கிய மன்னர் மற்றும் இளவரசர் மற்றும் அதிமேதகு பிரதம அமைச்சர் ஆகியோருக்கு ஐக்கிய நாடுகள் சர்வதேச வெசாக் தினக்கொண்டாட்டங்களுக்கான அழைப்பிதழ் வழங்குவதற்கு விஜயம் செய்தார்.

ii. **தாய்லாந்திலிருந்து விஜயங்கள்:**
சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான தாய்லாந்து பிரதமர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள கௌரவ அமைச்சர் பேராளர் குழுவொன்றுடன் ஐக்கிய நாடுகள் வெசாக் தின 2017 நிகழ்விற்கான இலங்கைக்கு விஜயம் செய்தார்

iii. யூலையின் நடுப்பகுதியில் அரிசி கொள்வனவு செய்வதற்கான இரண்டு நாடுகளினதும் அதிகாரிகளுக்கிடையில் ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்வதில் தூதரகம் உதவியளித்தது.

iv. டெங்கு நோய்ப்பரவலில் தாய்லாந்தின் உதவியினைப் பெற்றுகொள்வதனை நாடி இரு நாடுகளினதும் சுகாதார அமைச்சர்களுக்கிடையிலான தொடர்பாடலுக்கு வசதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்நோக்கத்திற்காக இரு தாய்லாந்து நிபுணர்களின் ஒருவாரகால வருகைக்கு வசதியளிக்கப்பட்டது.

v. செயற்கை மழை உருவாக்குதல் தொழில்நுட்பம் பற்றி இலங்கை தொழில்நுட்ப அணியொன்றினைப் பயிற்றுவிப்பதற்காக தாய்லாந்து றோயல் மழை உருவாக்க பணியகத்துடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

vi. ஒக்டோபர் 26 ஆம் திகதி அரசகுடும்ப தகனகிரிகைகளில் பங்குபெற செல்வதற்கான கௌரவ வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தை வசதிப்படுத்தப்பட்டது

**தாய்லாந்திற்கான பாதுகாப்பு விஜயங்கள்:**

(i) கோப்புறா கோல்ட் பயிற்சிக்காக அவதானிப்பாளர்களாக இரண்டு சிரேஸ்ட இராணுவ அதிகாரிகள்

(ii) பாதுகாப்புச் சேவைக் கட்டளை மற்றும் பதிவியினர் கல்லூரி 15 உறுப்பினர்கள் கொண்ட பெயராளர் குழு

(iii) 11வது நுண்ணறிவுப் பரிமாற்ற மாநாட்டுக்கான ஒரு கடற்படை அதிகாரி

(iv) பாளி செயன்முறைக் கூட்டத்திற்காக இரண்டு சிரேஸ்ட கடற்படை அதிகாரிகள். (vi) ஏசியன் 50வது ஆண்டுநிறைவு - சர்வதேச கப்பல்கள் மீளாய்வு என்பனவற்றில் பங்குபற்றுதல்

**ஆ. பல்பக்க உறவுகள்**

பின்வரும் விஜயங்கள் கூட்டப் பங்கேற்புக்கள் வசதிப்படுத்தப்பட்டன.

i. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை அமைச்சு மட்ட மன்றத்தின் 4வது அமர்வில் இலங்கைக் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரும் பேராளர் குழுவும் பங்கேற்றது. (2017 சனவரி 13) அத்துடன் தாய்லாந்தின் வர்த்தக அமைச்சர், இலங்கைக்கு வாடிக்கையாளர் பொருட்கள் வழங்குநர்கள், மிற்பொல் சீனி கூட்டுத்தாபன லிமிடெட், ஓடிஓபி ஆலோசனை நிறுவனம் போன்றவற்றுடன் சந்திப்புக்கள் வசதிப்படுத்தப்பட்டன.

ii. சனவரியில் சக்திக் குழுவின் 1வது அமர்வில் சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க பிரதி அமைச்சரும் பேராளர் குழுவும் கலந்துகொள்ளுதல்.

iii. மார்ச்சில் நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்திக்கான ஆசிய பசுபிக் மன்றத்தில் நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் கௌரவ அமைச்சரும் பேராளர் குழுவும் பங்கேற்றல்.

iv. இம்மன்றத்தில் சர்வதேச வர்த்தக கௌரவ இராஜாங்க அமைச்சரின் பங்கேற்பும் தாய்லாந்து முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக சபை உறுப்பினர்களுடனான சந்திப்புக்களும் ஒழுங்குசெய்யப்பட்டது.

v. அபிவிருத்திக்கான நிதியளித்தல் மீது 4ஆவது உயர்மட்ட கலந்துரையாடலினைக் கூட்டுதலும் (ஏப்பிரல்) மற்றும் கௌரவ நிதி அமைச்சர் 6 பேரைக்கொண்ட பேராளர் குழு பங்கேற்பு.

vi. 73வது யுனிஸ்செப் அமர்விற்கு இலங்கை பேராளர் குழுவின் பங்கேற்பு (மே)

vii. யுனெஸ்கெப் (UNESCAP) கூட்டங்களில் பங்குபெற வசதிகள் வழங்கப்பட்டன

viii. வர்த்தகம் மற்றும் முதலீடு (நவம்பர்) தொடர்பான 5வது குழுவில் சர்வதேச வர்த்தக கௌரவ இராஜாங்க அமைச்சர்

ix. RECI (நவம்பர்) தொடர்பான இரண்டாவது அமைச்சு மாநாட்டில் சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

x. பாதுகாப்பு சட்டப்படியான மற்றும் முறையான புலம்பெயர்வு என்பதற்கான உலகளாவிய உடன்படிக்கைக்கான ஆசிய பசுபிக் பிராந்திய ஆரம்ப கூட்டத்திற்கு இலங்கையின் தூதுக்குழு

**இ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

பின்வரும் விஜயங்கள்∴ நிகழ்வுகள்∴ கூட்டங்கள் தூதரகத்தினால் வசதிப்படுத்தப்பட்டன∴ ஒருங்கிணைக்கப்பட்டன∴ பங்கேற்றது:

i. அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சா்வதேச வா்த்தக கௌரவ அமைச்சா் மற்றும் செயலாளா் குழுவின் தாய்லாந்திற்கான விஜயங்கள். (பெப்ரவரி). இப் பேராளா் குழு பொருளாதார அலுவல்களுக்குப் பொறுப்பான தாய்லாந்தில் பிரதிப்பிரதம அமைச்சரையும் ஏனைய அமைச்சா்கள் மற்றும் தனியாா் தாய்லாந்து முதலீட்டாளா்களையும் சந்தித்ததுடன் கைத்தொழில் பூங்காக்களுக்கு விஜயங்களை மேற்கொண்டது. இருபக்க சுதந்திர வா்த்தக உடன்படிக்கையினை துரிதப்படுத்துவதற்கும் மூலோபாயப் பொருளாதார பங்குடமையொன்றினை கைச்சாத்திடுவதற்குமான தாய்லாந்தின் முன்மொழிவு வரவேற்கப்பட்டது.

ii. இலங்கைக்கும் தாய்லாந்திற்குமிடையிலான வா்த்தகத்துடன் தொடா்புபட்ட விடயங்கள் மீதான உபகுழுவின் 2வது கூட்டத்தில் மூலோபாயம் வா்த்தகப் பங்குடமையொன்றிற்கான வரைபு தாய்லாந்து தரப்பினரால் முன்வைக்கப்பட்டது.

iii. இலங்கையின் வா்த்தகா்கள் பங்குபற்றிய நிகழ்வுகள்: (i) 59வது பாங்கொக் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சந்தை (பெப்பரவரி) (ii) தாய்லாந்தின் ஆதரவளிக்கும் கலைகள் கைவினைப் பொருட்கள் சா்வதேச நிலையச் சந்தை 2017 (மாா்ச்) (iii) தைபக்ஸ் - ஆசிய உலக உணவு 2017 (மே∴ யூன்) (iv) 60வது பாங்கொக் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சந்தை (செப்டெம்பா்)

iv. பின்வரும் துறைகளில் இலங்கைப் பெயராளா் குழு விஜயம் செய்ததுடன் வா்த்தகத்திலிருந்து வா்த்தகத்திற்கான கூட்டங்களும் ஏற்பாடுசெய்யப்பட்டன. (i) ஏற்பாட்டியல் (ii) இலத்திரனியலும் மின்னியலும் (செப்டெம்பா்)

v. இலங்கை நிகழ்வுகளில் தாய்லாந்து பெயராளா் குழுக்களின் பங்கேற்பு (i) பசட் ஸ்ரீ லங்கா (ஓகஸ்ட்∴ செப்டெம்பா்) (ii) இலங்கை முதலீட்டு மற்றும் வா்த்தக இரகசிக சந்திப்பு (2017 மே∴ யூன்)

vi. முன்னாள் யு.என்.சி.டி.ஏ.டி. மேற்பார்வையாளர் நாயகமும், உலக தொழில் தாபனத்தின் பணிப்பாளர் நாயகமுமான கலாநிதி சுபாசாய் பனிச்பக்டி அவர்கள் இலங்கை சில்லறை அமைப்பிற்காக விஜயம் செய்ததுடன், அதில் அவர் அடிப்படை குறிப்புரையின் உரையையும் ஆற்றினார் (செப்டெம்பர்)

vii. தேயிலை, கறுவா, இரத்தினக்கல், ஆபரணங்கள் கைப்பணிப் பொருட்கள், பாதணிகள் மற்றும் மூலோபாய பொருளாதார பங்குடைமையை மேம்படுத்துவதற்காக இலங்கைத் தூதரகமானது செஞ்சிலுவை சந்தையில் பங்குபற்றியது (பெப்ரவரி). ஈ.டி.பி. யினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது வரைவு குறிப்புக்களையும், 2 நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்ட பிம்ஸ்டெக் கொடுப்பனவு பட்டியலை பயன்படுத்துவதற்கான தாய் நாட்டின் பிரேரணையையும் தூதரகம் கண்காணித்தது.

பின்வரும் செயற்பாடுகளுக்கு வசதிகள் அளிக்கப்பட்டன / ஒருங்கிணைக்கப்பட்டன

i. 2017 ஆகஸ்டில், இலங்கை முதலீட்டு சபைக்கும், தாய் நிறுவனமான ரொஜானா இன்டஸ்ட்ரியல் பார்க்கிற்குமிடையிலான 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான முதலீட்டை ஏற்படுத்தும் 400 ஏக்கர் தொழில் பூங்காவை நிறுவுவதற்கான குறிக்கோள் கடிதமொன்று

ii. ‘ஒரு டெம்பொன் - ஒரு உற்பத்தி’ என்ற திட்டத்தை நிறுவுவதற்கான இலங்கைக்கும், தாய்லாந்திற்குமிடையிலான தொழினுட்ப ஒருங்கிணைப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டது. கண்காணிப்புக்களுக்காக நிலுவையிலுள்ளது.

iii. அடிப்படை தொழில் உற்பத்திகளுக்கான பெறுமதியை உட்சேர்ப்பதுடன் தொடர்பான தொழிநுட்ப ஒருங்கிணைவுக்கான இலங்கை அடிப்டை தொழில்கள் அமைச்சிற்கும், தாய்லாந்தின் கசெட்சார்ட் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை பூர்த்தியடைந்துள்ளது.

iv. தர விருத்தி, ஒருங்கிணைந்த பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பான இலங்கை அடிப்படை தொழில்கள் அமைச்சிற்கும், தாய்லாந்தின் விவசாய மற்றும் விவசாய ஒருங்கிணைவு வங்கிக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று செப்டெம்பரில் கைச்சாத்திடப்பட்டது. பூர்த்தியடைந்துள்ளது.

v. இலங்கைக்கும், தாய்லாந்திற்குமிடையிலான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையின் உட்கட்ட சட்ட நடைமுறைகளை இலங்கை பூர்த்தி செய்துள்ளது.

vi. இலங்கை தூதரகம் மற்றும் இலங்கை கம்பனிகளுக்கான தாய்முகவர்கள்: தேயிலை, கருவா, இரத்தின கற்கள், ஆபரணங்கள் ஆயர்வேத பொருட்கள், காலணிகள், பிஸ்கட் என்பனவற்றை ஊக்குவிக்க மற்றும் விற்பனை செய்ய வைடபல்யுசிஏ (YWCA) இராஜதந்திர அறநெறி கடைத்தெரு (நவம்பர்)

vii பலதுறைகளிலிலுமிருந்து இலங்கை தூதுக்குழுக்களின் விஜயங்களுக்கு வசதியளித்தல் மற்றும் B2B கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மோட்டார் வாகனங்களின் பாகங்களை சுயமாக உற்பத்தி செய்தல்.

vii. சம்பந்தப்பட்ட தாய் பல்கழைக்கலகங்கள் மற்றும் விவசாய விஞ்ஞானிகளுக்காக (ஒக்டோபர்) MSC மற்றும் PhD கருத்திட்டங்களை ஆராய்வதற்காக இலங்கையின் CARP விலிருந்து சம்பந்தப்பட்ட தாய் பல்கழைக்கலக உத்தியோர்கத்தர்களது கூட்டங்களை ஒருங்கிணைத்து வசதிப்படுத்தியது.

viii. அமைச்சின் உத்தியோகஸ்தர்களுக்காக திறனை கட்டி எழுப்பும் நடவடிக்கைகள் பற்றிய கருத்திட்டங்களை இறுதிப்படுத்துவதற்கு விவசாய இராஜாங்க அமைச்சரின் AIT க்கான விஜயத்தை ஏற்பாடு செய்தல்

**ஆ. சுற்றுலா விருத்தி**

I. இலங்கை சுற்றுலா சபையானது இலங்கையின் பழைமையான நடனக் குழுவுடன் 20ஆவது தாய் சர்வதேச பிரயாண சந்தையில் (பெப்ரவரியில்) பங்குபற்றுவதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

II. 2017 பெப்ரவரியில் பௌத்த சுழற்சி சுற்றுலாவில் ஈடுபட்ட 215 மதகுருமார்கள், பயிலுனர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர்கள் கொண்ட பேராளர் குழுவொன்றுக்கு தூதரகம் ஆலோசனைகளை வழங்கி, வசதியளித்தது.

III. தாய் பிரயாண முகவர்கள் / பிரயாண இயக்குனர்களுக்கான வரவேற்பொன்று இடம்பெற்றது.

**இ. கலாச்சார உறவுகள்**

காலஞ்சென்ற மன்னர் பூமிபோல் அதுலியடெஜ் அவர்களின் 3 மாத நினைவுகூர்தல் நிகழ்வை வட் அருண் அரச விகாரையில் தாய் ஊடகப் பதிவுடன் ஜனவரி மாதத்தில் தூதரகம் ஏற்பாடு செய்தது.

11. கம்போடியா

**அ. இருபக்க உறவுகள்**

i ஐக்கிய நாடுகள் வெசாக் தின கொண்டாட்டங்களுக்கு கம்போடிய பிரமுகர்களுக்கு அழைப்பிதழை வழங்குவதற்காக முன்னாள் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சரின் இரு நாள் விஜயத்திற்கு (மார்ச்) வசதி செய்து கொடுக்கப்பட்டது.

ii இலங்கையர் பிரயாணம் தொடர்பாக அமுலிலிருந்த கட்டுப்பாடுகளை அகற்றுவதற்காக பல வருட தொடர்ச்சியான பிரதிநிதித்துவங்களைத் தொடர்ந்து கம்போடியாவிற்கு 2017 ஆம் ஆண்டு ஜூனில் இலங்கைக்கான இலத்திரனியல் வீசா முறைமையினை கம்போடிய அரசாங்கம் ஆரம்பித்தது.

iii வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வருடாந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2007ல் கம்போடிய பெயராளர் குழு பங்கேற்பதற்கு வசதியளிக்கப்பட்டது.

12. லாவோஸ் மக்கள் சனநாயக குடியரசு

**அ. இருபக்க உறவுகள்**

I. ஐக்கிய நாடுகள் வெசாக் தின கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக லாவோஸ் பிரமுகர்களுக்கு அழைப்பிதழை வழங்குவதற்காக முன்னாள் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சருடன் தூதுவரும் இணைந்த ஒரு நாள் விஜயத்திற்கு (மார்ச்) வசதி செய்து கொடுக்கப்பட்டது.

II. வைகாசி மாதத்தில் ஐக்கிய நாடுகள் வெசாக் கொண்டாட்டங்களில் அரசாங்க மற்றும் பௌத்த மத தலைவர்களிலிருந்தான லாவோஸ் பேராளர் குழு கலந்து கொள்வதற்கு உதவியளிக்கப்பட்டது.

III. இலங்கை – லாவோஸ் பாராளுமன்ற நட்புறவுக் குழுவிலிருந்து ஏழு பேர் கொண்ட பேராளர் குழுவொன்று ஜூனில் லாவோசுக்கு விஜயம் செய்வதற்கு வசதியளிக்கப்பட்டது.

IV. இலங்கையில் இரண்டாவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொள்வதற்கு லாவோஸ் மக்கள் சனநாயகக் குடியரசின் சனாதிபதி அலுவலகத்தின் பிரதானி, முன்னாள் அமைச்சர் அதிமேதகு பொங்சவத் போபா அவர்களின் விஜயம் ஒருங்கிணைக்கப்பட்டது.

V. இலங்கைக்கும் லாவோசுக்கும் இடையில் பின்வரும் உடன்படிக்கைகளை நிறைவு செய்வதற்கு செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டன: இருபக்க அரசியல் ஆலோசனைகள் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச் சீட்டுக்களை வைத்திருப்போர் மீதான வீசா விலக்களித்தல் மீதான உடன்படிக்கை.

13. வியட்நாம்

**அ. இருபக்க உறவுகள் - விஜயங்கள்**

i. இலங்கையின் பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஏப்பிரல் 16 – 18 வரை வியட்நாமுக்கான விஜயம் ஏற்பாடு செய்யப்பட்து. இவ் விஜயத்தின்போது கல்வி உடன்படிக்கை மீதான உடன்படிக்கையொன்றும் விவசாய ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டன.

ii. வியட்நாம் ஒத்துழைப்பு முறைமை பற்றிய செயலமர்வில் கலந்து கொள்வதற்காக மார்ச் 11 – 18 வரை சப்ரகமுவ மாகாணத்தின் முதலமைச்சர் கௌரவ மஹிபால ஹேரத் அவர்களின் விஜயத்திற்கு வசதியளிக்கப்பட்டது.

iii. 14வது ஐக்கிய நாடுகள் வெசாக் தினத்திற்கான அமைப்பிதழை ஒப்படைப்பதற்காக விஜயம் செய்த முன்னாள் நீதி மற்றும் புத்த சாசன அமைச்சர் கௌரவ கலாநிதி விஜயதாச ராஜபக்ச அவர்களின் மார்ச் 16 – 19 வரையிலான விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது.

iv. ஏப்பிரல் 17 – 20 வரை ஹனோயில் நடைபெற்ற 10வது ஆசிய – பசுபிக் ஒத்துழைப்பு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ ரிஷாட் பதுர்தீன் அவர்களின் விஜயத்திற்கு வசதியளிக்கப்பட்டது.

v. ஜூலை 29 – ஒகஸ்ட் 02 வரை வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனாநாயக்க அவர்களின் வியட்நாமுக்கான விஜயத்திற்கு வசதியளிக்கப்பட்டது.

vi. மார்ச் 22 – 23 வரை உணவுப் பாதுகாப்பு பற்றிய பிராந்திய மாநாட்டில் கலந்து கொள்வதற்கு மஹா இலுப்பல்லம களப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கலாநிதி.டபிள்யு.எம்.டபிள்யு.வீரகோன் என்பவரின் விஜயம் வசதியளிக்கப்பட்டது.

vii. ஏப்ரல் 25 – 26 வரை இலங்கையின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திற்காக வியட்நாமின் தேசிய பாராளுமன்றத்தின் வெளிநாட்டு அலுவல்கள் குழுவின் நிலையியல் உறுப்பினர் ங்குவயான் புவோங் துவான் அவர்களின் பங்கேற்புக்கு வசதியளிக்கப்பட்டது.

viii. இலங்கையின் 14வது ஐக்கிய நாடுகள் வெசாக் தினத்தில் பங்கேற்பதற்கு வியட்நாமிலிருந்து மத விவகாரங்களுக்கான அரசாங்கக் குழுவின் ஐந்து பேரைக்கொண்ட பேராளர் குழுவொன்றும் 18 பேரைக்கொண்ட கலாசாரக் குழுவொன்றும் விஜயம் செய்வதற்கு வசதியளிக்கப்பட்டது.

ix. ஒகஸ்ட் 09 – 21 வரை இலங்கையின் பாதுகாப்பு சேவைகள் கட்டளைகள் மற்றும் பதவியினர் கல்லூரியிலிருந்து 12 பேர்கொண்ட பேராளர் குழுவொன்றின் வியட்நாமுக்கான கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது.

x. 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வரை வியட்நாம் தேசிய பாதகாப்பு கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட “ 04வது சர்வதேச பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் பயிற்ச்சி

கற்கைநெறிக்காக இலங்கை இராணுவத்திலிருந்து லெப்டினன்ட் கேர்னல் நாலக சப்புகஸ்தென மற்றும் இலங்கை கடற்படையிலிருந்து மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவன என்போர் பங்குபெற வசதிகள் வழங்கப்பட்டன.

xi. 2017 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் கைச்சாத்திடப்பட்ட கல்வி ஒத்தாசை பற்றிய உடன்படிக்கையின் கீழ் 2017 / 2018 ஆம் கல்வி ஆண்டின் பட்டப்படிப்பு கல்விக்காக ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் புதிய குழுவில் 04 மாணவர்கள் வருகை தந்தார்கள்.

**ஆ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு உறவுகளும்**

I. கௌரவ பிரதம அமைச்சரின் விஜயத்தின்போது தூதரகம் 40இற்கும் மேற்பட்ட வியட்நாம் கம்பனிகளின் பங்கேற்புடன் ''வியட்நாம் - இலங்கை முதலீட்டு மன்றம்'' இனை ஏற்பாடு செய்ததுடன் கௌரவ பிரதமருடன் இணைந்து சென்ற போராளர் குழுவுடன் வியட்நாம் மற்றும் வெளிநாட்டு பிரதம நிறைவேற்று அதிகாரிகளுடனான ஒருவருக்கொருவர் கூட்டங்களையும் ஒழுங்கு செய்தது.

II. ஜூன் 01ல் இலங்கை கறுவா மற்றும் இலங்கைத் தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

III. இலங்கையின் டக்ளஸ் அன்ட் சன்ஸ் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஜி.ரி. விருது வழங்கும் நிகழ்வுக்கு ஆதரவளிக்கப்பட்டது.

IV. கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தின் வூ கைத்தொழில் வலய அலுவலர்களுடன் ஆலோசனை நடாத்தினார், ஜூலை 31 அன்று ஹுங் யென் நெசவு மற்றும் நிற சாயம் கம்பனிக்கும் லினி அக்குவா (வியட்நாம்) கம்பனிக்கும் விஜயம் செய்தார்.

V. ஓகஸ்ட் 10 – 14 வரை வியட்நாமின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட 20 பேர் கொண்ட வர்த்தக பேராளர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு வசதியளிக்கப்பட்டது.

VI. செப்டெம்பர் 04 – 06 வரை இலங்கையின் இலத்திரனியல் / மின்னியல் கைத்தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மூலமான 12 பேர் கொண்ட பேராளர் குழுவின் வியட்நாமுக்கான விஜயம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஒருங்கிணைப்புடன் வசதியளிக்கப்பட்டது.

VII. இலங்கையில் கழிவு மீள் சுழற்சி பொறித் தொகுதியினையும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி கருத்திட்டத்தையும் தாபிப்பதற்கு இலங்கை முகவராண்மையுடன் சந்திப்புக்களை நடாத்துவதற்கு செப்ரெம்பர் 13 – 16 வரை ஆசிய நோர்டிக் ஆலோசக நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.சாலே அஹமட் மற்றும் அவரது அணியின் இலங்கைக்கான விஜயத்தினை தூதரகம் வசதிப்படுத்தியது.

VIII. ''இலங்கை இந்து சமுத்திரத்தின் மையம் - வர்த்தக வாய்ப்புகளுக்கான நாடு '' என்ற கருப்பொருளில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி HCMC வில் ரெக்ஸ் ஹோட்டலில் ஒரு வர்த்தக சந்திப்பு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இலங்கை தொழில் வாண்மையாளர்கள், மற்றும் தொழில்

முனைவோர்கள் அத்துடன் ஒரு சில புலம்பெயர்ந்தவர்கள் ஊடகவியாளர்கள் அடங்களாக 200க்கு மேற்பட்ட வியட்நாம் வர்த்தக சமுதாயம் பங்குபற்றியது.

IX. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிவரை இலங்கை சன்ரே ஜெம்ஸ்வின் உரிமையாளர் சமந்தா விக்ரமஆராய்ச்சியின் விஜயத்தை தூதரகம் இலகுபடுத்தியது. B2B கூட்டங்களை ' யா நொய்யிலுள்ள இரத்தின கற்கள் மற்றும் ஆபரணங்களை கொள்வனவு செய்பவர்களுடன் மற்றும் யென் பாய் மாகாணத்திலுள்ள லுக் யென் இரத்திணகற்கள் சந்தைக்கான விஜயத்தையும் ஏற்பாடு செய்தது.

X. வியட்நாம் பிரயாண முகவர்களுடனான B2B கூட்டங்கள் அடங்களாக 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 01 ஆம் திகதிவரை எய்ட்கன் ஸ்பென்ஸ் டிரவல் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு நாலின் ஜயசுந்தர வின் விஜயத்தை வசதிப்படுத்தியது.

**இ. கலாசார உறவுகள்:**

ஓகஸ்ட் 2 – 10 வரை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடன் வருகைதரு ஊடக நிகழ்ச்சியின் கீழ் நெஹான் டான் தொலைக்காட்சியின் ஊடக அணியொன்றினை இலங்கைக்கு அனுப்புவதற்கு தூதரகம் ஏற்பாடுகளை மேற்கொண்டது.

****

# பொருளாதார அலுவல்கள்
# மற்றும் வர்த்தகப் பிரிவு

**பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு**

01. பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவிற்கு இரு தரப்பு மற்றும் பல்தரப்பு பொருளாதார செயற்பாடுகளுக்கான செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பிற நாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புகளுடன் இரு தரப்பு மற்றும் பல்தரப்பு உறவுகளினூடாக இலங்கைக்கு நன்மை கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுற்றுலாத்துறை, தேயிலைப் பாவனை ஊக்குவிப்பு மற்றும் குறிப்பிட்ட அரச முகவராண்மைகளுடன் அண்மித்து செயற்படுகின்றது.

02. வாணிபம்/ முதலீடு சம்பந்தப்பட்ட கூட்டங்களை ஒழுங்கமைப்பதன் மூலம், இப் பிரிவானது பொருளாதார இராசதந்திர முன்னெடுப்புகளுக்கு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருவதற்குமான பிற அமைச்சுக்களின் முயற்சிகளுக்கு உதவுவதில் ஓர் இன்றியமையாத பங்கை வகிக்கின்றது.

**1. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலத்திலான பிரதான செயற்பாடுகள்**

03. பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவானது அமைச்சின் பொருளாதார இராசதந்திரம் மற்றும் இலங்கை தூதரகங்களின் ஊடக இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புச் செயற்பாடுகளை ஒன்றிணைக்கின்றது. வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் பிற பொருளாதார செயற்பாடுகளுக்குப் பொறுப்பான முக்கிய அரச தாபனங்களுடன் தொடர்புகொண்டு செயற்படுகின்றது.

04. 2017 ஜனவரி தொடக்கம் செப்டம்பர் மாதம் வரை ஜோர்தான், ஈரான், ஜோர்ஜியா, துருக்கி, ரஷ்யா, ஹங்கேரி, சீனா, சிங்கப்பூர் மற்றும் ஜேர்மனி ஆகிய 9 நாடுகளின் உயர்மட்ட விஜயங்களுக்கான வசதிகளை இப்பிரிவு ஏற்படுத்தியது.

05. பங்களாதேஷ், ரஷ்யா, சுவீடன், தாய்லாந்து, பெல்ஜியம், குவைட், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கான 08 உயர்மட்ட வெளிவாரி விஜயங்களும் ஏற்படுத்தப்பட்டன.

06. பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு, கனடா, ஓமான், நியூசிலாந்து, சுவீடன், தாய்லாந்து, லெபனான், தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, பிரெசில், சீனா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்தான இலங்கை விஜயத்திற்கும் மொசாம்பிக், பெல்ஜியம், நியூசிலாந்து மற்றும் தாய்லாந்திற்கான 04 வெளிவாரி விஜயங்களுக்கான வசதிகளையும் பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு ஒன்றிணைந்து செயற்பட்டது.

07. தற்காலிக பணியாற்றும் பணிப்பாளர் நாயகம் / பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு மற்றும் உதவி சட்ட மதியுரைஞர் ஆகியோர் சேவைகள், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் முதலீட்டு இயல் மேலான இலவச வர்த்தக ஒப்பந்தம் மற்றும் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையில் பங்குபற்றியிருந்தனர்.

08. இப்பிரிவானது, சர்வதேச பொருளாதார ஒழுங்கமைப்புகளுடன் முக்கியமாக வர்த்தகம் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் கட்டுபாடற்ற வர்த்தகம் சம்பந்தபட்டவற்றில் நெருங்கி செயலாற்றி வருகின்றது.

09. பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் தேசிய அறிவுசார் சொத்து அலுவலகம் என்பவற்றுடன் உலக அறிவுசார் சொத்து நிறுவன விடயங்கள் சம்பந்தமாக தொடர்பாடலை மேற்கொள்ளுகின்றது. அறிவுசார் சொத்து சம்பந்தமாக தேசிய அறிவுசார் சொத்து குறிக்கோளை முறைமைப்படுத்தும் பொருட்டு தேசிய வழிகாட்டி செயற்குழு அமைக்கப்பட்டது.

10. உலக அறிவுசார் சொத்து நிறுவனத்துடன் ஈடுபாடு கொள்ளும் வகையில் ஓர் 10 அம்சச் செயற்திட்டம் முறைமைப்படுத்தப்பட்டது. "அறிவுசார் சொத்து மற்றும் கலாச்சாரம்" என்பதனை தலையங்கமாக கொண்ட கரையோர தகவல் திட்டத்தில் பங்குபற்றுவதற்காகத் தெரிவாகிய வழிகாட்டி நாடுகளுள் இலங்கை முதற்தடவையாகத் தெரிவு செய்யப்பட்டது. 2017 ஏப்ரல் மாதத்தில், மரபுமுறை அறிவு மற்றும் மரபுமுறை உணர்ச்சி வெளிப்பாடு என்பன இத்திட்டத்தை அமுல்படுத்துவதால் ஏற்படும் விளைவு என்னும் செயலமர்வை இலங்கை நடாத்தியது. இப்பிரிவானது, உலக அறிவு சார் சொத்து நிறுவனம் (WIPO) மற்றும் தேசிய அறிவுசார் சொத்து அலுவலகத்துடன் (NIPO) செயற்பாடுகளை ஒன்றிணைந்து செயற்படுவதுடன், இலங்கையின் உத்தியோகத்தர்கள் வருடம் முழுவதிலுமாகப் பல WIPO நிகழ்வுகளில் (ஆக்கவுரிமை, வியாபாரச் சின்னம், பதிப்புரிமை, கைத்தொழில், உருவரைப்படங்கள் மற்றும் கட்டாயப்படுத்தல்), லிஸ்பன் முறைமை, மட்ரிட் ஒப்பந்தம் ஆகியன போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றியிருந்தனர்.

11. பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு, ஆசியாவிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் மற்றும் ஆசியா மற்றும் பசிபிக்கிற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைய விடயங்களைக் கையாள்வதற்கானதோர் மையமுனையாக அமைகின்றது. இலங்கை தற்போது ஐந்து (05) ஆசியா மற்றும் பசிபிக்கிற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைய ஆலோசனை குழுக்களில் பங்குபற்றுகின்றது. அவையாவன : ஆசிய பசுபிற்கான புள்ளி விவர நிறுவனம், நீடித்திருக்கத்தக்க விவசாய செயன்முறை மையம், நீடிக்கக்கூடிய விவசாய மூலம் வறுமைக்கான ஒழிப்பு மையம், தொழில்நுட்ப மாற்றதிற்கான ஆசியா மற்றும் பசுபிக் மையம், மற்றும் பேரிடர்கள் தகவல் மேலாண்மை மேம்பாட்டிற்கான ஆசியா மற்றும் பசுபிக் மையம் என்பன.

12. ஆசிய பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் (UNESCAP) 73 ஆவது அமர்வு பாங்கொக்கில் 2017 மே 15 - 19 திகதி வரை நடைபெற்றது. இதற்கான தேசிய குழு சக்தி மற்றும் வலு பிரதி அமைச்சர் மாண்புமிகு அஜித் பீ பெரேரா அவர்களின் தலைமையில் சென்றது. சமூக வலுவூட்டல் மற்றும் சமூகநலன் அமைச்சர் மாண்புமிகு எஸ்.பி. திசாநாயக்க அவர்களினால் சமூக அபிவிருத்தி என்னும் தொனிப்பொருளிலான பக்க நிகழ்ச்சியொன்று தலைமை தாங்கி

நிகழ்த்தப்பட்டது. (இது பாங்கொக்கிலா அல்லது கொழும்பிலா? இவர் 73வது பேராளர் குழுவில் ஓர் அங்கத்தினரா என்பதும் தெளிவாக்கமில்லை). இப்பிரிவானது 73வது அமர்விற்கான பேராளர் குழு சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் 73வது பணி அமர்விற்கான தேசிய கொள்கைகளைக் கருத்துருவாக்கி ஒழுங்கமைப்பு செய்வதற்கு மூலகர்த்தாவாக செயற்பட்டது. இதற்குமேலாக, ஆசிய பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் சம்பந்தப்பட்ட கூட்டங்கள், மாநாடுகள், செயலமர்வுகள் ஆகியனவற்றில் இலங்கையிலிருந்தான பிரதிநிதிகள் பங்கேற்பதற்கான ஒன்றிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

13. இப்பிரிவு, குழு 15 மற்றும் குழு 77 சம்பந்தப்பட்ட செயற்ப்பாடுகள் சகலவற்றையும் இணைத்து செயற்படுவதற்குச் செயற்படுகின்றது அத்துடன் ஜெனிவாவில் உள்ள மற்றும் நியூயோர்கில் உள்ள நிரந்தர தூதரகங்களுடன் இணைந்து குழு 15 இற்கான இலங்கையின் தலைமை பதவி சம்பந்தப்பட்ட விவகாரங்களில் ஒன்றிணைந்து செயற்பட்டது.

14. பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு வெளிநாட்டு தொழில்காண் அமைச்சுடன் இணைந்து (கொழும்பு செயல்முறைக்கான செயல் மையம்) "கொழும்பு செயல்முறை" செயற்பாடுகளை ஒன்றிணைத்தது.

15. பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை ஆகியவற்றிற்கான குறுகிய கால விசாக்களை அவற்றின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் பொருட்டாக ஒத்துழைப்பை நல்கியது. அத்துடன், பலதரப்பட்ட அரச முகவராண்மைகளினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செயலமர்வுகள், கருத்தரங்குகள் என்பனவற்றில் பங்குபற்றுவோருக்கான விசா வசதிகளை பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு ஏற்படுத்திக்கொடுத்தது.

## 2. 2017 ஜனவரி மாதத்திலிருந்து 2017 செப்டம்பர் மாதம் வரை வழங்கப்பட்ட விசாக்களின் புள்ளி விவரத்தொகுப்பு

| விசா வகை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| குறுகியகால இலவச விசா | | குறுகியகால வணிக விசா | | பன்மடங்கு நீண்டகால விசா | | வதிவு / நுழைவு விசா | |
| எவருக்கு | விசா எண்ணிக்கை | எவருக்கு | விசா எண்ணிக்கை | எவருக்கு | விசா எண்ணிக்கை | எவருக்கு | விசா எண்ணிக்கை |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 107 | NAIPO | 05 | EDB | 02 | ADB | 24 |
| உலக வங்கி | 375 | | | உக்கிறின் மாஸ் | 02 | உலக வங்கி | 49 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| JAICA | 69 | | | | | JAICA | 98 |
| மத்திய வங்கி | 05 | | | | | கொழும்புத் திட்டம் | 34 |
| வர்த்தக திணைக்களம் | 60 | | | | | சர்வதேச நாணயநிதியம் | 01 |
| பிற | 164 | | | | | | |

16. கொழும்புத் திட்டமூடாக இலங்கை மாணவர்கள், அறிதொழிலாளர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பொருட்டு பல குறுகியகால, நீண்டகால புலமைப்பரிசில்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இவற்றுள் சிங்கப்பூர் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம், மலேசியன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம், ஆசியா மற்றும் பசுபிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம், கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை மற்றும் இந்திய அரசாங்கம் என்பனவும் அடங்கும்.

17. கொழும்புத் திட்டம் சம்பந்தமான பொருண்மை பிரச்சனைகளும் இப்பிரிவினால் கையாளப்படுகின்றது. கொழும்புத் திட்டத்தின் 66 ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுவதற்கும் இப்பிரிவு வசதிகளை ஏற்றப்படுத்தியது. பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவு 289,291,292 மற்றும் கொழும்புத் திட்ட ஆலோசனைக் குழுவின் விசேட கூட்டங்களிலும் பங்குபற்றியது. இக்கூட்டங்களில் அதன் செயலகத்திற்கான கட்டிடமொன்றை நிர்மாணிப்பதன் பொருட்டு வாடகையற்ற அடிப்படையில் ஒரு காணித்துண்டை வழங்க இலங்கை அரசாங்கம் முன்வந்தது.

18. அமைச்சின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் பண்டாரநாயக்க சர்வதேச இராசதந்திர பயிற்சி நிறுவனத்தினது ஒத்துழைப்புடன், 2017 செப்டம்பர் 17 தொடக்கம் 29 ஆம் திகதிவரை ஆசியா மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 23 நாடுகளின் இளைய இராசதந்திரிகளுக்கு பயிற்சி திட்டமொன்று பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

19. சுவிற்சலாந்து டாவோசில் 2017 ஜனவரி 17 தொடக்கம் 20 ஆம் திகதிவரை நடைபெற்ற உலக பொருளாதார அவையின் (உ.பொ.அ) வருடாந்த கூட்டத்தில் பேராளர் குழுவொன்றுடன் இலங்கையின் கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பங்குபற்றியிருந்தார்கள். இப்பிரிவு உபொஅ. சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை ஒன்றிணைத்து செயற்பட்டதுடன் உபொஅ. வில் கௌரவ பிரதம அமைச்சரின் கூட்டங்களுக்கான விரிவுரைகளையும் தயாரித்தளித்தது.

20. 2017 செப்டம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற 72 வது ஐக்கியநாடுகளின் பொதுக்கூட்டத்தின் பின்னணியில் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்கள் 'ஆசிய ஒத்துழைப்பு சம்பாஷணை' இன் அமைச்சர்கள் மட்டக்கூட்டத்தில் பங்குபற்றியிருந்தார்.

21. பொருளாதார அரசியல் தந்திரத்தை மேம்படுத்துவதற்கு இடைநடு முகவர் பணி ஆளுமையை தாபித்தல். இந்த எந்திர நுட்பத்தின் பிரதான நோக்கமானது, சகல தேசிய பாத்திரத்தையுடையோருக்கும் ஒரு மேடையை ஒழுங்கமைப்பதாகும். அதில், சர்வதேச பொருளாதார பெரு முயற்சிகளின் நன்மைகளைப் பெருக்கும் வலுவான ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார அரசியல் தந்திரத்திற்குட்பட்ட சகல விடயங்களின் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, அபிவிருத்தி உதவி, பிராந்திய மற்றும் சர்வதேச குழுக்களில் மற்றும் பிற சர்வதேச பொருளாதார செயற்பாடுகளில் அங்கத்துவம் வகித்தல் உட்பட சகல விடயங்களையும் ஒன்றிணைத்து செயற்படுவதில் அவர்கள் பங்குதாரர்களாகச் செயற்பட வேண்டும் என்னும் நோக்கிலாகும்.

22. பொருளாதார இராசதந்திரதிற்கான அறிவு மேடை: அறிவு மேடையின் பிரதான நோக்கமானது, வர்த்தகம், முதலீடு மற்றும் இலங்கை தொடர்பான பிற பொருளாதார செயற்பாடுகள் சம்பந்தமானவற்றை மேம்படுத்துவதற்கு தூதரகங்களினால் கோரப்படும் அவசிய தகவல்களைக் கொடுத்துதவுவதாகும்.

23. இதன் பொருட்டு, பொருளாதார அறிவு மேடைக்கான ஆதார வளங்களுக்கான உள்ளடக்கத்தைத் தயாரிப்பதில் ஈடுபாடு கொண்டிருப்பதான “வேறிற்ரே” ஆய்வானது, உடன்படிக்கையின் பிரகாரம் பின்வரும் பணிகளை முடிவுறுத்தியுள்ளது.

**“பவர் பொயின்ற்” (Power Point) விளக்கப்படுதல் அதற்கு மேலான குரலுடன்**

I. இலங்கையில் முதலீடு செய்தல்
II. இலங்கை தெற்காசியாவில் ஓர் எழுந்துவரும் பொருளாதாரம்
III. இலங்கையுடனான வர்த்தகம்.

**இவற்றின் மேலான சுருக்க குறிப்புக்கள்:**

I. இலங்கை கடல் தொடர்பு மற்றும் சரக்கியல் மையம்
II. இலங்கையின் வர்த்தக உடன்படிக்கைகள்
III. பிரதான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாத்திய சூழல்கள் அல்லது இலங்கையின் வெளிநாட்டு முதலீடுகள்.
IV. ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான (GSP+) பொ.மு.ஊ சலுகை

**பின்வருவனவற்றிலான கேள்வி மற்றும் பதில் குறிப்புக்கள்**

I. இலங்கையில் வர்த்தகமைய ஒழுங்கு விதிகள்
II. செலவாணிக்கட்டுப்பாடு ஒழுங்கு விதிகள்
III. இலங்கையில் முதலீட்டு ஒழுங்கு விதிகள்
IV. இலங்கையில் வர்த்தக வரிகள் மற்றும் வர்த்தக ஒழுங்கு விதிகள்
V. பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகியமை மற்றும் அதன் இலங்கைக்கான தாக்கம்.

24. மேற்கூறப்பட்ட ஆவணங்கள் இலங்கை தூதரகங்களுக்கு ஒரு போடுபெட்டி (Drop box) ஆக்கமுறையில் கிடைக்கக்கூடியதாக்கப்பட்டது.

25. இதன் பின்னர் வெறிற்ரே ஆய்வானது, விளங்கப்படுதல், சுருக்கக்குறிப்புக்கள் மற்றும் கேள்வி மற்றும் பதில் குறிப்புக்களை இரு தடவைகள் நவீனமாக்கியுள்ளது. தூதரகங்கள், இந்த ஆவணங்களில் தரப்பட்டுள்ள விவரங்களை நன்கறிந்து பழக்கப்படுத்திக் கொள்ளுமாறும் அவற்றைப் பயன் நிறைவாகப் பாவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவற்றை விளங்கிக் கொள்வதில் தகவலைக் கையாளும் விதத்திலும் 'வெறிற்ரே' ஆய்வும் தொடக்ககட்டத்தில் தூதரகங்களுக்கு உதவிகளை வழங்கும். ‘பவர் பெயின்ற்’ விளக்கப்படுத்தல் மற்றும் குறிப்புக்களுக்கான இறுதி நவீனப்படுத்தல் 2017 நவம்பர் மாதத்தில் 'வெறிற்ரே' ஆய்வினால், உடன்படிக்கையின் பிரகாரம் முடிவுறுத்தப்பட வேண்டும். (இறுதி விளங்கப்படுதல் செயல்முறைகள் செயற்பாட்டில் உள்ளன.

**அ. பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சி**

**பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சியின் 20 வது நூற்றாண்டு விழாவிற்கான செயற்பாடுகளை மேற்கொண்டமை**

26. 2017 யூன் 06 ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில், அதி மேதகு சனாதிபதி, கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சி செயலாளர் நாயகம் அவர்களின் செய்தியுடன் அரைப்பக்க பிற்சேர்க்கை பிரசுரிக்கப்பட்டது.

27. 2017 யூலை மாதம் 22 தொடக்கம் 26 வரை நடைபெற்ற திரைப்பட விழாவின் போது சிங்கள திரைப்படமான ‘மதுர சரிக’ திரையிடப்பட்டது.

**15 ஆவது பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சி அமைச்சர்கள் கூட்டம் மற்றும் 18 ஆவது சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் கூட்டம்.**

28. நேபாளம், கத்மண்டுவில் 2017 ஒகஸ்ட் 11 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சர்கள் மட்டத்திலான பேராளர் குழுவிற்கு மாண்புமிகு வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தலைமை தாங்கினார். கூட்ட முடிவில் பேராளர் குழுவின் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த அறிக்கையில் பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சியை வலுவான, ஆற்றல் வாய்ந்த மற்றும் பலன் விளைவுள்ளதாக்கப்பட வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டது.

29. கிழக்காசியாவிற்கான மற்றும் மத்திய கிழக்கிற்கான மேலதிக செயலாளர்களும் கிழக்காசியாவிற்கான பணிப்பாளரும் பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சி, சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

30. பொ.வி.பி. ஆனது தொடர்புடைத்தான அமைச்சுக்களுடன் ஒன்றிணைந்து ப.பொ.ஒ.வ.வி.மு. வின் பின்வரும் நிகழ்வுகளில் 2017 ஜனவரி முதல் செப்டெம்பர் வரை இலங்கையின் பங்குபற்றுதலுக்கு ஒத்தாசை புரிந்தது.

I. பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சி தேசிய பாதுகாப்பு தலைவர்களின் 2017 மார்ச் 21 இல் புது தில்லியில் நடைபெற்ற 1வது வருடாந்த பொதுக்கூட்டம்.
II. 2017 ஏப்ரல் 22 - 23 திகதிகளில் வங்களாதேசம் டக்காவில் நடைபெற்ற BNPTT வின் கொள்கை அறிவாளர் வலையமைப்பு கூட்டத்தொடர்.
III. 2017 மார்ச் 22 - 23 வரை மியன்மார் யங்கூனில் நடைபெற்ற BIMSTEC உப குழுவின் சட்டம் மற்றும் சட்டத்தை வலியுறுத்தல் என்பதான ஏழாவது கூட்டத்தொடர்.
IV. 2017 ஏப்ரல் 26 - 27 ஆம் திகதிகளில் மியன்மார் யங்கூனில் நடைபெற்ற BIMSTEC உப குழுவின் நிதியீட்டுப் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடல் என்பதான ஒன்பதாவது கூட்டத்தொடர்.
V. 2017 யூலை 07 ஆம் திகதி புது தில்லியில் நடைபெற்ற BIMSTEC இன் சுற்றுலா செயற்பாட்டாளர்களின் முதலாவது கூட்டம்.
VI. முதலாவது பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சியின் வருடாந்த அனர்த்த முகாமைத்துவத்திற்கான முதலாவது முன்னேற்பாடான கூட்டம்.
VII. இந்தியா, புதுதில்லியில் 2017 ஒகஸ்ட் 08 - 09 திகதிகளில் நடைபெற்ற தனித்திறன் பயிற்சி.
VIII. 2017 செப்டம்பர் 22 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது தடம் 1.5 BIMSTEC பாதுகாப்பு சம்பாஷணை விவாதமன்றம்.
IX. 2017 ஒக்டோபர் 10 – 13 வரை புதுதில்லியில் ஏற்பாடான முதலாவது வருடாந்த பல்துறை பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முயற்சி அனர்த்த முகாமைத்துவ செயற்பாடு.
X. 2017 ஒக்டோபர் 13 ஆம் திகதி புது தில்லியில் நடைபெற்ற முதலாவது BIMSTEC அனர்த்த முகாமைத்துவ பயிற்சி.
XI. 2017 ஒக்டோபர் 10 -13 ஆந் திகதி வரை தாய்லாந்தின் பாங்கொக்கில் நடைபெற்ற BIMSTEC போக்குவரத்து தொடர்பு வேலைக்குழுவின் இரண்டாவது சந்திப்பு.
XII. 2017 நவம்பர் 22-23 ஆந் திகதி வரை பங்காளாதேஷ் டாக்கா நகரில் நடைபெற்ற நீலப் பொருளாதாரம் தொடர்பான சர்வதேச செயலமர்வு.
XIII. 2017 நவம்பர் 27 - 28 ஆந் திகதி வரை இந்தியாவின் புதுடெல்லியில் நடைபெற்ற BIMSTEC உறுப்பு நாடுகள் மத்தியில் கரையோர கடல்போக்குவரத்து உடன்படிக்கையின் வரைவு மீதான கலந்துரையாடல் மற்றும் இறுதிப்படுத்தல் குறித்த முதலாவது வேலைக்குழு.
XIV. 2017 டிசம்பர் 12-16 ஆந் திகதி தாய்லாந்து ச்சங்ராய் நகரில் நடைபெற்ற கமத்தொழில் ஒத்துழைப்பு தொடர்பான BIMSTEC நிபுணர் குழுவின் ஆறாவது சந்திப்பு.

**இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள BIMSTEC சந்திப்புகள்**

I. 2017 நவம்பர் 21 - 22 ஆந் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற BIMSTEC தொழில்நுட்ப பரிமாற்றல் வசதிகளின் ஸ்தாபிப்பு தொடர்பான BIMSTEC நிபுணர் குழுவின் நான்காவது சந்திப்பு.

II. 2017 டிசம்பர் 19 - 20 ஆந் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற வறுமை ஒழிப்பு தொடர்பான BIMSTEC சிரேட்ட அதிகாரிகளின் மூன்றாவது சந்திப்பு மற்றும் வறுமையொழிப்பு மீதான BIMSTEC அமைச்சரவையின் மூன்றாவது சந்திப்பு.

**இலங்கையினால் மேற்கொள்வதற்கு ஆர்வமுள்ள பின்வரும் நடவடிக்கைககள் BIMSTEC செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளன.**

I. BIMSTEC நிரல் இடைத்தொடர்பு ஸ்தாபிப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்த வரைவினை இறுதிப்படுத்தல். BIMSTEC நிரல் இடைத்தொடர்பு ஸ்தாபிப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கைச்சாத்திடுவதற்கான ஆர்வத்தினை இலங்கை அறிவித்துள்ளது.

II. BIMSTEC வலையமைப்பு உலா இயக்குநர்கள் - 2018 இல் BIMSTEC வலையமைப்பு உலா இயக்குநர்களின் இரண்டாவது சந்திப்பினை ஒழுங்கு செய்யவுள்ளது.

III. BIMSTEC கூட்டு பணிக்குழுவின் எட்டாவது சந்திப்பு - 2018 இல் BIMSTEC கூட்டு பணிக்குழுவின் எட்டாவது சந்திப்பினை இலங்கை ஒழுங்கு செய்யவுள்ளது.

**ஆ. இந்து சமுத்திர கரையோரச் சங்கம்**

31. சங்கத்தின் 20 வது ஆண்டு நினைவு விழா கொண்டாட்டம் 2017 மார்ச் 5 - 7 ஆம் திகதி வரை இந்தோனேசியா, ஜகார்த்தாவில் நடைபெற்றபோது முதற்தடவையாக இந்து சமுத்திர கரையோர சங்கத்தின் தலைவர்கள் பங்குபற்றியிருந்தனர். இந் நிகழ்வின் போது அதிமேதகு சனாதிபதி அவர்கள், மாண்புமிகு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

32. இந்து சமுத்திர கரையோரச் சங்கத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் செயற்குழு 2017 ஒகஸ்ட் 02 - 03 ஆம் திகதிகளில் இந்தோனேசியா, பாலியில் நடைபெற்ற ஆண்டுக்கு இருமுறைக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகப்பிரிவில் இருந்து இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள் பங்குபற்றியிருந்தனர்.

33. 2017 மே 08-10 ஆம் திகதிகள் வரை இந்தோனேசியா, ஜகார்த்தாவில் அமைச்சர்கள் மட்டத்திலான இரண்டாவது IORA நீல பொருளாதார கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் இராஜாங்க அமைச்சர் மற்றும் கடற்தொழில் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளும் இதில் பங்குபற்றினர்.

34. இந்து சமுத்திர கரையோரச் சங்கத்தின் அமைச்சர்கள் ஆலோசனைக் குழுவின் 17வது கூட்டம் தென் ஆபிரிக்கா டேர்பனில் 2017 ஒக்டோபர் 14 - 18 ஆம் திகதிகளில்

நடைபெற்றது. மாண்புமிகு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் அமைச்சிலிருந்தான சிரேஷ்ட அதிகாரிகளுகளும் இதில் பங்குபற்றியிருந்தனர்.

****

# ஐரோப்பிய ஒன்றியம், பல்தரப்பு உடன்படிக்கை மற்றும் பொதுநலவாயப் பிரிவு

**ஐரோப்பிய ஒன்றியம், பல்தரப்பு உடன்படிக்கை மற்றும் பொதுநலவாயப் பிரிவு**

1. **ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் உறவுகள்**

ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் உறவுகள் என்ற அடிப்படையில் கடந்த 12 மாதங்களின் போது இப்பிரிவின் முக்கிய சாதனைகள்.'. செயற்பாடுகளை பின்வருவன உள்ளடக்குகின்றன.

அ. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி+ (முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டம்) வர்த்தக வசதியினை மீளப் பெற்றுக்கொள்ளல்.

இலங்கைக்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான இருபக்க ஈடுபாடுகள் 2017 இல் தொடர்ந்தும் மேம்பட்டது. பொருளாதார நலன்கள் பற்றி பிரதான இரண்டு துறைகளில் ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்துடன் இணைந்து தொடர்ந்தும் பணியாற்றியது அதாவது:

i. இலங்கையிலிருந்தான மீன் ஏற்றுமதிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையினை தளர்த்தியதன் பின்னர் பின்தொடர் நடவடிக்கை.
ii. இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி+ வசதியினை வழங்குதல்.

இலங்கையில் மீன் ஏற்றுமதி மீதான தடையினைத் தளர்த்துவதற்கான ஐரோப்பிய ஆணைக்குழுவின் தீர்மானமானது இலங்கைக்கான அரசியல் மற்றும் பொருளாதாரப் பெறுமதி அபிவிருத்தியில் முக்கியத்தும் வாய்ந்தவொன்றாக இருந்தது.

இருபக்க உறவுகளுக்கு மேலும் உந்துசக்தியளித்து 2017 மே 19 ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி சலுகையினை மீள வழங்குவதற்கு தீர்மானித்தது. இதன்மூலம் ஐரோப்பிய சந்தைகளுக்கு வரியின்றி இலங்கை பொருட்களை ஏற்றுமதி செய்யமுடியும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது 2010இல் இலங்கை இழந்திருந்த வர்த்தக வசதி தொடர்பில் மிக முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்ற ஜிஎஸ்பி+ உடன் தொடர்புடைய சர்வதேச மனித உரிமை சமவாயங்களின் அமுலாக்கம் தொடர்புடைய பிரச்சனைகளைத் தீர்க்கும் செயன்முறைகளை முன்னெடுக்கின்றது. ஜிஎஸ்பி+ வசதி வழங்கப்பட்டதுடன் 2017 மே 19 முதல் செயற்படத்தக்கவாறு கணிசமமாக குறைவான தீர்வைகளின் கீழ் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு இலங்கை உற்பத்திகளுக்கு அணுகுவழி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஜிஎஸ்பி வசதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, இலங்கையின் ஏற்றுமதிகள் பன்முகப்படுத்தப்படும் தொழிலின்மை வீதம் குறைவடையும், சமூகத்தில் அனைத்து வகுப்பினருக்கும் பொருளாதார நலன்கள் கிடைக்கப்பெறும் மற்றும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர் துறை மேலும் விருத்தி பெறும் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அ. ஜிஎஸ்பி+ வசதி தொடர்பான உறுதிப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது குறித்த பின்தொடர்தலுக்கான கண்காணிப்பு பொறிமுறை 2017 பிரதம அமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த அமைச்சு மூலம் கண்காணிப்பு கட்டமைப்பு நிறுவலின் செயல்முறைக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதுடன், ஜிஎஸ்பி+ செயற்பாட்டு புள்ளி நடைமுறைப்படுத்தலின் கண்காணிப்பு செயல்பாட்டின் (அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு) ஜிஎஸ்பி+ மீதான தேசிய மையப் புள்ளியுடன் ஒருங்கிணைப்பையும், ஆதரவையும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

ஆ. 2017 ஜனவரியில் யூரோ 50 மில்லியன் சலுகைக் கடனுக்காக இலங்கை அரசாங்கத்துடனான ஒப்பந்தமொன்றினை ஐரோப்பிய முதலீட்டு வங்கி பூரணப்படுத்தியது. பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டத்தின் மேம்படுத்தல் மற்றும் விரிவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கு இக்கடன் வசதி உத்தேசிக்கப்பட்டுள்ளது. உயர்மட்ட விஜயங்களும் கலந்துரையாடல்களும் கட்டாயமானதாகும்.

இ. தமது அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித்திட்டத்தில் புதிய தூண் ஒன்றாக ‟சனநாயம் மற்றும் நல்லிணக்கம்" என்பதனை ஐரோப்பிய ஒன்றியம் உள்ளடக்கியுள்ளது. அரசாங்கத்தின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கும் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவின் முக்கிய அடையாளமொன்றாக இது விளங்குகின்றது. பல்லாண்டு முக்கியத்துவ நிகழ்ச்சித்திட்டம் 2016 – 2020 கீழ் ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட யூரோ 210 மில்லியன் தொகையானது 2007 – 2013 ஆக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் (அதாவது யூரோ 110 மில்லியன்) இருமடங்காகும்.

ஈ. அண்மைய நிலச்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தங்களுக்காக ஐரோப்பிய ஒன்றியம் 300,000 (கிட்டத்தட்ட ரூ. 55 மில்லியன்) நிதி உதவியினை வழங்கியது.

உ. பிராந்திய மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் இலங்கை அதன் வர்த்தக போட்டித்தன்மையினை அதிகரிப்பதற்கு உதவுகின்ற யூரோ 8 மில்லியன் (ரூ.1.3 பில்லியன்) கருத்திட்டத்தினை ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் ஆரம்பித்தது. இக்கருத்திட்டம் 4 வருட காலப்பகுதியொன்றிற்கு இலங்கை வணிகத் திணைக்களத்தின் கூட்டிணைப்புடன் சர்வதேச வர்த்தக நிலையம் மற்றும் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பினால் அமுலாக்கப்படும். ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு அமுலாக்கல் பங்காளியாக இருக்கின்ற போதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தினாலே நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஊ. பின்வரும் விஜயங்களுக்கு இப்பிரிவு வசதியளித்து வேண்டப்படும் உள்ளீடுகளை வழங்கியது:

i. கௌரவ பிரதம அமைச்சர் பிரஸ்ஸல்ஸிற்கு 2016 ஒக்டோபரில் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டார். வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் விஸ்தரித்தல் அத்துடன் ஜிஎஸ்பி+ வசதியினை மீளப்பெற்றுக் கொள்வதற்கான குறிப்பான சில தேவைப்பாடுகளின் மீதான முன்னேற்றத்தினைத் துரிதப்படுத்தல் போன்றவற்றில் கவனம்செலுத்தி ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அலுவலகர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

ii. ஐரோப்பிய மன்றத்தின் ஆசிய, ஓசியானியாவின் அரசியல் ஒருங்கிணைப்பாளர்கள் குழு 2017 யூன் 5 – 9 வரை இலங்கைக்கு விஜயம் செய்தது. ஐரோப்பிய மன்றத்தின் ஆசிய, ஓசியானியாவின் அரசியல் ஒருங்கிணைப்பாளர்கள் குழுவின் உறுப்பினர்கள் ஐரோப்பிய ஒன்றியம் விசேட உறவுகளைக் கொண்டுள்ள நாடுகளுக்கு காலமுறையாக விஜயங்களை மேற்கொள்கின்றனர். ஜிஎஸ்பி+ பார்வையில் இவ்விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்குழு சிரேஷ்ட அரசாங்க அலுவலர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. ஐரோப்பிய மன்றத்திற்கு சாதகமான அறிக்கையொன்றினை இக்குழு சமர்ப்பித்துள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது.

iii. 2017 சனவரியில் கௌரவ நிதியமைச்சர் மற்றும் கௌரவ அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஆகியோரின் பிரஸ்ஸல்ஸிற்கான விஜயத்தின் போது விடுக்கப்பட்ட அழைப்பினைத் தொடர்ந்து ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் துணைத் தலைவர் கௌரவ அன்ரூ மக்டுவெல் அவர்களின் தலைமையிலான உயர்மட்ட ஐரோப்பிய முதலீட்டு வங்கி பேராளர் குழுவொன்று 2017 மார்ச்சில் இலங்கைக்கு விஜயம் செய்தது. இக்குழு கௌரவ பிரதமரைச் சந்தித்ததுடன் அப்போதைய நிதியமைச்சருடன் பின்தொடர் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் விஜயமானது ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை பங்குடமையினை வலுப்படுத்துவதற்கு, குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய - இலங்கை முதலீட்டு கலந்துரையாடலுக்கு பங்களிப்புச் செய்கின்ற காலத்தின் தேவையொன்றாக இருந்தது.

iv. ஜி.எஸ்.பி இற்கான 27 ஆவது சர்வதேச சமவாயங்களின் இலங்கையின் நடைமுறைப்படுத்தலின் நிலையினை மீளாய்வதற்கு 2017 செப்டெம்பரில் ஐரோப்பிய ஆணைக்குழுவிலிருந்து கண்காணிப்புத் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது. ஜிஎஸ்பீஇற்கான தேசிய ரீதியான முக்கிய அங்கமாக விளங்குகின்ற அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கு இவ்விஜயத்தினை வசதிப்படுத்துவதிலும் கண்காணிப்புத் தூதுக்குழுவுடன் அக்கறைதாரர்கள் ஆலோசனைகளில் ஈடுபடுவதிலும் இவ்வமைச்சு ஆதரவளித்தது.

v. ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தென்னாசியாவிற்கான பாராளுமன்றப் பேராளர் குழுவொன்று அவர்களது அலுவலகப் பணியின் பாகமொன்றாக இருபக்க உறவுகளை மீளாய்வதற்கும் ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி+ கடப்பாடுகள் மீதான ஒத்துழைப்பு மற்றும் முன்னேற்ற அபிவிருத்தியினை மீளாய்வதற்கு 2017 ஒக்டோபர் 31 அன்று விஜயம் செய்தது.

எ. ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை உறவுகள் தொடர்பில் பின்வரும் முக்கிய கூட்டங்களை இப்பிரிவு ஏற்பாடு செய்து, ஒருங்கிணைத்து பங்கேற்றது.

i. மனித உரிமைகள், ஆளுகை, சட்ட ஆட்சி மீதான ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை செயற்குழுவின் இரண்டாவது கூட்டத்தினை 2017 மார்ச் 13 - 14 வரை இலங்கை அரசாங்கம் நடாத்தியது. கட்டாயப்படுத்தப்பட்ட காணாமல்போதலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சமவாயத்தற்கு ஏற்புறுதியளித்தல் - அங்கவீனமுற்றோரின் உரிமைகள் மீதான சமவாயத்திற்கு ஏற்புறுதியளித்தல் - தகவல் சட்ட உரிமையினை இயற்றுதல் - காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் மீதான சட்டத்தினை நிறைவேற்றுதல் - நல்லிணக்கத்தினை முன்னேற்றுவதற்காக எடுக்கப்பட்ட வேறு அடையாள நடவடிக்கைகள் உள்ளடங்கலாக பல்வேறு துறைகளில் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தினை ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரித்தது.

ii. இலங்கையும் ஐரோப்பிய ஒன்றியமும் 2017 தொடக்கம் முதலீட்டுக் கலந்துரையாடலொன்றினை ஆரம்பித்துள்ளன. ஐரோப்பிய ஒன்றிய மேலாளர் குழுவிற்கும் வாய்ப்பான முதலீட்டாளர்களுக்குமிடையில் பல்வேறு எண்ணிக்கையிலான ஆலோசனைகள் இடம்பெற்ற அதேவேளை அரசாங்க அலுவலர்கள், முதலீட்டுச் சபை என்பனவற்றுடன் முதலீட்டுடன் தொடர்புபட்ட கரிசணைகள், சட்டங்கள், ஊக்குவிப்புக்கள் போன்றனவற்றின் தெளிவுபடுத்தல்கள் மீது கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

iii. வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் ஒத்துழைப்புக்கள் மீதான ஐரோப்பிய ஒன்றிய செயற்பாட்டுக் குழு 2017 யூனில் பிரஸலில் இடம்பெற்றது.

iv. 2018 ஜனவரி 18 ஆந் திகதி கொழும்பில் ஐரோப்பிய ஒன்றிய- இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 21 ஆவது சந்திப்பினை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் தயார்செய்யப்பட்டன.

## 2. பல்பக்க உடன்படிக்கைகள்

அ. 2017 – 2021 இற்கான மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தலுக்கான இலங்கையின் தேசிய நடவடிக்கைத் திட்டத்தினை உருவாக்கி நிறைவுசெய்தல்.

அமைச்சரவை, அரசாங்க அமைச்சுக்கள்.'. முகவராண்மைகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புக்கள், பொதுமக்கள் மற்றும்

கொழும்பிலுள்ள முக்கிய சர்வதேச அமைப்புக்களின் உறுப்பினர்களை ஈடுபடுத்தி அனைத்தையும் உள்ளடக்கிய, ஆழமான மற்றும் நீடித்து நிலைக்கக்கூடிய தேசிய செயன்முறையொன்றினூடாக 2017 - 2021 இற்கான மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தலுக்கான இலங்கையின் தேசிய நடவடிக்கைத் திட்டத்தினை உருவாக்குவதற்கான செயன்முறையினை ஐக்கிய நாடுகள் பிரிவின் ஆதரவுடன் இப்பிரிவு முன்னெடுத்தது.

தன்னார்வமிக்க, உள்ளடக்குகின்ற மற்றும் பங்கேற்கின்ற செயன்முறையொன்றான இது 2017 - 2021 இற்கான மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தலுக்கான இலங்கையின் தேசிய நடவடிக்கைத் திட்டத்தினை உருவாக்கத்திற்கு பணிப்புரை விடுப்பதற்காக அமைச்சுக்களுக்கிடையிலான குழுவொன்றினை அமைச்சரவை நியமனத்துடன் 2016 மேயில் ஆரம்பிக்கப்பட்டது. கௌரவ சட்டமா அதிபரின் தலைமையில் இரண்டு ஒருங்கிணைப்புக் குழுக்கள் - அதாவது, அரசாங்க பிரதிநிதிகளுக்கான ஒன்று மற்றும் சிவில் சமூகத்திற்காக ஒன்று கொண்ட செயற்குழுவின் ஈடுபாட்டுடனும் உள்ளீடுகளை வழங்குவதில் பணியாற்றுகின்ற அமைச்சுக்கள் மற்றும் முகவராண்மைகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளிலிருந்து அலுவலர்கள் மற்றும் நிபுணர்களை உள்ளடக்குகின்ற 10 வரைபுக் குழுக்களினையும் ஈடுபடுத்தி பல்தரப்பு மட்ட ஆலோசனை பொறிமுறையொன்றினூடாக இது நடாத்தப்பட்டது.

நடவடிக்கைத் திட்டத்தின் மீதான பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேசிய செய்திப் பத்திரிகைகளிலும் வெளிநாட்டு அமைச்சின் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் ஊடாக பொதுமக்களிடமிருந்தும் சிவில் சமூகத்திடமிருந்தும் கருத்துக்களும் அவதானிப்புக்களும் வரவழைக்கப்பட்டன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற உள்ளீடுகளுக்கு 10 வரைபுக்குழுக்கள் அவர்களது பரிந்துரைகளை வரைகின்ற போது உரியகவனம் வழங்கப்பட்டது. இச்செயன்முறை ஊடாக உருவாக்கப்பட்ட வரைபு செயற்குழுவின் மூலம் இசைவு வழங்கியதன் பின்னர் 2016 நவம்பர் 23 அன்று கண்டியில் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுமக்கள் கலந்துரையாடல்களுக்காக திறக்கப்பட்டது. இலங்கையிலுள்ள வேறு அக்கறைதாரர்களுடன் குறிப்பாக மனித உரிமை ஆணைக்குழுவுடனான ஆலோசனைகளை இது உடனடியாக பின்பற்றியிருந்தது. மனித உரிமை ஏற்புத்தன்மையினை உறுதி செய்வதற்காக வரைபுகள் சிறப்பு வாய்ந்த புத்திஜீவிகள் மற்றும் செயல்திறனாளர்கள் குழுக்கள் மூலமும் முறைமை சாராது கூர்ந்தாயப்பட்டது.

செயன்முறையில் அதிகூடிய பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வரைபு நடவடிக்கைத் திட்டத்தில் அனைத்து கருத்துக்களும் தொலைநோக்கும் பிரதிபலிக்கின்றன என்பதனை உறுதிசெய்தல் ஆகிய குறிக்கோளுடன் கொழும்பிலும், கொழும்பிற்கு வெளியிலும் ஒட்டுமொத்தமாக 40 கூட்டங்களும் ஆலோசனைகளும் ஏற்பாடுசெய்யப்பட்டன.

அவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டமானது 2017 ஒக்டோபர் 03 அன்று அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றதன் மீது மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தலுக்கான இலங்கையின் தேசிய நடவடிக்கைத் திட்டத்தினை மூன்று மொழிகளிலும் மொழிபெயர்ப்பதற்கு அமைச்சு வசதி வழங்கியதுடன் அதனை வடிவமைத்து அச்சிடுவதற்கும் ஏற்பாடு செய்தது. மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தலுக்கான இலங்கையின் தேசிய நடவடிக்கைத் திட்டமானது 2017 நவம்பர் 01 அன்று பாராளுமன்றத்தில் கௌரவ பிரதம அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆ. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உடன்படிக்கை நிறுவனங்களுடன் ஈடுபடுதல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உடன்படிக்கை நிறுவனங்களின் கீழ் இலங்கை அறிக்கையிடுகின்ற கடப்பாடுகள் தொடர்பில் பின்வரும் பணிகளை இப்பிரிவு மேற்கொண்டது.

i. நிகழ்ச்சி நிரல் சமர்ப்பித்தல், பிரச்சினைகளுக்கான தீர்வுக்ள், பின்வரும் ஒப்பந்த நிறுவனங்கள் மூலம் எழுப்பப்படும் கேள்விகளுக்கான பின்தொடர் நடவடிக்கைகள்

- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு
- பொருளாதாரம், சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் குழு
- பெண்களுக்கெதிரான சகல வடிவத்திலுமான பாரபட்சத்தினை இல்லாதொழிதல் மீதான ஐக்கிய நாடுகள் குழு
- சிறுவர் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் குழு
- சித்திரவதை மற்றும் ஏனைய துன்புறுத்தல் மற்றும் மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடாத்துதலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் குழு
- சிறுவர் உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் குழு

இ. பின்வரும் சர்வதேச மனித உரிமை சாசனங்களின் கீழ் இலங்கையின் காலமுறையான அறிக்கைகளை மீளாய்வதில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தல் / இலங்கையின் பிரதிநிதித்துவத்தினை வசதிப்படுத்தல்

i. பொருளாதாரம் சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்த உடன்படிக்கை

ii. பெண்களுக்கெதிரான சகல வடிவத்திலுமான பாரபட்சத்தினை இல்லாதொழித்தல் மீதான சமவாயம்

iii. சித்திரவதை மற்றும் ஏனைய துன்புறுத்தல் மற்றும் மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடாத்துதலுக்கெதிரான சமவாயம்

ஈ. ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் மீதான பின்தொடர் நடவடிக்கை

ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் அத்தியாயம் (ii) மற்றும் (iv) கீழான சுயகணிப்பீட்டு சரிபார்த்தலின் நிறைவுசெய்தலுடனான உதவி உள்ளடங்களாக ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாய – தொடர்புபட்ட மாநாடுகளின் பிரிவு இலங்கையின் பிரதிநிதித்துவத்திற்கு ஏற்பாடு செய்தது. 2017 ஜூனில் வியன்னாவில் நடைபெற்ற ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் மற்றும் 2017 ஓகஸ்டில் நடைபெற்ற தடுத்தல் மற்றும் சொத்து மீட்பு மீதான செயற்குழுவின் கீழ் நடைமுறைப்படுத்தல் மீளாய்வுக் குழுவில் செயல்திறன் மிக்க பங்களிப்பினையும் உறுதிசெய்தது. ஊழலுக்கெதிரான வரைபு தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் பரந்த உள்ளடக்கம் பற்றி அக்கறைதாரர்களுடன் பிரிவு கலந்துரையாடல்களையும் ஆரம்பித்தது.

**3. பொதுநலவாயம்**

அ. இலண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஊடாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்டம் 2018 இன் பிரதம நிறைவேற்று அதிகாரியுடனும் ஐக்கிய இராச்சிய பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்ட அலுவலகத்தின் அலுவலர்களுடனும் லண்டனில் எதிர்வருகின்ற உச்சிமாநாட்டுடன் தொடர்புடைய ஆயத்த ஏற்பாடுகள் பற்றி ஒருங்கிணைத்துச் செயற்படுவதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

*(2018 ஏப்பிரலில் லண்டனில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்டம் 2018 இல் அதிமேதகு சனாதிபதி தனது பங்களிப்பினை உறுதிசெய்துள்ளார்.)*

ஆ. அரசியலமைப்பு வரைவது தொடர்பில் உதவியினை வழங்குவதற்காக பாராளுமன்றத்தின் அரசியலமைப்புச் சபையினால் அழைப்பு விடுக்கப்பட்ட (2017 யூன்) தென்னாபிரிக்காவின் முன்னாள் பிரதிப் பிரதம நீதிபதி நிதியரசர் டிக்காங் மொசேனெகே உள்ளடங்கலாக, தொடர்புடைய காலப்பகுதியின் போது அனைத்து பொதுநலவாய செயலகத்தின் இலங்கைக்கான விஜயங்களையும் அமைச்சு லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்தது.

இ. பொதுநலவாய வர்த்தக அமைச்சர்கள் கூட்டம் உள்ளடங்கலாக பொதுநலவாயக் கூட்டங்களில் பங்கேற்பதற்கு அமைச்சு மட்ட விஜயங்களை அமைச்சு வசதிப்படுத்தியது. சனவரியில் லண்டனுக்கான அவரது விஜயத்தின் போது முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் மற்றும் பொதுநலவாய செயலாளர்

நாயகம் ஆகியோருக்கிடையில் இருதரப்பு கலந்துரையாடல் ஒன்றினை உயர்ஸ்தானிகம் ஏற்பாடு செய்தது.

ஈ. பொதுநலவாய இளைஞர் விளையாட்டுக்கள், மகளிர், சட்டம், சுகாதாரம் போன்ற ஏனைய அமைச்சு மட்டக் கூட்டங்கள் இவ்வமைச்சினால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் இவ்வமைச்சு மட்டக் கூட்டங்களிலிருந்து வெளிவந்த ஆவணங்கள் இலங்கை உள்ளடங்கலாக பொதுநலவாய நாடுகளுக்கு மத்தியில் ஒத்துழைப்பினையும் உதவியினையும் ஊக்குவிப்பதில் ஆதரவளித்தன.

உ. பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்டம் 2018 நிகழ்வுக்கு பொதுநலவாயத்திற்கான தொனிப்பொருள் மற்றும் ஏனைய முன்னுரிமைகள் கலந்துரையாடப்பட்ட நியுயோக்கில் 2017 செப்டெம்பரில் பொதுநலவாய வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டத்தில் இலங்கை அரசாங்கம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

ஊ. பொதுநலவாயம் ஊடாக இலங்கை முன்னேறுகின்ற வேறு நடவடிக்கைகள், பொதுநலவாய அரசுகளுக்குள்ளான வர்த்தக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு, இணையத்தளப் பாதுகாப்பு சட்டத்திற்குப் புறம்பான வனவிலங்கு வர்த்தகத்தினைத் தடுத்தல், தீவிரவாத வன்முறையினை அடக்குதல் மற்றும் நகரமயமாக்கம் என்பனவற்றை அதிகரிப்பதனை உள்ளடக்குகின்றது.

எ. மல்புறோ இல்லத்திலும் லண்டனிலுள்ள வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்திலும் அனைத்து பொதுநலவாய ஈடுபாடுகளிலும் செற்பாட்டுடன் பங்கேற்பதற்கு பொதுநலவாய செயலகம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு என்பவற்றிற்கிடையில் பிரதான ஒருங்கிணைப்பு அலுவலகமாக உயர்ஸ்தானிகம் செயற்படுவதற்கு அமைச்சு ஆதரவளித்தது.

****

# நிதிப் பிரிவு

**நிதிப் பிரிவு**

**தலைப்பு இல: 112 – வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

1. நிதிப் பிரிவானது, அமைச்சின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான நிதித் திட்டமிடலின் பொருட்டு உடனுதவியான சேவைகளை வழங்குவதற்கான கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பிரிவானது நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டான இருவகையான, அதாவது அமைச்சு மற்றும் கடல் கடந்த தூதுக்குழுக்கள் / பதவி நிலைகளின் பொருட்டான கணக்கீடுகளைப் பரிபாலிக்கின்றதுடன், இவை பொதுத் திறைசேரிக்கு அறிவித்தல் செய்யப்படுகின்றது.

2. **பின் குறிப்பிடப்படுபவை நிதிப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாக அமைகின்றது:**

   i. நிதிக் கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான கணக்காளருக்கு உதவுகின்றது.

   ii. வருடாந்த வரவுசெலவு கணக்குகளைத் தயாரித்தல், வரவுசெலவுக் கணக்குக் கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல் மற்றும் இவற்றிற்கான அனுமதியை பொதுத் திறைசேரியிடமிருந்து பெறுதல்

   iii. நிதிச் செயற்பாடுகள் சார்ந்த நிதித்திட்டமிடல் செயற்பாடுகளில் ஈடுபாடுகொள்ளல், தேவைப்பாடுகளை சந்திக்கும் பொருட்டான நிதி வளங்களைக் கிடைக்கக்கூடியதாக்கல் மற்றும் பொது பொறுப்புடைமைக் கூறலை உறுதிப்படுத்துதல்

   iv. செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டான பணி முற்பணங்களை அமைச்சின் மற்றும் இராசதந்திர தூதரகங்கள் நிலைகளின் செயற்பாடுகளுக்குக் கிரமமாக வழங்கல்.

   v. சகல கொடுப்பனவுகளும் மற்றும் அதன் அறிக்கைகளும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக மற்றும் பிற நியதிச்சட்ட தேவைகளுக்கமைவாக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சு மற்றும் இராசதந்திர தூதரகங்கள் / நிலைகளிலான நிதி அறிக்கையிடல் என்பனவான முழுச் செயற்பாடுகளையும் கண்காணித்தல்.

   vi. கணக்காய்வு வினாக்கள், கண்காய்வு அறிக்கைகள் மற்றும் பிற கண்டுபிடிப்புகள் சம்பந்தமாகக் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்துடன் தொடர்பாடல் கொண்டு செயற்படல்.

**நிதிப்பிரிவின் உபபிரிவுகள் / கூறுகள் பின்வருமாறு**

i. அமைச்சு கொடுப்பனவு அலகு
ii. வரவுசெலவு கட்டுப்பாட்டு அலகு
iii. தூதரக கணக்கீடுகள் அலகு

## 112 – வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

**(1) 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு மற்றும் செலவின விவரம் பின்வருமாறு:**

(அ) மீண்டெழும் செலவினம்:-

| விவரம் | 2017.12.31 இல் மொத்த ஒதுக்கம்<br>ரூபா | 2017.12.31இல் மொத்த செலவினம்<br>ரூபா | ஒதுக்கீட்டின் பாலான செலவினம் % |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 5,696,862,450 | 5,696,049,915 | 100 |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 3,980,368,990 | 3,926,935,451 | 99 |
| மொத்தம் | **9,677,231,440** | **9,622.985,366** | **99** |

(ஆ) மூலதனம்:-

| விடயக் குறியீட்டு இல: | விளக்கம் | மொத்த ஒதுக்கம் 2017.12.31 அன்று<br>ரூபா | மொத்த செலவினம் 2017.12.31 அன்று<br>ரூபா | ஒதுக்கீட்டின் பாலான செலவின % |
|---|---|---|---|---|
| | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும் | | | |
| 2001 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 98,718,700 | 48,708,002 | 49 |
| 2002 | பொறித்தொகுதி, இயந்திரங்களும் உபகரணங்களும் | 12,200,000 | 3,413,603 | 28 |
| 2003 | வாகனங்கள் | 29,000,000 | 6,995,011 | 24 |
| | | | | |
| | மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | | | |
| 2101 | வாகனங்கள் | 82,969,000 | 78,226,405 | 94 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 84,898,300 | 69,856,713 | 82 |
| 2103 | பொறித்தொகுதி இயந்திரங்களும் உபகரணங்களும் | 19,683,400 | 15,763,411 | 80 |
| 2104 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 923,853,500 | 78,959,999 | 9 |
| 2105 | காணிகள், காணி மேம்பாடுகள் | 10,000,000 | 4,972,095 | 50 |
| 2106 | மென்பொருள் ஆக்கம் | 1,000,000 | 1,000,000 | 100 |
| | | | | |
| | **மூலதன இடமாற்றங்கள்** | | | |
| 2201(01) | சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய ஆய்வுகளுக்கான லக்'மன் கதிர்காமர் நிறுவனம் | 5,500,000 | 4,196,676 | 76 |
| 2201(02) | தேசிய சமூத்திர விவகாரங்கள் செயற்குழு செயலகம் | 2,000,000 | - | - |
| | | | | |
| | இயலளவு கட்டமைப்பு | | | |
| 2401 | அலுவலர் பயிற்சி | 5,000எ000 | 4,280,891 | 86 |
| | | | | |
| | பிற மூலதனச் செலவினம் | | | |
| 2509 | ருஊேடுஊளு ற்கு இலங்கை சமர்ப்பிக்கும் தரத்தைப் பாதுகாப்பதற்கான தொழில்நுட்ப உதவியுடன் நோர்வே தூதரகம். | 9,820,165 | 9,820,165 | 100 |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1-2509 | நாடுகளுக்கிடையேயான பொருளாதார முன்னெடுப்புகளைச் செயற்படுத்துதல் | 50,000,000 | - | - |
| | | | | |
| | மொத்தம் | **1,334,643,065** | **326,192,971** | **24** |
| | | | | |
| முழுத்தொகை (அ) + (ஆ) | | **11,011,874,505** | **9,949,178,337** | **90** |

**(2) அரச முற்பணக் கொடுப்பனவு சம்பந்தமான ஒதுக்கீடுகளும் உண்மையான செலவினமும்**

(ரூபா)

| விவரம் | உச்சவரம்பு பற்று | உச்சவரவு செலவினம் | உச்சவரம்பு மிகுதி |
|---|---|---|---|
| குறிப்பிட்ட ஒதுக்கம் | 35,000,000 | 28,000,000 | 130,000,000 |
| 30.09.2017 அன்றுள்ளவாறான உண்மையான தொகை – 1120011 | 33,226,919 | 29,115,673 | 110,103,002 |

(3) வருவாய்

(அ) அமைச்சு :-

(ரூபா)

| விளக்கம் | வருமான குறியீடு | 2017.12.31 வரையான உண்மையான தொகை |
|---|---|---|
| அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை | 2002-01-01 | 3,399,135 |
| பிற வருமானம் | 2002-02-99 | 3,600,612 |
| கொன்சூலர் கட்டணம் | 2003-02-99 | 135,700,978 |
| பிற வருமானங்கள் | 2003-99-00 | 12,289,726 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் (மத்திய அரசு) | 2004-01-00 | 11,476,243 |
| மொத்தம் | | **166,466,694** |

(ஆ) கடல் கடந்த தூதுக் குழுக்கள் / நிலைகள்:-

(ரூபா)

| விவரம் | வருமான குறியீடு | 2017.12.31 வரையான உண்மையான தொகை |
|---|---|---|
| அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை | 2002-01-01 | 510,983 |
| பிற வருமானம் | 2002-02-99 | 2,115,789 |
| கடவுச் சீட்டுக்கள், விசாக்கள் மற்றும் இரட்டைப் பிரசாவுரிமைக்கான கட்டணம் | 2003-02-07 | 1,322,509,500 |
| பரீட்சைகள் மற்றும் பிறவற்றிற்கான கட்டணம் | 2003-02-13 | 565,409 |
| கொன்சூலர் சேவைக் கட்டணம் | 2003-02-99 | 318,288,951 |
| பிற வருமானங்கள் | 2003-99-00 | 190,299,249 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் (மத்திய அரசு) | 2004-01-00 | 10,075,218 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் (மாகாண சபைகள்) | 2004-02-00 | 635,819 |
| மூலதனச் சொத்துக்களின் விற்பனை | 2006-02-00 | 9,374,381 |
| மொத்தம் | | **1,854,375,299** |
| மொத்த முழுத்தொகை ((அ) + (ஆ)) | | **2,020,841,993** |

****

# பொது நிர்வாக பிரிவு

பொது நிர்வாக பிரிவு

**அ. அறிமுகப்படுத்தல்**

01. பொது நிர்வாகப் பிரிவானது (பொ.நி.பி) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரிவுகளுள் ஓர் முக்கிய பிரிவாக விளங்குகின்றது. இப்பிரிவு, மனிதவள முகாமைத்துவம், மனிதவள அபிவிருத்தி, பாராளுமன்ற வினாக்கள், அமைச்சரவை விஞ்ஞாபனம், பாவனைப் பொருட்களின் ஏற்பாடு, கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல், கொள்வனவு, வாகனப்போக்குவரத்தை வழங்குதல், தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் அமைச்சின் ஆதார சேவைகளை மேற்கொள்ளுகின்றது. பொது நிர்வாகப் பிரிவானது மற்றைய சகல அமைச்சு பிரிவுகளினதும் வசதிகளை எளிதாக்கத் துணை புரிவதனால் அமைச்சின் பொ.நி. பிரிவின் அனைத்தையும் உள்ளடக்கியதான செயற்பாடுகள் ஆனது அமைச்சின் முழு நிலையான செயற்பாடுகளுக்கு பொது நிர்வாகப் பிரிவு ஓர் தனிச் சிறப்பு வாய்ந்த பிரிவாக அமைகின்றது.

**(ஆ) மனிதவள முகாமைத்துவம்**

02. இலங்கை வெளிநாட்டுச் சேவை (இவெசே) உத்தியோகத்தர்கள் தவிர்ந்த பிற அனைத்து உத்தியோகத்தர்களின் தொடர்பில் மனிதவள அபிவிருத்திச் செயற்பாடானது பொது நிர்வாகப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதோர் பாரிய விடயமாகும். செயலாற்றுகை, மதிப்பாய்வு, இடமாற்றங்கள், பதவியுயர்வு மற்றும் இவை சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் பொது நிர்வாகப் பிரிவினால் கையாளப்படுகின்றன. தகைமை வாய்ந்த மற்றும் தேவைக்கேற்றதான பதவியணியினரை அமைச்சின் பல பிரிவுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பொது நிர்வாக அமைச்சின் ஊடாகச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் குறிப்பிட்ட தேவைகளின் நிமித்தம் 02 நடப்பு நிகழ்வு பகுப்பாளர்கள், 02 சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் 04 மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோர் 2016 அக்டோபர் 25 ஆம் திகதிய அமப/16/2082/710/031 இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கமைய, ஒப்பந்த அடிப்படையில் பொது நிர்வாகப் பிரிவு ஆட்சேர்ப்பை மேற்கொண்டது.

**(இ) பயிற்சியும் முன்னேற்ற அபிவிருத்தியும்.**

03. இலங்கை வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய பதவியணியினருக்கான பயிற்சியும் அபிவிருத்தி முன்னேற்ற செயற்பாடுகளும் பொது நிர்வாகப் பிரிவினால் கையாளப்படுகின்றது. அலுவலக தொழில் சேவையின் 51 உத்தியோகத்தர்களுக்கான மற்றும் அவர்களது திறமையை, அறிவை மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்யும் பொருட்டு 60 வாகன ஓட்டுனர்களுக்குமான இரு

வெளிவாரிப் பயிற்சி திட்டங்களை பொது நிர்வாகப் பிரிவு மேற்கொண்டது. மேலும், அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமிழ்மொழியை மேம்படுத்தும் பொருட்டான தமிழ்மொழிப் பயிற்சி திட்டமும் செயற்பாட்டில் உள்ளது.

**(ஈ) தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு அபிவிருத்தி**

04. தகவல் தொழில்நுட்ப துறையில் அண்மித்த அபிவிருத்தியின் காரணமாக அமைச்சின் உத்தியோகத்தர்கள் அதன் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/ நிலைகள் பிற அரச ஒழுங்கமைப்புகள் மற்றும் இலங்கையிலுள்ள இராசதந்திர பிரதிநிதித்துவத்துடனான தொடர்பாடலை மேற்கொள்ளும் பொருட்டு நவீனமயப்படுத்தப்பட்டதான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அவசியமாகின்றது. இதன் காரணமாக பொது நிர்வாகப் பிரிவானது 2017ஆம் ஆண்டில் பல தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொண்டது. அமைச்சு மற்றும் தூதரகங்கள்/ நிலைகளில் உள்ள உயர் நிலை உத்தியோகத்தர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு ஓர் பாதுகாப்பான பாரிய தொடர்பாடல் தளம் ஒன்று அவசியமாகின்றது. இத்தளமானது பின்வருவனவற்றை, அதாவது வரைவு இலக்கமாக்கி கணினிகள், மொபைல் சாதன முகாமைத்துவ மென்பொருள் மற்றும் ஓர் பாதுகாப்பான தொடர்பாடல் தளம் என்பனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட கருத்திட்டமானது தகவல் மற்றும் தொடர்பாடல்கள் தொழில்நுட்ப சபையின் ஒத்துழைப்புடன் 2017 நவம்பர் மாத இறுதியில் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலாக, அமைச்சில் புதிதாகத் தாபிக்கப்பட்டதான இடத்துரி வலையமைப்பை உபக்காக்கும் பொருட்டு ஓர் புதிய தர்க்க வலையமைப்புத் தளக்கோலமானது ஆக்குகை செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அமைச்சின் வலையமைப்பானது ஓர் 20 ‘எம்பிபிஎஸ்’ இணைய குத்தகைத் தொடுப்பில் செயற்படுவதனால், இது அமைச்சின் பாவனையாளருக்கான இணையத்தொடுப்பு மந்தகதியை மட்டுப்படுத்துகின்றது. அதேநேரம், அமைச்சின் பாவனையாளர்களின் இணைய பாவிப்பின் தரத்தை மேம்படுத்தும் வகையில் மிகக்கட்டுப்பாடான வலையமைப்பை மற்றும் தரவு போக்குவரத்தை உறுதிப்படுத்தும் வகையில் புதிய வலையமைப்புக் கொள்கைகளுடன் அமைச்சு இடத்துரி வலையமைப்புக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மின்னணு (Cyber) தாக்கங்களைக் குறைவாக்கும் பொருட்டு, பொது நிர்வாகப் அமைச்சின் மின் அஞ்சல் சேவையின் பாதுகாப்பை இறுக்கமாக்குவதற்கான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**(உ) பராமரிப்பு செயற்பாடுகள்**

05. அலுவலக இடவசதிகள் போதாதின்மை காரணமாகவும் குடியரசுக் கட்டிட வளாகத்தை பெரிதாக்க முடியாமை காரணமாகவும் வெளிநாட்டு அலுவல்கள அமைச்சிற்கு ஓர் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் பொருட்டு பொது நிர்வாகப் பிரிவானது ஜாவத்தையில் உள்ள ஓர் காணித்துண்டை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டதுடன் முதற்கண் முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு அமைச்சரவை அனுமதிக்காகக் காத்திருக்கின்றது. பாரன் ஜயதிலக்க மாவத்தையில் உள்ள 11ஆம் இலக்க

கட்டிடத்தை கையகப்படுத்துவதற்கான ஒப்புதல் பொ.நி.பிரிவினால் பெறப்பட்டுள்ளது. 'மத்திய என்ஜினியரிங் கொன்சல்ரன்ஸி' பணியகத்துடனான கலந்துரையாடலுடன் உருவரைபட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் அதன் செப்பனிடு செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் வரவு செலவுக் கணக்கு பண ஒதுக்கீட்டுடன் ஆரம்பமாக உள்ளது.

06. அமைச்சின் பராமரிப்பு வேலைகளை மேற்கொண்டுள்ள பொது நிர்வாகப் பிரிவு, குடியரசுக் கட்டிடத்திலுள்ள பழைய வெட்டுமர மேசைகளைப் பிரதியீடு செய்தல் முடிவுற்றதுடன், நுண்ணயம் வாய்ந்த வலையமைப்பு அறையொன்றை ஏற்படுத்துவதற்கும் அமைச்சரின் பணியகத்தைச் செப்பனிடுவதற்குமான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அமைச்சின் நலன்புரிச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் போசனசாலைக்கான திருத்த வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வருடம் குடியரசு கட்டிடத்தின் மீள் திருத்த செயற்பாடுகளையும் பொது நிர்வாகப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

07. பாலஸ்தீன அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையேயான உறவுகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே கொழும்பிலுள்ள பாலஸ்தீன தூதரகத்தின் பதிவேட்டக கட்டிடமானது ஓர் திருப்திகரமான முறையில் செப்பனிடப்பட்டவில்லை. எனவே, இவ்வருடம் தூதரகத்தின் வேண்டுகோளின் பேரில் தூதரக பதிவேட்டக கட்டிடத்திற்கு முழுமையான செப்பனிடுகை பொது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(ஊ) கொள்வனவும் இருப்புக் கட்டுப்பாடும்**

08. பொ.நி.பிரிவானது ஒவ்வொரு வருட முற்பகுதியிலும் ஒரு கொள்வனவு திட்ட அபிவிருத்தித் திட்ட உருவாக்கம் மூலம் அமைச்சின் கொள்வனவு தேவைகளை எதிர்வுகூறுகின்றது. அத்தோடு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் வருடாந்த தேவைகளையும் பொது நிர்வாகப் பிரிவு கவனத்தில் கொள்கின்றது. இதன் அடிப்படையில், வருடத்தின்போது 100ற்கும் மேற்பட்ட கொள்வனவுச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் 40 மில்லியன் ரூபாவிற்கும் மேலான பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்துள்ளது. இருப்பு மற்றும் காப்பிருப்புகளின் பாதுகாப்பைப் பேணும் வகையிலான இருப்புக் கட்டுப்பாடு பேணப்படுதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**(எ) பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை செயற்பாடுகள்**

09. அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும் சகல கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் பாராளுமன்ற அங்கத்தினரால் காலத்திற்குக் காலம் எழுப்பப்படும் வினாக்கள் என்பனவற்றிற்கு பொது நிர்வாகப் பிரிவு ஓர் கூட்டிணைப்புப் பிரிவாக இயங்குகின்றது. இதன்பொருட்டு பொது நிர்வாகப் பிரிவு 51 அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பித்துள்ளதுடன், அமைச்சு சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட 5 வினாக்களுக்குப் பதிலளித்துள்ளது. மேற்கொண்டு, பிற அமைச்சுக்களின் அமைச்சரவை

விஞ்ஞாபனங்களின் மேல் 79 அவதானிப்புக்களை மேற்கொள்வதற்குப் பொது நிர்வாகப் பிரிவு துரிதமாகச் செயற்பட்டுள்ளது.

**ஏ) நூலகம்**

10. அமைச்சின் நூல் நிலையமானது, இராசதந்திரத்தில் வெளிநாட்டுக் கொள்கையில், வெளிநாட்டு அலுவல்களங்களில் ஓர் பெறுமதிமிக்க வள அடித்தளமாகும்.

**ஐ) தேவைப்படுகளும் பிறவும்**

11. அமைச்சின் வாகனத் தொகுதியைப் பரிபாலிப்பது பொது நிர்வாகப் பிரிவிற்கு வழங்கப்பட்ட இன்னொரு விடயமாகும். தற்போது பொது நிர்வாகப் பிரிவு ஆனது வாகன குழாத்தில் கிட்டதட்ட 100 வாகனங்களை பராமரிக்கின்றது. வெளிநாட்டுத் தூதுவர்களின், நியமனமளிக்கப்பட்ட உயர் ஸ்தானிகர்களின் அதிகாரமளிப்புச் சம்பிரதாயங்களின் போது, அரசியல் தலைவர்களின், மிக முக்கிய நபர்களின் மற்றும் பிறவெளிநாட்டுத் தூதுக்குழுவினரின் விஜயத்தின்போது தேவைப்படுவதான போக்குவரத்து வசதிகள் மற்றும் பிற தேவைப்பாடுகளுக்கான வசதிகளை பொது நிர்வாகப் பிரிவு ஏற்பாடு செய்கின்றது. 2017ஆம் ஆண்டில் 18 அரசியல் தலைவர்களின் வருகைக்கு, 15 அதிகாரமளிப்புச் சம்பிரதாய உற்சவங்கள் மற்றும் இலங்கையில் நடைபெற்ற பிற முக்கியமானவர்களின் விஜயத்தின்போது பொது நிர்வாகப் பிரிவு பி. வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தது. இவ்வருடம் பொது நிர்வாகப் பிரிவு பி. பொது திறைசேரியுடன் மேற்கொண்ட வாகன தொகுதியை அதிகரிக்கும்படியான கலந்துரையாடலின் பயனாக 10 புதிய ‘கைபிறிட்” மோட்டார் வாகனங்களைப் பெறக்கூடியதாக இருந்தது.

12. 2017 ஜனவரி மாதத்தில் பிராந்திய கொன்சூலர் அலுவலகமொன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பதற்கான வசதிகளை பொது நிர்வாகப் பிரிவு மேற்கொண்டது. யாழ்ப்பாண கொன்சூலர் அலுவலகத்திற்கு இலங்கை நிர்வாக சேவையிலிருந்து 01 வரையும், 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் 02 அரச முகாமை உதவியாளர் உத்தியோகத்தர்களையும் நியமனம் செய்வதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. கொன்சூலர் பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட மீள்பொறிமுறைமைகளுக்கு அமைவாக, நவீன அலுவலக சூழலை நிர்மாணித்து கொன்சூலர் பிரிவை சிலிங்கோ கட்டடத்திற்கு மாற்றுவதற்கான வசதிகளை 2017 பெப்ரவரி மாதத்தில் பொது நிர்வாகப் பிரிவு மேற்கொண்டது.

13. மத்தியப்படுத்தப்பட்டதான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தபால் சேவையானது தற்பொழுது பொது நிர்வாகப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அது, அமைச்சின் பிரிவுகளுக்கும் வெளி அரசாங்க தாபனங்களுக்கும் நேர காலத்தில் கடிதங்கள் விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. இவ்வருடம் பொது நிர்வாகப் பிரிவு ஆனது தபால் பிரிவிற்குப் போதுமான அளவு பதவியணியினரையும் இயற்கை பொருட்களையும் வழங்கி சேவையின் தரத்தை மேம்படுத்தியுள்ளது.

****

# சட்டப் பிரிவு

**சட்டப்பிரிவின் தொழிற்பாடுகளின் மைய விடயங்கள் பற்றிய பொது விவரணம்**

1. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சட்டப்பிரிவானது 1967ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. சட்டப்பிரிவின் தொழிற்பாடானது சர்வதேச சட்ட விடயங்கள் பற்றி அமைச்சின் செயலாளர் ஊடாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கும், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கும், இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கும் சட்ட ஆலோசனை வழங்குவதாகும். சட்டப்பிரிவானது இலங்கை அரசாங்கத்தின் உடன்படிக்கை வைப்பகமாகவும் உள்ளது.

**ஆ. இப்பிரிவினால் ஆலோசனை வழங்கப்படும் பிரதான விடயங்கள்**

2. சட்டப்பிரிவானது அனைத்து கொள்கைத் தீர்மானங்கள் பற்றிய சட்ட அம்சங்கள் அத்துடன் குறிப்பாக ஆள்புல கோரிக்கைகள், எல்லைகள் மற்றும் உடன்படிக்கை உறவுகளை அங்கீகரித்தல், இராஜதந்திர விலக்களித்தல்கள் மற்றும் சிறப்புரிமைகள் போன்ற காலத்துக்குக் காலம் தோன்றுகின்ற சர்வதேச பிரச்சினைகள் பற்றி ஆலோசனை வழங்குகின்றது.

3. சட்டப்பிரிவானது கப்பற்சேவை, சிவில் விமானப் போக்குவரத்து, சர்வதேச வர்த்தகம், முதலீடு, பயங்கரவாதம், குடிபெயர்வு ஆகிய பல விடயங்களை உள்ளடக்கி வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற அனைத்து அமைச்சுக்களுக்கும், அரசாங்க திணைக்களங்களுக்கும் சர்வதேச சட்ட விடயங்களுக்கான ஆலோசனைகளையும் வழங்குகின்றது. மேலும், சட்டப்பிரிவானது குற்றவாளிகளை அயல் நாட்டிடம் ஒப்புவித்தல், குற்றவியல், குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர சட்ட உதவி, இரட்டை வரி விதிப்பினை தவிர்த்தல், முதலீட்டு பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு, கைதிகளை இடமாற்றுதல், நபர்களை மீள ஏற்றல், குடிபெயர்தல், தொழிலாளர்கள் மற்றும் மனிதவலு, அத்துடன் கடல் சட்டம் ஆகியவற்றில் பரஸ்பர சட்ட உதவி பற்றிய உடன்படிக்கைகளுக்கான கூட்டம் கூட்டுதல், கலந்துரையாடல்களை நடாத்துதல், உடன்படிக்கைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றிலும் ஈடுபட்டது.

4. இலங்கை வெளிநாட்டுச் சேவையுடன் தொடர்புடைய அமைச்சின் அறிவுறுத்துரைகளின் தொடர்களை பொருள் கோடல் செய்தல், வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களினால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள், எமது தூதரகங்களிலுள்ள நாட்டவரை ஆட்சேர்த்தல், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் இராசதந்திர கொன்சியூலர் சிறப்புரிமைகள் மற்றும் பாதிப்பின்மைகளுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் என்பன இப்பிரிவினால் ஆலோசனை வழங்கப்பட்ட சில விடயங்களாகும்.

5. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அனைத்து இருதரப்புக் கூட்டங்களிலும் சட்டப்பிரிவு முக்கியமானதும், செயற்பாடு மிக்கதுமான வகிபாகம் ஒன்றினை வகிப்பதுடன், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு, இரட்டை வரிவிதிப்பு, விமானச்

சேவைகள், மீள் அனுமதி மற்றும் விசா விலக்களிப்புக்கள் போன்ற விடயங்கள் மீது இருதரப்பு கலந்துரையாடல்களை முன்னின்று நடாத்துகின்றது.

**இ. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானத்தின் பிரகடனம்**

6. பாரிய அழிவை ஏற்படுத்தும் படைக்கலங்கள் தடை செய்யப்படுதல் மற்றும் சனநாயக மக்கள் கொரிய குடியரசின் மீதான தடை செய்யப்படுதல் மீது ஐக்கிய நாடுகள் பேரவைப் பட்டயத்தின் ஏஐ ஆம் அத்தியாயத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பிரகடனப்படுத்துவதற்காக 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் பேரவைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் இலங்கை பின்வரும் ஒழுங்கு விதிகளைப் பிரகடனப்படுத்தியுள்ளதுடன் வர்த்தமானிகள் 2017 ஒற்றோபர் 17ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

7. "2017 ஒற்றோபர் 06ஆந் திகதியிடப்பட்டதும், 2039∴31ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அணு, இரசாயன அல்லது உயிரியல் படைக் கலங்களின் பிரகடனம் தொடர்பிலான தடை விதிப்புக்கள் மீதான 2017ஆம் ஆண்டின் ஒழுங்கு விதிகள்" மூலமாக பாரிய அழிவை ஏற்படுத்தும் படைக்கலங்கள் பிரகடனத்தை எதிர்கொள்வதற்கான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள்.

8. "2017 ஒற்றோபர் 06ஆந் திகதியிடப்பட்டதும், 2039∴32ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சனநாயக மக்கள் கொரிய குடியரசு தொடர்பிலான தடை விதிப்பு மீதான 2017ஆம் ஆண்டின் ஒழுங்கு விதிகள்" மூலமான சனநாயக மக்கள் கொரிய குடியரசு மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள்.

**ஈ. விமானச் சேவைகள்**

9. கொரியக் குடியரசு, ஐக்கிய அமெரிக்கா, பூட்டான், கனடா, கட்டார், ஐக்கிய அரபு குடியரசு முதலிய நாடுகளுடன் ஏற்கனவேயுள்ள விமானச் சேவைகளை திருத்துவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
10. தற்போதைய விமானப் போக்குவரத்து முறைமையை மீளமைத்தல் தொடர்பில் தென் கொரியா, பூட்டான், கனடா, கட்டார், ஐக்கிய அரபு இடாச்சியம் மற்றும் ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
11. 2017 டிசம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச சிவில் விமான நிறுவனத்தின் கூட்டத்தில் பின்வரும் வான் சேவை உடன்படிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு, கைச்சாத்திடப்பட்டன.
12. 2017 சர்வதேச சிவில் விமான நிறுவனத்தின் கூட்டத்தில் பல வான் சேவை உடன்படிக்கைகள் தாய்லாந்து, பஹாமாஸ், கட்டார், சிம்பாப்வே, சிலி, ஆப்கானிஸ்தான்,

டொமினிக்கன் குடியரசு, ஹெல்லனிக் குடியரசு மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டன.

13. இந்தியா, ரஷ்யக் கூட்டமைப்பு, ஓமான், கஸகஸ்தான், ஐக்கிய அரபு குடியரசு, தென் கொரியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளுடன் வான் சேவைகள் சார்ந்த பல புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கைச்சாத்திடப்பட்டன.

### உ. முதலீட்டு ஊக்குவிப்பு

14. இலங்கைக்கும், ஐக்கிய அரபு இராச்சியத்திற்குமிடையிலான முதலீட்டு ஊக்குவிப்பு உடன்படிக்கை மீதான இலங்கைப் பேச்சுவார்த்தைகளின் முதலாவது சுற்று 2017 பெப்ரவரியில் கொழும்பில் நடாத்தப்பட்டது.

15. இலங்கைக்கும், ஓமானுக்குமிடையிலான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கை மீதான இணக்கப்பேச்சுவார்த்தைகளின் இரண்டாவது சுற்று 2017 மே மாதத்தில் கொழும்பில் நடாத்தப்பட்டது. முதலீட்டு பாதுகாப்பு உடன்படிக்கையின் முடிவுறாத நிலையிலுள்ள பேச்சுவார்த்தைகள் பற்றி இலங்கைக்கும், பெலாரிசுக்குமிடையே கடிதத் தொடர்பு மூலம் உரையாடப்படுகின்றது.

16. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இந்தியா, சிங்கப்பூர் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் முதலீட்டு அத்தியாயங்களின் தொடர்பிலான நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மற்றும் பூர்த்தியாக்கலுக்கு உதவி வழங்கியுள்ளது.

### ஊ. புலமைச் சொத்து

17. புலமைச் சொத்து மீதான தேசிய கொள்கை வரையறுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதென்பதுடன், இத்தொடர்பில் சட்டப்பிரிவு உதவி புரிந்து கொண்டிருக்கின்றது.

18. மேலும், இவ்வாண்டில் இலங்கையில் பாரம்பரிய அறிவை பூர்த்தி செய்வதற்கான கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. மேலும், சுற்றுலாத்துறை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் புலமைச்சொத்து செயற்பாடுகளிலும்கூட சட்டப்பிரிவினால் உதவி வழங்கப்பட்டுள்ளது.

### எ. மீள் அனுமதி

19. ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் இலங்கை மீள் அனுமதி உடன்படிக்கைக்கு செயல்வலுவளிக்கும் நடவடிக்கைக் குறிப்பு மோல்டாவில் கையொப்பமிடப்பட்டுள்ளதுடன், ரோமானியாவுடன் கையொப்பமிடப்படுவதற்கான நடவடிக்கைக் குறிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

20. உக்ரைன் மற்றும் ரஷ்யாவுடனான வரைவு உடன்படிக்கைகளை இறுதிப்படுத்துவதற்காக மேலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

**ஏ. மீள் அனுமதி மீதான தேசிய கூட்டிணைப்புக் குழு**

21. முடிவுறாத நிலையிலுள்ள மீள் அனுமதி உடன்படிக்கைகளின் மீதான அவதானிப்புரைகளையும், அவற்றின் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைக் குறிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கும், மீள் அனுமதி தொடர்பிலான பிற விடயங்களை கவனித்துக் கொள்வதற்குமாக இப்பிரிவு மீள் அனுமதி மீதான தேசிய கூட்டிணைப்புக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதற்கான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

**ஐ. கடல்சார் / கடல் சட்டம்: இலங்கையின் கண்ட மேடை சமர்ப்பணம்**

22. இலங்கையின் சமர்ப்பணத்தை பரிசீலனை செய்வதற்கும், இச்சமர்ப்பணத்திற்கு ஆதரவளித்து வாதாடுவதற்குமான நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

23. உபகுழுவுடனான கூட்டங்கள் முறையே 2017 பெப்ரவரியிலும், ஓகத்திலும் நடாத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சட்டப்பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற தேசிய சமுத்திர அலுவல்கள் குழுவானது முடிவுறாத நிலையிலுள்ள விடயங்களை பூர்த்தி செய்வதன் பொருட்டு சட்டப்பிரிவுடன் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கின்றது.

**ஒ. புலம்பெயர்தல்**

24. 2016 திசெம்பரில் இலங்கைக்கும், சுவிட்சர்லாந்திற்குமிடையே கையொப்பமிடப்பட்ட இருதரப்பு புலம்பெயர்வு ஒத்துழைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கைக்கும், சுவிட்சர்லாந்திற்குமிடையிலான நிபுணர் கலந்துரையாடலின் முதலாவது சுற்று கலந்துரையாடல் 2017 ஏப்ரலில் நடாத்தப்பட்டது. அதன் இரண்டாவது சுற்று நிபுணர் ஆலோசனைகள் 2017 ஒற்றோபர் 25ஆந் திகதி நடைபெற்றது.

25. சட்டங்களை சர்வதேச தரத்திற்கு வடிவமைப்பதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை திருத்தும் கலந்துரையாடலில் சட்டப்பிரிவும் பங்குபற்றியது. கடத்துதல் நெறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக புலம்பெயர்பவர்களை கடத்துதல் தொடர்பான புதிய பந்தியொன்று உட்சேர்க்கப்படவுள்ளது.

**ஓ. குற்றவியல் விடயங்கள் மீதான நீதித்துறை ஒத்துழைப்பு, பரஸ்பர சட்ட உதவி, தண்டனை வழங்கப்பட்ட ஆட்களை இடமாற்றுதல், குற்றவாளிகளை வேற்று அரசிற்கு ஒப்படைத்தல்**

26. தண்டனை வழங்கப்பட்ட ஆட்களை இடமாற்றுதல் தொடர்பிலான உடன்படிக்கையொன்றை பூர்த்தி செய்வதற்காக இலங்கைக்கும், தாய்லாந்திற்குமிடையே 2017 செத்தெம்பரில் கொழும்பில் இணக்கப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. இந்த உடன்படிக்கை கையொப்பமிடப்படுவதற்காக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

27. குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட உதவி வழங்குதல் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை பூர்த்தி செய்து கொள்ளுவதன் பொருட்டு இலங்கைக்கும், தாய்லாந்திற்குமிடையே இணக்கப் பேச்சுவார்த்தைகள் 2017 பெப்ரவரியில் பேர்னில் நடாத்தப்பட்டுள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கையானது கையொப்பமிடப்படுவதன் பொருட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**ஔ. பரஸ்பர சட்டங்கள்**

**i. சீனாவுடன் பரஸ்பர சட்ட உதவி உடன்படிக்கை**

28. 2017 செத்தெம்பர் 29ஆந் திகதியன்று பீஜிங்கில் உறுதிப்படுத்தல் சாதனம் பரிமாற்றம் செய்யப்பட்டது.

**ii. உக்ரெய்னுடனான பரஸ்பர சட்ட உதவி உடன்படிக்கை**

29. இலங்கைக்கும், உக்ரெய்னுக்குமிடையிலான பரஸ்பர சட்ட உடன்படிக்கையும், பயங்கரவாத தடைச் சட்ட உடன்படிக்கையும் உறுதிப்படுத்துவதற்கு தேவையான உள்நாட்டு சட்ட நடைமுறைகளையும் பூர்த்தி செய்துள்ளதுடன், இது பற்றி உக்ரெய்ன் அதிகார பீடங்களுக்கு அறிவித்துள்ளது.

**குற்றவாளிகளை பரஸ்பரமாக அயல் நாடுகளிடம் ஒப்படைத்தல் உடன்படிக்கைகள்**

**iii. ர்‘யாவுடனான குற்றவாளிகளை ஒப்படைத்தல் உடன்படிக்கைகள்**

30. இந்த உடன்படிக்கையின் உறுதிப்படுத்தலுக்கான இயைபுள்ள அரசியலமைப்பு நடைமுறைகள் இரண்டு தரப்பினர்களினாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை 2017 நவம்பர் 6ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரும்.

31. குற்றவாளிகளை அயல் நாடுகளிடம் ஒப்படைக்கும் சீனா, உக்ரெய்ன் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடனான இந்த உடன்படிக்கைகளை வலுப்படுத்துவதற்கு தேவைப்படும் அரசியலமைப்பு நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதுடன், இது பற்றி சீனாவிலும், உக்ரெய்னிலும், வியட்நாமிலுமுள்ள இயைபுள்ள அதிகார பீடங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

32. செயற்படுத்துதலை நடைமுறைப்படுத்துவதற்காக ஆவணங்களை பரிமாற்றிக் கொள்வதற்கான பிரதிபலிப்புக்களுக்காக காத்திருக்கப்படுகின்றது.

**க. பொது உடன்படிக்கைகள்**

33. 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ஏனைய வெளிநாடுகளுடன் 32 பொது உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டது.

****

# மத்திய கிழக்கு மற்றும் ஆப்பரிக்க பிரிவு

**பிரிவின் செயற்பாடுகள்**

1. அதிமேதகு சனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், ஏனைய அமைச்சரவை அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் போன்றோரின் இருபக்க விஜயங்களை ஒருங்கிணைத்தல்.
2. அத்தகைய உயர்மட்ட விஜயங்கள், நியமனக் கடிதங்களை ஒப்படைத்தல் வைபவங்கள் மற்றம் அனைத்து ஏனைய கூட்டங்களுக்காகவும் உரைகளையும் நாட்டுக் குறிப்புகளையும் தயாரித்தல்
3. முடிவுறாதுள்ள புரிந்துரண்வு உடன்படிக்கைகள் / உடன்படிக்கைகளை முன்கூட்டி நிறைவுசெய்தல்.
4. புரிந்துணர்வு உடன்படிக்கைகள் / உடன்படிக்கைகளுக்கான அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்தலும் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதலும்
5. அதிமேதகு சனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோரின் அனுதாபச் செய்திகள், தேசிய தினச் செய்திகள், பாராட்டுச் செய்திகள் போன்றவற்றைத் தயாரித்தல்
6. கொழும்பைத் தளமாகக் கொண்ட மத்தியகிழக்கு மற்றும் ஆபிரிக்கப் பிராந்தியத்திலிருந்து தூதுவர்கள் / உயர் ஸ்தானிகர்கள் மூலமான உள்ளக சந்திப்புகள் மற்றும் நட்புறவுச் சந்திப்புகளை வசதிப்படுத்தல்
7. மத்தியகிழக்கு மற்றும் ஆபிரிக்கப் பிராந்தியங்களுக்கான நடவடிக்கைத்திட்டம், செயலாற்றுகை மற்றும் வரவு செலவுத்திட்டம் போன்றவற்றைத் தயாரித்தல்
8. வெளிநாடுளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள், கொழும்பிலுள்ள மத்தியகிழக்கு மற்றும் ஆபிரிக்கப் பிராந்தியங்களில் இருந்தான வெளிநாட்டுத் தூதரகங்கள், நிரல் அமைச்சுகள் / நிரல் முகவர் நிலையங்கள் போன்றவற்றுடன் நாளாந்த செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

**மத்திய பிராந்தியம் : ஆள்புல உள்ளடக்கம்**

**அ. 16 நாடுகள் -**

பஹ்ரைன், ஈரான், ஈராக், இஸ்ரேல், ஜோர்தான், குவைட், லெபனான், ஓமான், பலஸ்தீனம், கட்டார், சவூதி அரேபியா, சிரியா, ஐக்கிய அரபு இராச்சியம், அஸர்பைஜான், துர்கமனிஸ்தான் மற்றும் யெமன்

**ஆ. வதிவிட தூதரகங்கள்/ துணை அலுவலகங்கள்:**

(i) **11 தூதரகங்கள்** மனாமா (பஹ்ரைன்), தெஹ்ரான் (ஈரான்), பக்தாத் (ஈராக்), டெல்அவிவ் (இஸ்ரேல்), அம்மான் (ஜோர்தான்), குவைட் (குவைட்), பெய்ரூட் (லெபனான்), மஸ்கட் (ஓமான்), டோஹா (கட்டார்), றியாத் (சவூதி அரேபியா), மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் (அபுதாபி)

(ii) **காவற் தூதர்கள் நாயகம்** : டுபாய் - ஐக்கிய அரபு இராச்சியம்
ஜித்தா - சவூதி அரேபியா

(iii) **01 பிரதிநிதி அலுவலகம்** - ரமல்லாஹ் - பலஸ்தீனம்

(iv) **04 சமகால ஒப்புதல் அளிக்கப்பட்டவை** - சிரியா (லெபனானில் உள்ள இலங்கை தூதரகம்), யெமன்( ஓமானில் உள்ள இலங்கை தூதரகம்), துரக்மெனிஸ்தான் (ஈரானில் உள்ள இலங்கை தூதரகம்), அஸர்பைஜான் (ஈரானில் உள்ள இலங்கை தூதரகம்)

(v) **கௌரவ காவற் தூதர் பிரதிநிதித்துவங்கள்:** இஸ்ரேல் (ஜெரூசலம்), பலஸ்தீனம் (பெத்லேஹேம்)

ஆபிரிக்க நாடுகளுடனான இலங்கையின் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் எதிர்பார்ப்புடன் 2014 தொடக்கம் ஆபிரிக்க ஒன்றியத்தின் ஆபிரிக்க அரசொன்றல்லாத ஒப்புதல் அந்தஸ்த்தினை இலங்கை பெற்றுக்கொண்டது

**ஆபிரிக்கப் பிராந்தியம்**

ஆபிரிக்காவில் உள்ள 54 சுயாதீன அரசுகளில், இன்று வரை 43 நாடுகளுடன் இலங்கை முறையான இராஜதந்தி உறவுகளை தாபித்துள்ளதுடன் எஞ்சியுள்ள 11 நாடுகளினதும் உடன்பாட்டுக்கு எதிர்பார்த்துள்ளது.

| வதிவுடைய தூதரகங்கள் | நடைமுறை ஒப்புதல் அளிக்கப்பட்டவை |
|---|---|
| • எகிப்து | எரித்ரியா, லிபியா, சூடான் குடியரசு |
| • கென்யா | கொங்கோ குடியரசு, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, உகன்டா, ருவாண்டா,ஐ நா சுறற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்(UNEP), ஐ நா வாழிடம்(UN HABITAT) |
| • நைஜீரியா | பெனின், புர்கினா பெசோ, கோட் டி ஐவோர், கெம்பியா, கினியா , கினியா-பிஸ்ஸாஉ, லைபீரியா, மாலி, மொரிடானியா, சியராலியோன், டொகோ |
| • சீசெல்ஸ் | மடகஸ்கார் |
| • தென்னாபிரிக்கா | அங்கோலா, லெசோதோ, மொசாம்பிக், மலாவி, நமீபியா, சுவாசிலாந்து, சம்பியா மற்றும் சிம்பாப்வே |
| • எதியோப்பியா ( 2016 ஒக்டோபர் 24 அன்று ஆரம்பிக்கப்பட்டது) | டிஜிபுடி, சோமாலியா, தென் சூடான், ஆபிரிக்க ஒன்றியம். |
| • லிபியா | 2011 மாரச் தொடக்கம் நிரநதரமாக மூடப்பட்டுள்ளது |
| • உகன்டா | 2016 மாரச் 31 தொடக்கம் நிரநதரமாக மூடப்பட்டுள்ளது |

**கௌரவ காவற் தூதர் பிரதிநிதித்துவங்கள்**

பொட்ஸ்வானா, எதியோப்பியா, மடகஸ்கார், நைஜீரியா, (அபஜா மற்றும் லாகொஸ்), தென் ஆபிரிக்க ( டேபரன் மற்றும் கேப் டவுன்), டனீசியா, சூடான், உகன்டா, ஸம்பியா, சீசெல்ஸ், மொரீசியஸ், மொஸாம்பிக், நமிபியா, மற்றும் ஸம்பியா நாடுகளில் கௌரவ கொன்சல் பிரதிநிதித்துவங்களை இலங்கை கொண்டுள்ளது.

**1. பஹ்ரைன்**

அ. இருபக்க உறவுகள்

I. பஹ்ரைனின் முழு அமைச்சரவையையும், மன்னர், பிரதம அமைச்சர் மற்றும் முடிக்குரிய இளவரசர், பிரதி பிரதம அமைச்சர்கள் போன்றோரையும் பல நிகழ்வுகளில் தூதுவர் சந்தித்தார்.

II. 2017 ஜனவரியில் அபுதாபி கலந்துரையாடலின் தலைமைத்துவத்தினை இலங்கை பொறுப்பேற்றதுடன் பஹ்ரைனின் தொழில் மற்றும் சமூக அபிவிருத்தி கௌரவ அமைச்சர் கலாநிதி ஜமில் பின் மொஹமட் அல் ஹுமைதான் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

III. வெளிநாட்டுத் தொழில் மற்றும நீதியமைச்சர் கௌரவ தலதா அத்துகோரல தலைமையிலான பேராளர் குழு 2017 செப்டெம்பர் நடுப்பகுதியில் அபுதாபி கலந்துரையாடலில் தலைமைத்துவ அந்தஸ்த்தில் பஹ்ரைனுக்கு விஜயம் செய்தது. அவர் பஹ்ரைனின் அமைச்சர்களையும் நேரிணை அமைச்சரையும் சந்தித்தார்.

**ஆ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

I பஹ்ரைன் ஆசிய வர்த்தக குழு மற்றும் பஹ்ரைன் கைத்தொழில் வர்த்தக சம்மேளனத்தில் இருந்து பேராளர் குழுவொன்று 2017 மே 30 தொடாக்கம் ஜுன் 01 வரை நடைபெற்ற “இலங்கை முதலீட்டு மற்றும் வர்த்தக கூட்டு 2017” இலங்கைக்கு விஜயம் செய்தது.

II. பஹ்ரைனின் தேசிய விமான சேவையான கல்ப் எயார் 2017 ஜனவரி தொடக்கம் வாரத்துக்கு ஐந்து விமானப் பயணங்களுடன் கொழும்பின் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அதன் நேரடி விமான சேவைகளை ஆரம்பித்தது.

III. விமானப் போக்குவரத்தினை அதிகரிப்பதற்கும் இலங்கையினை சுற்றுலாப் பயணிகள் விரும்புகின்ற அடைவிடமாக ஊக்குவிப்பதற்கும் பலதடவைகள் தலைவர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருடன் தூதுவர் கலந்துரையாடினார். இலங்கை பற்றிய எண்ணப்பாங்கினை எடுத்துக்காட்டுவதற்கும் எதிர்வு கூறுவதற்கும் இலங்கை கழகத்துடன் தூதரகம் மருத்துவப் பிரசாரங்கள், உணவு ஊக்குவிப்பு நிகழ்வுகள் போன்றவற்றினை வேறு பல நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியது.

IV முக்கிய சுற்றுலா மற்றும் பயண சஞ்சிகைகளுக்கு தூதுவர் நேர்காணல்களை வழங்கியதுடன் இலங்கை பற்றி உரைகளையும் கருத்துரைகளையும் நிகழ்த்தினார்.

V இலங்கையர் அற்ற மன்றங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனங்கள் அத்துடன் இல்லங்கள், இளம் தலைவர்களின் அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள், டோஸ்ட்மாஸ்டர் கழகங்கள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட கருத்தரங்குகள் மற்றும், சர்வதேச மற்றும் தேசிய உயர் பாடசாலை ஆரம்பங்கள் மற்றும் பட்டமளிப்பு விழாக்கள், பயிற்சித்திட்டங்கள், கருத்தரங்குகளில் இலங்கையின் "மென் அதிகாரம்" என்ற தலைப்பில் எதிர்வுகூறல் மற்றும் சுருக்க குறிப்பும் பற்றி தூதுவர் அடிக்கடி சிறப்புரையாற்றுநராக அல்லது பிரமுகராக அல்லது தலைமை வகிப்பவராக இருந்தார்.

**இ. கலாசார உறவுகள்**

I பஹ்ரைனில் உள்ள இலங்கை கழகம் மற்றும் பல எண்ணிக்கையிலான இலங்கை சார்ந்த அமைப்புகளினால் நடாத்தப்டுகின்ற கலாசார நிகழ்வுகளை தூதரகம் வசதிபடுத்தியது. (மருத்துவ முகாம் / சிகிச்சை, இரத்ததானம், பண்டிகைகளை கொண்டாடுதல் அதாவது தைப்பொங்கல், சிங்கள தமிழ் புதுவருடம், வெசாக், பொசன், நோன்புப் பெருநாள் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள்)

**ஈ. தொழிலாளர் நலனோம்புகை**

I. வெளிநாட்டு தொழில் மற்றும் நீதி அமைச்சர் கௌரவ தலதா அத்துகோரள பஹ்ரைன் இராஜ்ஜியத்தில் சுமார் 40 முன்னணி தொழில் மற்றும் ஆட்சேர்ப்பு முகவர் நிலையங்களை சந்தித்தார்.

**உ. ஏனையவை**

I. இலங்கை கடற்படையின் அனைத்து மட்டங்களிலும் பல எண்ணிக்கையிலான பேராளர் குழு கலந்துரையாடல்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விரிவுரைகள், மாநாடுகளுக்காக இணைந்த கடல்சார் படைக்கு (CMF) விஜயம் செய்தனர்.கொழும்பில் வருடாந்த "காலி கலந்துரையாடல்" இல் இணைந்த கடல்சார் படைக்கு பங்கேற்றதுடன் பிராந்தியத்தில் இலங்கை கப்பல்கள் பயணிப்பதற்கு உதவியினையும் பாதுகாப்பினையும் வழங்குகின்றது.

**3. ஈரான்**

**அ. இருபக்க உறவுகள்**

I. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருபக்க உறவுகளை மேலும் ஊக்குவிப்பதற்கு குறிப்பாக ஈரான் பொருளாதார தடைக்கு பிந்திய

இலங்கை உறவின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

II. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த 2016 ஜனவரி 14 அன்று ஈரானுக்கு விஜயம் செய்ததுடன் இவ்விஜயத்தின் போது விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புதுமைப் படைத்தல் ஒத்துழைப்பின் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

III. பாராளுமன்ற சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய 2015 மார்ச் 3-6 வரை ஈரானுக்கு விஜயம் செய்தார்.

IV. சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் கௌரவ மஹிபால ஹேரத் 2017 ஜூலை 21-27 ஈரானுக்கு விஜயம் செய்தார்.

V. இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய, கலாநிதி ஹசன் ரௌஹானியின் இரண்டாவது சனாதிபதி பதவிக்கால ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்வதற்கு 2017 ஓகஸ்ட் 4-7 வரை ஈரானுக்கு விஜயம் செய்தார்.

VI. இலங்கையின் பேராளர் குழுவொன்று 2017 செப்டெம்பர் 17-20 வரை தெஹ்ரானில் நான்காவது ஈரான் உயிரியல் தொழில்நுட்ப ஏற்றுமதி 2017 நிகழ்வில் பங்கேற்றது.

**ஆ. பல்பக்க உறவுகள்**

I. தெஹ்ரானில் விஞ்ஞான மற்றுü தொழில்நுட்ப மாற்றத்துக்கான இந்து சமுத்திர சுற்றுவட்டார அமைப்பு பிராந்திய நிலையத்தின் ஆலோசனைச் சபையின் தூதரகம் பங்கேற்றது.

II. சர்வதேச அணுசக்தி அதிகாரசபையின் ஆளுநர் சபைக்கும் பிராந்திய ஒத்துழைப்பு அங்கத்துவ தெரிவுக்கும்ஈரானுக்கு இலங்கை ஆதரவளித்தது.

**இ. பொருளாதார உறவு**

I. ஈரானின் நிதி உதவியுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்கள் மீது தூதரகம் தொடர்ந்தும் பணியாற்றுகின்றது. (கிராமிய மின்னூட்டல் கருத்திட்டம் - (கீ.மி. 8 உமா ஓயா பலநோக்கு கருத்திட்டம்))

II. இலங்கைத் தேயிலையினை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஈரானில் உள்ள தேயிலை இறக்குமதியாளர்களை கவருவதில் தூதரகம் கிரமமாக சந்திப்புகளை முன்னெடுக்கின்றது.

III. ஈரானில் உள்ள முன்னணி பயண ஏற்பாட்டாளர்கள்/ தொடர்புடைய அதிகாரிகள் போன்றோருடன் தூதரகம் கலந்துரையாடல் நடத்தியதுடன் 2017 செப்டெம்பர் 6ஆம் திகதி சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றையும் ஊக்குவித்தது.

**4. அசர்பைஜான் (ஈரானுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது)**

i. 2018-2021 பதவிக்காலத்திற்காக அனைத்து புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களது குடும்ப உறுப்பினர்களினதும் உரிமைகளை பாதுகாத்தல் மீதான குழுவுக்கு மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு இலங்கைக்கு அசர்பைஜானிடம் இருந்து ஆதரவு கிடைத்தது.

**5. ஈராக்**

**அ. இருபக்க உறவுகள்**

I. ஈராக்கின் பசுமை வலயத்தில் ஆயுதப்படை தினமன்று ரெத் தளமிடும் வைபவத்திலும் பக்தாத் பல்கலைக்கழகத்தின் ஈரான் பாராளுமன்றத்தின் பக்தாத் கலந்துரையாடல் 'வெற்றியின் பின்னரான தெரிவுகள்' மற்றும் அல் ஹக்கீம் அலுவலக கட்டிடத் தொகுதியின் தேசிய நல்லணிக்க முயற்சியும் மாநாடும் ஆகிய நிகழ்வுகளில் தூதுவர் கலந்து கொண்டார்.

II. குர்திஸ்தானின் எர்பிலியில் உள்ள நிவ்ரோஸ் கொண்டாட்டம் (குர்திஸ் புது வருடம்) இற்காக குர்திஸ் பிராந்தியத்துக்கு தூதுவர் விஜயம் செய்தார்.

III. குர்திஸ்தானின் பிராந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரையும் குர்திஸ்தான் பிராந்திய தலைவரையும் இலங்கையின் கௌரவ கொன்சுலர் (பதவி குறிக்கப்பட்ட) தூதுவர் குர்திஸ்தானின் எர்பிலியில் சந்தித்தார்.

IV. தூதுவர் ஆசிய மற்றும் அவுஸ்திரேலிய பணிப்பாளர் நாயகம் தூதுவர் அல் ஜெப், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உபசரணைப் பிரதானி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் இர்பான் அல் கியாலி என்பவரை பாதுகாப்பு அமைச்சிலும் சந்தித்தார்.

V. பக்தாத்தில் உள்ள பசுமை வலயத்தில் "மொசூல் யுத்த வெற்றி நடைபவணியில் தூதுவர் கலந்து கொண்டார்.

VI. பக்தாத் சர்வதேச சந்தையில் தூதரகம் பங்கேற்றது.

VII. பக்தாத்தில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் அமைச்சரவையும் ஈராக்கின் குர்திஸ்தான் பிராந்தியத்தில் எர்பிலி நகரில் இலங்கையின் கௌரவ காவற் தூதர் கலாநிதி அஹமட் ஜலால்தீன் முஸ்தபாவினை நியமிப்பதற்கு அனுமதி அளித்தது.

VIII. பக்தாத்தின் அல் சலாம் சனாதிபதி மாளிகையில் அதிமேதகு சனாதிபதியை தூதுவர் சந்தித்தார்.

IX. மொத்தமாக 78 இராஜதந்திரிகளையும் ஏனைய அலுவலர்களையும் கொன்ற பக்தாத் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு குண்டு போடப்பட்ட எட்டாம் ஆண்டு நிகழ்வில் தூதுவர் கலந்து கொண்டார்.

**ஆ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

i. ஈராக்கின் வெளிநாட்டு பொருளாதார உறவுகள் வர்த்தக அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினை தூதுவர் சந்தித்தார்.

ii. பக்தத்தில் உள்ள ஸ்டார் செரட்டன் ஹோட்டலில் ஈராக்கில் உள்ள பயண மற்றும் சுற்றுலா ஒன்றியத்துடன் இணைந்து தூதரகம் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வு ஒன்றினை ஒழுங்கமைத்தது.

iii. ஈராக்கின் உம்மு கஸ்ர் துறைமுகத்துக்கான கப்பல்களின் கடல் பரீட்சார்த்தத்துக்காக 10 இலங்கையர் கலந்து கொள்வது தொடர்பில் கொழும்பு டொக்கியாட் பி.எல்.சி. நிறுவனத்துக்கு தூதரகம் உதவி அளித்தது.

iv. 2018 சனவரி தொடக்கம் பக்தாத்தில் இருந்து கொழும்புக்கு வாராந்த குத்தகை அட்டவணை விமான சேவையினை ஒழுங்கமைப்பது தொடர்பில் திரு. வசீர் சாலியுடன் தூதுவர் கலந்துரையாடினார்.

v. ஈராக்கிற்கும் இலங்கைக்கும் விஜய் செய்கின்ற சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது பற்றியும் நேரடி விமான சேவையொன்றை ஒழுங்கமைப்பது பற்றியும் ஈராக்கின் அமைச்சரவை பணிப்பாளர் நாயகம் தூதுவருடன் கலந்துரையாடினார்.

vi. உலக தேநீர் விருந்து தூதரகத்தில் நடைபெற்றது. 49 நாடுகளை உள்ளடக்கி ஒய்ஸ் ஒவ் அமெரிக்கா நிறுவனத்தினால் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை வழங்கப்பட்டது.

vii. ஈராக் பயண மற்றும் சுற்றுலா ஒன்றியத்தின் பலர் பயண மற்றும் சுற்றுலா முகவர்களை தூதுவர் சந்தித்தார்.

viii. இலங்கைக்கும் ஈராக்கிற்கும் இடையிலான வர்த்தக உறவுகளை அபிவிருத்தி செய்வது பற்றி விசேடமாக பெற்றோலியம் மற்றும் தேயிலை பற்றி கலந்துரையாடுவதற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கெமல் அல் கிரேரி அவர்களும் பொறியியலாளர் ஹைதரும் தூதுவரை சந்தித்தனர்.

**தொழிலாளர் நலனோம்புகை**

I. ஈராக்கின் குர்திஸ்தான் பிராந்தியத்தில் உள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்காக 1385 அட்டவணைகளை தூதுவர் கலந்துரையாடி இறுதிப்படுத்தி பெற்றுக் கொண்டார்.

**1. இஸ்ரேல்**

**இருபக்க உறவுகள்**

i. சுற்றுலா அபிவிருத்தி, கிறிஸ்தவ சமய அலுவல்கள் மற்றும் காணி அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க 2017 பெப்ரவரி 5-8 வரை 23ஆவது வருடாந்த சர்வதேச மத்தியதரை சுற்றுலா சந்தையில் கலந்து கொள்வதற்கு இஸ்ரேலுக்கு விஜயம் செய்தார்.

ii. பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் கௌரவ ஆர்.எம்.ஆர். மத்தும பண்டார விவசாயத்துறையில் உள்ள வாய்ப்புகளை கண்டறிவதற்கான ஆய்வுச் சுற்றில் கலந்து கொள்வதற்கு 2017 பெப்ரவரி 15-20 வரை இஸ்ரேலுக்கு விஜயம் செய்தார்.

iii. ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ தயா கமகே தலைமையில் 17 உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்று விவசாயத்துறையில் உள்ள வாய்ப்புகளை கண்டறிவதற்கான ஆய்வுச் சுற்றுலா ஒன்றுக்கு 2017 செப்டெம்பர் 11-17 வரை இஸ்ரேலுக்கு விஜயம் செய்தது.

iv. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கௌரவ நவீன் திஸாநாயக்க தேயிலை வர்த்தக கம்பனிகளை சந்திப்பதற்கு இஸ்ரேலுக்கு விஜயம் செய்தார்.

v. 2017 ஜுன் 6-8 வரை இஸ்ரேலில் நடைபெற்ற 8ஆவது சர்வதேச பாதுகாப்பு மற்றும் எச்.எல்.எல்.ஏற்றுமதி 2017 நிகழ்வில் இலங்கை கடற்படை பேராளர் குழு கலந்து கொண்டது.

vi. மேஜர் ஜெனரல் என்.ஏ.பி.சி. நபாபொட என்பவரின் தலைமையில் பேராளர் குழுவொன்று 2017 செப்டெம்பர் 1-10 வரை இஸ்ரேலுக்கு விஜயம் செய்தது.

vii. இலங்கை விமானப்படை தளபதியின் தலைமையிலான குழுவொன்று இஸ்ரேலுக்கு விஜயம் செய்தது.

viii. விவசாயம் பற்றிய ஆய்வுச் சுற்றுலா ஒன்றை பேராளர் குழுவொன்று 2017 செப்டெம்பர் 14-16 வரை இஸ்ரேலுக்குச் சென்றது.

**ஆ. பல்பக்க உறவுகள்**

I. 2017-2020 பதவிக் காலத்துக்காக திறந்த அரசாங்க பங்குடமை செயற்குழுவில் இலங்கையின் பிரதிநிதிகள் சார்பில் இஸ்ரேலின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்கு தூதரகம் ஆதரவு திரட்டியது.

**இ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

I. இஸ்ரேலில் இருந்து இலங்கைக்கான சுற்றுலாவினை ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான குத்தகை விமான சேவையினை தொழிற்படுத்துவதற்கு இரண்டு இஸ்ரேலிய கம்பனியுடன் தூதரகம் கலந்துரையாடல்களை நடத்தியது.

II. "தூறல் நீர்ப்பாய்ச்சலில் இலங்கையில் முதலிடுவதற்கான சாத்தியத்தை கண்டறிவதற்கும் முதலீடுகளை தேடிப் பெற்றுக் கொள்வதற்கும் நிகுலிஸ் நீர்ப்பாசன நிறுவனத்துடனும் நிதி மற்றும் அபிவிருத்திக்கான பங்குடமையுடனும் தூதரகம் கலந்துரையாடியது. (இலங்கை விவசாயத்துறை நவீனப்படுத்தல் கருத்திட்டம், பி.156019 – ஐஅடொ 125மில்லியன்)

III. உயர் தொழில்நுட்ப சேதன மற்றும் உயிர்செயற்திறன் விவசாய கருத்திட்டங்கள் பற்றி முதலீட்டு நிதிய லிமிடெட்டுன் தூதரகம் கலந்துரையாடியது. (விவசாய சேவை மற்றும் பயிற்சி நிலையம் ஒன்றுக்கான நிதியளித்தல் பொதி)

**ஈ. கலாசார உறவுகள்**

I. இஸ்ரேலில் வாழ்கின்ற இலங்கை சமூகத்துடன் இணைந்து தூதரகமானது தேசிய தினம், சிங்கள இந்து புதுவருடம், வெசாக், பொசொன் போன்ற கலாசார நிகழ்வு கொண்டாட்டங்களை ஒழுங்கமைத்தது.

II. தூதரகத்தின் அழைப்பின் பேரில் 2017 ஆகஸ்ட் 7-19 வரை ஜெருசலத்தில் நடைபெற்ற 42ஆவது சர்வதேச கலைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் பண்டிகையில் இலங்கையின் முன்னணி கலைகள் மற்றும் கைப்பணி தயாரிப்பு கம்பனியான ரண்ருவன் பங்கேற்றது.

**தொழிலாளர் நலனோம்புகை**

I. மக்கள் தொகை குடிபெயர்வு மற்றும் எல்லை அதிகாரசபை அலுவலர்களுடன் பருவகால விவசாய பணியாளர்கள் தொடர்பில் பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையின் தலைவர் திரு. லக்ஷ்ன் அபேகுணவர்தன தலைமையில் பேராளர் குழுவென்று 2017 ஏப்ரல் 3-7வரை இஸ்ரேலுக்கு விஜயம் செய்தது.

II. 2017ஆம் ஆண்டில் விவசாயிகளினால் ஏறக்குறைய 500 இலங்கையர்கள் விவசாயப் பணியாளர்களாக சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர் என இஸ்ரேலிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

III. அரசாங்கத்திடம் இருந்து அரசாங்கம் முன்னோடி கருத்திட்டத்தின் கீழ் தொழில் வாய்ப்புகளுக்காக 26 கவனிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 13 பேர் ஏற்கனவே இஸ்ரேல் வந்தடைந்துள்ளனர்.

IV. புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உதவி வழங்குவதில் மக்கள் தொகை குடிபெயர்வு மற்றும் எல்லை அதிகாரசபை தொடர்புடைய தொழில் தருனர்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றுடன் தூதரகம் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

V. 40 ஏனைய நாடுகள் / பாரிய சுற்றுலா கம்பனிகளுடன் இணைந்து 23ஆம் சர்வதேச மத்திய தரை சுற்றுலாச் சந்தை 2017இல் தூதரகம் பங்குபற்றியது.

VI. தெல் அவிவ், செறட்டன் ஹோட்டலுடன் கூட்டிணைந்து தூதரகமும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமும் 2017 மே 7 தொடக்கம் 18 வரை தெல்அவிவில் முதன் முறையாக இலங்கைக்கே உரிய சமையல் பண்டிகையினை ஒழுங்கமைத்தது.

VII. இஸ்ரேல் - இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவி, இஸ்ரேல் உள்ள இலங்கைக்கான கௌரவ காவற் தூதர் மற்றும் ஏனைய வாய்ப்பான முதலீட்டாளர்களை தூதுவர் சந்தித்து இலங்கையின் முதலீட்டுச் சூழல், போக்குவரத்து சுற்றுலாத்துறை மற்றும் உட்கட்டமைப்பு பற்றி அவர்களுக்கு விளக்கமளித்தார்.

**ஜோர்தான்**

1. இருபக்க உறவுகள்

i. 2017-07-19அன்று ஜோர்தானில் வெளிநாட்டு அமைச்சர் மூலமான தூதரகங்களின் பிரதானிகளுக்கான பலஸ்தீனம் / இஸ்ரேலில் அல்அக்சா மஸ்ஜித் பிரச்சினை பற்றிய விளக்கமளித்தலில் தூதுவர் கலந்து கொண்டார்.

ii. தூதுவர் ஜோர்தானின் விவசாய அமைச்சர் பொறியியலாளர் அதிமேதகு காலித் ஹுனீபா அவர்களைச் சந்தித்து ஜோர்தானுக்கு இலங்கை விவசாய உற்பத்திகள் ஏற்றுமதி செய்வது பற்றி கலந்துரையாடினார். ஜோர்தானுக்குள் சில இலங்கை விவசாய உற்பத்திகளின் இறக்குமதியினை ஜோர்தான் தடை செய்துள்ளது.

**ஆ. பல்பக்க உறவுகள்**

I. பிராந்திய மற்றும் உலக பிரச்சினையை கருத்திற்கொண்டு அரப் சிந்தனை மன்றத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட கருத்தரங்குகளில் தூதுவர் பங்கு கொண்டார்.

II. 2017 செப்டெம்பர் 28-29 வரை அரப்- ஆபிரிக்க பொருளாதார மன்றத்தின் தூதுவர் பங்கேற்றார்.

III. அமனரில் இருந்து 700 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள சாட்டரி என்ற இடத்தில் உள்ள சிறிய அகதி முகாமுக்கு தூதுவர் விஜயம் செய்து சுமார் ரூபா. 250,000 பெறுமதியான இலங்கை தேயிலையை அன்பளிப்பு செய்தார்.

**இ. பொருளாதார உறவுகளும் முதலீடுகளும்**

I. ஜோர்தானின் சர்கா வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து 2017-08-23 அன்று தூதரகம் பட்டய கண்காட்சி ஒன்றினை ஒழுங்கமைத்தது. இதில் சுமார் 50 இலங்கை கம்பனிகளின் தகவல்கள் காட்சிபடுத்தப்பட்டன.

II. அம்மானில் நடைபெற்ற கூட்டத்தில் அம்மான் வர்த்தக சம்மேளனத்தின் தலைவரையும் உறுப்பினரையும் சந்தித்து அம்மான் வர்த்தக சம்மேளனமானது ஜோர்தானின் இலங்கையின் தனிநாட்டு உற்பத்தி கண்காட்சி ஒன்றிணை ஒழுங்கமைப்பதற்கு தூதரகத்துக்கு உதவுவதற்கான அதன் தயார்நிலையினை வெளிப்படுத்தியது.

III. தூதரக வளாகத்தில் ''உலக இலங்கை தேயிலை விருந்து'' என்ற தொனிப்பொருளின் கீழ் உலகப்பிரபல்யம் வாய்ந்த இலங்கைத் தேயிலையின் 150ஆவது வருட நிறைவு கொண்டாட்டத்தினை தூதரகம் ஒழுங்கமைத்தது.

IV. வர்த்தக உறவுகளை மேலும் அதிகரிப்பது பற்றி ஜோர்தான் வர்த்தக சம்மேளனத்தின் தலைவருடன் தூதுவர் கலந்துரையாடினார்.

V. தமது தளமாக ஜோர்தானில் கொண்டு இயங்குகின்ற ஈராக் வர்த்தக அமைப்பின் உறுப்பினர்களுக்காக தூதரகத்தில் முதலீடு மற்றும் வர்த்தக மன்றமொன்று ஒழுங்கமைக்கப்பட்டது.

VI. ஜோர்தானின் சுற்றுலாத்துறை அமைச்சரையும் ஜோர்தான் சுற்றுலாச் சபை தலைவரையும் தூதுவர் சந்தித்தார்.

VII. 2017 மார்ச் 5ஆம் திகதியன்று ஜோர்தான் சுற்றுலாச் சபை தலைவரை தூதுவர் சந்தித்ததுடன் 2017 மார்ச் 12 அன்று ஜோர்தானின் பயண முகவர்கள் அமைப்பின் தலைவரையும் சந்தித்தார்.

VIII. ஜோர்தானின் சுற்றுலா அதிகாரசபையின் அழைப்பின் பேரில் இலங்கையின் ஊடக பேராளர் குழுவொன்று ஜோர்தானுக்கு விஜயம் செய்தது.

**ஈ. கலாசார உறவுகள்**

I. 2017 தேசிய தினக் கொண்டாட்டத்தில் இலங்கை கலாசார நடனம் ஒழுங்கமைக்கப்பட்டது.

II. நல்லிணக்கம் 2017இற்கான தேசிய வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

III. சிங்கள தமிழ், புதுவருடம், வெசாக், பொசொன் மற்றும் பெரியவெள்ளி கொண்டாட்டங்களை தூதரகம் கொண்டாடியது.

**உ. தொழிலாளர் நலனோம்புகை**

I. ஜோர்தானின் தொழில் அமைச்சரை தூதுவர் சந்தித்து ''தொழிலாளர் ஏற்றுமதி இறக்குமதியுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்கும் அத்தகைய தொழிலாளர்களின் ஒப்பந்த அபிவிருத்தி மீதான தொழிலுக்கு அமர்த்தலுடன் தொடர்புடைய

பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது பற்றிய வழிகளையும் முறைகளையும் உருவாக்குதல்'' பற்றிய உடன்படிக்கையினை மீளப் புதுப்பிப்பது பற்றி கலந்துரையாடினார்.

II. தூதுக்குழு பல ஆடைத் தொழிற்சாலைகளுக்கு விஜயம் செய்து உரிமையாளர்கள் / சொந்தக்காரர்கள் / சிரேஷ்ட முகாமையாளர்களை சந்தித்து அவர்களது இலங்கைத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வழங்கும் நலனோம்புகை மற்றும் வசதிகள் பற்றி விசாரித்ததுடன் இலங்கையர்களுக்காக கிடைக்கப்பெறும் புதிய தொழில்வாய்ப்புகளையும் ஆய்வு செய்தது.

III. ஜோர்தான் அதிகாரிகளுடன் வெற்றிகரமாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு ஜோர்தானில் உள்ள பல இளைஞர்களை தூதரகம் இலங்கைக்கு திருப்பி அனுப்பக்கூடியதாக இருந்தது.

IV. தூதுவர் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து சிறைச்சாலை அதிகாரிகளை சந்தித்தார்.

V. ஜோர்தானில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், புலம்பெயர்வதற்கான சர்வதேச அமைப்பு மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றினால் ஒழுங்கமைக்கப்பட்ட மன்றங்களில் தூதரகம் பங்கேற்றது.

VI. இலங்கை பணியாளர்களுக்கு உதவுவதற்காக தூதரகத்தினால் விசேட மருத்துவ முகாம் ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டதுடன் ஜோர்தானில் உள்ள இலங்கை வைத்தியர்கள் மூலம் சுகாதார பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

3. **குவைத்**

**அ. இருபக்க உறவுகள்**

கொழும்பில் 2017 சனவரி 23-24 திகதி வரை அபுதாபி கலந்துரையாடலில் நான்காவது அமைச்சு மட்ட ஆலோசனையில் கலந்து கொள்வதற்காக சமூக விவகாரங்கள் மற்றும் தொழில் அமைச்சர் அத்துடன் பொருளாதார அலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சர் அதிமேதகு (திருமதி) ஹின்ட் சுபையா பாரக் அல் சுபையா அவர்களின் தலைமையிலான ஐந்து உறுப்பினர்கள் கொண்ட பேராளர் குழுவின் விஜயத்துக்கு வசதியளிக்கப்பட்டது.

வெளிநாட்டுத் தொழில் பிரதியமைச்சர் கௌரவ மனுஷ நாணயக்கார 2017 ஆகஸ்ட் 13-16 வரை குவைத்துக்கு விஜயம் செய்தார். அவர், மனிதவலு பொது அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், வீட்டுப் பணியாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் புனருத்தாபன அத்துடன் சட்ட அமுலாக்கல் கீழ்ச் நிலைச் செயலாளர் ஆகியோரைச் சந்தித்து புலம்பெயர் பணியாளர்கள் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி கலந்துரையாடினார்.

**ஆ. பல்பக்க உறவுகள்**

தூதரகம், ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடலின் பின்வரும் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தது.

2017 சனவரி 15-17 பதினைந்தாவது ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல், அபுதாபி. 2017 ஜுன் 10-14 ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் சுற்றுலா அமைச்சர்கள் கூட்டம், சீம். ரீப் கம்போடியா : சக்தி பாதுகாப்பு மற்றும் நிலைத்திருத்தல் தன்மை நோக்கிய ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல், ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் சக்தி பணியாற்றுக் குழு மற்றும் முதலாவது கிழக்காசிய சக்தி மன்றம் 2017 ஆகஸ்ட் 7-10 போஹோல், பிலிப்பைன்ஸ்: 72ஆவது ஐநா பொதுச்சபையின் ஒரு நிகழ்வாக ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டம் 2017 செப்டெம்பர் 21 நியூயோர்கில் நடைபெற்றது.

**இ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

I. அரசாங்க தொழில் முயற்சிகள் அபிவிருத்தி கௌரவ அமைச்சர் கபீர் ஹாசிம் 2017 பெப்ரவரி 25 அன்று குவைத்தில் வர்த்தக தலைவர்களையும் முதலீட்டாளர்களையும் சந்தித்தார்.

II. 2017 எட்டு முதல் 9 வரை இரண்டாவது இணைந்த வர்த்தக குழு கூட்டத்தினை நடத்துவது பற்றி செப்டெம்பர் 20 அன்று பொருளாதார அலுவல்களுக்கான பிரதி உதவி வெளிநாட்டு அமைச்சருடன் தூதரகம் கலந்துரையாடியது.

III. இலங்கைக்கு குவைத் வர்த்தகர்களின் விஜயங்களுக்கும் ஏற்றுமதியாளர்களை சந்திப்பதற்கும் தூதரகம் ஏற்பாடுகளைச் செய்தது.

IV. சுமார் 20 தேயிலை வர்த்தகர்கள் மற்றும் ஊடக ஆளணியினரின் பங்கேற்புடன் தூதுவரின் இல்லத்தில் 2017 ஜுலை 6 அன்று உலக இலங்கைத் தேயிலை விருந்துபசாரம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

**ஈ. கலாசார உறவுகள்**

I. குவைத்தில் உள்ள கலாசார, கலை மற்றும் கடிதங்களுக்கான தேசிய மன்றத்துடன் கூட்டிணைந்து தூதரகம் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் மூலம் 2017 பெப்ரவரி 4-12 வரை "கலாசார வாரம்" ஒன்றினை ஏற்பாடு செய்தது. இசையமைப்பாளர் பிரதீப் ரத்னாயக்க மற்றும் சந்தன விக்ரமசிங்கவுடன் அவரது 20 பேர் கொண்ட நடனக்குழுவும் இவ் பண்டிகையில் கலந்து கொண்டனர்.

II. பெப்ரவரி 9 அன்று கிரவுன் பிளா'ா ஹோட்டலில் பாரகா வரவேற்பறையில் தேசிய தின வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

III. கிரவுன் பிளாசா ஹோட்டலின் சில்க் உணவகத்தில் பெப்ரவரி 10ஆம் திகதியன்று உணவுப் பண்டிகையொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. பெப்ரவரி 12 அன்று சமியா அரங்கில் கலாசார நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

IV. தேசிய தின கொண்டாட்டங்களுக்கு இணையாக “குவைத் தொலைக்காட்சி 2” அலைவரிசையிலும் தேசிய நாளிதழ்களிலும் இலங்கை கலாசார குழுவின் நடிப்புகள் ஒளிபரப்புப்பட்டடன. பெப்ரவரி அரப் டைம்ஸ் பத்திரிகையில் இணை வெளியீடு ஒன்றும் வெளியிடப்பட்டது.

V. இரண்டு நாள் வெசாக் தின, பொசன் கொண்டாட்டத்தையும் தூதரகம் ஏற்பாடு செய்தது.

## உ. தொழிலாளர் நலனோம்புகை

I. மனித வலுவுக்கான பொது அதிகாரசபை திணைக்களத்துக்கும் உள்நாட்டுத் தொழில் திணைக்களத்துக்கும் குவைத்தில் உள்ள சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பு அலுவலகத்துக்கும் குவைத்தை தளமாகக் கொண்டுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும் பொது அதிகாரசபை திணைக்களத்திற்கும் தூதரகம் பிரதிநிதித்துவங்களை மேற்கொண்டது.

II. புலம்பெயர் தொழிலாளர்கள் தாம் எதிர்கொண்ட பல்வேறு சவால்களை தீர்த்துக் கொள்வதற்கு பல எண்ணிக்கையானோருக்கு தூதரகம் உதவி வழங்கியது. (பெண்கள் 150 ஆண்கள் 537)

III. உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுதல் மற்றும் தகைமையுடைய அதிகார நிறுவனங்களுக்கு பிரச்சினையை சமர்ப்பித்தல் ஊடாக பல எண்ணிக்கையிலான புலம்பெயர் பணியாளர்களின் சம்பள நிலுவைகளை தூதரகம் பெற்றுக் கொடுத்தது. (குவைத் தினார் 21,667.750) (ரூபா. 10,999,629.29) 51 புலம்பெயர் பணியாளர்களின் ரூபா 11 மில்லியன் சம்பள நிலுவைகள்.

IV. பாதுகாப்பு இல்லத்தில் உள்ளவர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்புதல் இக்காலப்பகுதியில் 574 ஆகும். தூதரகத்தின் உதவியை நாடிய சட்டத்துக்கு புறம்பான 420 புலம்பெயர் பணியாளர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கு தூதரகம் மத்தியஸ்தம் வகித்து வசதியளித்தது.

V. தூதரகத்தின் தலையீட்டின் ஊடாக வைத்தியசாலைக் கட்டணங்கள் இரத்துச் செய்யப்பட்டு 25 நோயாளிகள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். தூதரகம் கிரமமாக மத்திய சிறை மற்றும் நாடுகடத்துதல் முகாம்களுக்கு விஜயம் செய்தது.

VI. கைதிகள் இடமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் தமது எஞ்சிய காலத்தினை இலங்கை சிறையில் கழிப்பதனைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை கைதிகளின் 140 விண்ணப்பங்களை தூதரகம் அனுப்பியது.

## 6. லெபனான்

### இருபக்க உறவுகள்

I. வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்க 2017 ஆகஸ்ட் 16-19 வரை லெபனானுக்கு விஜயம் செய்து அதிமேதகு சனாதிபதி மைக்கல் அவுன், கௌரவ பிரதமது சான் ஹரீரி, கௌரவ வெளிநாட்டு அலுவல்கள்

அமைச்சர் ஜெப்ரன் பஸ்ஸில், கௌரவ சபாநாயகர் நபீஹ் பெர்ரி, மற்றும் லெபனான் அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகளை சந்தித்தார். கௌரவ இராஜங்க அமைச்சர் அரசியல், வர்த்தகம், பொருளாதாரம், தொழில், தூதரக சேவை மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பினை அதிகரிப்பது பற்றி கலந்துரையாடினார். கௌரவ இராஜங்க அமைச்சர் அதிமேதகு சானாதிபதிக்கும், கௌரவ பிரதம அமைச்சருக்கும் கௌரவ வெளிநாட்டு அமைச்சருக்கும் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு அழைப்பு விடுத்தார்.

**ஆ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

I. 2017 ஆகஸ்ட் மாதம் கௌரவ இராஜாங்க அமைச்சரின் விஜயத்தின் ஓர நிகழ்வாக வர்த்தக மன்றமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 30 முன்னணி வர்த்தகர்கள் லெபனான் வர்த்தக அலுவலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.
இலங்கையின் பொருளாதார இராஜதந்திர முயற்சிகளின் கீழ் லெபனானில் வாழ்கின்ற இலங்கை சமூகத்துடன் இணைந்து தூதரக வளாகத்தில் 2017 செப்டெம் 24 அன்று இலங்கை வர்த்தக கண்காட்சி மற்றும் உணவுச் சந்தையொன்று நடாத்தப்பட்டது.

**இ. கலாசார உறவு**

I. 2017 பெப்ரவரி 4ஆம் திகதியன்று 69 தேசிய தினத்தை கொண்டாடியது.
II. 2017 மார்ச் 19 அன்று லெபனானில் உள்ள இலங்கை மகளிர் அமைப்பின் தலைவி திருமதி மெலனி கண்டியாராச்சி மூலம் நடாத்தப்பட்ட மகளிர் தின கொண்டாட்டத்தில் தூதரகம் பங்கேற்றது.
III. இலங்கை சமூகத்தின் பங்கேற்புடன் சிங்கள தமிழ் புதுவருட கொண்டாட்டம், வெசாக் பண்டிகை, பொசன் பண்டிகை, இப்தார் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
IV. ஏப்ரல் 23அன்று பெக்காவில் கலாசார தின நிகழ்விலும் அபேயில் லெபனான் பல்கலைக்கழகத்தில் ஜுலை 8-9 வரை அபே மரபுரிமைபண்டிகையிலும் தூதரகம் பங்கேற்றது.

**ஈ. தொழிலாளர் நலனோம்புகை**

I. தூதுவரின் வேண்டுதலின் பிரதிபலனாக லெபனானில் வசித்து வருகின்ற ஆவணங்கள் இல்லாத இலங்கை புலம்பெயர் பணியாளர்களை தண்டப்பணத்தின் அரைவாசியை செலுத்திய பின்னர் நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கு லெபனான் அரசாங்கம் தீர்மானமொன்றினை நிறைவேற்றியது.
II. வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்க 2017 ஆகஸ்டில் லெபனானில் பாதுகாப்பு அதிபதியுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

6. **ஓமான்**

**இருபக்க உறவுகள்**

I. கௌரவ தயாகமகே 2017 ஜனவரி 13 அன்று ஓமானுக்கு விஜயம் செய்து இலங்கை உற்பத்திகளுக்கான சந்தை ஊக்குவிப்புகளின் சாத்தியப்பாட்டினை கண்டறிந்தார்.

II. கொழும்பில் அபுதாபி கலந்துரையாடலில் சிரேஷ்ட அலுவலர்கள் கூட்டம் மற்றும் அமைச்சு மட்ட ஆலோசனையில் பங்கேற்பதற்கு ஓமானின் மனித வலு அமைச்சின் கீழ் நிலைச் செயலாளர் அதிமேதகு ஹமாத் பின் காமிஸ் அல் அமிரி 2017 சனவரி 23-24 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.

III. இந்து சமுத்திர பிராந்தியத்தில் உள்ள ஜேர்மன் தூதுவர்களின் மாநாட்டில் பங்கேற்பதற்கு ஓமானின் இராஜதந்திர அலுவல்களுக்கான கீழ் நிலைச் செயலாளர் அதிமேதகு கலாநிதி மொஹமட் பின் அவ்வாத் அல் ஹசன் 2017 ஏப்ரல் 5-7 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர் வெளிநாட்டு அலுவல்கள் முன்னாள் பிரதியமைச்சர் கௌரவ கலாநிதி ஹர்' டி சில்வா, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோரைச் சந்தித்தார்.

IV. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் 2017 மே 9-17 வரை ஓமானுக்கு விஜயம் செய்து ஹம்பாந்தோட்டையில் தாபிக்கப்பட உள்ள முன்மொழியப்பட்ட இலங்கை எண்ணெய் சுத்திகரிப்பு கருத்திட்டத்துக்கு முதலீடு செய்வதற்கு ஓமானின் ஒயில் மற்றும் வாயு அமைச்சின் ஆதரவினை பெற்றுக் கொள்வதற்கு 2017-5-10 அன்று ஓமானின் அதிமேதகு எண்ணெய் மற்றும் வாயு அமைச்சரை சந்தித்தார்.

V. வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை மாணவர்களுக்காக ஓமான் அரசாங்கத்தினால் புலமைப்பரிசில்கள் வழங்குவது தொடர்பிலான செயற்பாடுகளை தூதரகம் ஒருங்கிணைத்தது. 2017 இலங்கை விமான கல்லூரியில் பயிற்சி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ஓமான் மாணவர்களை அனுப்புவதற்கு வசதிகளை வழங்கியது.

**ஆ. பொருளாதார மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்**

பின்வருவனவற்றுக்கு தூதகரம் வசதியளித்தது.

I. ஓமானில் இருந்து வர்த்தக பேராளர் குழுவொன்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கூட்டிணைப்பில் 2017 மே 15 -18 வரை இலங்கைக்கு விஜயம் செய்தது.

II. விவசாய கருத்திட்டம் ஒன்றுக்காக வடமாகாணசபையினால் வழங்கப்பட்ட காணித்துண்டு ஒன்றினை பரீட்சிப்பதற்கு 2017 பெப்ரவரியில் இலங்கைக்கு "அல்தாமிர் விவசாய சர்வதேச அபிவிருத்தி எல்எல்சீ" நிறுவனத்தின் ஓமான் முதலீட்டாளர்கள் குழுவொன்றின் விஜயம்.

III. ஏற்றுமதி மற்றும் உணவுப்பதப்படுத்தல் வசதியினை நிறுவுதல். இது ஐஅடொ. 20மில்லியன் பெறுமதியுடையதும் லுலு குழுவினால் கட்டுநாயக்க ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் யூாஸ் லங்கா என்ற புதிதாக உருவாக்கப்பட்ட நிறுவனத்தின் கீழ் 2017 மேயில் ஆரம்பிக்கப்பட்டதுமாகும்.

IV. 2017 பெப்ரவரி 6 அன்று மஸ்கட்டில் தூய இலங்கையுடன் கூடிய முதலாவது தேனீர் அருந்தும் மண்டபம் திறக்கப்பட்டது.

V. 2018 ஒக்டோபரில் வீதிக்கண்காட்சி ஏற்பாடு செய்வதில் சிறிலங்கா சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஈடுபடுதல், ஊடகங்களுக்கு அறிவித்தல், கலாசார குழுவொன்றை ஒழுங்குபடுத்தல் உள்ளடக்கிய செயற்பாடுகள்.

VI. லிங்க் வெளியீடுகளுக்கு இலங்கையின் சுற்றுலா மற்றும் இலங்கை-ஓமான் உறவுகள் பற்றிய கட்டுரையொன்று வழங்கப்பட்டது.

**உ. கலாசார உறவுகள்**

I. இலங்கையின் 69ஆவது சுதந்திர தின நிகழ்வின் இராஜதந்திர வரவேற்பும் நடாத்தப்பட்டது.

II. ஓமானில் வாழ்கின்ற இலங்கையர்களுடன் இணைந்து தைப்பொங்கல் தினம், சிங்கள மற்றும் தமிழ் புதுவருடம், வெசாக் தினம்,ஈத் மற்றும் முதலாவது முகர்ரம், வாஸ் என்ட் கட்டினா போன்ற கொண்டாட்டங்களை 2017இல் ஏற்பாடு செய்தது.

III. அல்பலாஜ் ஹோட்டலில் 2017 மார்ச் 16-17ஆம் திகதிகளில் இசை நிகழ்ச்சிக்காக இலங்கை கலைஞர்கள் ஓமானுக்கு விஜயம் செய்தனர். ஓமானில் "சிஹினயக்கி ரே"ரூபாவாஹினி நிகழ்ச்சியில் இரண்டு பாகங்களை பதிவு செய்வதற்கு தயாரிப்பாளரின் வருகைக்கு தூதரகம் வசதியேற்படுத்திக் கொடுத்தது.

IV. 2017 ஏப்ரல் 28 அன்று "எத்தர அபி" அமைப்பின் கூட்டிணைப்புடன் களனிப் பல்கலைக்கழகத்துடன் தொல்பொருளியல் பேராசிரியர் இராஜ் சோமதேவா என்பவர் மூலம் இலங்கை வரலாறு பற்றி ஓமானில் பொது விதிமுறை ஒன்றினை ஏற்பாடு செய்வதற்கு தூதரகம் வசதியேற்படுத்திக் கொடுத்தது.

V. ஜனவரி 13இல் சொஹாரில் பொதுத் தினம் ஒன்றும் மே 19இல் இலவச மருத்துவ முகாம் ஒன்றும் இலங்கை சமூகத்துக்காக நடாத்தப்பட்டது.

VI. தூதர வளாகத்தில் அறநெறிப் படசாலை நடாத்தப்படுகின்றது.

**ஊ. தொழிலாளர் நலனோம்புகை**

I. வெளிநாட்டு தொழில் பிரதி அமைச்சர் மனூஷ நாணயக்கார 2017 ஆகஸ்ட் 10-13 வரை ஓமானுக்கு விஜயம் செய்தார். அவர் தொழில் சார் வல்லுனர்கள் உள்ளடகங்களாக கிட்டத்தட்ட மூவாயிரம் இலங்கையர்களை சந்தித்து தொழிற்சாலைகளுக்கும் விஜயம் செய்தார். 2017 ஆகஸ்ட் 11 நடமாடும் தூதரக சேவையொன்றும் நடத்தப்பட்டது. மனிதவள அமைச்சின் பதில் கீழ்நிலைச் செயலாளர் திரு. சலீம் நஸீர் அல் கத்ரமியை சந்தித்தார்.

II. வெளிநாட்டு தொழில் அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றிலிருந்து மேலாளர் குழுவொன்று 2017 ஜுலை 16 அன்று ஓமானுக்கு விஜயம் செய்தது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஊடாக ஓமானுக்கு இலங்கையின் பெண் வீட்டுப் பணியாளர்கள் ஆட்கடத்தப்படுவதற்கு இட்டுச் செல்கின்ற ஆட்சேர்ப்பு செயன்முறையில் உள்ள துர்நடத்தைகள் பற்றி ஓமானின் மனிதவள அமைச்சுடன் கலந்துரையாடினார்.

III. ஓமானில் உள்ள வெளிநாட்டு வேலை முகவர் நிலையங்களுடன் (பெசன் அப்பாரன் எல்எல்சீஇ போல்டிக் டெக்ஸ்டைல் டிரேடிங் இன்டர்நெ'னல் கன்சல்டிங் கம்பனி, கன்ஸ்ரக்ஸ்டன் டெக்னிகல் சேர்விசஸ் கம்பனி, நிப்ராஸ் குரூப்) இலங்கையில் இருந்து திறன்பெற்ற ஊழியர்களுக்கான தொழில்வாய்ப்புகளை ஊக்குவிப்பது பற்றி தூதரகம் கலந்துரையாடல்களை நடத்தியது.

IV. 3674 தொழில் ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்பட்டன. 148 தொழில் கட்டளைகள் அனுமதிக்கப்பட்டன. 451 பதிவுகள், பாதுகாப்பு இல்லங்களுக்கு பெண் பணியாளர்கள் அறிக்கையிட்டனர், சிறைச்சாலை விஜயங்கள் -16, வைத்தியசாலை விஜயங்கள் -54, நீதிமன்ற விஜயங்கள் -41, பணியிட விஜயங்கள் -9, வழக்கு தொடுத்தல் -47

**யெமன் (ஓமானுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது)**

**அ. இருபக்க உறவுகள்**

2017 செப்டெம்பர் 14 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்ட வதியாத தூதுவராக எமன் குடியரசின் சனாதிபதி அதிமேதகு அப்த் ரப்பு மன்சூர் ஹாதி அவர்களிடம் தூதுவர் நியமனக் கடிதத்தினைக் கையளித்தார்.

**ஆ. ஊழியர் நலனோம்புகை**

2016 செப்டெம்பர் முதல் எமனின் அல்ஹுதைதாவின் எதிர்ப்பு நிர்வாகத்தினால் பிடித்து வைக்கப்பட்டிருந்த இலங்கை கடலோட்டிகள் 9 பேரை பாதுகாப்பாக விடுவித்து நாட்டுக்கு திருப்பியனுப்புவதை தூதரகம் கையாண்டது.

**7. பலஸ்தீனம்**

**இருபக்க உறவுகள்**

I. 2016- 2017 ஆம் கல்வியாண்டுக்காக பலஸ்தீன மாணவர்களுக்கு பட்டப்படிப்பு, பட்டபின்படிப்புகளுக்காக மூன்று புலமைப்பரிசில்களை வழங்குவதை ஒருங்கிணைத்தல்.

II. இலங்கை பிரதிநிதி பின்வரும் அதிகாரிகளுடன் சந்திப்புகளை நடத்தினார்.

- ஆசிய-ஆபிரிக்க துறைகளின் பிரதானி கலாநிதி மெசன் சனியா பலஸ்தீனம்

- இலங்கை நட்புறவு அமைப்பின் தலைவர் எந்திரி மொஹமட் அப்துல்லா மற்றும் உறுப்பினர்கள்.

- வெளிநாட்டு அலுவல்கள மற்றும் சர்வதேச உறவுகளுக்கான சனாதிபதியின் ஆலோசகராக புதிதாக நியமிக்கப்பட்டதையொட்டி முன்னாள் பதாவின் வெளிநாட்டு உறவுகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் கலாநிதி நபில் சாத்.

- இராணுவ பயிற்சி பரிமாற்றல்களின் சாத்தியம் பற்றி கலந்துரையாடுவதற்கு அரப் மற்றும் சர்வதேச உறவுகள் பிரதானி கேர்ணல் கலாநிதி மொஹமட் சலாஹுத்தீன் அவர்களை உட்துறை அமைச்சில் சந்திப்பு.

- வெளிநாட்டு அமைச்சின் உபசரணைப் பிரதானி திருமதி அபீ ரமாஹியைச் சந்தித்து பிரதிநிதிகளுக்கான பலஸ்தீன இராஜதந்திர அட்டை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் சர்வதேச உறவுகள் மீதான சனாதிபதியின் ஆலோசகர் நபீல் சாத்

III. பலஸ்தீன சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் பணிப்பாளர் நாயகம் திரு. இமாத் சுகாரி 2017 ஆகஸ்ட் 10 அன்று இலங்கைக்கு விஜயம் செய்தார்.

IV. சிரேஷ்ட அலுவலர் மட்ட அரசியல் ஆலோசனைகள் பற்றிய முதல் சுற்று கொழும்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் 2017 ஏப்ரல் 21 அன்று இடம்பெற்றது.

V. நீர்கொழும்பு மற்றும் பெத்லஹேம் நகரங்களை இரட்டைப்படுத்துவதற்கான முயற்சிகள்.

**ஆ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

I. இலங்கை பிரதிநிதி பின்வரும் அதிகாரிகளுடன் சந்திப்புகளை நடத்தினார்.

- பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்தினை விருத்தி செய்யும் பொருட்டு தேசிய பொருளாதார அமைச்சர் திருமதி அபீர் ஒபே.
- விவசாய அமைச்சர் சுபியான் சுல்தான்
- பலஸ்தீன விவசாய திணைக்கள அலுவலர்கள்
- ஹோட்டல்கள், ஸ்பாக்கல் (SPAs) போன்ற சுற்றுலா துறைகளில் முதலீடுவதற்கு விரும்புகின்ற பலஸ்தீன வர்த்தகர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை வெளிநாட்டு அமைச்சில் சந்தித்தல்.
- நப்லூஸ் வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு. ஒமர் ஹாசிம் முன்னாள் பெத்லஹேம் நகர பிதா திருமதி வேறா பாபுனை சந்தித்து பெத்லஹேமில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியை நடத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.
- பீடுனியா பெண்கள் சங்கத்தின் தலைவி திருமதி லீன டபீஸ் அவர்களை சந்தித்து இலங்கையில் உள்ள மகளிர் சங்கங்களான ஒத்துழைப்பு பற்றி கலந்துரையாடப்பட்டது.

II. பிரதிநிதிகள் தூய ஒலிவ் எண்ணெய் சவர்க்கார தொழிற்சாலைக்கு விஜயம் செய்து வர்த்தக தொடர்புகளை ஆரம்பித்தனர்.

III. பலஸ்தீன தேசிய தொலைக்காட்சி பிரதிநிதியினை நேர்கண்டது. இதில் இலங்கை சுற்றுலா மற்றும் வர்த்தக முதலீட்டினை ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கையின் தேசிய நிகழ்வின் பொருத்தமான வரலாற்று

விழுமியங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் பலஸ்தீன பிரயாண முகவர் நிலையங்களுடன் கலந்துரையாடல்களும் இடம்பெற்றது.

IV. வெஸ்ட் பேக்ங் மற்றும் காஸா நகர்களில் இலங்கை தேயிலையினை ஊக்குவிப்பவர்களுக்காக 2017 நவம்பர் 30 டிசம்பர் 3 வரை நடைபெறவுள்ள நத்தார் சந்தையில் இரண்டு கூடங்களை வழங்குவதற்கான செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு.

V. பலஸ்தீன இராஜ்ஜியத்தில் இலங்கையினை ஊக்குவிப்பதில் இலங்கை தேயிலை வர்த்தகர்களுக்கும் சுற்றுலா தொழிற்படுத்துநர்களுக்கும் உதவியளிக்கப்பட்டது.

**இ. கலாசார உறவுகள்**

I. இலங்கையின் 69ஆவது சுதந்திர தினம் கிரான்பாக் ஹோட்டலில் கொண்டாடப்பட்டது.

II. இப்தார் நிகழ்வும் விசேட ரமழான் தொழுகையும் நடாத்தப்பட்டது.

**ஈ. தொழிலாளர் நலனோம்புகை**

I. பலஸ்தீனத்தில் பணியாற்றுகின்ற சில இலங்கையர்களுடன் இலங்கை பிரதிநிதி சந்திப்புகளை நடாத்தியதுடன் அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் பற்றி தொடர்புடைய பலஸ்தீன அதிகாரிகளுக்கு பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது.

**10. கட்டார்.**

**அ. இருபக்க உறவுகள்**

I. மத்திய மாகாண ஆளுநர் கௌரவ நிலூகா ஏக்கநாயக்க 2017 ஏப்ரல் 19-21 வரை கட்டாருக்கு விஜயம் செய்தார். டோஹாவில் உள்ள ஸ்டாபட் இலங்கை பாடசாலைக்கும் விஜயம் செய்தார்.

II. வெளிநாட்டு அலுவல்கள் இராஜங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க 2017 ஜுலை 4 அன்று டோஹா கட்டார் நகருக்கும் இலங்கை தூதரகத்துக்கும் விஜயம் செய்தார்.

III. முன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க 2017 ஜுலை 8-9 வரை கட்டாருக்கு விஜயம் செய்தார். அவர் கட்டாரின் அதி உத்தம அமீர், அதிமேதகு பிரதம அமைச்சர் மற்றும் உட்துறை அமைச்சர் அத்துடன் அதிமேதகு வெளிநாட்டு அமைச்சர் ஆகியோரையும் கட்டார் எயார்வேசின் பிரதம நிறைவேற்று அதிகாரியையும் சந்தித்தார்.

IV. கல்வித்துறையில் ஒத்துழைப்பு பற்றி இலங்கையின் கல்வி அமைச்சினதும் கட்டார் இராஜ்ஜியத்தின் மற்றும் உயர்கல்வி அமைச்சின் அலுவலர்களுக்கிடையில் 2017 மே 23 அன்று கலந்துரையாடல் இடம்பெற்றது.

V. கட்டார் இராஜ்ஜியத்துக்கான இலங்கையின் அரச தலைவரின் மூலமான முதலாவது உத்தியோகபூர்வ அரச விஜயத்துக்கு முன்னேற்பாட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சனாதிபதியாக உயர் பதவியொன்று வழங்கப்பட்ட பின்னர் மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கு அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் முதலாவது விஜயம் 2017 ஒக்டோபர் 25-26

**ஆ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

ஐ. கொழும்பில் தமக்கு உரித்தான அதிநவீன ஏற்பாட்டு மற்றும் பொதியிடல் நிலையமொன்றினை நிறுவுவதற்கு 2017 மே 18 அன்று லூலு குரூப் இன்டர்நெஷனல் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. யூசுப் அலி ஆ.யு. அவர்களின் விஜயத்தினை தூதரகம் ஒருங்கிணைத்தது.

**இ. கலாசார உறவுகள்**

I. ஓமானில் வாழ்கின்ற இலங்கையர்களுடன் இணைந்து தைப்பொங்கல் தினம், சிங்கள மற்றும் தமிழ் புதுவருடம், வெசாக் தினம், ஈத் மற்றும் முதலாவது முகர்ரம் போன்ற கொண்டாட்டங்களை 2017இல் ஏற்பாடு செய்ததது.

**ஈ. தொழிலாளர் நலனோம்புகை**

I. இலங்கையில் இருந்து இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதற்காக அதன் செயன்முறையினை சீரமைப்பதன் மூலம் தொழிலாளர் பிரிவு ஆட்சேர்கின்ற முகவர்கள் / கம்பனிகள் / தொழில்தருணர்களுக்கு அவசியமான வழிகாட்டல்களுடன் உதவி அளிக்கின்றது.

II. இக்காலப்பகுதியின் போது தூதரகத்துக்கு 122 பெண் வீட்டுப் பணியாளர்கள் (வீட்டுப் பணியாளர்/ குழந்தை கவனிப்பாளர், பராமரிப்பாளர் மற்றும் சேவகர்கள்) அறிக்கையிட்டனர்.

III. இக்காலப்பகுதியின் போது ஆண் தொழிலாளர்கள் ஊடாக 1,548 தொழில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

IV. சிறைச்சாலைகள் / நாடுகடத்தில் நிலையங்களுக்கு காலமுறையாக விஜயம் செய்து அடிப்படை அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.

V. தூதரகத்தின் பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருக்கின்ற குழந்தைகளுக்கு குழந்தை உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

VI. இலங்கை தூதரகத்தின் கட்டுக்காப்பின் கீழ் பெண் பாதுகாப்பு இல்லங்களில் உள்ள மற்றும் இலங்கைக்கு திரும்புவதற்கு உதவியை நாடுகின்றவர்களுக்கு விமானச்சீட்டு செலவு நிலுவைத் தொகை வழங்கப்பட்டது.

11. சவுதி அரேபியா

**இருபக்க உறவுகள்**

I. வெளிநாட்டு தொழில் அமைச்சின் செயலாளர் திரு. ஜி.எஸ்.விதானகேயின் தலைமையில் உத்தியோகபூர்வ பேராளர் குழுவொன்று தொழிலாளர் வழங்கல் மீதான இணைந்த ஆணைக்குழுவை சந்திப்பதற்காக 2017 ஜனவரியில் சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்தது.

II. கௌரவ அமைச்சர் ரவூப் ஹக்கீம் 2017 மார்ச்சில் சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்தார். சுற்றாடல், நீர் மற்றும் விவசாய அதிமேதகு அமைச்சர் எந்திரி அப்துல் ரஹ்மான் பின் அப்துல் அல் மெஹேசன் அல் பஹ்லி அவர்களைச் சந்தித்தார்.

III. பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ காதர் மஸ்தான் ஆகியோர் சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்தனர்.

IV. அல் வலீத் தலால் கொலையாளி மன்றத்தின் தாபகர் இளவரசர் அல் வலீத் பின் தலால் பின் அப்துல் அஸீஸ் 2017 ஜுலை 4 அன்று இலங்கைக்கு விஜயம் செய்து அதிமேதகு சனாதிபதி கௌரவ பிரதமர் மற்றும் கௌரவ வெளிநாட்டு அமைச்சருடன் சந்திப்புகளை நடத்தினார். கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சுனில் ஹெட்டியாராச்சி ஜெத்தா மற்றும் றியாத் நகரங்களுக்கு விஜயம் செய்தார். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உயர்மட்ட பேராளர் குழு சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்தது.

**ஆ. பல்பக்க உறவுகள்**

I. இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பில் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு விசேட தூதுவர் ஒருவரை நியமிப்பதற்கு அரசியல் விவகார பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் தூதுவர் தாரிக் அலி பாக்கித்துடன் அதிமேதகு தூதுவர் கலந்துரையாடல்களை நடத்தினார்.

**இ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

I. பெப்ரவரியில் 69ஆவது சுதந்திரதின விசேட வரவேற்பில் தனி நாடு இலங்கை ஏற்றுமதி உற்பத்திகள் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

II. 2017 மார்ச்சில் நிதி அமைச்சில் இருந்து பேராளர் குழுவொன்று சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்து அபிவிருத்திக்கான சவுதி நிதியத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டது : அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தில் இருந்து பேராளர் குழுவொன்று 2017 ஏப்ரலில் நிதி அமைச்சில் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்கு இலங்கைக்கு விஜயம் செய்தது.

III. சவுதி அரேபியாவில் உள்ள ஜசீரா செய்திப் பத்திரிகையின் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஒருவர் 2017 ஆகஸ்ட்டில் கொழும்பில் வருகைதரு ஊடகவியலாளர் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

IV. 2017 ஜுலையில் தூதரகம் றியாத்தில் உலக இலங்கைத் தேயிலை விருந்துபசாரத்தினை ஏற்பாடு செய்தது.

V. ஜித்தாவில் ஜே.டி.ரி.எக்ஸ் பயண சுற்றலாச் சந்தையில் 15 சுற்றுலா கம்பனிகள் பங்கேற்றதுடன் 2017 ஏப்ரலில் றியாத்தில் றியாத் சுற்றுலா சந்தை 2017இல் 12 சுற்றுலா கம்பனிகள் பங்பற்றின.

VI. 2017 மார்ச் மற்றும் மே மாதங்களில் சவுதி அரேபியாவில் இருந்து 2 பேராளர் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்து முதலீட்டுச் சபை, இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் கம்பனிகளுடன் வர்த்தகம் மற்றும் முதலீட்டு நோக்கங்கள் பற்றி கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

**ஈ. கலாசார உறவுகள் (றியாத்)**

I. தூதர வளாகத்தில் 2017 பெப்ரவரி 4 அன்று 69ஆவது சுதந்திரதினத்தை குறிக்கும் முகமாக தூதரகம் நிகழ்ச்சியொன்றினை நடாத்தியது. வர்த்தகம், சுற்றுலா மற்றும் முதலீடுகள் பற்றி இரண்டு செய்தித்தாள் இணை பத்திரிகைகள் அரபு மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டன. தூதரகம் 2017 பெப்ரவரி 27 அன்று டுவைக் மாளிகையில் 69ஆவது தேசிய தினத்தை கொண்டாடியது.

II. சிங்கள தமிழ் புதுவருட தினத்தை கொண்டாடுவதற்கு தூதரகம் உதவியளித்தது. வெசாக் மற்றும் சீல வியாபாரம் உள்ளடங்களாக 20 பௌத்த சமய செயற்பாடுகளையும் தூதரகம் ஏற்பாடு செய்தது : 15 கத்தோலிக்க சமய செயற்பாடுகள் : தைப்பொங்கல் உள்ளடங்களாக 40 இந்துமத செயற்பாடுகள் மற்றும் 37 வருடாந்த நிகழ்வுகள் : 28 அறநெறிப் பாடசாலை நிகழ்ச்சிகள் (பௌத்த மற்றும் கத்தோலிக்கம்) 2017 மார்ச்சில் இலங்கை முஸ்லிம் கலாசார நிகழ்வு நடைபெற்றது.

III. ஜித்தாவில் உள்ள இலங்கை காவற்தூதரகம் 3750 இலங்கை ஹஜ்ஜாஜிகளுக்கு வசதியளித்தது. தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ஏ.எச்.எம். ஹலீம் அவர்கள் கௌரவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியுடன் இணைந்து சென்ற ஹஜ் பேராளர் குழுவுக்கு தலைமை வகித்தார்.

உ. தொழிலாளர் நலனோம்புகை

I. இலங்கை பொருளாதாரத்துக்கு சவுதிஅரேபியாவில் இருந்தான பங்களிப்பை உச்சப்படுத்துவதற்கும் சவுதிஅரேபியாவில் வாழ்கின்ற இலங்கை சமூகத்தின் நலனோம்புகையை மேம்படுத்துவதற்கும் இலங்கையர்களுக்காக தூதரக சேவையின் தரத்தினை அதிகரிப்பதற்கும் நோக்கு – 2020 கருத்திட்ட அமுலாக்கம் மார்ச்சில் அமுலாக்கப்பட்டது. (இது 2016இல் தூதரகத்தின் இலங்கை தொழில் வல்லுநர்களின் முயற்சியொன்றாகும்)

II. இலங்கை புலம்பெயர் பணியாளர்களுக்கு உதவும் வகையில் தூதரகம் 9 நடமாடும் சேவைகளை நடாத்தியது. (றியாத்)

III. பொதுமன்னிப்பு காலத்தின் போது சுமார் 4200 இலங்கையர்கள் நன்மை அடைந்ததுடன் இலங்கைக்கு திரும்பினர். (றியாத் 3000, ஜித்தா 1300)

IV. ஆண் பணியாளர்களிடம் இருந்து 680 முறைப்பாடுகள் தூதரகத்துக்கு (றியாத்) கிடைக்கப் பெற்றதுடன் இதில் 392 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டன. 188 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

V. ஆண் பணியாளர்களிடம் இருந்து 269 முறைப்பாடுகள் தூதரகத்துக்கு (ஜித்தா) கிடைக்கப் பெற்றதுடன் இதில் 80 வீதமான முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டன. 70 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

VI. தூதரகம் (றியாத்) இலங்கையர்களுக்கு வசதியளிப்பதற்காக பெண் நலனோம்புகை/ சமூக காப்பு நிலையங்களுக்கு 417 விஜயங்களை மேற்கொண்டது. தூதரகம் நீதிமன்றங்களில் 40 தொழிலாளர் வழக்குகளில் பங்கேற்றது. வைத்தியசாலைகளுக்கு 11 விசேட விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொலிஸ் நிலையங்களுக்கு 72 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு இல்லங்களுக்கு சராசரியாக 84 பேரை தூதரகம் பராமரிக்கின்றது. பாதுகாப்பு இல்லத்தில் அடைக்கலம் பெற்றுள்ள பெண் வீட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கை 913 ஆகும்.

VII. காவற் தூதரகம் (ஜித்தா) இலங்கையர்களுக்கு வசதியளிப்பதற்காக பெண் நலனோம்புகை / சமூக காப்பு நிலையங்களுக்கு 70 விஜயங்களை மேற்கொண்டது. காவற் தூதரகம் நீதிமன்றங்களில் 15 தொழிலாளர் வழக்குகளில் பங்கேற்றது. வைத்தியசாலைகளில் தீவிரநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 20 விசேட விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு இல்லங்களுக்கு சராசரியாக 5 பேரை தூதரகம் பராமரிக்கின்றது. பாதுகாப்பு இல்லத்தில் அடைக்கலம் பெற்றுள்ள பெண் வீட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கை 45 ஆகும்.

12. ஐக்கிய அரபு இராச்சியம்

**அபுதாபியில் உள்ள தூதரகம்**

**அ. இருபக்க உறவுகள்**

I. அபுதாபியில் 15ஆவது ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் அமைச்சு மட்ட சந்திப்பில் 2017 ஜனவரி மாதம் 15-17

II. அபுதாபியில் 2017 மே 23-24ஆம் திகதிகளில் 13ஆவது இரேனா மன்றக்கூட்டத்தில் தூதரகம் பங்குபற்றியது.

III. அபுதாபியில் 2017 பெப்ரவரி 19-23 வரை நடைபெற்ற சர்வதேச பாதுகாப்பு கண்காட்சி மற்றும் மாநாட்டில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ருவன் விஜேவர்தன பங்கேற்றார்.

IV. சனவரி 12-22 வரை அபுதாபி நிலைத்திருக்கத்தக்க வாரம் 2017 நிகழ்வில் தூதரகம் பங்கேற்றது.

V. பாதுகாப்பு சேவைள் மற்றும் கட்டளை பதவியினர் கல்லூரியில் இருந்து 20 பேர் கொண்ட சிரேஷ்ட இராணுவ பேராளர் குழுவொன்று 2017 ஆகஸ்ட் 10-22 வரை ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு ஆய்வுச்சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டது.

VI. அபுதாபியில் நடைபெற்ற அபுதாபி கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக வெளிநாட்டு தொழில் மற்றும் நீதி அமைச்சர் கௌரவ தலதா அத்துகொர தலைமையிலான பேராளர் குழுவொன்று 2017 செப்டெம்பர் 13ஆன்று ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு விஜயம் செய்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் மனித வளங்கள் குடிவரவு அமைச்சரை சந்தித்தது.

**ஆ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்.**

I. ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் கூட்டிணைப்புடன் தூதரகம் 2017 மே 4-6 வரை "அடைவிடங்கள் 2017- பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சி, அபுதாபி" என்ற சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பிரசாரமொன்றினை ஏற்பாடு செய்தது. நிகழ்வில் பங்கேற்ற இந்திய, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா உள்ளடங்களாக 7 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். மேலும் இலங்கை சிறுவர் குழுவொன்றினால் அரங்கேற்றப்பட்ட கலாசார நடனம் ஒன்றுடன் நிகழ்வு அலங்கரிக்கப்பட்டது.

II. இலங்கைத் தேயிலையின் 150ஆவது வருடத்தினை கொண்டாடும் முகமாக 2017 ஜூலை 6 அன்று உலக இலங்கைத் தேயிலை உபசார நிகழ்வு டுபாயில் இடம்பெற்றது.

**இ. கலாசார உறவுகள்**

I. இலங்கையின் 69ஆவது சுதந்திர தினம் 2017 பெப்ரவரி 17 அன்று அபுதாபி போர்புளோர் அரங்கில் கொண்டாடப்பட்டது.

II. அபுதாபியில் வாழ்கின்ற இலங்கை சமூகத்துடன் ஒன்றிணைந்து தூதரகம் சிங்கள தமிழ் புதுவருடம், வெசாக் மற்றும் இப்தார்-2017 குறிக்கின்ற கலாசார நிகழ்வுகளைக் கொண்டாடியது.

III. தூதுரகத்துடன் இணைக்கப்பட்டுள்ள வெள்ளிக்கிழமை அறநெறிப் பாடசாலை பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது.

IV. 2017 இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதரகம் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு நிவாரண சேகரிப்பு பணியினை ஏற்பாடு செய்து ரூபா 15,565,257.02 சேகரிக்கக்கூடியதாக இருந்தது. (ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள லூலு இன்டர்நெஷனல் நிறுவனத்திடம் இருந்தான 15,297,024.00 பண அன்பளிப்பினையும் இது உள்ளடக்குகின்றது) உணவு, உடுதுணிகள் மற்றும் சுகாதார பொருட்கள் போன்ற நிவாரணப் பொருட்களையும் சேகரிக்கக்கூடியதாக இருந்தது.

**ஈ. தொழிலாளர் நலனோம்புகை**

I. மாதத்தில் ஒரு தடைவை அபுதாபியில் இருந்து 260 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள அல்ஐன் பிராந்தியத்தில் காவற் தூதர் மற்றும் தொழிலாளர் நடமாடும் சேவையை தூதரகம் நடாத்தியது.

II. பாதுகாப்பு இல்லங்களில் அடைக்கலம் புகுந்த வீட்டை விட்டு ஓடிய 32 வீட்டுப் பணிப்பெண்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

**ஐக்கிய அரபு இராச்சியம் - டுபாயில் உள்ள காவற் தூதர் நாயகம்**

**அ. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்.**

I. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை சுற்றுலா பணியகம் என்பவற்றுடன் கூட்டிணைந்து 2017 பெப்ரவரி 26 தொடக்கம் மார்ச் 02 வரை "வளைகுடா உணவு 2017" நிகழ்வில் பங்கேற்பதற்கு இலங்கையின் உணவு மற்றும் குடிபானங்களை ஏற்றுமதி செய்கின்ற கம்பனிகள் ஒருபோதும் இல்லாத அளவு பெரிய குழுவுக்கு வசதி வழங்கப்பட்டது.

II. இலங்கை தேயிலைக் கைத்தொழிலின் 150 வருட நிகழ்வை கொண்டாடும் முகமாக இலங்கைத் தேயிலை விருந்துபசாரம் டுபாயின் கிரவுன் பிளாசா ஹோட்டலில் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.

III. இலங்கையின் 69ஆவது சுதந்திர தினத்தை குறிக்கும் முகமாக இலங்கையின் ஏற்றுமதிகள் சுற்றுலாத்துறை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் போன்றவற்றுக்கான பரந்த பிரசாரம் ஒன்றினை வழங்குவதற்கு 2017 பெப்வரவரி 4 அன்று ஐக்கிய அரபு இராச்சியத்தின் முன்னணி ஆங்கில செய்திப் பத்திரிகைகளின் ஒன்றான கலீஜ் டைம் பத்திரிகையில் விசேட இணை வெளியீடு ஒன்று வெளியிடப்பட்டது.

IV. ஐக்கிய அரபு இராச்சியத்தில் செயற்பாட்டிள்ள வர்த்தக ஒழுங்கு விதிகள் பற்றி வர்த்தக தலைவர்களுக்கு அறிவுறுத்துவதற்கு டுபாயில் உள்ள வர்த்தக மன்றத்துடன் ஒன்றிணைந்து வர்த்தக வலையமைப்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

V. ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இலங்கையின் விவசாய ஏற்றுமதிகளை அதிகரிப்பதில் பொருத்தமான ஒழுங்கொன்றை ஏற்படுத்தும் சாத்தியம் பற்றி உணவுத்துறையில் உள்ள முன்னணி ஐக்கிய அரபு இராச்சிய கம்பனியொன்றான பரகத் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது.

VI. இக்காலப்பகுதியின் போது இலங்கையில் இருந்து டுபாய்க்கு 35 இலங்கை ஏற்றுமதியாளர்கள் விஜயம் செய்தனர்.

VII. இலங்கையில் இலங்கை கம்பனி ஒன்றினால் அடுக்குமாடி வகை ஆதனங்களின் உரித்தாகக் கொள்வதை ஊக்குவிப்பதற்கு டுபாயில் ஆதன ஊக்குவிப்பு பிரிவு ஒன்று நடாத்தப்பட்டது. டுபாயில் பெரும் எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களும் டுபாயில் வாழ்கின்ற வெளிநாட்டவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

VIII. அமெரிக்க டொலர் பத்து மில்லியனுடன் கூடிய முதலீட்டுடன் கூடிய கட்டுநாயக்கவில் விவசாய உற்பத்திகள் பதப்படுத்தல் நிலையமொன்றை தாபிப்பதற்கு ஐக்கிய அரபு இராச்சியத்திலும் மத்திய கிழக்கிலும் அமைந்துள்ள மிகப்பெரிய இந்திய அதிசிறப்பு அங்காடிகளில் ஒன்று லூலு கைபர் மார்கட் நிறுவனத்துக்கு உதவிகள் வழங்கப்பட்டது. கம்பனியானது இலங்கையில் ஏற்கனவே அதன் வர்த்தக தொழிற்பாடுகளை ஆரம்பித்துள்ளதுடன் அடுத்த சில வருடங்களினுள் முதலீட்டினை ஐ.அமெ ஒரு பில்லியனாக விஸ்தரிப்பதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

IX. 2017 ஏப்ரல் 2-4 வரை டுபாயில் நடைபெற்ற வருடாந்த பாரிய முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வு ஒன்றான அரப் முதலீட்டுச் சந்தை நிகழ்வில் கலந்து கொள்வதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ றிசாத் பதியுதீன் மேல்மாகாண கௌரவ ஆளுநர் மற்றும் விவசாய, காணி, நீர்ப்பாசன அமைச்சின் திரு. என். நில்வலா ஆகியோருடன் டுபாய்க்கு விஜயம் செய்தார்.

X. வெட்டப்பட்ட பூக்களுக்காக ஐக்கிய அரபு இராச்சியத்திலும் வளைகுடா நாடுகளிலும் உள்ள மொத்த சந்தைப் பங்கில் ஐம்பது வீதத்துக்கும் மேல் தன்னகத்தே கொண்டுள்ள சந்தையின் முன்னணி கம்பனியான பிளெக் டுலிப் புளோவர்ஸ் என்ற கம்பனியின் வெளிநாட்டு தொழிற்பாடுகள் பணிப்பாளருடன் ஐஅடொ. 2 மில்லியனுக்கும் மேற்பட்ட முதலீட்டுடன் இலங்கையில் முதலிடுவதை ஊக்குவித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

XI. உல்லாச ஹோட்டல் ஒன்றில் இலங்கையில் முதலிடுவதற்கு ஆர்வத்துடன் உள்ள எம்பிசன் கம்பனி குழு தலைவர் மற்றும் பணிப்பாளருடன் கூட்டமொன்று இடம்பெற்றதுடன் இலங்கைக்கான அவரது விஜயம் ஒருங்கிணைக்கப்பட்டு முதலீட்டுச்

சபை அலுவலர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுடனான சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஐ அமெ. 3-5 மில்லியன் மொத்த முதலீடு ஒன்றுடன் சுற்றுலா ஹோட்டலினை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே உள்ள சுற்றுலா ஆதனம் ஒன்றுடன் ஒப்பந்தமொன்றினை இந்நிறுவனம் வெற்றிகரமாக கைச்சாத்திட்டுள்ளது.

XII. கொழும்பில் சினிமா மற்றும் ஏனைய சேவைப் பயன்பாடுகளை உள்ளடக்கிய நவீன பெரியளவிலான அதிசிறப்பு சந்தையொன்றினை தாபிப்பதற்கான பொருத்தமான காணியொன்றினை தேடுவது தொடர்பில் இலங்கை கருத்திட்ட அலுவலர்கள் மற்றும் பிரதம அமைச்சரின் அலுவலக பிரதிநிதிகளுடன் ஒன்றிணைந்து கொழும்பில் லூலு கைபர் மார்க்கட்டின் குழுப் பணிப்பாளருடன் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதி ஒரு பில்லியன் பெறுமதியாக இருக்கும்.

**ஆ. கலாசார உறவுகள்**

II. துபாயில் வாழ்கின்ற இலங்கையர்களுடன் இணைந்து தைப்பொங்கல் தினம், சிங்கள மற்றும் தமிழ் புதுவருடம், வெசாக் தினம், ஈத் மற்றும் முதலாவது முகர்ரம், போன்ற கொண்டாட்டங்களை 2017இல் ஏற்பாடு செய்தது.

III. துபாயில் புதிதாக தாபிக்கப்பட்ட லங்காராமய விகாரையின் மாதாந்த பௌத்த சமய அனுட்டானங்கள்.

IV. காவற்றூதரக வளாகத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அறநெறி பாடசாலை நடாத்துதல்.

**இ. தொழிலாளர் நலனோம்புகை**

I. 326 தொழில் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு 111 புதிய தொழில் கட்டளைகள் வழங்கப்பட்டன.

II. இடர்களை எதிர்கொண்ட 30 இலங்கையர்கள் வெற்றிகரமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

III. தேவையுடைய இலங்கையர்களுக்கு வேண்டப்பட்ட உதவிகளை வழங்குவதற்காக டுபாயிலும் வடக்கு இராச்சியத்திலும் அமைந்துள்ள குடிவரவு மற்றும் பொலிஸ் அவலுவலகங்களுக்கு 85 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

IV. அதிகாரிகளின் வேண்டுதலின் பேரில் இலங்கையர்களுக்குத் தேவையானவற்றை செவிமடுப்பதற்காக பல எண்ணிக்கையிலான தொழிலாளர் முகாம்கள்.

V. சிறைச்சாலையில் உள்ள இலங்கையரின் தேவைகளை செவிமடுப்பதற்காக சிறைச்சாலைகளுக்கு 17 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

VI. ஆட்சேர்கின்ற முகவர்களுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற 100 முறைப்பாடுகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு கருத்திற் கொள்ளப்பட்டன.

VII. இலங்கையர்கள் மூலமான நட்டஈட்டுக் கோரிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் கருத்திற் கொள்ளப்பட்டது. அதாவது பாதுகாப்பு இல்லங்களில் உள்ளவர்களின் தேவைகள்: மனித உடல்களை நாட்டுக்கு திருப்பி அனுப்புதல்.

VIII. பாதிக்கப்பட்ட இலங்கையர்களின் நலன்களை கவனிப்பதற்காக டுபாயிலும் வடக்கு எமிரேட்சிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு 16 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

****

# சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்ற பிரிவு

**சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்ற பிரிவு**

1. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்ற பிரிவானது 2016 ஜனவரி 25ஆந் திகதிய *"இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சை மீள கட்டமைத்தல் மீதான அறிக்கை"* யின் அடிப்படையில் 2016 பெப்ரவரி 15ஆந் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. பிரிவிற்கான ஊழியர்களை நியமித்ததன் அடிப்படையில் 2017 மார்ச் மாதத்தில் இந்த பிரிவு முழுமையான செயற்பாட்டிற்கு வந்தது.

2. இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்ற விடயங்கள் மீது அதிகமான முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இந்த விடயங்கள் அமைச்சின் தற்போதைய பல பிரிவுகளினாலும் குறுக்கீட்டு அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், பல வரியமைச்சுக்களும், முகவர் நிலையங்களும் இந்த விடயங்கள் மீது நேரடியான பொறுப்புடைமையை கொண்டுள்ளன. எனினும், சர்வதேச விவகாரங்களில் இந்த விடயங்கள் முக்கியமாக வளர்ச்சியடைந்து வருவதனால், இந்த விடயங்கள் மீது அமைச்சினால் குறிப்பான கவனங்கள் செலுத்தப்பட்டு, அதன் காரணமாக புதிய பிரிவொன்று நிறுவப்பட்டது. இந்த பிரிவின் பணிகள் பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்துகின்றது:

   (i) சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான முக்கியத்துவத்தின் திட்டங்களை / அடிப்படைகளை அடையாளங்காணுதல் மற்றும் சாத்தியமான நடைமுறைப்படுத்தலுக்காக குறித்த அடிப்படை விடயங்களை உரிய அதிகாரசபைகளின் கவனத்திற்கு கொண்டு வருதல்

   (ii) இலங்கையை சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் / மாநாடுகள் / பட்டறைகளுக்கான அடித்தளமாக விருத்தி செய்தல்

   (iii) சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு வெளிநாட்டுக் கொள்கை உட்செலுத்தல்களை தேவையான அதிகாரசபைகளுக்கு வழங்குதல்

   (iv) சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான தாக்கங்கள் மீதான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை ஆய்வு செய்து, கொள்கை வகுப்பாளர்களுக்கு உட்செலுத்தல்களை வழங்குதல்

(v) சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் மீதான சர்வதேச அடிப்படைகளை உட்செலுத்துவதனை முறையாக வழங்குவதற்காக சார்பான பங்குதாரர்களுக்கு வசதியளித்தல்

(vi) சர்வதேச ரீதியில் சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான இலங்கையின் செயற்பாடுகளின் ஒருமைப்பாட்டை வலுவூட்டி, ஒருங்கிணைப்பை மேம்படுத்தல்

(vii) சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் சார்பான சர்வதேச மாநாடுகள் / பட்டறைகளில் இலங்கையின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல்

(viii) இலங்கையின் புவியியல் மூலோபாய தன்மையை விருத்தி செய்வதற்காக தொடர்பாடல்கள் / அறிக்கைகள் / விடயங்களை அபிவிருத்தி செய்தல்

(ix) நேர்மறை பங்களிப்பை உருவாக்கி, இலங்கை அதற்கு பங்களிப்புச் செய்வதற்கு உதவுவதற்காக சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களில் பிராந்திய மற்றும் உலக மாற்றங்களை அடையாளங்காணுதல்

(x) சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களில் ஐக்கிய நாடுகள் முறைமை உள்ளடங்கலான சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள வழமையான ஒருங்கிணைவு மற்றும் பலனுள்ள செயற்பாடுகளை சாத்தியமான வகையில் அடையாளங்காணுதல்

(xi) அனுபவங்களை பகிர்தல், சிறந்த நடத்தைகள், கருவிகள் மற்றும் முறைமைகள் மற்றும் சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களில் கற்றுக்கொண்ட பாடங்கள் போன்றன உள்ளடங்கலான உள்-முகவர் தகவல் பரிமாற்றத்தை வசதியளித்தல்

(xii) வெளிநாட்டலுவல்கள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையிலான பாதுகாப்பு விடய மூலோபாயங்களிலிருந்ததான இணைப்புக்களை வழங்கி, பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு இராஜதந்திர அடிப்படைகளுக்கு அடையாளங்காணப்பட்ட இலங்கையின் தூதரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் இணைந்து ஆதரவளித்தல்

(xiii) பாதுகாப்பு நிறுவனம், சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்கள் மற்றும் பாதுகாப்புடன் கையாளும் சிந்தனைத் தாங்கி ஆகியவற்றுடனான இணைப்புக்களை தாபித்து, பேணுதல்

(xiv) கடல் வடிவமைப்பு திட்டமிடல், கடல் பாதுகாப்பு மூலோபாயம் மற்றும் கடல் மூலோபாயம் ஒன்று ஆகியவற்றை உள்ளடக்கும் இலங்கையின் கடல்சார் கொள்கையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு வசதியளித்தல்

(xv) காலநிலை மாற்ற செயலகம் மற்றும் ஏனைய உள்ளார்ந்த பங்குதாரர்களுடன் பல்வேறு நாடுகளிலும் பயன்பாட்டிலுள்ள புதிய காலநிலை மாற்ற மத்தியஸ்த்த தொழினுட்பங்களுடன் தகவல்களை பகிர்வதனை ஆதரவளித்து, வசதியளித்தல்

(xvi) மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சு, மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சு, நிலையான அபிவிருத்தி மற்றும் வனவாழ்வு அமைச்சு, காலநிலை மாற்ற செயலகம், சிந்தனைத் தாங்கிகள், சிவில் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. முகவர்கள், பிராந்திய மற்றும் உலக நிறுவனங்கள் மற்றும் காலநிலை மாற்ற விடயங்களை கையாளும் தனியார் துறை நிறுவனங்களுடனான இணைப்புக்களை தாபித்து, பேணுதல்

மீளாய்வின் கீழான குறித்த காலத்தில் இந்தப் பிரிவினால் பின்வரும் பிரதான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. **2017 ஜூன் 5 - 9 காலப்பகுதியில் நியுயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமைக்காரியாலயத்தின் எஸ்.டி.ஜி. 14 இன் நடைமுறைப்படுத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக உயர் மட்ட ஐ.நா. மாநாடுகளில் இலங்கை பிரமுகர்கள் பங்குபற்றுவதற்கான தயார்நிலை செயற்பாடுகள்** - எஸ்.டி.ஜி. 14 க்கு ஆதரவளிப்பதற்காக 2017 மே 25 - 26ஆந் திகதிய ஐ.நா. உயர் மட்ட மாநாட்டிற்கான தேசிய ஆலோசனைகளை நிலையான அபிவிருத்தி மற்றும் வனவாழ்வு அமைச்சுடன் இணைந்து தயார்நிலை கூட்டங்களை நடாத்துதல், நிகழ்ச்சி நிரல்களை வரைதல், பேச்சுக்கள் போன்றன உள்ளடங்கலாக இலங்கையில் ஒழுங்கு செய்வதற்கு ஒருங்கிணைக்கப்பட்டது. அத்துடன், நியூயோர்க்கில் நடைபெறவுள்ள பிரதான மாநாட்டிற்கான பேச்சுக்களை தயாரிப்பதற்கான உதவிகளும் முன்னெடுக்கப்பட்டன

2. **2017 ஆகஸ்ட் 30 - செப்டெம்பர் 2 வரையான இலங்கையின் கொழும்பில் நடைபெற்ற 2ஆவது இந்து சமுத்திர மாநாடு** - பிரதம அமைச்சரின் அலுவலகம் மற்றும் இந்திய பவுன்டேஷனுடன் இணைந்து மாநாட்டினை ஏற்பாடு செய்து, வசதியளிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. உயர் மட்ட

பிரதிநிதித்துவம் உள்ளடங்கலாக 32 நாட்டிற்கும் மேற்பட்ட அண்ணளவான 300 பிரமுகர்கள் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

3. **இந்து சமுத்திர நடத்தைக் கோவை மீதான தயார்நிலை செயற்பாட்டுக் கூட்டம் (2018 இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ளது)** - 2 மாநாடுகளையும், இந்து சமுத்திரத்தில் சுதந்திரமாக கடற்படைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடத்தைக்கோவை மீதான ஒரு இராஜதந்திர மாநாட்டையும் முன்னெடுப்பதற்காக பிரதம அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள அதிரடிப்படையினரின் செயற்பாடுகளுக்கு உதவுதல். மேலும், இந்த பிரிவானது இலங்கையின் இறைமைக் குறிக்கோள்களையும், கரிசணைக்கான அதிரடிப்படையின் செயற்பாடுகளின் விளக்கம் மீதான வரைவு விதிகளையும் தயாரித்தது.
4. **மோல்டாவில் 2017 அக்டோபர் 5 - 6 வரை நடைபெற்ற எங்கள் சமுத்திர மாநாடு "எமது சமுத்திரமும், வாழ்க்கைக்கான சமுத்திரமும்"** - மோல்டாவில் நடைபெற்ற எங்கள் சமுத்திர மாநாட்டில் வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு வசந்த சேனாநாயக்க அவர்களின் தலைமையிலான இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரமுகர் குழுவொன்று பங்குபற்றியது. இந்த செயற்பாட்டில் உரைகளை தயாரித்தல், இருதரப்பு கூட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் சார்பான பங்குதாரர்களுடன் உள்ளமைத்தல் போன்றன உள்ளடக்கப்பட்டன.

5. **இந்தியாவின் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் போர்ட் பிளயிரில் 2017 ஒக்டோபர் 4 - 6ஆந் திகதிகளில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கடல் சார் சட்டம் மீதான மாநாடு: உலகின் பொதுவான கடல்சார் விடயங்களை பேணுவதற்கான தீர்வுகள்** - தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் மாண்புமிகு ஹர்‘ டி சில்வா அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட நன்றியுரைக்கான வரைவு உரை தயாரிக்கப்பட்டது.

6. மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் மற்றும் சர்வதேச மற்றும் உள்நாட்டு மட்டங்களில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் உயர்மட்ட பிரமுகர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதன் வாயிலாக இந்த பிரிவானது மேலும் சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களின் பிரச்சினைகளை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு வழங்குவதற்கான தகவல் களஞ்சியமாகவும் செயற்படுகின்றது.

7. பல எண்ணிக்கையிலான இருதரப்பு, பல்தரப்புக் கூட்டங்கள் / மாநாடுகள் மற்றும் இந்தப் பிரிவில் குறித்த காலத்தில் மீளாய்வின் கீழுள்ள நிகழ்வுகள் ஆகியவற்றுக்கான உரைகள் / உள்ளடக்கங்கள் / பேசுவதற்கான குறிப்புக்களை வழங்கியுள்ளது.

8. இந்த பிரிவானது வரி முகவரமைப்புக்கள் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கு உதவியுள்ளது. அதாவது, (1) சிங்கப்பூரில் 2017 ஒக்டோபர் 9 தொடக்கம் 13ஆந்

திகதி வரை நடைபெற்ற கழிவு முகாமைத்துவம் மற்றும் கடல் குப்பைகளை குறைத்தல் மீதான பிராந்திய பயிற்சி நிகழ்ச்சியில் நிலையான அபிவிருத்தி மற்றும் வனவாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஆர்.எம்.டி.பி. மீகஸ்முல்ல அவர்களும், (2) பேங்கொக்கில் 2017 செப்டெம்பர் 15ஆந் திகதி நடைபெற்ற கடலின் வழமையான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்கான சுருக்கமான அணுகுமுறைகள் மீதான வரைவுப் பொருட்களுக்கான செயற்பாடுகளின் பாலி நடைமுறைகளுக்கான ஆலோசனைக் கூட்டங்களில் பாதுகாப்பு அமைச்சின் (சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி) மேலதிக செயலாளர் திரு. என்.ஜி. பண்டிதரத்ன அவர்களும் பங்குபற்றினர்.

9. இந்த பிரிவானது வெளிநாட்டலுவல்கள் அமைச்சை சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களில் ஏனைய வரியமைச்சுக்கள், முகவரமைப்புக்கள், நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகின்றது.

10. இலங்கையின் செயற்பாடுகளை சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களில் வலுவூட்டுவதற்காக இந்த பிரிவு ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது. உலக அதிகாரத்தின் மாற்றம் மற்றும் சர்வதேச புவியரசியல் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள பல மாற்றங்கள் காரணமாக, இந்த பிரிவானது சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களில் அனைத்து மட்டங்களிலும் முறையான விடயங்களை அடையாளங்காண்கின்றது.

11. பாதுகாப்பு அமைச்சின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையத்துடன் இணைந்து பங்குதாரர் வரைபடத்தை தயாரிக்கும் செயற்பாட்டில் இந்த பிரிவு ஈடுபட்டு வருகின்றது. இந்து சமுத்திர விவகாரங்களின் மீதான சர்வதேச நிறுவனங்கள் ∴ உடன்படிக்கைகள் ∴ சங்கங்கள் ∴ தயார்நிலையற்ற ஏற்பாடுகளின் அடிப்படையில் பங்குதாரர்களின் டிஜிட்டல் வரைபடத்தின் முதலாம் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

12. சமுத்திர விவகாரங்கள் சார்பான அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இந்த் பிரிவு பல்வேறு நாடுகளுடன் இணைந்து செயலாற்றியது. பிரான்ஸ், நோர்வே, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் பிரதிநிதிகளுடனான பல குறிப்பான கலந்துரையாடல்கள் 2017 காலப்பகுதிகளில் இடம்பெற்றன.

13. 2017 டிசம்பர் மாதத்தில் நோர்வே அரசாங்கத்துடன் இடம்பெற்ற வெளிநாட்டு அலுவலக ஆலோசனைகளில் பின்வரும் கோரிக்கைகள் மேற்கொள்ளட்டதுடன்,

நோர்வே அரசாங்கம் பின்வரும் விடயங்களுக்கு உதவுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியது.

அ. கண்டப்படுக்கை ஆணைக்குழுவிற்கான இலங்கையின் அறிக்கை சமர்ப்பிப்பிற்கான செயற்பாடுகளுக்கு நோர்வே நிபுணர்களின் மேலதிக உதவியை வழங்குதல் (தூதரகத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்ட 'ருஊடுழுளு ற்கான இலங்கையின் அறிக்கை சமர்ப்பிப்பிற்கான தொழினுட்ப உதவியை வழங்குதல்' (உடன்படிக்கை 2017 ஜுன் 19ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது) என்ற திட்டத்திற்கான உதவியின் தொடர்ச்சியாக இது அமைந்துள்ளது)

ஆ. நோர்வே நிபுணர்கள் கடலசார் வெளியக திட்டமிடல் மற்றும் உள்ளார்ந்த கரையோர வலய முகாமைத்துவம் மீதான தேசிய கருத்தரங்கு ஒன்றினை இலங்கையில் 2018இல் வழங்குதல்

இ. "நோர்வேயின் வெளிநாட்டு மற்றும் அபிவிருத்திக் கொள்கையில் சமுத்திரங்கள்" என்ற 2017ஆம் ஆண்டில் நோர்வே வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட நோர்வேயின் முதலாவது வெள்ளைத் தாளை வரைந்த உத்தியோகத்தர்களை / நிபுணர்களை அவர்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக அனுப்புதல்

ஈ. SDG 14இல் (நீருக்கு கீழான வாழ்க்கை) குறிப்பிடத்தக்க விசேட விடயங்களை விளக்குவதற்கும், மீன்பிடி வளங்களில் நிலையான முகாமைத்துவம் தொடர்பிலும் "நீல SDGக்கள்" என்ற கூட்டமொன்றை மீன்கள் உள்ளடங்கலான கடல்சார் வளங்கள் மீதான ஆய்வினை இலங்கைக்கும், நோர்வேக்குமிடையிலான மீன்கள் மீதான தொழினுட்ப மற்றும் நிறுவனசார் ஒத்துழைப்பாக மேற்கொள்ளும் நோர்வேயின் ஆய்வியல் கப்பல் டொக்டர் பிரிட்ஜ் ஒப் நான்சனின் பங்குபற்றுதலுடன் 2018 ஜுன் மாதத்தில் ஒழுங்கமைத்தல்

உ. மேற்படி விடயங்களில் உள்நாட்டு பங்குதாரர்கள் மற்றும் நோர்வே தரப்பினர்களுடன் சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்ற பிரிவானது தொடர்புகளை பேணி வருகின்றது.

14. கடல்சார் விடயங்கள் மற்றும் காலநிலை மாற்றம் போன்றன தொடர்பில் 2017இல் நடைபெற்ற பல உயர் மட்ட விஜயங்கள் / மாநாடுகளின் சொற்பொழிவுகள் / விடயங்களை வழங்குதல்

அ. 2017 ஒக்டோபர் 5 - 6ஆந் திகதிகளில் மோல்டாவில் நடைபெற்ற எங்கள் சமுத்திரம் மாநாட்டில் வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு வசந்த சேனாநாயக்க அவர்களால் நிகழ்த்தப்பட்ட உரை

ஆ. 2017 ஒக்டோபர் 9 - 10ஆந் திகதிகளில் நடைபெற்ற காலி கலந்துரையாடலில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அவர்களினால் “காலி கலந்துரையாடலின் முக்கியத்துவம் மற்றும் மேம்படுத்தப்பட்ட கடல்சார் பாதுகாப்பிற்கான பாரிய கடல்வள கண்காணிப்பு வாயிலான இலங்கை கடற்படையின் பங்களிப்பு” என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட உரை

இ. இந்தியாவில் 2017 ஒக்டோபர் 4 - 6ஆந் திகதி நடைபெற்ற “UNCLOS: பூகோள கடல்வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கான தீர்வுகள்” என்ற மாநாட்டில் மாண்புமிகு கலாநிதி ஹர்ஷ த சில்வாவினால் நிகழ்த்தப்பட்ட பிரியாவிடை உரை

ஈ. 2017 ஒக்டோபர் 13 தொடக்கம் 20ஆந் திகதிகளில் ரஷ்யாவின் சென்ட். பீற்றர்ஸ்பேர்க்கில் நடைபெற்ற 137ஆவது IPU ஒன்றுகூடல் மற்றும் அதனுடன் சார்பான கூட்டங்களின் விடயங்கள்

உ. கென்பராவில் 2017 நவம்பர் 15ஆந் திகதி அவுஸ்திரேலிய - இலங்கை சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடையில் நடைபெற்ற இரண்டாம் சுற்று கலந்துரையாடலின் விடயங்கள்

ஊ. 2017 நவம்பரில் கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பிரிவிற்காக வட கிழக்கு ஆசியாவில் மேற்கொள்ளப்பட்ட மூலோபாய பாதுகாப்பு அபிவிருத்திகள் தொடர்பான சுருக்கம்

எ. 2017 டிசம்பர் 11இல் நோர்வேயின் வெளிநாட்டு அலுவலக ஆலோசகர்களுடனான கலந்துரையாடலில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் ஆற்றப்பட்ட உரைக்கான குறிப்புக்கள்

15. கௌரவ . அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர், செயலாளர் மற்றும் சர்வதேச மட்டத்தில் இங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் ஏனைய உயர் மட்ட அதிகாரிகளுக்கு தேவையானதும், அவர்களால் கோரப்பட்டதுமான தகவல்களை வழங்குவதன் வாயிலாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சமுத்திர விவகாரம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்களுக்கான தகவல் மையமாக இந்த பிரிவு செயற்படுகின்றது.

**பல்தரப்பு உறவுகள்**

16. பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைவாக, தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் 2017 ஒக்டோபர் 18ஆந் திகதி நடைபெற்ற இந்து சமுத்திர விளிம்பு

அமைப்பின் அமைச்சர்கள் கூட்டத்திற்கான இலங்கை தூதுக்குழுவானது இந்து சமுத்திர விளிம்பு அமைப்பின் முக்கியத்துவம் வாய்ந்த கடல் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு விடயத்தில் தனது தலைமை ஒருங்கிணைப்பு அந்தஸ்த்தை தக்கவைத்துக்கொண்டது. இந்த பிரிவு இந்து சமுத்திர விளிம்பு அமைப்பின் கடல்வழி பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொழிற்பாட்டுக் குழுவை தாபிப்பதில் ஏனைய நாடுகளுடனும் (இந்தியா, அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, ஐக்கிய அரபு இராஜ்யம், தென்னாபிரிக்கா மற்றும் மடகஸ்கார்) மற்றும் இந்து சமுத்திர விளிம்பு அமைப்பின் செயலகத்துடனும் இணைந்து தற்பொழுது ஈடுபட்டு வருகின்றது. தொழிற்பாட்டுக் குழுவை தாபிப்பது தொடர்பிலான தயார்நிலைக் கூட்டத்தை இலங்கையில் ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடல்வழி பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் இந்து சமுத்திரத்திலுள்ள நாடுகளுக்கு மத்தியில் இணைத்தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கு இந்த பிரிவு எதிர்பார்க்கின்றது.

17. கௌரவ பிரதமரினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஆரம்ப ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்தப் பிரிவு தற்போது நாடுகள் மற்றும் கரையோர பாவனையாளர்களின் நன்மைக்காக இந்து சமுத்திரத்தில் கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்திகொள்வதற்காக ஆராய்வுகளுக்கான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக செயற்பட்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து மே மாதம் 1 ம் திகதி வரை மெல்போர்ன் டேகின் பல்கலைக்கழகத்தினால் முதலாவது மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இது கல்விசார் மாநாட்டின் அடையாளம் 11 ஆகும் இதனைபற்றிய மேலதிக விபரங்களை பினவரும் இணைப்பில் பெற்றுக்கொள்ளலாம்.
http:#www.deakin.edu.au/aboutdeakin/events/maritime-order-in-the-indian-ocean

- இரண்டாவது மாநாடு இலங்கையில் கொழும்பில் 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-22 ஆம் திகதி வரை நடைபெறும். போதைப்பொருள், மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்துடன் இணைந்து சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவகத்தினால் இந்ந மாநாடு ஏற்பாடு செய்யப்படவுள்ளதுடன் . இது 1.5 பயிற்சியாகும். இந்த இரு முனனேற்பாடுகளும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இராஜதந்திர மாநாட்டை இலங்கையில் நடாத்துவதற்கு வழியமைக்கும்.
- இந்த ஆரம்ப முயறச்சியை ஒருங்கிணைக்க கௌரவ பிரதமரால் நியமிக்கப்பட்ட அதிரடிபடை மற்றும் கௌரவ பிரதமரது அலுவலகம் என்பனவற்றின் உதவியுடன் ஆலோசனைகளில் பங்குபெருபவர்களது கலந்துரையாடல்களுக்கு வசதியளித்தல் மற்றும் கருத்து உட்கட்டமைப்புகளை தயாரித்தல் என்பன அடங்கலாக மேலே கூறப்பட்ட எல்லா மூன்று மாநாடுகளுக்குமான தயார்நிலை பணிகளை பிரிவு பொறுப்பேற்றுள்ளது

18. சீஷெல்ஸில் உள்ள எமது உயர்ஸ்தானிகரினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அடுத்து சோமாலிய கடற்கரையில் கடல் கொள்ளையர்கள் விடயமாக தொடர்பு கொள்ளக்கூடிய குழுக்களுடனான இலங்கையின் உரையாடல்களை அதிகரிக்கும் பணியை பிரிவு பொறுப்பேற்றது. குறிப்பாக இலங்கை CGPCS கடற்கரையில் இயங்கிவரும் தொழிற்பாட்டுக் குழுவின் செயலகமாக செயற்பட இலங்கை முன்வந்துள்ளது. கடலில் இயங்கும் செயற்பாடுகளுக்கான செயற் குழுவின் செயலகத்திற்காக இலங்கை கடற்படை இலங்கையின் முக்கிய புள்ளியாக சேவை செய்வதற்கான ஒப்புதலைப் பெறல் மற்றும் வரைபு அமைச்சரவைப் பத்திரத்தை தயாரித்தல் என்பன அடங்கலாக பாதுகாப்பு அமைச்சின் மூலம் ஒப்புதல் பெறுவது தொடர்பான பணிகளுக்கு இந்தப் பிரிவு வசதியளித்தது. கடலில் இயங்கும் செயற்பாடுகளின் தொழிற்பாட்டு குழுவாக இலங்கை செயற்படுவது சோமாலியா கடற்கரையிலிருந்து கடல் கொள்ளையை முறியடிப்பது தொடர்பான சர்வதேச முயற்சிகளுக்கு இலங்கை ஒத்தாசை நல்க ஏதுவாக இருக்கும் அதேவேளையில் இந்து சமுத்திர கடல் விவகாரங்களில் ஒரு முக்கிய பங்காளராக அதனுடைய மதிப்பை மேலும் அதிகரிக்க ஏதுவாக அமையும். தகவல் மற்றும் அறிவுநுட்பத்தை பகிர்ந்து தொழிற் குழுவுடன் ஒருங்கிணையக் கூடியதாக இருப்பதால் கடலோர விழிப்புணர்வு பிராந்தியம் தொடர்பாக இலங்கை மேலும் நன்மை அடையும். இந்தப் பிரிவானது இந்த விடயம் தொடர்பாக தொடர்ச்சியாக செயற்படும் **பயிற்சி பட்டறைகள் மாநாடுகள் கருத்தரங்குகள்**

19. இந்து சமுத்திர கலந்துரையாடல்களில் ஐக்கிய அரபு நாடுகளில் அபுதாபியில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை நடைபெற்ற நான்காவது நிகழ்வுகளில் இலங்கை கடற்படைத் தளபதி டபில்யு எச் யு அபேரட்ண பங்குபெறுவதற்கு இந்தப் பிரிவு வசதிகளை வழங்கியது.

20. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதியிலிருந்து 13 ஆம் திகதி வரை கழிவு முகாமைத்துவம் மற்றும் நீரியல் குப்பைகளை குறைத்தல் பற்றி சிங்கப்பூர் நோர்வே 3வது நாடு பயிற்சி கருத்திட்டம் - பிரிவு பயிற்ச்சி நிகழ்ச்சி சிங்கப்பூரில் நடைபெற்றபோது நிலையான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள அமைச்சின் செயலாளர் திரு ஆர் எம் டி பி மீகஸ்முள்ள, செயலாளர், பங்குபற்றுவதறகு இந்தப் பிரிவு வழங்கியது.

21. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கையின் தேசிய ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட பங்களிப்புகள் பற்றிய நிபுணத்துவ உரையாடல் - சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் திருமதி சசிகலா பிரேமவர்தன, இந் நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி நிபுணத்துவ உரையாடலுக்கு பங்களிப்பிணை நல்கினர்.

22. காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான சார்க் - ஆசிய அபிவிருத்தி வங்கி பயற்ச்சிபட்டறை குழுவின் சமுத்திர விவகாரங்கள் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் ஆய்வு உத்தியோகத்தர் ஆகியோர் 2017 ஆம்

ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரை நடைபெற்ற மேற்குறிப்பிட்ட பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டனர்.

23. பாலி இந்தோனேசியாவில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரை நீரியல் சுற்றாடலின் பாதுகாப்பிற்கான நடவடிக்கையின் உலகளாவிய செயற்திட்டத்தின் அரசாங்களுக்கிடையிலான 4வது மீளாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பங்குபெற மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சின் பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடு) திரு ஜே எம் பி எஸ் பி ஜயவீர அவர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டன.

24. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதி வரை பொன்னில் நடைபெற்ற ஊழீ23 - மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் பிரதி அமைச்சர் கௌரவ அனுருத்த ஜயரத்ன தலைமையிலான இலங்கை தூதுக்குழு இந்தக் கூட்டத்தில் பங்குபெற வசதிகள் வழங்கப்பட்டன.

25. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதிவரை புது டெல்லி, இந்தியாவில் நடைபெற்ற கடல் பாதுகாப்பு நிபுணர்களின் இரண்டாவது இந்து சமுத்திர விளிம்புச் சங்கத்தின் கூட்டம் - கொமாண்டர் எம் எம் ஜி யு ஆர் கமகே மற்றும் இலங்கை கரையோர காவலர் மற்றும் இராணுவ உயர் அதிகாரி லெப்டினன்ட கொமாண்டர் பி லியணகே ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்குபெற வசதிகள் வழங்கப்பட்டன. சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் பதில் பணிப்பாளர் நாயகத்தினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பிரிதிநிதித்துவப்பட்டது.

26. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரை டக்கா, பங்களாதேசத்தில் நடைபெற்ற நீல பொருளாதாரத்தின் சர்வதேச பயிற்சிபட்டறை - இந்த பயிற்சிப் பட்டறையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் பதில் பணிப்பாளர் நாயகம் என்பனவற்றின் பிரதி பணிப்பாளர் நாயகம் பங்குபற்றினர்.

27. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி பரிஸ், பிரான்ஸில் நடைபெற்ற ஒரு கோள் மாநாடு - அதிமேதகு சனாதிபதியின் விசேட பிரதிநிதியாக மாநாட்டின் தலைவர் இராஜாங்க நிதி அமைச்சர் கௌரவ இரான் விக்ரமரட்ன மற்றும் நோபல் பரிசு பெற்றவரும் மற்றும் சனாதிபதியின் ஆலோசகரும் முனசிங்க அபிவிருத்தி நிறுவகத்தின் ஸ்தாபகரும் தலைவருமான திரு மோஹான் முனசிங்க ஆகியோரின் தலைமையில் இலங்கையின் தூதுக்குழு பங்குபற்றுவதற்கு இந்தப் பிரிவு ஒருங்கிணைத்து வசதிகள் வழங்கியது

28. மாதாந்த பாதுகாப்பு மீளாய்வு அறிக்கைகள்

    2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்களிலிருந்து மாதாந்த பாதுகாப்பு அறிக்கைகளை பெறுதல் மற்றும் அவற்றை பாதுகாப்பு ஊழியர்களின் தலைவருக்கு அனுப்பிவைத்தல் என்பனவற்றிற்கு இந்தப் பிரிவு வசதிகளை வழங்கிவருகின்றது

29. பயிற்சி நிகழ்ச்சிகள் - 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 04 ஆம் திகதி வரை நடைபெற்ற கடல் சட்டத்தின் 4 வது யொசு கல்விக்கூடத்தின் பயிற்சி செயற்திட்டங்களில் பயிற்சி செயற்

திட்டங்களில் சமுத்திர அலுவல்கள் மற்றும் கால நிலை மாற்றம் உதவி பணிப்பாளர் பங்குபற்றினார்.

****

# வெளிநாட்டு நிருவாகப் பிரிவு

**வெளிநாட்டு நிருவாகப் பிரிவு**

வெளிநாட்டு நிர்வாகப்பிரிவின் பிரதான செயற்பாடானது சகல இலங்கைத் தூதரகங்கள் / நிலைகளிற்கு நிதி, மனிதவளம் மற்றும் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்கள் உட்பட்ட வளங்களை வழங்குவதாகும். வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரங்களின் அசைவு மற்றும் அசைவற்ற சொத்துக்களை முகாமைப்படுத்தல், அமைச்சிற்கும் உலகளாவிய ரீதியில் உள்ள இலங்கைத் தூதரகங்களிடையே நாளாந்த தொடர்பாடலை மேற்பார்வையிடல் என்பனவும் வெளிநாட்டு நிர்வாகப் பிரிவின் கடமைகளுள் ஒன்றாகும்.

இலங்கை தற்போது பின்வரும் இராசதந்திர தூதரகங்களை/நிலைகளை பரிபாலிக்கின்றது:

| | |
|---|---|
| தூதரகங்கள் / உயர் ஸ்தானிகரகம் | 51 |
| ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தர தூதரகங்கள் | 02 |
| பிரதி உயர் ஸ்தானிகரகம் | 01 |
| பிரதிநிதித்துவ அலுவலகம் | 01 |
| கொன்சூலர் அதிபதி அலுவலகங்கள் | 11 |
| மொத்தம் | 66 |

**அ. வெளிநாட்டுச் சொத்துக்களின் கையகப்படுத்துகை மற்றும் பராமரிப்பு**

**1. அசைவற்ற ஆதனங்கள்**

இலங்கைத் தூதரகங்கள்/நிலைகளுடனான ஆலோசனையுடன் தூதரகங்களின் பாவனையின் பொருட்டு ஆகக் குறைந்தது இரண்டு புதிய ஆதனங்களை ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டில் கொள்வனவு செய்வதற்கான திட்டமொன்றை வெளிநாட்டு நிர்வாகப்பிரிவு கொண்டுள்ளது. இவ்வருடக் கருத்து மையமானது தற்போதுள்ள ஆதனங்களை செப்பனிடுதல் / நிர்மாணித்தல் என்பனவாகும். இதன் பிரகாரம் 93,155,041 இலங்கை ரூபா செலவில் 5 ஆதனங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதிகள் அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கமைய, திறைசேரி, மத்திய வங்கி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டது.

**2016 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் / புனர் நிர்மாணங்களின் விவரங்கள்**

| விவரம் | தொகை இல.ரூபா | |
|---|---|---|
| 1. இலண்டன் பதவியணியினர் விடுதிகளைச் செப்பனிடுதல் / புனர்நிர்மாணம் செய்தல் | 86,000,000 | 00 |
| 2. பீஜிங்கிலுள்ள பதிவேட்டக கட்டிடத்தின் வெளிப்புறத்தை செப்பனிடுதல் | 5,310,297 | 72 |
| 3. பிறிரோறியாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகரின் ஆதனங்களில் மின்சார வேலியைச் செப்பனிடல் | 964,743 | 70 |

| | | |
|---|---|---|
| 4. நைரோபி, இலங்கை உயர் ஸ்தானிகரக உத்தியோகபூர்வ வசிப்பிடத்தைச் செப்பனிடல் | 880,000 | 00 |
| 5. இலண்டன், உயர் ஸ்தானிகரக கட்டிடத்தை பழுது பார்த்தல் | 3,851,300 | 00 |
| 6. **மொத்தம்** | **93,155,041** | **42** |

ஜனவரி தொடக்கம் செப்தெம்பர் மாதக் காலப்பகுதிகளில் பரீஸ், ஹெக், ஒஸ்லோ மற்றும் கோலாலம்பூர் தூதரகங்களின் பதிவேட்டகக் கட்டிடங்களின் இடப்பெயர்வு முற்றுப்பெற்றது. இதன் பிரகாரம் வேலைசெய் தரநிலை மேம்படுத்தப்பட்டதுடன் இலங்கை சமுதாயத்திற்கான சேவை வழங்கல் வலுவாக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியினால் உடமை கொள்ளப்பட்ட நியூயோர்க் மற்றும் பிரசிலியாவில் உள்ள தூதரக பதிவேட்டக கட்டிடங்களின் கைமாற்றுகையை அமைச்சு இறுதியாக்கம் செய்துள்ளதுடன், இச் செயற்பாடு அமைச்சின் மேந்தலைச் செலவுகளைக் குறைக்க வழிவகுக்கும்.

**2. அசைவனவான ஆதனங்கள்**

**I. வாகனங்கள்**

தூதரகங்களுக்கு/நிலைகளுக்கு எவ்வெப்போது புது வாகனங்கள்/மாற்றீடுகள் தேவைப்படுகின்றதோ அதையிட்டு வெளிநாட்டு நிர்வாகப்பிரிவு திறைசேரியுடன் ஆலோசனை நடாத்தி வாகனக் கொள்வனவிற்கான வசதிகளை ஏற்படுத்துகின்றது. குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் பதின்மூன்று (13) வாகனங்கள் தூதரகங்களின் பாவனையின் பொருட்டு கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**II. பிற மூலதன சொத்துக்கள்**

வெளிநாடுகளிலுள்ள பல இலங்கைத் தூதரகங்களின் வேண்டுகோளுக்கிணங்க 2017 டிசம்பர் மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 62,039,032.52/= ரூபா பெறுமதி மிக்க பொறித் தொகுதி, இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதியை அமைச்சு வழங்கியுள்ளது.

**ஆ. கணக்காய்வுகள்**

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் / நிலைகளில் உள்ளக கணக்காய்வுப் பிரிவுடனான அனுசரணையுடன் கிரமமான கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை இப்பிரிவு மேற்கொள்கின்றது. இலண்டனிலுள்ள உயர் ஸ்தானிகரகத்தில் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இ. உத்தியோகபூர்வ பயணங்களுக்கான வசதிகளை மேற்கொள்ளல்**

2017 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் வெசேநி பிரிவின் கீழ் இயங்குவதான பயணப்பிரிவினால் 317 அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கான உத்தியோகப்பூர்வ பயணத்திற்கான வீசா மற்றும் பயணச் சீட்டுக்களுக்கான வசதிகளை இப்பிரிவு மேற்கொண்டது. அத்துடன் இக்காலப்பகுதியில்

அவர்களுக்கான பிரயாணக் கொடுப்பனவுகள் மற்றும் பிற உரித்தான கொடுப்பனவுகளுக்கான ஒழுங்குகளையும் இப்பிரிவு மேற்கொண்டது. பிற தாபனங்களிலிருந்தான அரச உத்தியோகத்தர்களுக்கான வீசாக்களைப் பெறுதலின் பொருட்டு 2066 மூன்றாம் ஆள் குறிப்புகளை வழங்குவதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

**ஈ. பாதுகாப்பான தபால் பிரிவு**

பாதுகாப்பான தபால் பிரிவானது, இராசதந்திர பொதிகளை இலங்கைத் தூதரகங்கள் / நிலைகளுக்கு அனுப்புதல், இலங்கைத் தூதரகங்கள் / நிலைகள் அனுப்பும் இராசதந்திர பொதிகளைத் திரட்டுதல் மற்றும் அப்படியாகத் திரட்டப்பட்ட பொதிகளிலிருந்தான கடித வகைகளை அமைச்சின் உரித்தான பிரிவுகளிடம் கையளித்தல் போன்றவற்றை மேற்கொள்ளுகின்றது.

**உ. தகவல் தொழில்நுட்ப பிரிவு**

தகவல் தொழில்நுட்ப பிரிவானது நாளாந்த அடிப்படையில் 600 - 700 வரையான தொலைநகலிகளை மற்றும் மின் அஞ்சல்களைக் கையாளுகின்றது. இவை வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் / நிலைகள் / இலங்கை மற்றும் வெளிநாடுகளிலுள்ள பிற ஒழுங்கமைப்புக்கள் மற்றும் பிற தனித்துவமான அமைப்புகளிலிருந்து பெறப்படுபவையாகும். தகவல் தொழில்நுட்ப பிரிவு தொடர்ச்சியாக கிழமையின் ஏழு நாட்கள், 24 மணித்தியாலமும் சேவையாற்றுவதுடன் பதவியணியினர் சுழற்சி முறையில் சேவையாற்றுகின்றனர்.

**ஊ. முன்னேற்ற அறிக்கை மற்றும் வருடாந்த செயலாற்று அறிக்கை தயாரித்தல்**

வெளிநாட்டு நிர்வாகப் பிரிவானது வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் அமைச்சிலுள்ள உரித்தான பிரிவுகளுடன் கூட்டிணைந்து மூன்றாம் காலாண்டு முன்னேற்ற அறிக்கையையும் வருடாந்த செயலாற்று அறிக்கையையும் பாரளுமன்றத்திற்குச் சமர்பிக்கும் பொருட்டுத் தயாரிக்கின்றது.

**எ. மனித வளங்களை முகாமைப்படுத்தல்**

இலங்கை வெளிநாட்டிலுள்ள தூதரகங்கள்/நிலைகளில் இணைக்கப்பட்டுள்ள மனித வளங்களை முகாமைப்படுத்துவது OAD பிரிவின் செயற்பாடுகளுள் ஓர் பிரதான செயற்பாடாகும். நடப்புக் காலவரையில் பின்வரும் சில செயற்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

**அ. இலக்கமயமாகிய மனிதவள தகவல் முறைமை**

பதவியணியினர் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளைக் கூட்டிணைப்புச் செய்யும் பொருட்டு அமைச்சில் மற்றும் வெளிநாடுகளிலுள்ள தூதரகங்கள்/நிலைகளில் இலக்கமாக்கி மனிதவள தகவல் முறைமையின் அறிமுகப்படுத்தலை OAD பிரிவு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

**ஆ. ஆட்சேர்ப்புக்கள்**

வெளிநாடுகளிலுள்ள எமது தூதரகங்களில் பணிபுரியும் பொருட்டு இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கான, பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான மற்றும் ஆளணி உதவியாளருக்கான போட்டிப் பரீட்சைகள் பரீட்சை திணைக்களத்தின் அனுசரணையுடன் OAD பிரிவு நடாத்துகின்றது.

இலங்கை வெளிநாட்டு சேவை தரம் 111 ற்கான ஒரு தொகுதி உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கான பரீட்சையும், 2017 பெப்ரவரி/மார்ச் மாதங்களில் வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் பரீட்சையை மேற்கொள்வதற்குமான ஒழுங்குகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. 2018 இன் இரண்டாம் பாகத்தில் மீண்டும் ஒருமுறை இந்தப் பிரிவானது வினைத்திறன் பரீட்சையை நடாத்துவதற்கான வர்த்தமானி தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது. மேலும் இந்த பிரிவானது வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களில் உதவி பணியாளர்களாக சேவையாற்றுவதற்காக பொது முகாமை உதவியாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையை நடத்துவதற்கான வர்த்தமானியை வெளியிட்டுள்ளதுடன், 2017 காலப்பகுதியில் 98 பொது முகாமை உதவியாளர் சேவைக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

**இ. புதிய தூதரகத் தலைவர்கள் மற்றும் இராசதந்திர அதிகாரிகளை நியமித்தல்**

இக்காலப்பகுதியில் ஏழு (7) தூதுத்தலைவர்கள் இலங்கை தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்டனர். மேலும், இலங்கை வெளிநாட்டு சேவை, இராணுவம், வர்த்தக திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் அமைச்சரவை நியமிப்புகள் ஆகியவற்றிலிருந்து 53 இராசதந்திர அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**ஈ. வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கு உதவிப் பதவியணியினரை நியமித்தல்**

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் சேவையாற்றும் பொருட்டு தொண்ணூற்றெட்டு (98) பொது முகாமை உதவியாளர்கள், நாற்பத்து நான்கு (44) ஆளணி உதவியாளர்கள் மற்றும் ஓர் (1) உபசார உதவியாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

**மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவு**

01. இலங்கை வெளிநாட்டுச் சேவை சம்பந்தமாக நீண்ட காலமாகத் தேவையேற்பட்டதான இலங்கை வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்களிற்கான மனித வளங்கள் அபிவிருத்தித் தேவைப்பாட்டின் நிமித்தம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினை மீள் கட்டமைப்பு செய்ய வேண்டுவதான 2016 ஜனவரி 25 ஆம் திகதியிட்ட

அறிக்கைக்கமைவாக மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவானது 2016 பெப்ரவரி 15 ஆம் திகதி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

02. இப்பிரிவின் தேவைப்பாடானது அமைச்சின் மனிதவளங்கள், குறிப்பாக இவெசே உத்தியோகத்தர்களின் மனித வளங்கள் அமைச்சின் ஓர் பிரிவினால் கையாளப்பட வேண்டும் என்பதாகும்.

03. எனவே பொதுவாக இதற்கான பயிற்சி செயற்பாடுகள் சம்பந்தமாகப் பின்வரும் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் / மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவின் கீழ் தொடர்ந்து செயற்படுகின்றன.

**அ. இலங்கை வெளிநாட்டு சேவையாளருக்கான பயிற்சி**

i. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு ஏற்புடையதான சகல துறைகளிலுமான தேசிய பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகளுக்கு இலங்கை வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு ஒருங்கிணைந்து செயற்படுதல். பலதரப்பட்ட, கிட்டத்தட்ட ஐந்து (05) பயிற்சி நிறுவனங்களால் வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்களுக்கு தேசிய பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

ii. அமைச்சிற்குச் சம்பந்தப்பட்ட சகல துறைகளிலுமான சர்வதேச பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகளுக்கான நியமனங்களின் ஒருங்கிணைப்புச் செயற்பாடு. தெற்காசியா, ஐரோப்பா, கிழக்காசியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் பல நாடுகளிலிருந்து இலங்கை வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்களுக்கு நாற்பத்து நாலு (44) பயிற்சி சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

iii. ‘பிறவுண் பேக்’ (Brown Bag) அமர்வுகளை முன்னாள் பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் வழிகாட்டலில், மாதத்திற்கொருமுறை மதிய போசண வேளையில் நேர கால அவகாசத்தில் உரிய தலைப்புகளில் முறைசாராத ஒரு தொடர்ச்சியான விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

iv. 2017 மார்ச் மாதத்திலிருந்து ஓகஸ்ட் மாதம் வரை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு பொருளாதார இராசதந்திர கற்கை நெறியொன்றை தொடர் நிலையில் ஹாவட் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுவதற்கான வசதிகள் ஒன்றிணைக்கப்பட்டது.

v. வெளிநாட்டு நிர்வாகப் பிரிவானது 2015 ஆம் வருட தொகுதி, லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனம் (LKI) மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் சர்வதேச அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாகப் பல தொகுதி விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

vi. ஆட்கடத்தலைத் தடுத்து நிறுத்தும் பொருட்டான முதலாவது பயிற்சித் திட்டமொன்றை 2017 யூலை மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச இராசதந்திர பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது.

vii. சிங்கப்பூர் வெளிநாட்டு அலுவல்கள அமைச்சின் குழுவொன்றினால் 2017 யூலை 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் இருநாள் பயிற்சியொன்றை மேற்கொள்வதற்கு இணைந்து செயற்பட்டது.

viii. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் மற்றும் வெளியே இனங்காணப்பட்ட சிலரினால் தூதுவர்களுக்கு / பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்பட்ட கொன்சூலர் அதிபதிகளுக்கு விழிப்புணர்வு திட்டமொன்று நடாத்தப்பட்டது

**ஆ. இலங்கை வெளிநாட்டு சேவை அல்லாதோருக்கான பயிற்சி**

I. இலங்கை தூதரகங்களில் / நிலைகளில் சேவையாற்றுவதற்காக போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவாகிய ஆளணி உதவியாளர்களுக்கு 2017 ஏப்ரல் 24 - 28 வரை தொடர்புபடுத்து செயலாக்கமொன்று நடாத்தப்பட்டது.

II. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் அரசாங்கத்தின் பங்கு என்னும் தொனிப்பொருளில் புகுமுகப் பயிற்சி திட்டமொன்று 2017 இன் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு 2017 ஏப்ரல் 24 - 28 ஆம் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

III. வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் / நிலைகளில் சேவை புரிவதற்காகப் போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவாகிய பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்கு 2017 செப்டெம்பர் 18 - 21 வரை புகுமுக பயிற்சித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

**இ. தூதரகங்கள் / நிலைகள் என்பனவற்றின் பணித்திறன்களை ஆய்வு செய்தல்**

i. மனிதவளப்பிரிவானது இலங்கைத் தூதரகங்கள் / நிலைகள் என்பனவற்றுடன் கூட்டிணைந்து 2016 ஆம் ஆண்டு வருடாந்த பணித்திறன் அறிக்கையை இறுதிப்படுத்தியுள்ளது.

ii. 2017 ஆம் வருடத்தின் பொருட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கான செயற்பாட்டு கருத்திட்ட ஆவணமொன்றையும் HRD இறுதிப்படுத்தியுள்ளது.

iii. மேற்கூறப்பட்ட ஆவணத்தில் 2017 ஆம் வருடம் மார்ச் மாதத்தில் தூதரகங்கள் / நிலைகளைக் கண்காணித்து மற்றும் அவற்றின் பணித்திறன் மதிப்பீடு சம்பந்தமாக செயல்முறைமையொன்றை HRD முன் வைத்துள்ளது. இச்செயல் முறையானது தூதரகங்களின் / நிலைகளின் செயற்பாடுகளை எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலான செயல்முறைகளைக் கொண்டுள்ளது.

**ஈ. “பிரவுண் பேக்” அமர்வுகள் நடாத்தப்பட்டன**

1. இலங்கை – சீன பொருளாதார உறவுகள் ஒப்பீட்டு நிகழ் வாய்ப்பில்: வளர்ச்சி பெறுவதற்கான போதிய வாய்ப்புகள் - 2017 பெப்ரவரி 2 ஆம் திகதியன்று

2. “வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மனிதவள முறைமை” என்பது ஹிஸ்நிட் கம்பனியின் நிதி முகாமையாளராகிய திரு.கபீர் சிக்கன்டர் அவர்களின் உரையுடன் 2017 மார்ச் 20 ஆம் திகதி ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டிருந்தது.
3. ஜிஎஸ்பி+ - “பொதுவாக்கப்பட்ட முறைமையின் விருப்பத்தேர்வு” - செயல்முறை, செயல் விளைவு மற்றும் இலங்கைக்கான நன்மை’’ என்னும் தொனிப்பொருளில் சிரேஷ்ட பணிப்பாளர் நாயகம் (ஐரோப்பிய ஒன்றியம், பல்தரப்பு ஒப்பந்தங்கள், பொதுநலவாயம்) திரு ஏ.எல்.ஏ அஸீஸ் அவர்களின் விரிவுரையுடன் 2017 மே 18 ஆம் திகதி ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்தது.
4. “இலங்கையில் வர்த்தக இராசதந்திரம்’’ சில விடயங்களின் ஆய்வு என்னும் தொனிப்பொருளில் லக்ஷ்மன் கதிர்காமர் தாபனத்திலிருந்தான கலாநிதி கணேசன் விக்னராஜா அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துரை 2017 யூலை 24 ஆம் திகதி நடைபெற்றது.
5. தட்பவெப்ப நிலை மாற்றங்கள் என்பதன் அமர்வு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு.மாபா பதிரண அவர்களினால் 2017 ஆகஸ்ட் 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

****

# வெளிநாட்டில் வதியும் இலங்கையர் பிரிவு

**வெளிநாட்டில் வதியும் இலங்கையர் பிரிவு**

இந்த அமைச்சின் வெளிநாட்டில் வதியும் இலங்கையர் இலங்கையர் பிரிவின் பணிப்பொறுப்புக்கள் கீழ்வருமாறு:

I. வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் (வெளிநாட்டில் வதியும் இலங்கை குடிமக்கள் மற்றும் இலங்கையின் பூர்விகக்குடிகள்) சமூகத்துடன் ஈடுபாடு மற்றும் ஒருங்கிணைப்புகளை வசதிப்படுத்தல்.

II. கீழ்காணும் விடயங்களுக்காக இலங்கைக்கு விஜயம் செய்யும் உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல்
- பல வருடங்கள் வெளிநாட்டிலிருந்து மீளவும் இந்நாட்டுடன் இணைதல்
- முதல் முறை விஜயம் செய்தல் (2ஆம் மற்றும் 3ஆம் தலைமுறை இலங்கையர்களாக இருப்பின்)
- இலங்கையில் இடம்பெறும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்திகளுக்கு பங்களிப்பு
- நல்லிணக்க முயற்சிகளுக்கு பங்களிப்பு

III. இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக வெளிநாட்டில் வதியும் இலங்கையருக்கு ஆதரவளித்தல் மற்றும் வழிகாட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அமைப்புகளுக்கு ஆதரவளித்தல்.

IV. இலங்கையின் புலம்பெயர் மக்களுடன் தொடர்புடைய கல்வி / ஆய்வு / திட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபாடுடைய அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்.

V. அநேக துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கிய வெளிநாட்டில் வதியும் சிறந்த இலங்கையர்கள் / நிபுணர்கள், தொழில்சார் நிபுணர்கள், விஞ்ஞானிகள், கல்விமான்கள், முயற்சியாளர்கள், கலைஞர்கள், சிறந்த பிரமுகர்கள் உள்ளடங்கிய இலங்கையை பூர்விகமாகக் கொண்டவர்கள் தொடர்பான தரவுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் பேணுதல்.

VI. இலங்கையில் அமைப்புக்கள் / திட்டங்களுடன் இணைந்து பணியாற்றும் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கான வீசாக்களை வசதிப்படுத்திக் கொடுத்தல்.

1. **வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடன் இணைந்து பணியாற்றுதல்**

அ. இலங்கைத் தூதரகங்கள் வெளிநாட்டு இலங்கையர் பிரிவின் மையத்துடன் இணைந்து சேவையாற்றுவதற்கான அதிகாரிகளை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

ஆ. இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் பங்களிப்பு வழங்கும் வெளிநாட்டில் வதியும் இலங்கையர் குழுக்கள் / அமைப்புகளின் ஆதரவினை வழங்குமாறு தூதரகங்கள் கோரப்பட்டுள்ளன.

இ. வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் தூதரகங்களின் தலைவர்கள் / பதவியினர்களை முன்பதிவின்றி சந்திப்பதற்காக வாரத்தில் ஒருநாள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ஈ. வெளிநாட்டில் வதியும் இலங்கையர் பிரிவுடன் இணைந்து நிகழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் தனியார்துறை குழுக்கள் / அமைப்புக்களுடன் இணைந்து கல்வி, சுகாதாரம் தொடர்பான துறைகளை அடையாளப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை தூதரகங்கள் முன்னெடுத்து வருகின்றன.

உ. தூதரகங்கள், குறித்த துறைகள் / பிரிவுகளில் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் தொடர்பான விபரப்பட்டியலை வழக்கமாக புதுப்பித்தல் மற்றும் ஒன்றிணைத்தல் மற்றும் அமைச்சுக்கு அறிவிக்கும்படி கோரப்பட்டுள்ளன.

2. **அரசாங்க நிறுவனங்கள் / முகவர் அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றுதல்**

அ. இலங்கையில் சேவையாற்றும் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் தொடர்பான அமைப்புகளை வழிநடத்துவதற்காக நல்லிணக்கத்திற்கான தேசிய ஒருமைப்பாட்டு அலுவலகத்துடன், வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் பிரிவு நெருக்கமாகப் பணியாற்றி வருகிறது. இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டில் வதியும் இலங்கைச் சமூகத்துடனான எமது ஈடுபாட்டினையும், அமைப்புக்களையும் இணைப்பதில் மிக முக்கிய பங்காளராக இதுவமைந்துள்ளது.

ஆ. இலங்கையில் தொழில் புரிவதற்கும், சமூக - பொருளாதார நிகழ்ச்சிகளில் உதவுவதற்கும் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு இலங்கையர்களின் உறுப்பினர்களுக்கும் மற்றும் தொண்டர்களுக்குமான வீசா விடயங்களில் உதவுவதற்காக வெளிநாட்டில் வதியும் இலங்கையர் பிரிவு குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளது.

இ. குடிவரவுத் திணைக்களமானது வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கான அவசரமான நடைமுறைகளுக்காகவும், வெளிநாட்டு இலங்கையர்கள் தொடர்பான வீசா பிரச்சினைகளில் உதவுவதற்குமாக ஒரு மையத்தினை அமைத்துள்ளது.

இந்தப் பிரிவு பின்வரும் செயற்பாடுகளை 2017 ஜனவரி 1 முதல் செப்டம்பர் 30 வரையான காலப்பகுதிக்குள் முன்னெடுத்துள்ளது:

**i. "அபிவிருத்திக்கான பங்காளர்களாக வெளிநாட்டு இலங்கையர்கள்" வட்ட மேசை மாநாடு: 2017 ஏப்ரல்**

அ. மாகாண சபைகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களின் பங்குபற்றுதலுடன் வறுமை ஆய்வு மைய நிறுவகத்துடன் இணைந்து வட்ட மேசை கலந்துரையாடலொன்று 2017 ஏப்ரல் 20 - 22 வரையான காலப்பகுதியில் "அபிவிருத்திக்கான பங்காளர்களாக வெளிநாட்டு இலங்கையர்கள்" என்ற தலைப்பின் கீழ் 4 கண்டறிகை மாகாணங்களில் அவற்றின் தேவைகளை வெளிநாட்டு இலங்கையர்களின் நிபுணர்கள், தொண்டர்கள், நிறுவனங்கள் வாயிலாக ஒப்பிடுவதற்காக முன்னெடுக்கப்பட்டது.

ஆ. நான்கு கண்டறிகை மாகாணங்களில் 2017 ஆம் வருடத்தில் 10 தொடக்கம் 15 திட்டங்களை நிதியளித்து, ஆரம்பிப்பதற்காக அனுசரணையாளர்களை அடையாளங்காண்பதற்காக திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவப் பட்டியல் வரையறுக்கப்பட்டது.

**ii. வெளிநாட்டு இலங்கையர்கள் வைத்திய உத்தியோகத்தர்களினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி: 2017 ஜூலை**

அ. சுகாதார அமைச்சின் பங்குபற்றுதலுடன், சர்வோதய மற்றும் பூகோள தமிழ் ஒன்றியம் ஆகிய இணைந்த திட்டங்களுக்கு புலம்பெயர் வெளிநாட்டு இலங்கையர்கள் மற்றும் இலங்கையிலுள்ளவர்களுக்கிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்பி அளவிடுவதற்காக, அண்மைய வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 18 வைத்திய உத்தியோகத்தர்கள் இலங்கை வைத்தியர்களுடன் இணைந்து வைத்திய முகாம்களை நடாத்துவதற்காக 10 நாட்களுக்கு தொண்டர்களாக இலங்கைக்கு வருகை தந்தபோது அமைச்சு உதவிகளை வழங்கியது.

ஆ. ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா, நோர்வே, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், பஹ்ரைன் மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளிலிருந்து வைத்திய உத்தியோகத்தர்கள் வருகை தந்து, பின்வரும் கிராமங்கள் மற்றும் நிவாரண முகாம்களில் தரிக்கச்செய்யப்பட்டனர்.

i. களுத்துறையில் ஜூலை 2 தொடக்கம் 6 வரை
ii. மாத்தறையில் ஜூலை 7 தொடக்கம் 10 வரை

இ. ஒரு சிறுவர் இல்லம் மற்றும் அனாதைகள் இல்லம் உள்ளடங்கலாக அண்ணளவாக 780 நோயாளர்களுக்கு மருத்துவ சிகிச்சை, பற்சிகிச்சை மற்றும் ஒப்பதல்மிக் சிகிச்சைகளை வழங்கப்பட்டன.

ஈ. மேலும் வைத்தியர்களால் 300 மூக்குக் கண்ணாடிகளும், கருப்புக் கண்ணாடிகளும் பரிசளிக்கப்பட்டன.

உ. 2017 ஜூலை 11ஆந் திகதி செவ்வாய்க்கிழமை நிகழ்வொன்றின் போது, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்கள் இலங்கை வைத்தியர்களுடன் இணைந்து 10 நாட்களுக்கு வெள்ள அனர்த்த மாவட்டங்களில் பணியாற்ற வருகை தந்த சர்வோதய மற்றும் வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் பூகோள தமிழ் ஒன்றியத்திலிருந்து வருகை தந்த மாணவர்களை வரவேற்றார்.

ஊ. நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு இரா. சம்பந்தன், சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மாண்புமிகு வைத்தியர் ராஜித சேனாரத்ன, நிதி மற்றும் ஊடக அமைச்சர் மாண்புமிகு மங்கள சமரவீர, பாராளமன்ற உறுப்பினர் மாண்புமிகு எம்.ஏ. சுமந்திரன், சர்வோதயாவின் பொதுச் செயலாளர் வைத்தியர் வின்யா ஆரியரத்ன மற்றும் அவரது சிரேஷ்ட ஊழியர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட இராஜதந்திர தூதரகங்களிலிருந்து கணிசமான வெளிநாட்டு சமூகங்களும் பங்குபற்றினர்.

****

# கொள்கை திட்டமிடல் பிரிவு

## கொள்கை திட்டமிடல் பிரிவு

1. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொள்கை திட்டமிடல் பிரிவானது 2016 ஜனவரி 25ஆந் திகதிய *"இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சை மீள கட்டமைத்தல் மீதான அறிக்கை"* யின் அடிப்படையில் 2016 பெப்ரவரி 15ஆந் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. பிரிவிற்கான ஊழியர்களை நியமித்ததன் அடிப்படையில் 2017 மார்ச் மாதத்தில் இந்த பிரிவு முழுமையான செயற்பாட்டிற்கு வந்தது.

2. கொள்கை திட்டமிடல் எனப்படுவது குறிப்பான ஒரு விடயமாதலால், அது வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் எந்தவொரு குறிப்பான விடயம் மீதும் தனியாக செயற்படுவதில்லை. குறித்த பிரிவை நிறுவுவதற்கான நோக்கம் ஆய்வுகளை முன்னெடுத்தல், தற்காலிகமற்ற பூகோள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக ஆராய்தல், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் குறிப்பான நோக்கங்கள் மீது கொள்கை சுருக்கங்களை விருத்தி செய்தல் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நீண்ட கால மூலோபாய கொள்கை திட்டமிடலுக்கு பங்களிப்புச்செய்யவல்ல தற்போதைய கொள்கைகளை கையேற்றல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவேயாகும்.

3. இந்த பிரிவின் செயற்பாடு உலக செயற்பாட்டுச் சூழலில் வெளிநாட்டுக் கொள்கை நடைமுறைப்படுத்தல்களை புரிந்து கொள்வதற்கு உதவுதல் மற்றும் கொள்கை திட்டமிடல் தீர்வு அண்மைய மற்றும் சாத்தியமான ஆதாரங்களை அடிப்படையாகவுடைய ஆய்வுகளையும், முன்னோக்கிய பொறிமுறைகளையும் தளமாகக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல் என்ற வகையில் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு காரணம் வெளிநாட்டு கொள்கை தீர்மானங்களுக்கு பயன்படுத்தப்பட்ட தகவல்கள் சாத்தியமான கருத்துக்களுக்குப் புறம்பாக ஆதாரபூர்வமான ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதனை உறுதிப்படுத்துவதாகும். ஆதலால், அதிகமான காரணிமிக்க, நேர்மையான மற்றும் முறைமைவாய்ந்த அணுகுமுறையைக் கொண்ட அமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த பிரிவு முயற்சிப்பதுடன், அதனால் கொள்கை நிலைமைகள் முறையான ஆய்வு உள்ளடங்கலாக மேம்படுத்தப்பட்ட நிலையில் இருப்பிலுள்ள ஆதாரங்களால் விளக்கப்படுகின்றது. அமைச்சிற்குள் ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட நடைமுறைகளை விருத்தி செய்வதற்கும் இந்த பிரிவு மேலும் ஊக்குவிக்கின்றது. எனினும், கொள்கைகள் அதிகளவில் செயற்பாட்டுக் காரணிகளுக்காகவே விருத்தி செய்யப்பட்டுள்ளதால், சில கொள்கைகளை ஏற்படுத்துவதானது அரசாங்கத்தின் நோக்கு மற்றும் நாட்டின் மக்களது நலன்களை அடிப்படையாகக் கொண்டு அமைவதன் காரணமாக ஆய்வுகள் மற்றும் தீர்மானங்களை நேரடியாக அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது.

மீளாய்வின் கீழான குறித்த காலத்தில் இந்தப் பிரிவினால் பின்வரும் பிரதான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- கொள்கை வகுப்பு துறையின் அடிப்படையில், இந்தப் பிரிவானது 2018 - 2022ஆம் ஆண்டிற்கான அங்குரார்ப்பண வெளிநாட்டுக் கொள்கை மூலோபாயம் / இலங்கைக்கான வெள்ளைக் காகித அபிவிருத்திக்கான கரிசணையை வழங்குவதுடன், தேவையான நடைமுறைகள் / வளங்களுக்கான வெற்றிகரமான மூலோபாயங்களை ஒவ்வொரு 4/5 வருடங்களுக்கு வழங்குவதற்கும், எதிர்நோக்கல்களையுடைய மூலோபாயங்களை பின்பற்றுவதற்காகவும் முன்மொழிவு செய்துள்ளது. இந்த பிரிவினால் அங்குரார்ப்பண வெள்ளை காகிதத்திற்கான வரைவு விளக்க கொள்கைகள் விருத்தி செய்யப்பட்டு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு கரிசணைக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

- இந்த பிரிவு மேலும் சர்வதேச மட்டத்திலான அவசிய விடயங்களை வெளிநாடுகளிலுள்ள எமது தூதரகங்கள் வாயிலாகவும், உள்நாட்டு மட்டத்தில் அவசியமானவற்றையும் சமுத்திர விவகாரம், மூலோபாய பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களில் மேம்படுத்துதற்காக சிந்தனை தாங்கிகள், பங்குதாரர்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளை உருவாக்குவதற்கான நடைமுறைகளையும் மேற்கொள்கின்றது.

****

# உபசரணைப் பிரிவு

உபசரணைப் பிரிவு

1. **உபசரணைப் பிரிவின் பணிகள் பின்வரும் முக்கிய விடயங்களுக்குள் வகைப்படுத்தபடக்கூடியன.**
   - i. வைபவ ரீதியான நிகழ்வுகளைச் செயலாற்றுதல்
   - ii. வெளிநாட்டு இராஜதந்திரப் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் விசேட முகவர் நிலையங்கள் அத்துடன் இலங்கைக்கு ஒப்புதலளிக்கப்பட்ட சர்வதேச அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இராஜதந்திர சிறப்புரிமைகள் மற்றும் பாதிப்பின்மைகளை வசதிப்படுத்தலும் கண்காணித்தலும்.
   - iii. இலங்கைக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ள தூதரங்களின் (கொழும்பை தளமாகக் கொண்டுள்ள மற்றும் ஏனைய தூதரங்களிலிருந்து சமகாலத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள) பிரதானிகளுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தல்.
   - iv. இலங்கையில் நடைபெறும் சர்வதேச மாநாடுகளுக்கான ஏற்பாட்டு வசதிகள் மற்றும் உபசரணை ஒழுங்குகளை ஏற்பாடு செய்தல்.

2. **வைபவ ரீதியான நிகழ்வுகள்:**

தொடர்புடைய காலத்தின் போது இப்பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட வைபவ ரீதியான நிகழ்வுகள்

**அ. இலங்கைக்கு மிகமிக முக்கிய பிரமுகவர்கள்/ மிக முக்கிய பிரமுகர்களின் வருகைகளை கையாளுதல்.**

| | | |
|---|---|---|
| i. | அரச தலைவர்கள்/ பிரதம அமைச்சர்கள் | 4 |
| ii. | வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் பிரதி வெளிநாட்டு அமைச்சர்கள் | 7 |
| iii. | ஐக்கிய நாடுகள் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்களிலிருந்து பிரமுகர்கள் | 5 |
| iv. | இடமாறல் வருகைகள் | 3 |
| v. | ஏனைய வெளிநாட்டுப் பிரமுகர்கள் | 28 |
| vi. | கூட்டங்களுக்கான/ மாநாடுகளுக்கான பேயராளர் குழு | 14 |

**ஆ.இலங்கையின் மிக மிக முக்கிய பிரமுகர்களின் விஜயங்கள்**

| | | |
|---|---|---|
| i. | அதிமேதகு ஜனாதிபதியின் அரச விஜயங்கள் | 07 |
| ii. | கௌரவ பிரதம அமைச்சரின் விஜயங்கள் | 08 |
| iii. | கௌரவ வெளிநாட்டு அமைச்சரின் விஜயங்கள் | 12 |

**இ. சிறப்புரிமைகளும் பாதிப்பின்மைகளும்**

இக்காலப்பகுதியின் போது உபசரணைப்பிரிவின் சிறப்புரிமைகள் மற்றும் பாதிப்பின்மை அலகினால் செயலாற்றப்பட்ட தொழிற்பாடுகள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| i. | இசைவுச் சான்றிதழ் வழங்குதல் | 1,800 |
| ii. | இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கும் பதவி உறுப்பினர்கள் வருகின்ற போது அல்லது புறப்பட்டுச் செல்கின்றபோது வழங்கப்பட்ட சுங்க வசதிகள் | 150 |

**ஈ. இராஜதந்திர வாகனங்கள்**

| | | |
|---|---|---|
| i. | வாகனங்கள் விற்பனை | 312 |
| ii. | வாகனங்கள் பதிவு | 108 |
| iii. | வருமான உத்தரவுப் பத்திரங்கள் விநியோகம் | 890 |
| iv. | சாரதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகம் | 260 |
| v | எரிபொருள் கூப்பன் புத்தகங்கள் விநியோகம் | 586 |

**உ. விசாக்கள் (வெளிநாட்டுத் தூதரங்கள் 1,868 மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் 625)**

| | | | |
|---|---|---|---|
| i. | வெளிநாட்டுத் தூதரகங்களுக்கான விசா – நுழைவு விசா | 959 | 4,487 |
| ii. | வெளிநாட்டுத் தூதரகங்களுக்கான விசா – வதிவிட விசா | 1,528 | |
| iii. | சர்வதேச நிறுவனங்களுக்கான விசா – நுழைவு விசா | 414 | 951 |
| iv. | சர்வதேச நிறுவனங்களுக்கான விசா – வதிவிட விசா | 537 | |

**ஊ. விமான நிலைய அனுமதிப் பத்திரங்கள் - விமான நிலைய அனுமதிப் பத்திரம் வழங்கல்**

| | | | |
|---|---|---|---|
| i. | நிரந்தரம் - முதற்தடவை வழங்கல் | 65 | 79 |
| ii. | தற்காலிகம் - முதற்தடவை வழங்கல் | 14 | |
| iii. | நிரந்தரம் - புதுப்பித்தல் | 77 | 114 |
| iv. | தற்காலிகம் - புதுப்பித்தல் | 37 | |

**எ. விசேட பிரமுகர் பொதுவறை அனுமதிப்பத்திரங்கள்** **13,150**

**ஏ. இசைவுகள்** (வெளிநாட்டு விமானம் 238 மற்றும் கப்பல்கள் 82) **320**

**ஐ. அடையாள அட்டைகள்**

(இராஜ தந்திரம் மற்றும் ஏனையவை 214) 706

**3. ஒப்புதல் அளித்தல்**

இலங்கைக்கு ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு தூதுவர்கள்/ உயர் ஸ்தானிகர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவதற்கும் இலங்கை வதிவிட தூதரகங்களைத் தாபித்துள்ள நாடுகளுக்கு இலங்கையின் தூதுவர்கள்/ உயர் ஸ்தானிகர்களை நியமிப்பதனை நாடுவதற்கும் வைபவங்களை ஏற்பாடு செய்வது உபசரணைப் பிரிவின் பொறுப்பாகும். உபசரணைப் பிரிவானது இலங்கையின் கௌரவ காவற் தூதர்களை நியமிப்பதற்கும் இலங்கையிலுள்ள வேறு நாடுகளின் கௌரவ காவற் தூதர்களின் நியமனங்களுக்கும் பொறுப்புடையதாகும். இக்காலப்பகுதியின் போது இப்பிரிவினால் செயலாற்றப்பட்ட தொழிற்பாடுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| i. | இலங்கைக்கான வெளிநாட்டு தூதரகப் பிரதானிகள் நியமனங்கள் | 20 |
| ii. | இலங்கையின் கௌரவ காவற் தூதர்கள் நியமனங்கள் வெளிநாட்டு நியமனங்கள் | 13 |
| iii. | நீடிப்புக்கள் | 21 |
| iv. | இலங்கையில் கௌரவ காவற் தூதர்களின் நியமனங்கள் | 01 |

## 4. இப்பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச மாநாடுகள்

சர்வதேச மாநாடுகளை நடத்துவதற்கான கவர்ச்சிகரமான இடமொன்றாக இலங்கையினை ஊக்குவிப்பதில் உபசரணைப் பிரிவு முக்கிய பங்காற்றுகின்றது. இந்நோக்கில் உபசரணைப் பிரிவானது தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் நெருக்கமாக ஒருங்கிணைக்கின்றது.

அத்தகைய சர்வதேச மாநாடுகளுடன் தொடர்புபட்ட உபசரணை மற்றும் ஏற்பாட்டு தொழிற்பாடுகளை செயலாற்றுவதற்கு தொடர்புடைய நிரல் முகவராண்மைகளின் பதவியினருக்கு அவசியமான உதவிகளிளையும் வழிகாட்டல்களையும் உபசரணைப் பிரிவு வழங்குகின்றது.

i. 69 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு சமாந்திரமாக 2017 பெப்ரவரி 2 தொடக்கம் 3 வரை வதியாத தூதரகப் பிரதானிகள் மற்றும் பாதுகாப்பு இணைப்பாளர்கள்/ ஆலோசகர்களுக்கான இப்பிரிவு பிரபல்யப்படுத்தல் நிகழ்ச்சி ஒன்றினை (பொலநறுவை) ஏற்பாடு செய்தது.

ii. புலம்பெயர் சுகாதாரம் பற்றிய இரண்டாவது உலக ஆலோசனை 2017 பெப்ரவரி 21 – 23 வரை இலங்கையில் நடாத்தப்பட்டது.

iii. “சமூக நீதி மற்றும் நிலைபெறத்தக்க உலக சமாதானத்திற்கான பௌத்த கற்பித்தல்” என்ற தொனிப்பொருளின் கீழ் கொழும்பு மற்றும் கண்டியில் 2017 மே 12 – 14 வரை இலங்கையில் சர்வதேச வெசாக் தினக் கொண்டாட்டம் நடாத்தப்பட்டது.

iv. சார்க் நாடுகளின் உட்துறைÆ உள்நாட்டு அமைச்சர்கள் 8ஆவது கூட்டத்தில் பங்குபற்றினர். 2017 ஜுலை 11 – 13 வரை இது இலங்கையில் நடாத்தப்பட்டது.

v. சார்க் சுகாதார அமைச்சர்களின் 6ஆவது கூட்டம் 2017 ஜுலை 27 – 29 வரை இலங்கையில் நடைபெற்றது.

vi. 2017 ஓகஸ்ட் 21 – 22 வரை தூர தீவுகளுக்கான நெருக்கடி நிகழ்வு முகாமைத்துவம் மற்றும் பிரதவினைச்செயற்பாடு பற்றி ஐக்கிய நாடுகளின் அனர்த்த கட்டுப்பாட்டு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிராந்தியக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு சீசல்ஸ் மற்றும் மாலைதீவு நாடுகளின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்கள் 2017 ஓகஸ்ட் 19 – 23 வரை இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

vii. 2017 ஓகஸ்ட் 31 – செப்டம்பர் 01 வரை 2ஆவது இந்துசமுத்தர மாநாடு 2017 இலங்கையில் நடாத்தப்பட்டது.

viii. மேலதிகச் செயலாளர் பதவியினை ஒத்த பதவி வகிக்கின்ற ஜோர்ஜியாவின் வெளிநாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் திரு. டேவிட் ஜலகனியா 2017 செப்டம்பர் 15 – 18 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.

ix. 2017 சடி நெட் கொங்கிரஸானது 2017 நவம்ர் 5 - 8 வரை கொழும்பில் நடைபெற்றது.

x. 2017இற்கான 7ஆவது பௌத்த மாநாடு 2017 நவம்ர் 2 - 5 வரை நடைபெற்றது.

xi. சார்க் சபாநாயகர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான 8ஆவது மாநாடு 2017 ஒக்டோபர் 4 - 6 வரை நடைபெற்றது.

xii. 14வது சார்க் சட்ட மாநாடு மற்றும் 11வது சார்க் பிரதம நீதியரசர்களுக்கான மாநாடு போன்றன 2017 ஒக்டோபர் 27 - 29 வரை கொழும்பில் நடைபெற்றது.

xiii. பிம்ஸ்டெக் தொழினுட்ப பரிமாற்ற வசதிகள் மீதான பிம்ஸ்டெக் நிபுனர் குழுவின் 4ஆவது கூட்டம் 2017 நவம்பர் 21 - 22 வரை நடைபெற்றது.

xiv. இலங்கையின் சர்வதேச சிவில் விமானத்தின் 10ஆவது விமான சேவைகள் பேச்சுவார்ததை நிகழ்வு 2017 டிசம்பர் 4 - 8 வரை நடைபெற்றது.

xv. தொற்றா நோய்களுக்கான வருடாந்த கூட்டம் 2017 டிசம்பர் 09 - 10 வரை கொழும்பில் நடைபெற்றது.

**5. இலங்கைக்கான விஜயங்கள்**

**அ. இலங்கைக்கான அரச தலைவர்களினதும் பிரதம அமைச்சர்களினதும் விஜயங்கள்**

i. வெசாக் பண்டிகையில் கலந்துகொள்வதற்கு இந்திய பிரதமர் கௌரவ நரேந்திர மோடி 2017 மே 11 – 12 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.

ii. நேபாளின் நேபாள சமஷ்டிக் குடியரசின் சனாதிபதி ஓய்வூபெற்ற கௌரவ பித்தியா தேவி பண்டாரி 2017 மே 14இல் விஜயம் செய்தார்.

iii. சிசெல்ஸின் சனாதிபதி அதிமேதகு டானி ரொலன் பௌரே 2017 பெப்ரவரி 25இல் விஜயம் செய்தார்.

iv. மலேசிய பிரதமர் கௌரவ டாடோ ஸ்ரீ ஹாஜி முஹம்மத் நஜிப் பின் துன் ஹாஜி அப்துல் ரஸாக் அவர்கள் 2018 டிசம்பர் 18 - 19 வரை விஜயம் செய்தார்.

**ஆ. வெளிநாட்டு அமைச்சர் மற்றும் பிரதி வெளிநாட்டு அமைச்சர்களின் இலங்கைக்கான விஜயங்கள்**

i. கொரியக் குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் 2017 மார்ச் 16 – 18 வரை விஜயம் செய்தார்.
ii. மாலைதீவு சனாதிபதியின் விசேட பிரதிநிதி, மாலைதீவு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி மொகமட் ஆசிம் 2017 மே 31இல் விஜயம் செய்தார்.
iii. நேபாளின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ கலாநிதி பிரகா' சர்மா மானாற் 2017 ஜூலை 28இல் விஜயம் செய்தார்.
iv. சிங்கப்பூர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ விவியன் பாலகிருஸ்ணன் 2017 ஜூலை 17 – 21 வரை விஜயம் செய்தார்.
v. அவுஸ்ரேலிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜூலி பிஸப் பா.உ 2017 ஜூலை 19 – 20 வரை விஜயம் செய்தார்.
vi. கட்டார் பொருளாதார மற்றும் வணிக அமைச்சர் கௌரவ செய்க் அஹ்மத் பின் ஜாஸ்ஸிம் அல் தானி 2017 ஒக்டோபர் 29 - 31 வரை விஜயம் செய்தார்.
vii. ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மேன்மை தங்கிய செய்க் அப்துல்லா பின் சாயெத் அல் நஹ்யான் 2017 நவம்பர் 15 இல் விஜயம் செய்தார்.

**இ. ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரமுகர்கள்**

i. உலக உணவுத்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் ஆசிய பசுபிக் பணிப்பாளரின் வருகை, 2017 பெப்ரவரி 10
ii. சார்க் செயலாளர் நாயகம் அர்ஜுன் பகிதூர் தபாவின் வருகை, 2017 பெப்ரவரி 6 – 7
iii. பன்னாட்டு நாணய நிதிய முகாமைத்துவப் பணிப்பாளர் வருகை – 2017 மார்ச் 19 – 27
iv. சார்க் செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான வருகை – 2017 மே 29 – 30
v. உண்மை, நீதி, நட்டஈடு மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கான ஐ.நா. விசேட தூதுவர் திரு. பப்லோ டி க்ரெய்ப் அவர்களின் வருகை - 2017 ஒக்டோபர் 10 - 23
vi. அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா. கீழ் செயலாளர் திரு. தோமஸ் எ. சன்னொன் அவர்களின் வருகை - 2017 நவம்பர் 06 - 07

**ஈ. இடமாறல் வருகைகள்**

i. தென்னாபிரிக்க சனாதிபதி அதிமேதகு ஜாகொப் ‘`மாவின் இடமாறல் வருகை 2017 செப்டம்பர் 01 – 02 மற்றும் 05 – 06

ii. நைஜர் சனாதிபதி அதிமேதகு மொஹம்மது இஸ்ஸஉபொவின் இடமாறல் வருகை 2017 ஒக்டடாபர் 17

iii. நைஜர் சனாதிபதி அதிமேதகு மொஹம்மது இஸ்ஸஉபொவின் இடமாறல் வருகை 2017 ஒக்டடாபர் 17

**உ. ஏனைய வெளிநாட்டு பிரமுகர்கள்**

i. இந்திய அரசாங்கத்தின் விவசாயம் மற்றும் நலனோம்புகை அமைச்சா் கௌரவ ஸ்ரீ ராதா மோகன் சிங், 2017 ஜனவரி 2 -3

ii. லண்டனில் உள்ள இலங்கைக்கான அனைத்துக் கட்சிப் பாராளுமன்றக் குழுவின் தலைவா் ஓய்வூபெற்ற கௌரவ லோட் நசேபி, 2017 ஜனவரி 2 – 8

iii. இந்தியாவின் ஆந்திரப் பிரதேச முதலமைச்சா் கௌரவ சந்திரபாபு நாயுடுவின் வருகை, 2017 பெப்ரவரி 11 -19

iv. அரசியல் அமைப்புச் சபை தலைவா் கௌரவ லோறன் பெபியஸின் விஜயம், 2017 பெப்ரவரி 13 - 19

v. ஐரோப்பிய யூனியன் - இலங்கை ஆணைக்குழுவின் கீழ் ஆளுகை, சட்ட ஆட்சி மற்று மனித உரிமைகள் மீதான செயற்குழு, 2017 மாா்சு 13 – 14

vi. சவூதி அரேபிய இராச்சியத்தின் சூறா கவுன்சிலிங் சபாநாயகா் கலாநிதி அப்துல்லா பின் மொகமட் பின் இப்றாகிம் அல்சேக் அவா்களின் விஜயம், 2017 பெப்ரவரி 18 – 21

vii. இந்தியாவின் இராஜாங்கச் செயலாளா் கலாநிதி ஜயசங்கரின் விஜயம், 2017 பெப்ரவரி 18 -21

viii. ஐக்கிய அமெரிக்கக் காங்கிரஸ் பேராளா் குழு

ix. சவூதி அரேபியாவின் இளவரசா் அல்வலீத் பின் தளாலின் இலங்கைக்கான விஜயம், 2017 ஜூலை 04

x. சீன மக்களின் அரசியல் ஆலோசனைச் சமவாயத்தின் தலைவா் அதிமேதகு செங்செங் அவா்களின் விஜயம்

xi. ஜோ்மன் பண்டஸ்டாங்கின் தலைவா் பேராசிரியா் நோபட் லம்பெட்டின் விஜயம், 2017 ஏப்றல் 2 – 5

xii. முதலாவது இலங்கை – பலஸ்தீன ஆலோசனைகள், 2017 ஏப்றல் 21

xiii. ஜோ்மன் வெளிநாட்டு அலுவலகத்தின் இராஜாங்கச் செயலாளா் மாா்குஸ் எடறல் வியஜம்

xiv. அமைச்சரவை செயலகத்தின் தலைவா் கௌரவ ஜே. முன்கபாட்டின் தலைமையில் மொங்காலியாவின் பெயராளா் குழு விஜயம், 2017 15 -19

xv. பின்லாந்தின் சமூக விவகார மற்றும் சுகாதார அமைச்சா் அதிமேதகு திரு. திா்க்கோ முடிலா அவா்களின் விஜயம்

xvi. சிங்கப்பூரின் வெளிநாட்டுச் செயலாளா் அல்பேட் சாவின் விஜயம் 2017 மே 1 - 04

xvii. செக் குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் கனி'ட பிரதி அமைச்சா் அதிமேதகு இவான் ஜங்காரக் அவா்களின் விஜயம்

xviii. சாா்க் செயலாளா் நாயகம் அதிமேதகு அம்ஜத் குசைன் பீ சியால் அவா்களின் விஜயம் 2017 மே 29 – 31

xix. துருக்கிக் குடியரசின் முன்னாள் பிரதமா் கௌரவ பேராசிரியா் அகமட் தவ் தொக்லு அவா்களின் விஜயம் ஓகஸ்ட் 4 -11

xx. ஐக்கிய இராச்சிய உள்ளக மதத்தல கௌரவ சங்கத்தின் பொருளாளா் திரு டேவிட் பிட்டாவின் விஜயம் 2017 செப்டம்பா் 1 - 8

xxi. கொலம்பிய அதிகாரிகளின் விஜயம் (நிபுணா்கள்) 2017 ஓகஸ்ட் 21 -24

xxii. ஐரோப்பிய பழமைவாதிகள் மற்றும் மறுசீரமைப்பாளா் விஜயம், 2017 செப்டம்பா் 19 - 21

xxiii. ஐரோப்பிய ஒன்றிய பாராளமன்ற உறுப்பினர்களின் விஜயம், 2017 ஒக்டோபர் 29 - 30

xxiv. இந்தியா புதுச்சேரியின் சபாநாயகர் கௌரவ வர்த்திலிங்கத்தின் விஜயம், 2017 நவம்பர் 8 - 11

xxv. தாய்லாந்தின் இளவரசர் கலாநிதி சூலாபோர்ன் மஹிதொலின் விஜயம், 2017 நவம்பர் 25 - 30

xxvi. ஐரோப்பிய பழமைவாதிகள் மற்றும் மறுசீரமைப்பாளா் விஜயம், 2017 செப்டம்பா் 19 - 21

xxvii. இந்தியாவின் வெளிநாட்டு செயலாளர் கலாநிதி ஜெய்சங்கரின் விஜயம், 2017 நவம்பர் 18 - 19

## 6. வெளிநாட்டு விஜயங்கள்

### அ. அதிமேதகு சனாதிபதியின் வெளிநாட்டு விஜயங்கள்

| | | |
|---|---|---|
| இந்தோனேசியா | இந்துசமுத்திர சுற்றுவட்டார நாடுகள் அமைப்பு | 2017 மாா்ச் 6 – 8 வரை |
| ர'யா | அரச விஜயம் | 2017 மாா்ச் 22–24 வரை |
| அவுஸ்ரேலியா | அரச விஜயம் | 2017 மே 23–26 வரை |
| பங்களாதே' | அரச விஜயம் | 2017 ஜூலை13–15 வரை |
| ஐக்கிய அமெரிக்கா (நியுயோக் - ஐக்கிய நாடுகள் பொதுச் சபை) | அரச விஜயம் | 2017 செப்டம்பா்17–25 வரை |
| கட்டார் | அரச விஜயம் | 2017 ஒக்டோபர் 24 -26 |
| தென்கொரிய | அரச விஜயம் | 2017 நவம்பர் 28 - 30 |

**ஆ. கௌரவ பிரதமரின் வெளிநாட்டு விஜயங்கள்**

i. உலகப் பொருளாதார மன்றம், டாவோஸ், சுவிஸ்லாந்து, 2017 ஜனவரி 16 - 22
ii. அவுஸ்ரேலியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம், 2017 பெப்ரவரி 13 -17
iii. ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயம், 2017 ஏப்றல் 10 - 14
iv. வியட்நாமுக்கான உத்தியோகபூர்வ விஜயம், 2017 ஏப்றல் 15 – 19
v. இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம், 2017 ஏப்றல் 25 – 27
vi. சீனாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம், 2017 மே 13 – 17 (பட்டி மற்றும் வீதி மன்றம்)
vii. ஜேர்மனி மற்றும் பின்லாந்திற்கான உத்தியோகபூர்வ விஜயம், 2017 ஒக்டோபர் 5 - 12
viii. இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம், 2017 நவம்பர் 21 - 24

**இ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் ஜே மாறப்பன அவர்களின் விஜயங்கள்**

i. இந்தியா – 2017.09.08 – 2017.09.10
ii. பிறசல்ஸ் பொஸ்னியா மற்றும் கெஸ்ஸகொவினா 2017.09.24 – 2017.10.03
iii. தென்னாபிரிக்கா - 17.10.2017 - 23.10.2017
iv. தாய்லாந்து - 25.10.2017 - 27.10.2017
v. சீனா - 29.10.2017 - 04.11.2017
vi. தென் கொரியா - 26.11.2017 - 01.12.2017

**ஈ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் - கௌரவ எம் பி மங்கள சமரவீர அவர்களின் விஜயங்கள்**

| | | |
|---|---|---|
| i. | எத்தியோப்பியா | 2017.01.30 – 2017.02.04 |
| ii. | மாலைதீவு | 2017.02.08 – 2017.02.09 |
| iii. | ஜெனிவா | 2017.03.22 – 2017.03.26 |
| iv. | ர'யா | 2017.03.22 – 2017.02.26 |

**உ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ரவி கருநாணாயக்க அவர்களின் விஜயங்கள்**

| | | |
|---|---|---|
| i. | இந்தியா | 2017.06.06 – 217.06.07 |
| ii. | சுவிஸ்லாந்து மற்றும் கட்டார் | 2017.07.06 – 2017.07.10 |

**ஊ. வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வி என் பி சேனாநாயக்க அவர்களின் விஜயங்கள்**

| | | |
|---|---|---|
| i. | ரூமானியா | 2017.06.28 – 2017.07.04 |

| | | |
|---|---|---|
| ii. | நேபாளம் | 2017.08.10– 2017.08.13 |
| iii. | பேய்ரூட் | 2017.08.16 – 2017.08.20 |
| iv. | சுலோவெனியா | 2017.08.29 – 2017.09.06 |
| v. | இந்தியா | 2017.09.24 – 2017.09.25 |
| vi. | கட்டார் | 2017.09.25 – 2017.09.26 |
| vii. | கென்யா | 2017.11.28 – 2017.11.30 |

****

# பொதுத் தொடர்பாடல் பிரிவு

**பொதுத் தொடர்பாடல் பிரிவு**

பொதுத் தொடர்பாடல் பிரிவானது ஓர் செயற்பாட்டுப் பிரிவாகச் செயற்படுவதுடன், அரசாங்கம் மற்றும் வெளியுறவாளர்களுடனான தகவல் பரிமாற்றம் மற்றும் இலங்கையின் பிரதிபிம்பத்தை வெளிநாடுகளில் மேம்படுத்தும் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றது. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் சர்வதேச நட்புறவுகள் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள்/ நிலைமைகள் சம்பந்தமாக அமைச்சில் மற்றும் பொதுவில் நாட்டில் நடைபெறுவனவற்றையும் இப்பிரிவானது அவதானிப்புச் செய்கின்றது.

1. **பிரதான செயற்பாடுகள்**
   - (i) இலங்கை தூதரகங்களின் ஒருங்கிணைப்புடன் இலங்கையின் பிரதிபிம்பத்தை வெளிநாடுகளில் மேம்படுத்துகின்றது.
   - (ii) வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்குத் தகவல் /விளம்பரச் சாதனங்களைப் பரிமாற்றம் செய்தல் மற்றும் தகவல் வெளியீடுகள் /அரச அறிக்கைகள் ஊடாக வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் பரவலான பொது மக்களுக்கு அறியத்தருவது.
   - (iii) அமைச்சு சம்பந்தப்பட்ட மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை /சர்வதேச உறவுகள் சம்பந்தப்பட்ட ஊடகங்களின் விசாரணைகளுக்குப் பதில் அளித்தல்.
   - (iv) சுற்றுலா, வர்த்தகம் மற்றும் முதலீடு சம்பந்தமான மேம்பாட்டு விடயங்களை தூதரகங்கள் மற்றும் பாத்தியதையுடையோருடன் பகிர்ந்துகொள்ளல்.
   - (v) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக துறையுடன் தொடர்பாடலை மேற்கொள்ளல்
   - (vi) அரசியல் துறையுடனான கலந்துரையாடலுடன் ஊடக அறிக்கைகளைத் தாயரித்தலும் அவற்றை வெளியீடு செய்தலும்.
   - (vii) வருகை தரும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு ஊடக அதிகாரமளித்தல்.
   - (viii) இலங்கையில் உள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் இலங்கைக்கு வரும் ஊடகவியலாளர்கள் சம்பந்தமாக ஆவணங்களைப் பராமரித்தல்.
   - (ix) சகல தூதரகங்கள், அதிகாரிகளின் மற்றும் உள்நாட்டு அச்சக ஊடகம் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு ஊடக புதிய அறிக்கைகளை அமைச்சின் வலை கடப்பிடத்தில் பதிவு செய்யும் பொருட்டு நாளாந்தம் சேகரித்தல்.
   - (x) சமுதாயம் சார்ந்த (Facebook, Twitter, You Tube, Instogram, Sound Cloud) வலை கடப்பிடங்கள் உள்ளடங்கலாக அமைச்சின் வலைக்கடப்பிடத்தைப் பரிபாலித்தல்
   - (xi) இலங்கையில் நடைபெறும் விழாக்கள், ஊடக செயல் அமர்வுகள் மற்றும் மாநாடுகள் என்பனவற்றை மேம்படுத்தலும் வசதிகளை மேற்கொள்ளுதலும்.

2. வெளிநாட்டு ஊடகத்துறையினர் மற்றும் திரைப்படக்குழுவினரின் வருகை செய்திகளைச் சேகரிப்பதற்கு, திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு மற்றும் சுற்றுலா சம்பந்தப்பட்ட தொலைக்காட்சி, பிரயாணம் மற்றும் கலாச்சாரம் சம்பந்தமான செய்திகள் என்பனவின் பொருட்டு வருகை தரும் ஊடகத்துறையினருக்கான வசதிகளை மேற்கொண்டும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு அவர்களுக்கு தற்காலிக ஊடக அதிகாரமளிப்பை இப்பிரிவு மேற்கொள்ளுகின்றது. ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து 2017 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 14 திரைப்பட அதிகாரமளிப்பு உட்பட 213 தற்காலிக ஊடக அதிகாரமளிப்பு அனுமதிச்சீட்டுகளை இப்பிரிவு ஒழுங்கமைப்புச் செய்துள்ளது.

**3. ஊடக வெளியீடுகளின் வெளியிடுகை**

அமைச்சு, தூதரகங்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக தூதரகங்கள் மற்றும் உள்நாட்டு/ வெளிநாட்டு ஊடகங்களுக்கு 310 ஊடக அறிக்கைகளை இப்பிரிவு மேற்கொண்டுள்ளது.

4. வெளிநாட்டு 'மிக முக்கிய' / 'முக்கிய' நபர்களின் இலங்கை வருகைக்கு மற்றும் ஊடக நிகழ்ச்சி செயற்பாடுகளுக்கு ஒத்தாசை வழங்கல்.

(i) 2017 பெப்ரவரி 14ஆம் திகதி சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய ஆய்வுகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் 'பிரித்தானியாவின் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிய பின்னரான ஐரோப்பா மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்பு' என்னும் விடயத்தில், பிரான்சின் அரசியல் அமைப்பு சபையின் தலைவரும் பிரான்சின் முன்னாள் பிரதம மந்திரியுமாகிய கௌரவ லோறென்ற் பாபியஸ் அவர்களால் ஆற்றப்பட்ட உரையின்போது ஊடக ஒத்தாசையானது இப்பிரிவினால் வழங்கப்பட்டது.

(ii) 2017 மார்ச் 15ஆம் திகதி கொரிய குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கௌரவ யுன் பியுங் - சே அவர்களின் உத்தியோகபூர்வ வருகையின்போது இப்பிரிவினால் ஒத்தாசை வழங்கப்பட்டது.

5. **ஒளிப்பட சந்தர்ப்பங்களும் ஊடக அறிக்கையிடுகையும்**

(i) இடம்பெயர்ந்து தொழில் புரியம் இறந்த மற்றும் ஆற்றலின்றிய இலங்கையர்களின் குடும்பத்தினருக்கு 2017 மார்ச் 16ஆம் திகதி அமைச்சில் நட்ட ஈடு வழங்கப்பட்டபோது

(ii) இலங்கை கப்பலை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றமை சம்பந்தமாக பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், கொன்சூலர் அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் மற்றும் கடற்படை செய்தித் தொடர்பாளர் ஆகியோர் அமைச்சில் 2017 மார்ச் 17ஆம் திகதி நடாத்திய பத்திரிகை மாநாட்டின்போது.

(iii) 2017 யூலை 18ஆம் திகதி சிங்கப்பூர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு கலாநிதி விவியன் பாலகிருஷ்ணன் அவர்கள் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டபோது.

(iv) 2017 யூலை 19ஆம் திகதி அவுஸ்திரேலிய வெளிநாட்டு அலுவல்கள அமைச்சர் மாண்புமிகு யூலி பிஷப் அவர்கள் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்போது.

****

# தெற்கு ஆசியா மற்றும் சார்க் பிரிவு

## தெற்கு ஆசியா மற்றும் சார்க் பிரிவு

### I. ஆப்கானிஸ்தான்

i. ஆப்கானிஸ்தானின் அச்சகத்தை புனரமைப்புச் செய்யுமாறு ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் அவ்விடயம் பற்றி அரசாங்க அச்சகத் திணைக்களத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ii. யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஜனாதிபதி புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு இத்தூதரகம் வசதியளித்துள்ளது.

iii. காபுலிலுள்ள பிரயாண முகவர்களுக்கிடையே ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸையும் ஓர் விடுமுறை சேரிடமாக ஊக்குவிப்பதற்கு வசதியளித்துள்ளதுடன், இலங்கையை ஓர் "விமானப் போக்குவரத்துத் தொட்டியாக மேம்படுத்துவதற்கும்" திறந்த ஆகாயம் என்ற கொள்கை மீது கவனமும் செலுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தான் அதிகார பீடங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வரைவு விமானச் சேவைகள் உடன்படிக்கை இலங்கையிலுள்ள இயைபுள்ள அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

iv. ஆப்கானிஸ்தானிலுள்ள பாமியன் புத்தபெருமான் சிலைகளின் புனரமைப்பிற்கு இலங்கை தொல்பொருளியல் திணைக்களத்திடமிருந்து ஆதரவைப் பெறுவதன் பொருட்டு இலங்கைத் தூதரகம் காபுலிலுள்ள யுனெஸ்கோ தூதரகத்துடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது. தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம் சமீபத்திய எதிர்காலத்தில் அந்த அமைவிடங்களுக்கு வருகை புரிவதற்கு உடன்பட்டுள்ளார்.

v. 16.10.2017 ஆம் திகதியன்று போதைபொருள் மற்றும் குற்றவியல் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் தேசிய நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளரின் அதிகாரிகளை மேன்மை தங்கிய தூதுவர் சந்தித்திருந்ததுடன், பொப்பி விவசாயிகளுக்காக இலங்கையில் சிறிய கைத்தொழில் மற்றும் கமத்தொழில் துறைகளுக்கான வாய்ப்புகளை கண்டறிவதற்கான ஆலோசனைகளையும் மேற்கொண்டிருந்தார்.

vi. அழைப்பின் பேரில், மேன்மை தங்கிய அமைச்சர் ஆப்கானிஸ்தானின் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு (RTA) விஜயம் செய்தார். இவ் விஜயத்தின் போது வெகுசன ஊடகம் ஊடாக மக்களுக்கிடையே பரஸ்பர தொடர்பினை மேம்படுத்துவதற்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கும், ஆப்கானிஸ்தான் வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கும் இடையே பங்காளித்துவத்தை ஸ்தாபிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை RTA சுட்டிக்காட்டியிருந்தது.

### II. பங்களாதேஷ்

#### அ. வெளிநாட்டு விஜயங்கள்

i. அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2017 யூலை 13ஆந் திகதியிலிருந்து 15ஆந் திகதி வரை பங்களாதேஷிற்கு உத்தியோக விஜயத்தை செய்துள்ளார். இந்த விஜயத்தின் போது இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே 13 புரிந்துணர்வு

உடன்படிக்கைகளும், 12 உடன்படிக்கைகளும் கையொப்பமிடப்பட்டுள்ளன. அதிமேதகு சனாதிபதி இந்த விஜயத்தின் போது பிரதம அமைச்சருடன் இருதரப்புக் கலந்துரையாடல்களைச் செய்துள்ளார். அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் வர்த்தகப் பேராளர் குழுவொன்றும் உடன் சென்றுள்ளதுடன், அது இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் பக்கவாட்டு செயற்பாடாக வர்த்தக அரங்கொன்றிலும் பங்குபற்றியுள்ளது.

ii. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. எசல வீரக்கோன் 3வது வெளிநாட்டு அலுவலக கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்காக 2017 யூலை 03 ஆந் திகதியன்று பங்களாதேஷிற்கு விஜயம் செய்துள்ளார்.

iii. பங்களாதேஷ் சர்வதேச மற்றும் திறமுறைக் கற்கைகள் நிறுவகத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் முனனாள் ஜனாதிபதியாகிய சந்திரிக்கா குமாரதுங்க 2017 மே மாதம் 2 ஆந் திகதியிலிருந்து 24 ஆந் திகதி வரை டாக்காவிற்கு விஜயம் செய்துள்ளார்.

iv. டாக்காவில் நடாத்தப்பட்ட யுனெஸ்கோ - ஆசியா பசுபிக் அரங்கில் பங்குபற்றுவதற்காக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் மாண்புமிகு பதியுதீன் 2017 பெப்புரவரி 08 ஆந் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை பங்களாதேஷிற்கு விஜயம் செய்துள்ளார்.

v. நகரத் திட்டமிடல் இராஜாங்க அமைச்சர் மருத்துவர் (திருமதி.) எஸ். பெர்ணாண்டோபுள்ளே 2017 ஓகத்து 7ஆந் திகதியிலிருந்து 11ஆந் திகதி வரை டாக்காவிற்கு விஜயம் செய்துள்ளார். இது டாக்கா தேசத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஓர் குறுகிய கற்கை விஜயமாகவிருந்தது.

vi. சபாநாயகராகிய மாண்புமிகு கரு ஜயசூரிய டாக்காவில் நடாத்தப்பட்ட 136வது பாராளுமன்றங்களுக்கிடையிலான இணைப்புக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக பங்களாதேஷிற்கு 2017 மார்ச் 30 ஆந் திகதியிலிருந்து, ஏப்ரல் 06ஆந் திகதி வரை விஜயம் செய்துள்ளார்.

vii. 2017 மார்ச் 11ஆந் திகதியிலிருந்து 14ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட "அதிதீவிர வன்குற்றச் செயல்களையும், நாடுகளுக்கிடையிலான குற்றச் செயல்களையும் குறைப்பதில் பிராந்திய ஒத்துழைப்பு" என்ற தொனிப்பொருள் விடயம் பற்றி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. எல்.கே.ஜி. பீரிசும் தெற்காசியாவினதும், அயல் நாடுகளினதும் பிரதான பொலிஸ் மாநாட்டில் பங்குபற்றியுள்ளனர்.

viii. நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சராகிய மாண்புமிகு ரவூப் ஹக்கீம் 2017 யூலை 29 ஆந் திகதியிலிருந்து 30 ஆந் திகதி வரை டாக்காவில் நடாத்தப்பட்ட நீர் மாநாட்டில் பங்குபற்றியுள்ளார்.

ix. பௌத்த சாசன அமைச்சின் செயலாளராகிய சந்திரப்பிரேம கமகே பங்களாதேஷ் பௌத்த கிருஸ்டி பிரச்சார சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அட்டிச திபங்கார்

சமாதான தங்க விருது வழங்கல் வைபவத்தில் பங்குபற்றுவதன் பொருட்டு 2017 பெப்ரவரி 22 ஆந் திகதியிலிருந்து 25 ஆந் திகதி வரை டாக்காவிற்கு விஜயம் செய்துள்ளார்.

x. 2017 நவம்பர் மாதம் 4 -8 ஆந் திகதி வரை டாக்காவில் நடைபெற்ற 63 ஆவது பொதுநலவாய பாராளுமன்ற மாநாட்டில் குழுவின் பிரதி தலைவர் கௌரவ. அமிர்தநாதன் அடைக்கலநாதன், பா.உ, அவர்களின் தலைமையினாலான குழு பங்கேற்றது.

xi. 2017 நவம்பர் 20-24 ஆந் திகதி வரை பங்களாதேஷின் டாக்காவில் இலத்திரனியல் பயிற்சியில் பங்கேற்பதற்காக தேசிய ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழு பங்கேற்றது.

xii. 2017 நவம்பர் 22 - 23 ஆந் திகதி வரை பன்முக - துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்காக வங்காள விரிகுடா முயற்சியினால் ஒழுங்கு செய்யப்பட்டு டாக்காவில் நடைபெற்ற நீலப் பொருளாதாரம் தொடர்பான சர்வதேச செயலமர்வில் இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் திருமதி.சோபினி குணசேகர, பணிப்பாளர் நாயகம் / பொருளாதார விவகாரங்கள் மற்றும் வர்த்தகம் (பிராந்திய மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு) மற்றும் செல்வி. சஸிகலா பிரேமவர்தன, பணிப்பாளர் நாயகம்/கடல்சார் விவகாரங்கள், மூலோபாய பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் கொள்கை திட்டமிடல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஆ. இலங்கைக்கான விஜயங்கள்

i. மாண்புமிகு கலாநிதி சிரின் சார்மின் சௌத்ரி சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் 8வது மாநாட்டில் பங்குபற்றுவதன் பொருட்டு 2017 ஒற்றோபர் 03ஆந் திகதியிலிருந்து 06ஆந் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

ii. வர்த்தக அமைச்சராகிய மாண்புமிகு திரு. ரொபெயில் அஹமட் இலங்கையில் நடாத்தப்பட்ட 2வது இந்து சமுத்திர மாநாட்டில் 2017 ஓகத்து 31ஆந் திகதியிலிருந்து செத்தெம்பர் 02ஆந் திகதி வரை விஜயம் செய்து பங்குபற்றியுள்ளார்.

iii. பங்களாதேஷ் பாராளுமன்றத்திலுள்ள இலங்கை - பங்களாதேஷ் நட்புறவு சங்கம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தூதரகம் பங்களாதேஷ் பாராளுமன்றத்துடன் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தது.

iv. 2012 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாமலிருந்த இலங்கை - பங்களாதேஷ் வர்த்தக மற்றும் கைத்தொழில் கூடத்திற்கு உயர்ஸ்தானிகராலயம் மீள் உயிரூட்டியுள்ளது.

v. பங்களாதேஷில் இலங்கையர்களாகிய முதலீட்டாளர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளை தீர்வு செய்வதற்கு உதவி வழங்குவதன் பொருட்டு பங்களாதேஷ் முதலீட்டு அபிவிருத்தி அதிகாரசபையில் இலங்கை தகவல் உத்தியோகத்தரொருவரை உயர்ஸ்தானிகராலயம் நியமித்துள்ளது.

vi. நன்கு அறியப்பட்ட நபர்களினால் விரிவுரைகளை டாக்காவிலுள்ள இலங்கை சமூகத்தினர்களுக்கு வழங்குவதன் பொருட்டு மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை உயர்ஸ்தானிகராலயம் ஆரம்பித்துள்ளது.

## III. பூட்டான்

i. கமத்தொழில் அமைச்சின் செயலாளர்களினால் வழிநடத்தப்பட்ட கமத்தொழில் அமைச்சின் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்று பூட்டானுக்கு கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டுள்ளது.

ii. இலங்கை அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்ட அழைப்பொன்றின் பேரில் கொழும்பில் 2017 மே 12ஆந் திகதியிலிருந்து 14ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட சர்வதேச வெசாக் வைபவத்தில் மேண்மை தங்கிய டொர்ஜி லொப்பென் கின்லி அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட பௌத்த பேராளர் குழுவொன்று பங்குபற்றியுள்ளது.

iii. இலங்கைக்கும் பூட்டானுக்குமிடையிலான விமானச் சேவைகள் உடன்படிக்கையொன்று பூர்த்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன், அது கொழும்பில் 2017 திசெம்பர் 04 ஆந் திகதியிலிருந்து 08 ஆந் திகதி வரை நடாத்தப்படவுள்ள சர்வதேச சிவில் விமானச்சேவை இணக்கப் பேச்சுவார்த்தைகள் மாநாட்டில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

iv. 2017 டிசம்பர் 28 முதல் 2018 ஜனவரி 06 வரை யாத்திரை கருதி மாட்சிமை மிகு அரசி அன்னை அஷி டோர்ஜி வங்மோ வங்சுக் அவர்களினால் தலைமை தாங்கப்பட்ட பத்து பேரைக் கொண்ட பூட்டான் பேராளர் குழு இலங்கைக்கு விஜயம் செய்தது.

## IV. இந்தியா

### இருதரப்பு தொடர்புகள்

2017 ஏப்ரல் 07ஆந் திகதியன்று கடற்றொழில் மீதான இலங்கை - இந்தியா கூட்டு தொழிற்பாட்டுத்தொகுதியின் இரண்டாவது கூட்டம் நடாத்தப்படவுள்ளது.

### அ. வெளிநாட்டு விஜயங்கள்

i. இலங்கையின் பிரதம அமைச்சர் மாண்புமிகு ரணில் விக்ரமசிங்க 2017 ஏப்ரல் 25ஆந் திகதியிலிருந்து 30ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார். இக்காலப்பகுதியில் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையிலான "பொருளாதார கருத்திட்டங்களின் ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கை" கையொப்பமிடப்பட்டது.

ii. இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகிய மாண்புமிகு ஆர். சம்பந்தன் 2017 மார்ச் 13ஆந் திகதியிலிருந்து 15ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

iii. இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு ரவி கருணாநாயக்க 2017 யூன் 06ஆந் திகதியிலிருந்து 07ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

iv. இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு திலக் மாரப்பன 2017 செத்தெம்பர் 08ஆந் திகதியிலிருந்து 10ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

v. இலங்கையின் கல்வி அமைச்சராகிய மாண்புமிகு அகில விராஜ் காரியவசம் உலக சி.எஸ்.ஆர். தினத்தில் முக்கிய உரையை நிகழ்த்துவதற்காக மும்பைக்கு 2017 பெப்ரவரி 17ஆந் திகதியிலிருந்து 18ஆந் திகதி வரை விஜயம் செய்துள்ளார். அவர் திரும்பவும் 2017 மே 15ஆந் திகதியிலிருந்து 16ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

vi. பெருமதிப்பிற்குரிய இலங்கையின் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் அவர்கள் சட்டவல்லுநர்கள் மீதான சருவதேச மாநாட்டில் முக்கிய உரை நிகழ்த்துவதற்காக மும்பாய்க்கு விஜயம் செய்துள்ளார்.

vii. இலங்கையின் பாராளுமன்றத்தின் சபாநாயகர் மாண்புமிகு கரு ஜயசூரிய அனகாரிக தர்மபாலவின் 153வது பிறந்த தின ஞாபகார்த்த விழாவில் பங்குபற்றுவதற்காக இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

viii. இலங்கையின் அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு ஜோன் அமரதுங்க பெங்களூருக்கு விஜயம் செய்துள்ளார்.

ix. முதனிலைக் கைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு தயா கமகே கேரளாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

x. பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு சரத் பொன்சேகா 2017 சனவரி 16ஆந் திகதியிலிருந்து 18ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xi. அபிவிருத்தி திறமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சராகிய மாண்புமிகு மலிக் சமரவிக்ரம 2017 சனவரி 31ஆந் திகதியிலிருந்து பெப்ரவரி 02ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xii. சட்டம், ஒழுங்குகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு சாகல ரத்நாயக்க 2017 மார்ச் 14ஆந் திகதியிலிருந்து 15ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xiii. சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மாண்புமிகு ராஜித சேனாரத்ன 2017 மார்ச் 15ஆந் திகதியிலிருந்து 16ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xiv. வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிருமாண அமைச்சர் மாண்புமிகு சஜித் பிரேமதாச 2017 ஏப்ரல் 27ஆந் திகதியிலிருந்து 29ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xv. நிதி அமைச்சர் மாண்புமிகு ரவி கருணாநாயக்க 2017 ஏப்ரல் 02 ஆந் திகதியிலிருந்து 03 ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xvi. உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மாண்புமிகு லக்ஷ்மன் கிரியல்ல 2017 ஏப்ரல் 15ஆந் திகதியிலிருந்து 17ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xvii. அபிவிருத்தி திறன்முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சராகிய மாண்புமிகு மலிக் சமரவிக்ரம 2017 ஏப்ரல் 19 ஆந் திகதியன்றும், அத்துடன் 2017 ஏப்ரல் 25 ஆந் திகதியிலிருந்து 27 ஆந் திகதி வரையும் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xviii. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு சந்திம வீரக்கொடி 2017 ஏப்ரல் 19 ஆந் திகதியன்று இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xix. இலங்கையின் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் மாண்புமிகு பைசர் முஸ்தபா 2017 மே 09ஆந் திகதியிலிருந்து 20ஆந் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xx. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் மாண்புமிகு ரிசாத் பதியுதீன் 2017 மே 16 ஆந் திகதியிலிருந்து 17 ஆந் திகதி வரையும், அத்துடன் 2017 ஓகத்து 31 ஆந் திகதியிலிருந்து செததெம்பர் 05 ஆந் திகதி வரையும் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xxi. இலங்கையின் அரசாங்க தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு கபீர் ஹாசிம் 2017 யூன் 07ஆந் திகதியன்று இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xxii. தொலைத்தொடர்பு மற்றும் இலக்கமுறை (டிஜிட்டல்) உட்கட்டமைப்பு அமைச்சர் மாண்புமிகு ஹரீன் பெர்ணான்டோ 2017 யூன் 29ஆந் திகதியன்று இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

xxiii. 2017 ஒக்டோபர் 2 - 4 ஆந் திகதி வரை வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனாநாயக்க இந்தியாவிற்கு விஜயம் செய்தார். இவ்விஜயத்தின் போது ஸ்பெயின், இஸ்ரேல், புரூனே தருஸலாம் தூதரகங்களின் தலைவர்கள் மற்றும் லக்ஸம்பேர்க் விவகார தலைமையுடன் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார்.

xxiv. புதுடெல்லியில் இடம்பெற்ற இணையவெளி பரப்பு 2017 தொடர்பான 5 ஆவது உலகளாவிய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக 2017 நவம்பர் 22-24 வரை பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்தியாவிற்கு பயணம் செய்தார். இந்த விஜயத்தின் போது இந்தியாவின் அதிமேதகு சனாதிபதி, இந்தியாவின் கௌரவ பிரதமர், இந்தியாவின் முன்னாள் சனாதிபதி கௌரவ. பிரனாப் முகர்ஜி மற்றும் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவி சோனியா காந்தி ஆகியோருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

xxv. 2017 நவம்பர் 3 ஆந் திகதி புதுடெல்லியின் வித்யாபவனில் இடம்பெற்ற உலக உணவு இந்தியா 2017 இல் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதீன் அவர்கள் தலைமை தாங்கிய குழு பங்கேற்றது.

xxvi. 2017 டிசம்பர் 4 - 7 ஆந் திகதி வரை புதுடெல்லி நடைபெற்ற சர்வதேச ஆரோக்யா 2017 இல் ஐந்து உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களுடன், இலங்கை சுகாதார, போசணை மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சரினால் தலைமை தாங்கப்பட்ட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட குழுவும் பங்கேற்றது.

xxvii. உயர் ஸ்தானிகராலயமானது இந்திய அதிகாரிகளுடன் (உளவுத்துறை அதிகாரிகள் உள்ளடங்கலாக) ஒருங்கிணைந்ததுடன், இருநாடுகளுக்குமிடையே பரஸ்பர சட்ட உதவிகளின் கீழ் விசாரணையொன்றின் கருதி 2017 நவம்பர் 26-28 ஆந் திகதி வரை மும்பை மற்றும் தானே நகரங்களுக்கு இலங்கையின் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த இரு அதிகாரிகள் விஜயம் செய்திருந்தனர்.

**ஆ. இலங்கைக்கான விஜயங்கள்**

i. சருவதேச வெசாக் விழாவில் பங்குபற்றுவதற்காக இந்தியாவிற்கு பிரதம அமைச்சர் மாண்புமிகு நரேந்திர மோடி 2017 மே 11ஆந் திகதியிலிருந்து 12ஆந் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

ii. இந்தியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு சுஷ்மா சுவராஜ் இரண்டாவது இந்து சமுத்திர மாநாட்டில் பங்குபற்றுவதற்காக 2017 ஓகத்து 31ஆந் திகதியிலிருந்து செத்தெம்பர் 01ஆந் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

iii. ஆந்திரா பிரதேசத்தின் முதலமைச்சராகிய சந்திரபாபு நாயுடு 2017 சனவரி 07ஆந் திகதியிலிருந்து 08ஆந் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

iv. 2017 ஒக்டோபர் 24-30 ஆந் திகதி வரை நடைபெற்ற சிறிய மற்றும் நடுத்த தொழில் முயற்சியாண்மை 2017 இல் பங்குபற்றுவதற்காக இரண்டு நிறுவன பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

**இ. பல்தரப்பு தொடர்புகள்**

பயங்கரவாதத்திற்கு எதிரான மாநாடுகள் (2017 மார்ச் 14ஆந் திகதியிலிருந்து 16ஆந் திகதி வரை), சமுத்திரம் பற்றிய கலந்துரையாடல் (2017 ஏப்ரல் 19ஆந் திகதியிலிருந்து 21ஆந் திகதி வரை) உலக வர்த்தக மாநாடு (2017 மார்ச் 27ஆந் திகதியிலிருந்து 28ஆந் திகதி வரை), பௌத்த பாரம்பரியங்கள் மீதான சருவதேச மாநாடு கருத்துத் தொகுதிகளும், கருத்து வேறுபாடுகளும் (2017 செத்தெம்பர் 07ஆந் திகதியிலிருந்து 08ஆந் திகதி வரை) பெண்களின் தொழில் முயற்சி நிலையும், தேர்ச்சிகள் அபிவிருத்தியும் (2017 செத்தெம்பர் 27) ஆகியன இலங்கை உயர்ஸ்தானிகராலயம் இலங்கையின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்திக் கொண்டு இயைபுள்ள அதிகாரபீடங்களுடன் கூட்டிணைந்து செயற்பட்டுள்ளது.

தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் சமூகம் (2017 ஒக்டோபர் 3 மற்றும் 4 ஆம் திகதி) தொடர்பான இந்திய மாநாடு, 2017 ஒக்டோபர் 26 ஆந் திகதி இந்தியாவில் நடைபெற்ற பசுபிக் மற்றும் இந்திய சமுத்திரத்துக்கிடையேயான உறவுப்பாலம் தொடர்பான செயலமர்வு, புதுடெல்லியில் உள்ள உயர் ஸ்தானிகராலயம் தொடர்புடைய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் பங்குபற்றலை உறுதிப்படுத்தி வருகிறது.

**ஈ. பொருளாதாரத் தொடர்புகளும், வெளிநாட்டு முதலீடுகளும்**

வர்த்தக மற்றும் முதலீட்டு விசாரணைகளுடன் தொடர்புடைய வியாபாரம் மற்றும் சுற்றுலா பொருட்காட்சிகள், வீதிப்பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் முதலியனவற்றிற்கு புது டில்லி, சென்னை மற்றும் மும்பாயிலுள்ள இலங்கைத் தூதரகங்கள், இந்திய இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுடன் தொடர்பு கொண்டிருந்தன. இலங்கைக்கு முதலீடுகளை கவர்ந்திழுப்பதன் பொருட்டு வளவாய்ப்புள்ள இந்திய முதலீட்டாளர்களுடன் சந்திப்புக்களும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

I. இரத்தினக்கல், தகவல் தொழில்நுட்பம், நறுமணப்பொருட்கள், தன்னியக்க துறை ஆபணரங்கள் மற்றும் சுகாதார தீர்வுகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய வர்த்தக சம்மேளனங்கள் மற்றும் துறைசார் சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களுடன் இலங்கையில் வர்த்தக சந்திப்புக்களை ஏற்பாடு செய்யும் 16 இந்திய நிறுவனங்களுக்கான உதவிகளை விஸ்தரித்தல்.

II. 2017 ஒக்டோபர் 30 ஆந் திகதி T-Club இன் அங்கத்தவர்களுக்காக இலங்கைத் தேயிலை ஊக்குவிப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. தேயிலை சுவை பார்க்கும் அமர்வினைத் தொடர்ந்து, இலங்கையிலிருந்தான விசேடத் தேயிலை

தொடர்பிலான காட்சி விளக்கமளிப்பினை உயர் ஸ்தானிகராலயம் முன்னெடுத்திருந்தது.

III. சென்னை மற்றும் கொச்சின் இல் தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பல் போக்குவரத்து (கால அனுமதியளிப்பு/NTBகள்) களை அனுமதிப்புக்கான வசதிப்படுத்தல் மற்றும் செயற்படு வகையில் ஈடுபடல்.

IV. இலங்கையில் முதலீட்டு சபை அதிகாரிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் சந்திப்புக்களை வசதிப்படுத்தல்.

V. வர்த்தக மற்றும் துறைசார் இந்திய ASEAN இலங்கை சம்மேளனத்துடன் இணைந்து சம்மேளனத்தின் உறுப்பினர்களை அறிவூட்டும் வகையில் இலங்கையில் வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பான செயலமர்வை ஒழுங்கு செய்தல்.

VI. மும்பையிலுள்ள இலங்கையின் ஆலோசனை நாயகத்துடன் இணைந்து 2017 நவம்பர் 16-18 வரை நடைபெற்ற உலக தேயிலை மற்றும் கோப்பி எக்ஸ்போவின் 5 ஆவது செயற்திட்டத்தில் இலங்கையின் பங்குபற்றலை ஒழுங்கு செய்திருந்தமை.

**உ. கலாச்சாரத் தொடர்புகள்**

புது டில்லியிலும், சென்னையிலும், மும்பாயிலுமுள்ள இலங்கைத் தூதரகங்கள் இருதரப்பு கலாச்சாரத் தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதன் பொருட்டு பொருட்காட்சிகள், மாநாடுகள் மற்றும் விழாக்களையும் உள்ளடக்கி பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு வசதி வழங்கியுள்ளதுடன், பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளதுடன் உள்நாட்டு அரசாங்கங்கள், மத்திய அரசாங்கம் மற்றும் அமைப்புக்களுடனான தொடர்புகளில் ஈடுபட்டிருந்தன.

டிசம்பர் 8-10 வரை புது டில்லியிலுள்ள இந்திரா காந்தி தேசிய கலை நிலையத்தில் புது டில்லியின் வெளியுறவுகள் அமைச்சினால் "போதி பர்வா: பௌத்த பாராம்பரியத்தின் BIMSTEC கொண்டாட்டம்" ஒழுங்கு செய்யப்பட்டது: இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் SLTPB இன் அதிகாரிகள் மற்றும் இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

**ஊ. கல்வி, இளைஞர், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**
**இலங்கை தூதரகங்களினால்**

I. இலத்திரனியல் அலுவலக முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையில் தொலைத்தொடர்புகள் மற்றும் இலத்திரனியல் அமைச்சின் கோரிக்கையை வசதிப்படுத்திக் கொடுத்தல்.

II. இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையே (ஆயுஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம்) பாரம்பரிய மருத்துவ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தற்போது இறுதிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை ஒன்றிணைத்தல்.

III. இந்திய பல்கலைக்கழகங்களில் ஆட்சேர்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இலங்கை மாணவர்களுக்கு வசதியேற்படுத்தல் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.

IV. 2017 ஒகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதங்களில் இலங்கை தொழினுட்பவியலாளர்களுக்கான சேலத்திலுள்ள கைத்தறி தொழில்நுட்ப இந்திய நிறுவகத்துடன் இணைந்து தொழினுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்திருந்தமை.

**எ. தொழிலாளர்களின் நலனோம்பல் சேவைகளும், பிற சேவைகளும்**

சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயம் 17 இலங்கை மீனவர்களின் விடுவிப்பிற்கும், இலங்கைக்கு அவர்கள் திருப்பி அனுப்பப்படுவதற்கும், 1030 இலங்கை அகதிகளின் தன்னிச்சையான தாய்நாட்டிற்கு (இலங்கைக்கு) திருப்பியனுப்பப்படுவதற்கான விருப்பத்தை பூர்த்தி செய்து, உதவியுள்ளதுடன், சனாதிபதி நிதியத்தின் கீழ் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் நோயாளர்களின் தேவைகளுக்கும் உதவியுள்ளது.

புது டில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் சோமாலியாவில் பிணைப்பாளர்களாக பிடித்துச்செல்லப்பட்ட இலங்கை படகொன்றின் அங்கத்தவர்கள் விடுவிக்கப்படுவதற்கு உதவி புரிந்துள்ளது.

ஒன்பது மீன்பிடிப்பாளர்கள் மற்றும் எட்டு மீன்பிடி கப்பல்களை விடுவிப்பதற்கான வழிகாட்டல்களை சென்னை தூதரகம் வழங்கியுள்ளது.

I. தமிழ்நாட்டின் அகதிகள் முகாமில் வாழும் இலங்கையர்களின் தன்னார்வ மீளத்திரும்புதலுக்காக சிவிலியன் ஆவணங்களை வெளியிடுவதற்காக ஐம்பத்திரண்டு விசேட ஆலோசனை நிகழ்ச்சித்திட்ட சேவைகளை சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயம் முன்னெடுத்துள்ளது. அகதிகள் நாடு திரும்பல் நிகழ்ச்சித்திட்டத்தின் (1950 RRP கடவுச்சீட்டுகள்) கீழ் 3522 பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் கடவுச்சீட்டுக்களை வெளியிட்டுள்ளது. 2017 டிசம்பர் வரை 1513 அகதிகள் இலங்கைக்கு மீளத் திரும்பியுள்ளனர்.

II. ஜனாதிபதி நிதியத்தின் கீழ் இலங்கை நோயாளர்களுக்கு (49) வசதியேற்படுத்தல்.

III. 125 நபர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பாக வசதிப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

## V. மாலைதீவுகள்

**இருதரப்பு தொடர்புகள்**

**அ. வெளிநாட்டு விஜயங்கள்**

i. கல்வி அமைச்சர் மாண்புமிகு அகில விராஜ் காரியவசம் 2017 மார்ச் 09ஆந் திகதியிலிருந்து 12ஆந் திகதி வரை மாலைதீவுகளுக்கு விஜயம் செய்துள்ளார்

ii. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு மங்கள சமரவீர 2017 பெப்புரவரி 08 ஆந் திகதியிலிருந்து 09 ஆந் திகதி வரை மாலியில் நடாத்தப்பட்ட மாலைதீவுகள் - இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் மூன்றாவது அமர்வில் பங்குபற்றுவதற்காக மாலைதீவுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

iii. சிறைக்கைதிகளின் பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ், இலங்கைக்கான 14 சிறைக்கைதிகளில் 12 சிறைக்கைதிகளுக்கு தண்டனையை வழங்கும் திவேஹி மொழியிலுள்ள சாசன கட்டளைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பினை பெறுவதற்காக இத்தூதரகம் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

**ஆ. இலங்கைக்கான விஜயங்கள்**

மாலைதீவுகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி. முகம்மது ஆசிம் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிதி நன்கொடை வழங்குவதன் பொருட்டு 2017 மே 30 ஆந் திகதியிலிருந்து யூன் 03 ஆந் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

**இ. பல்தரப்பு தொடர்புகள்**

சுகாதார அமைச்சர் மாண்புமிகு ராஜித சேனாரத்ன 2017 செத்தெம்பர் 06 ஆந் திகதியிலிருந்து 10 ஆந் திகதி வரை மாலைதீவில் நடாத்தப்பட்ட தெற்காசியாவிற்கான உலக சுகாதார அமைப்பின் பிராந்திய குழுவின் 70 வது அமர்வில் பங்குபற்றியுள்ளார்.

தென்கிழக்காசியாவுக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிராந்திய குழுவின் பதினேழாவது அமர்வு மாலைதீவில் 2017 செப்டெம்பர் 6 முதல் 10 வரை நடைபெற்றது. இந்தக் குழுவில் இலங்கையின் சுகாதார அமைச்சர் கௌரவ. ராஜித சேனாரத்ன மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

**ஈ. பொருளாதாரத் தொடர்புகளும், வெளிநாட்டு முதலீடுகளும்**

i. 2017 ஓகஸ்ட் 08 ஆந் திகதியிலிருந்து 10 ஆந் திகதி வரை மாலியில் நடாத்தப்பட்ட உணவு மற்றும் விருந்தோம்பல் ஆசியா மாலைதீவுகள் பொருட்காட்சி மற்றும் சர்வதேச சமையல் சவால் 2017 என்ற நிகழ்ச்சியில் கௌரவ அதிதியாக இலங்கை தூதுவர் பங்குபற்றியுள்ளார்.

ii. இலங்கை வர்த்தகக் கூடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கை முதலீட்டு மற்றும் வர்த்தக இரகசியக் கூட்டம் 2017 என்பது 2017 மே 30ஆந் திகதியிலிருந்து யூன் 1ஆந் திகதி வரை நடாத்தப்பட்டது.

iii. இந்த தூதரகமானது கொழும்பு இராணுவப்படை செயலமர்வு 2017 (2017 ஓகஸ்ட் 28-29 வரை), சீரற்ற யுத்த பயிற்சிநெறி - 2018, பயிற்சி கோர்மொரண்ட் போராட்டம் 2017, கூட்டு விசேட படை பன்னாட்டு துறை பயிற்சி திட்டம் (2017 செப்டெம்பர் 3-25 வரை) மற்றும் KDU சர்வதேச ஆய்வு மாநாடு - 2017 (2017 ஓகஸ்ட் 3 மற்றும் 4 ஆந் திகதி) ஆகியவற்றுக்கான அழைப்பிதழ்களை ஒருங்கிணைத்துள்ளது.

iv. மாலைதீவு உளவுத்துறையைச் சேர்ந்த சிரேட்ட அதிகாரிகள் தூதுவரை சந்தித்தனர். அதன் போது பரஸ்பர ஆர்வங்கள் மற்றும் அனுகூலம், இலங்கை மற்றும் மாலைதீவு பொலிஸ் சேவைக்கிடையே ஏற்கனவேயுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பித்தல் மற்றும் மாலைதீவு பொலிஸ் அதிகாரிகளுக்கான பயிற்சி திட்டங்கள் ஆகிய துறைகளில் உளவுத்துறை பகிரல் உள்ளடங்கலாக இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

v. விநியோகம், மருந்துப்பொருட்கள் துறையில் இலங்கை நிறுவனங்களால் முகங்கொடுக்கப்படும் பல்வேறு வர்த்தக பிணக்குகள்/பிரச்சினைகள் ஆகியவற்றை இத்தூதரகம் ஒருங்கிணைக்கிறது. அத்தோடு, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் மாலைதீவில் நடைபெற்ற வர்த்தக பொருட்காட்சிகள், கண்காட்சிகள் மற்றும் வர்த்தகப் பகுதிகளில் தூதரகங்களின் தலைமைகள் பங்குகொண்டுள்ளன.

vi. இந்த தூதரகமானது, பட்டதாரி கற்கைகள் (ஐந்து பரிந்துரைகள்), SAARC பிராந்தியத்தில் (நான்கு பரிந்துரைகள்) மாணவர்களுக்கான SLIIT புலமைப்பரிசில்கள், வெளிநாட்டு இராசதந்திரிகளுக்கான (ஒரு பரிந்துரை) தொழினுட்ப ஒத்துழைப்பு திட்டம் 2017 (2017 செப்டெம்பர் 18 - 29 ஆந் திகதி BIDTI இல் நடைபெற்றது) மற்றும் என்டர்ரொஸ்டொமல் தெரபி தாதியர் போன்றவற்றிற்காக ஜனாதிபதி புலமைப்பரிசில் விருதிற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

vii. மாலைதீவில் இலங்கையின் கல்விச் சேவைகளின் ஊக்குவிப்புகளுக்காக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு இந்த தூதரகம் வசதியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

## VI. நேபாளம்

### ஆ. இலங்கைக்கான விஜயங்கள்

i. மாண்புமிகு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு நேபாளத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ii. அதிமேதகு நேபாளத்தின் சனாதிபதி அவர்கள் கண்டியில் நடாத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெசாக் தின விழாவின் முடிவு வைபவத்தில் பிரதான பிரதான விருந்தினராக பங்குபற்றுவதன் பொருட்டு 2017 மே 14 ஆந் திகதியன்று இலங்கைக்கு விஜயம் செய்ததுடன், அதிமேதகு இலங்கையின் ஜனாதிபதி அவர்களை சந்தித்து இருதரப்பு விடயங்களைப் பற்றி கலந்துரையாடல் நிகழ்த்தியுள்ளார்.

iii. நேபாளம் - இலங்கை வர்த்தகக்கூடத்தின் வர்த்தக பேராளர் குழுவொன்று 2017 பெப்ரவரி 21 ஆந் திகதியிலிருந்து 25 ஆந் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

iv. 2017 ஓகத்து 31 ஆந் திகதியிலிருந்து செத்தெம்பர் 03ஆந் திகதி வரை கொழும்பில் நடாத்தப்பட்ட இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பொருட்காட்சியில் நேபாளத்தின் கைப்பணிப் பொருட்கள் சங்கத்தின் கூட்டணியினதும் நேபாளத்தின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சங்கத்தினதும் பேராளர் குழுவொன்று பங்குபற்றியுள்ளது.

v. இலங்கை மற்றும் நோபாளத்துக்கிடையேயான சுற்றுலாத்துறை ஒத்துழைப்பு தொடபான உடன்படிக்கை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான உடன்படிக்கை குறித்த வரைவு உடன்படிக்கைகள் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மீளப் புதுப்பித்தல் ஆகியவற்றுக்காக ஒக்டோபர் மாதம் தொடர்புடைய அதிகாரிகளுடன் இந்த தூதரகத்தின் தலைவர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

vi. நேபாளத்தில் வர்த்தகத்தை மேம்படுத்தல், நீர்மின்சக்தி துறையில் முதலீடு செய்தல், உயர் கல்வி, சுகாதார மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளை கண்டறிவதற்காக ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நேபாளத்தின் வர்த்தக சம்மேளனம், சக்தி அபிவிருத்தி சபை மற்றும் கல்வி ஆலோசனை சங்கத்தைச் சேர்ந்த நோபாளப் பிரதிநிதிகளுடன் இந்த தூதரகத்தின் தலைமை சந்தித்தமை.

vii. நேபாளத்தின் சுற்றுலாத்துறை சபை மற்றும் சுற்றுலா மற்றும் பிரயாண முகவர்களின் நேபாளச் சங்கத்தினரை உள்ளடக்கிய சுற்றுலா இயக்குநர்களை கொண்ட குழுவினை தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் சுற்றுலா இயக்குநர்களை சந்திக்கச் செய்து கலந்துரையாடும் பொருட்டு டிசம்பர் மாதம் 14 ஆந் திகதி இலங்கைக்கான விஜயத்தை இந்த தூதரகம் வசதிப்படுத்திக் கொடுத்துள்ளது.

viii. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் வழங்கப்படும் வசதிகள் குறித்தும், இலங்கைக்கான நாடு திரும்புதலுக்கான தாமதம் தொடர்பாகவும் இலங்கை அகதிகளிடமிருந்து தூதரகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் படி அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பிலும், இலங்கை அகதிகளின் நலன்புரிகளை

கலந்துரையாடும் பொருட்டும் டிசம்பர் 06 ஆந் திகதி இத்தூதரகத்தின் தலைவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரதிநிதியை சந்தித்தார்.

**அ. வெளிநாட்டு விஜயங்கள்**

i. நேபாளத்தின் தரைப்படைப் பதவியினர்களின் பிரதானி ஜெனரல் ராஜேந்திர சேத்திரியினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் இலங்கை தரைப்படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிசாந்த த சில்வா 2017 மார்ச் 15 ஆந் திகதியன்று நேபாளத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

ii. இலங்கை பொலிஸ்மா அதிபர் 2017 சனவரி 17ஆந் திகதியிலிருந்து 21ஆந் திகதி வரை நேபாளத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

iii. இலங்கையின் பிரதம நீதியரசராகிய பெருமதிப்பிற்குரிய பிரியசாத் டெப், ச.ச. அவர்கள் 2017 ஓகஸ்ட் 16 ஆந் திகதியிலிருந்து 20 ஆந் திகதி வரை காத்மண்டுவில் நடாத்தப்பட்ட சைபர் குற்றங்கள் மற்றும் மின்னணு சான்று மீதான நீதிமுறை வேலைக்களத்தில் பங்குபற்றுவதற்காக அங்கு விஜயம் செய்திருந்தார்.

iv. 2017 ஓகத்து 11ஆந் திகதியன்று காத்மண்டு, நேபாளத்தில் நடாத்தப்பட்ட பிம்ஸ்டெக்கின் (BIMSTEC) பதினைந்தாவது அமைச்சர் மட்டத்திலான கூட்டத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க பங்குபற்றியுள்ளதுடன், அங்கு நேபாளத்தின் பிரதம அமைச்சரையும், இந்திய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரையும், நேபாளத்தின் பிரதம அமைச்சரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரானவரையும் சந்தித்துள்ளார்.

v. FCCISL இன் பேராளர் குழுவொன்று 2017 மார்ச்சில் நடாத்தப்பட்ட நேபாள முதலீட்டு உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்காக நேபாளத்திற்கு விஜயம் செய்துள்ளது. இந்த உச்சி மாநாட்டில் இலங்கை முதலீட்டாளர்கள் நேபாளத்தில் வெவ்வேறு துறைகளில் 500,000 ஐ.அ. டொலர்களை முதலீடு செய்வதற்கு வாக்குறுதியளித்துள்ளனர்.

மீளாய்வுக் காலப்பகுதியில் 2017 செத்தெம்பர் 14 ஆந் திகதியன்று நேபாளத்தின் உலக அலுவல்களின் நேபாள மன்றத்திற்கும், சருவதேச தொடர்புகள் மற்றும் திறமுறை ஆய்வுகள் லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்திற்குமிடையே நியோன் (NEON) ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கையொப்பமிடப்பட்டுள்ளது

i. இலங்கையின் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் கூடத்தின் கூட்டமைப்பிற்கும், நேபாள - இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் கூடத்திற்குமிடையே

வர்த்தகத் தொடர்புகளை பலப்படுத்தும் நோக்குடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டது.

ii. நேபாள அரசாங்கம் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு 50,000 ஐ.அ. டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

iii. இலங்கையும் கூட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட நேபாள மக்களுக்கு மனிதாபிமான உதவியாக 50,000 ஐ.அ. டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

iv. சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கைக்கு கூடுதலான எண்ணிக்கையில் நேபாளப் பிரசைகள் அனுப்பப்படுவதை ஊக்குவிப்பதன் பொருட்டு பிரயாண முகவர்களுக்கு / சுற்றுலாவை செயற்படுத்துபவர்களுக்கு இலங்கைத் தூதரகம் இலங்கையைப் பற்றி சுருக்கமான தகவல்களை வழங்கியுள்ளதுடன், ஊக்குவிப்பும் அளித்துள்ளது.

v. காத்மண்டுவில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர் ஒருவருக்கும் காத்மண்டுவில் மனித ஆட்கடத்தலில் அகப்பட்டு ஆதரவற்ற நிலையில் தனித்து விடப்பட்டிருந்த இரண்டு இலங்கை அகதிகளுக்கும் கொன்சியூலர் உதவியையும் சட்ட உதவியையும் இலங்கைத் தூதரகம் வழங்கியுள்ளது.

vi. இத்தூதரகம் இலங்கை நிர்மாணக் கைத்தொழில் கூடத்தின் கோரிக்கையின் பேரில் நேபாளத்திலிருந்து தொழிலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உதவி வழங்கியுள்ளது.

vii. 2018 டிசம்பர் 10-12 ஆந் திகதி வரை காத்மண்டுவில் சார்க் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்ட குழுவின் 54 ஆவது அமர்வு கூட்டத்தொடரில் சார்க் பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் நாயகம் செல்வி.யசோஜா குணசேகர பங்குபற்றினார்.

## VII. பாகிஸ்தான்

### (அ) இருதரப்பு உறவுகள்

விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் உத்தியோகத்தர்களின் பின்வரும் விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. இலங்கையின் கடற்படைத் தளபதி 2017 பெப்புரவரி 10ஆந் திகதியிலிருந்து 17ஆந் திகதி வரை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்தார்.

ii. நகரத் திட்டமிடல் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே அவர்களும், பிரதி பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு அனோமா கமகே அவர்களும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டின் வகிபாகம் என்ற மாநாட்டில் 2017 மே 02ஆந்

திகதியிலிருந்து 07ஆந் திகதி வரை பங்குபற்றுவதற்காக பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்தனர்.

iii. இலங்கையின் தரைப்படைத் தளபதியும், பேராளர் குழுவும் 2017 மே 02ஆந் திகதியிலிருந்து 07ஆந் திகதி வரையான காலப்பகுதியில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்தனர்.

iv. கிராமிய பொருளாதார அமைச்சர் மாண்புமிகு பீ. ஹரிசன் அவர்களும், நிதி அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க அவர்களும் பாகிஸ்தான் அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படவுள்ள 200 மில்லியன் ஐ.அ. டொலர்கள் கடன் வசதி மீதான கூட்டு கூட்டிணைப்புக்குழுவின் 1வது கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக 2017 மே 09ஆந் திகதியன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளனர்.

v. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளராகிய திரு. சி.எஸ். லொக்குஹெட்டியம், பேராளர் குழுவும் 2017 யூலை 09ஆந் திகதியிலிருந்து 14ஆந் திகதி வரை இஸ்லாமாபாத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

vi. இலங்கைக்கு வழங்கப்படுமென பாகிஸ்தான் அரசாங்கத்தினால் வாக்குறுதியளிக்கப்பட்ட 200 மில்லியன் ஐ.அ. டொலர்கள் விடயம் பற்றி கலந்துரையாடுவதற்காக இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதற்கு கூட்டு கூட்டிணைப்புக் குழுவிற்கு உதவி வழங்கப்பட்டது. இஸ்லாமாபாத்திலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் சிரேட்ட மட்டத்திலான உத்தியோகத்தர் மேற்போந்த கூட்டத்தில் பங்குபற்றியுள்ளார்.

vii. சார்க் சட்டத்தின் 25 ஆவது பூர்த்தியில் கலந்துகொள்வதற்காக ஒக்டோபர் மாதம் கௌரவ இலங்கை நீதியரசர் கராச்சி நகருக்கு விஜயம் செய்தார்.

**(ஆ) பொருளாதார உறவுகள்**

I. வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் கூட்டுறவு மொத்த நிறுவனத்தின் தலைவரின் பங்குபற்றலுடன் பாகிஸ்தானிலிருந்து 2000 மெட்ரிக் டொன் பாஸ்மதி அரிசியினை கொள்வனவு செய்யும் நோக்கில் இஸ்லாமாபாத்திலுள்ள வர்த்தக அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டமை.

**(இ) வர்த்தக விஜயங்கள் / வர்த்தகப் பிரதிநிதிகள்:**

I. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை அதிகாரிகளின் பங்குபற்றலுடன் பாகிஸ்தான் லாகூர் நகரில் நடைபெற்ற கள சந்தைப்படுத்தல் கல்விக்கான வசதிப்படுத்தல்களை இலங்கைத் தூதரகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

II. பாகிஸ்தானில் தேயிலை ஆர்வலர்களின் பங்குபற்றலுடன் 2017 ஜுலை மாதம் 06 ஆந் திகதி நடைபெற்ற "உலகளாவிய தேயிலை விழா" ஐ உயர் ஸ்தானிகராலயம் ஒழுங்கு செய்திருந்தது.

III. இலங்கையின் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையை பாகிஸ்தானில் ஊக்குவிக்கும் வகையில் 'Rawal 2017' மற்றும் மர்கலா கொண்டாட்டம் 2017 இல் இத்தூதரகம் பங்குபற்றியது.

IV. இலங்கை - பாகிஸ்தான் இருதரப்பு உறவுகளை ஊக்குவித்தல் மற்றும் கண்டறிதல் மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்கனவேயுள்ள எதிர்பார்ப்புகளை கலந்துரையாடல் ஆகியவற்றுக்காக 2017 டிசம்பர் 15 - 19 ஆந் திகதி வரை கராச்சியிலுள்ள இலங்கையின் ஆலோசனை நாயகத்தின் மூலமாக இஸ்லாமாபாத்திற்கான வர்த்தக ஊக்குவிப்பு விஜயம் முன்னெடுக்கப்பட்டது.

****

# ஐக்கிய நாடுகள், பல்தரப்பு விவகாரங்கள், மனித உரிமைகள், மாநாடுகள் மற்றும் நல்லிணக்கப் பிரிவு

**ஐக்கிய நாடுகள், பல்தரப்பு விவகாரங்கள், மனித உரிமைகள், மாநாடுகள் மற்றும் நல்லிணக்கப் பிரிவு**

இந்தப் பிரிவின் பல்தரப்பு வேலைப்பணிகளின் கீழ் நியூயோர்க், ஜெனிவா, அவுஸ்ரியா, பாரிஸ், ரோம், நைரோபி மற்றும் நெதர்லாந்தில் அமைந்துள்ள இலங்கையின் நிரந்தர தூதரகங்கள்/ உயர் ஸ்தானிகராலயங்கள்.்.தூதரகங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இந்தப் பிரிவானது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட வரிசை அமைச்சுக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்புகளுடன் இணைந்து திட்டங்களை ஒழுங்கு செய்கிறது. 2017 ஆம் ஆண்டில் இப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட **பிரதான பணிகள்** கீழ்வருமாறு:

**A. நல்லிணக்கத்துடன் தொடர்புடைய வேலைப்பணிகள்:**

1. நல்லிணக்க பொறிமுறைகளை ஒழுங்கமைப்பதற்கான செயலகத்துடன் இணைந்து, சிவில் சமூகம், அரசியல் தரப்புக்கள், கொடையாளிகள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களும், OHCHR, ஐக்கிய நாடுகள் உள்நாட்டுக் குழு மற்றும் UNPBSO உள்ளடங்கிய ஐக்கிய நாடுகள் மற்றும் ஏனைய நிபுணர்களுடன் இணைந்து இந்தப் பிரிவானது ”இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல்” எனும் தலைப்பிடப்பட்ட 2015 இன் 30/1 தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உடன்பாடுகளை நிறைவேற்றுவது நோக்கி செயலாற்றி வருகிறது.
2. இதில் மனித உரிமைகளின் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய உண்மைத்தன்மை, நீதி மற்றும் மீள நிகழாமைக்கு உத்தரவாதமளித்தல் மற்றும் பொதுவேலை ஆகிய 4 பொறிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**B. நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 72 ஆவது கூட்டத்தொடர்:**

1. 2017 செத்தெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 72 ஆவது கூட்டத்தொடரின் இலங்கைப் பிரமுகர்களின் பங்குபற்றலுக்கான நிலையான மற்றும் சரக்கியல் தயார்படுத்தல்களுக்கான மேல்மட்ட பிரிவுக்கு அதிமேதகு சனாதிபதி தலைமை தாங்கியிருந்தார். இந்தப் பிரிவானது ஏனைய நாடுகள்/ அரசாங்கத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதி தலைவர்கள் ஆகியோருடனான சனாதிபதியின் சந்திப்புக்களையும் வசதிப்படுத்திக் கொடுக்கிறது. ஐக்கிய நாடுகளின் (1ஆவது குழு - ஆயுதம் களைதல் மற்றும் சர்வதேச பாதுகாப்பு, 2 ஆவது குழு - பொருளாதாரம் மற்றும் நிதி, 3 ஆவது குழு - சமூக, மனிதாபிமான மற்றும் கலாச்சாரம், 4 ஆவது குழு - விசேட அரசியல் மற்றும் குடியேற்றமற்ற நிலை, 5 ஆவது குழு - நிர்வாகம் மற்றும் வரவு செலவு திட்டம், 6 ஆவது சட்டம்) ஆகிய ஆறு பிரதான குழுவின் பணிகளிலும் இலங்கையின் செயற்தகு பங்குபற்றல் மற்றும்

பங்களிப்புக்கும் வசதி ஏற்படுத்தி குறித்த வரிசை அமைச்சுக்களுடன் இணைந்து ஆலோசனைகளில் விளக்கமளிப்புகளை வழங்குகிறது.

**C. ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் குழுக்கள், சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுடனான ஈடுபாடு:**

2. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 34 ஆவது அமர்வு (2017 பெப்ருவரி 27 முதல் மார்ச் 24 வரை), 35 ஆவது அமர்வு (2017 ஜூன் 06-23 ஆம் திகதி வரை) மற்றும் 36 ஆவது அமர்வு (2017 செத்தெம்பர் 11-29 ஆம் திகதி வரை) இல் இலங்கையின் பங்குபற்றலுக்கு தேவையான பொருண்மை மற்றும் சரக்கியல் தயார்படுத்தல்களை செய்தல். இதில் ஏனைய வரிசை அமைச்சுக்கள் மற்றும் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு அமர்விலும் ஆணைக்குழுவின் நிரலின் உள்ளடக்கம் தொடர்பான பொருண்மை உள்ளார்ந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. 2015 30/1 தீர்மானச் செயல்முறைப்படுத்தலுக்கான கால எல்லை இரண்டு ஆண்டுகளாக விஸ்தரிக்கப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டு 23 மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பின்பற்றப்பட்ட "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்" என்ற 34/1 தீர்மானத்திற்கு இலங்கை இணை அனுசரணையையும் வழங்கியிருந்தது.

4. அமைச்சரவையினால் தாபிக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான உள்ளக அமைச்சரவைக் குழுவின் கட்டமைப்பில் 2017-2021 ஆம் ஆண்டிற்கான தேசிய மனித உரிமைகள் செயலாக்க திட்டத்தின் செயல்முறை, இறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் ஆகியவற்றுக்கு அமைச்சரவை மூலமாக இந்தப் பிரிவு வழிகாட்டுகிறது.

**D. பல்தரப்பு உடன்படிக்கைப் பிரிவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையாளர்கள் மற்றும் ஏனைய ஐக்கிய நாடுகள் பொறிமுறைகளுக்கு கடமைகளை அறிக்கையிடல்:**

5. அளிக்கப்பட்டுள்ள நிலையான உள்ளார்ந்த விடயங்கள்: ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஏனைய நாடுகளின் அனைத்துலக காலாந்தர மீளாய்வு செயல்முறையில்(UPR) இலங்கையின் பங்குபற்றல், இனப் பாகுபாட்டினை கட்டுப்படுத்தும் மாநாடு தொடர்பாக இலங்கையின் காலாந்தர அறிக்கைகளை பரிசீலணை செய்தல், புலம்பெயர்ந்த வேலையாட்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான மாநாடு, சித்திரவதைக்கெதிரான மாநாடு, பெண்களுக்கெதிரான அனைத்து விதமான வன்முறைகளையும் தடுப்பது தொடர்பான மாநாடு, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாடு, மேலும் சித்திரவதைக்கெதிரான மாநாடு மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான மாநாடுகளின் கீழ் அறிக்கைகள்/ நிகழ்ச்சிநிரல்களை சமர்ப்பித்தல்.

6. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் அலுவலகம்/ விசேட நடைமுறைகள், வலுக்கட்டாயமான மற்றும் தன்னிச்சையான காணாமல்போதல் சம்பவங்கள் தொடர்பாக பணியாற்றும் குழுக்கள் ஆகியவற்றுக்கு இலங்கையின் தன்னார்வ உடன்படிக்கை கடமைகள் எனும் வகையில் வழக்கமாக மறுமொழியளித்தல்.

7. வலுக்கட்டாயமாக காணாமல்போனோருக்கெதிராக நபர்களின் பாதுகாப்புக்கான சர்வதேச மாநாடு (2016 மார்ச் 25 ஆந் திகதி) மற்றும் அங்கவீனமுற்றோரின் உரிமைகள் தொடர்பான மாநாடு (2016 பெப்ருவரி 12 ஆந் திகதி) ஆகியவற்றுக்கான சர்வதேச மாநாட்டின் செயல்முறைகளை ஒழுங்கு செய்தல்.

8. கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் மற்றும் கல்முனை ஆகிய நகரங்களில் நடைபெறும் ஆலாசனையைத் தொடர்ந்து, இலங்கையின் தேசிய அறிக்கையை தயாரித்து 3ஆவது சுற்று அனைத்துலக காலாந்தர அறிக்கையிடம் சமர்ப்பித்தல்.

**E: தனிநபர் அறிக்கையில் ஐக்கிய அமெரிக்க ஆட்கடத்தல் அமைப்பிடம் அறிக்கையிடல்:**

9. 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ஆட்கடத்தல்களை குறைக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள் குறித்து நீதி அமைச்சுடன் இணைந்து இந்தப் பிரிவு, இலங்கை அரசாங்கத்தின் அறிக்கையை சமர்பித்துள்ளது. கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் ஆட்கடத்தல்களை தடுப்பது தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க முயற்சியை அடையாளப்படுத்துதல், ஐக்கிய அமெரிக்கத் திணைக்களத்தின் ஆட்கடத்தல் தொடர்பான தொகுதி தரப்படுத்தலில் இலங்கையின் ஸ்தானம் 2017 ஜுன் மாதத்தில் தொகுதி 2 ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது.

10. பாதுகாப்பு அமைச்சு, தொழில் அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சகம், வர்த்தகத் திணைக்களம் ஆகியவற்றிடமிருந்து இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்காக ஆட்கடத்தல்களை தடுப்பது தொடர்பான BIDTI உடன் இணைந்து இப்பிரிவு பயிற்சி திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

**F. ஐக்கிய நாடுகள் பிரமுகர்களின் விஜயங்கள்:**

11. 2017 செத்தெம்பர் கீழ்காணும் பிரமுகர்களின் விஜயம் தொடர்பான நிலையான மற்றும் சரக்கியல் தேவைப்பாடுகள் இப்பிரிவினால் கையாளப்பட்டுள்ளன:

I. தீவிரவாதத்தை ஒழிப்பதுடன், மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு தொடர்பான விசேட அறிக்கையாளர், திரு.பென் எமர்சன் (2017 ஜுலை மாதம் 09-15 ஆந் திகதி வரை)

II. ஐக்கிய நாடுகளின் உதவிச் செயலாளர் நாயகம் திரு.ஜெ.ஃவ்ரி பெ.ஃல்ட்ஸ்மன் (ஜுலை 19-21 ஆந் திகதி வரை)

III. நீதி மற்றும் நல்லிணக்க செயல்பாட்டிற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை கொலம்பியாவிலிருந்து வருகை தந்த நிபுணர் குழுவினால் வழங்கப்பட்டது. (2017 ஓகஸ்ட் 21-25 ஆந் திகதி வரை)

**G. தேர்தல்கள்:**

12. 2017 நியூயோர்க்கில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டிற்கான அரச தரப்பினரின் 8ஆவது கூட்டத்தொடரில் இடம்பெற்ற தேர்தலில் 2018-2021 ஆம் ஆண்டிற்கான புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான குழுவில், வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர் பிரசாத் காரியவசம் அவர்களின் தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகளை இந்தப்பிரிவு வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது.

13. 2017 ஜுன் மாதத்தில் இளைஞர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமாக செல்வி.ஜயந்தமா விக்ரமநாயக்க நியமிக்கப்பட்டார்.

**H. ஐக்கிய நாடுகள் அமைதி பேணல் செயல்பாடுகளில் இலங்கையின் பங்கேற்பு:**

14. இந்தப் பிரிவானது நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகங்கள், பாதுகாப்பு படை, பொலீஸ் திணைக்களம் மற்றும் ஏனைய மூன்று ஆயுதப்படைகளுடன் இணைந்து பயன்படுத்தல் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் வசதிப்படுத்தலுக்கான ஒழுங்குகளை மேற்கொள்கிறது. தற்போது 08 ஐக்கிய நாடுகள் அமைதி பேணல் தூதரகங்களில் 328 இராணுவ நபர்கள் பணிகமர்த்தப்பட்டுள்ளனர். c+k: ஹைட்டி (MINUSTAH), மத்திய ஆபிரிக்க குடியரசு (MINUSCA), தென் சூடான் (UNMISS), லெபனான்(UNIFIL), கொங்கோ(MONUSCO) மற்றும் மேற்கு சஹாரா(MINIURSO). 32 பொலீஸ் நபர்கள் தற்போது தெற்கு சூடான் (UNMISS), மற்றும் டர்.ஃபர் (UNAMID) ஆகிய 2 ஐக்கிய நாடுகள் தூதரகங்களில் பணியாற்றி வருகின்றனர். நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகத்தின் DPKO இல் இரண்டு இராணுவ அதிகாரிகள் சேவையாற்றி வருகின்றனர்.

**I. சர்வதேச/பிராந்திய மாநாடுகள்/பயிற்சி பட்டறைகளை ஒழுங்கு செய்தவதற்கான ஒழுங்கமைப்பு செய்தல்:**

15. வரிசை அமைச்சுக்கள்/முகவர் அமைப்புக்களுடன் இணைந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளை இந்தப் பிரிவு வசதிப்படுத்திக் கொடுக்கிறது:

a) 2017 பெப்ருவரி 21-23 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை கொழும்பிலுள்ள புலம்பெயர்ந்தோரின் சுகாதாரம் தொடர்பான 2ஆவது உலகளாவிய ஆலோசனை - சுகாதார அமைச்சு.

b) 2017 மே மாதம் 12-14 ஆந் திகதி வரை இலங்கையில் நடைபெற்ற 14 ஆவது ஐக்கிய நாடுகள் வெசாக் தினத்தின் சர்வதேச கொண்டாட்டங்கள்.

c) 2017 ஜுன் மாதம் 5-7 ஆந் திகதி வரை தெற்காசிய நாடுகளில் நீதிபதிகள், வழக்குரைஞர்கள் மற்றும் பொலீஸ் அதிகாரிகள் ஆகியோருக்காக முன்னெடுத்த தீவிரவாதத்தின் செயற்தகு ஒழிப்பு தொடர்பான பயிற்சி பட்டறை - நீதி அமைச்சு.

d) 2017 ஜுன் 19-23 ஆந் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற அணுசக்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான 1 ஆவது கட்டத்தில் கரிசனையுடைய பிரச்சனைகள் தொடர்பான ஐயுநுயு பிராந்திய கருத்தரங்கு - இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை.

e) இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையில் 2017 ஓகஸ்ட் 21-23 ஆந் திகதி வரை நடைபெற்ற இலங்கையின் ஒருங்கிணைந்த அணுசக்தி பாதுகாப்பு ஆதரவுத் திட்டத்தை மீளாய்வு செய்வதற்கான IAEA திட்டம் - இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை.

f) 2017 மே 29 முதல் ஜுன் 2 ஆந் திகதி வரை கொழும்பு மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் அலுவலகத்தில் உடன்படிக்கை அறிக்கையிடல் தொடர்பான பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிகள்.

g) 2016 செத்தெம்பரில் நடைபெற்ற இடைநிலை நீதி பொறிமுறை தொடர்பான அரசாங்க அதிகாரிகளுக்கான வேலைத்திட்டம் - SCRM

**J. சர்வதேச மாநாடுகளில் இலங்கையின் பிரதிநிதித்துவம்/பங்குபற்றல் மற்றும் பல்தரப்பு செயல்முறைகளில் பங்குபற்றல்.**

16. சர்வதேச மாநாடுகள் இலங்கையின் பிரதிநிதித்துவம்/பங்குபற்றலை வசதிப்படுத்திக் கொடுத்தல். மேலும் சுற்றாடல், சமூக-பொருளாதார பிரச்சனைகள், பால்நிலை மற்றும் சிறுவர் விடயங்கள், ஆயுதம் களைதல் உள்ளடங்கிய இலங்கை கரிசனை கொண்டுள்ள பிரிவுகளின் நிலையை உருவாக்கல் மற்றும் ஒருங்கிணைப்புகளில் வழிகாட்டுதல். சந்திப்புக்களின் போது இலங்கையின் பங்குபற்றலுக்கான 28 எழுத்துக்களுடைய நற்சான்றிதழை தயாரித்தமை.

**K. அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து வரட்சி/வெள்ள நிவாரண உதவிகளை வழங்குதல்:**

17. நாட்டில் வெள்ளம்/வரட்சி நிலவுகையில் வெளிநாட்டு நிவாரணங்கள்/உதவிகளைப் பெறுதல் சம்பந்தமாக வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள், வரிசை அமைச்சுக்கள், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் கொடையாளிகள் ஆகியோருடன் இணைந்து பணியாற்றி வருதல்.

**L. வீசாக்களை செயல்படுத்துதல் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளை பதிவு செய்தல்:**

18. வருடந்தோறும் இலங்கையில் நடைபெறும் மாநாடுகள், கருத்தரங்குகள், சந்திப்புக்கள், செயலமர்வுகள் ஆகியவற்றுக்கான விசாக்கள் வெளியீட்டினை வசதிப்படுத்துதல். இந்த அமைச்சுக்கான உதவிகள் அரச சார்பற்ற அமைப்பு செயலகத்தினால் செயல்படுத்துவதன் காரணமாக அரச சார்பற்ற அமைப்புகளின் பதிவு செயல்முறைகளை வசதிப்படுத்துதல். இந்தப் பிரிவின் மூலமாக 2017 ஜனவரி 01 ஆந் திகதி முதல் செத்தெம்பர் 30 ஆந் திகதி வரை 2956 வீசாக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**M. ஐக்கிய நாடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனங்களில் இலங்கையின் பங்களிப்பு:**

19. குறித்த நிறுவனங்களுக்கான இலங்கையின் உறுப்புரிமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்புகளுக்கு வழங்கும் கொடுப்பனவுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து இப்பிரிவு ஒருங்கிணைப்புகளை செய்து வருகிறது.

# ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளுக்கான பிரிவு

**ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளுக்கான பிரிவு**

**ஐக்கிய அமெரிக்கா நாடுகள்**

**சமகாலப்பகுயில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தூதரகங்களின் எண்ணிக்கை**

வோஷிங்டன் டி.சி: மெக்சிகோ, ரினிடாட் மற்றும் டொபாகோ

1. **இருபக்க உறவுகள்**

i. இரண்டாவது பங்குடமை கலந்துரையாடல் 2017 நவம்பரில் கொழும்பில் நடைபெற உள்ளது. இது ஐக்கிய அமெரிக்கா – இலங்கை ஒத்துழைப்பினைக் கட்டியெழுப்புவதற்குமான அடிப்படை கூறுகளை விஸ்தரிக்கும்.

ii. எம்சிசி மூலம் பொறுப்பேற்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் தடைகள் பற்றிய பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு 2016 டிசம்பரில் எம்சிசி உடன்படிக்கை நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளமையினால் எம்சிசி மற்றும் இலங்கை அரசாங்கம் என்பன தற்போது போக்குவரத்து மற்றும் காணித்துறைகளில் சாத்தியமான கருத்திட்டங்களுக்கு உரிய கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஜூனில் வோஷிங்டன் டி.சி இற்கான அவரது விஜயத்தின் போது எம்சிசி அணியினருடன் சந்திப்பினை நடாத்தினார்.

iii. ஆட்கள் கடத்தல் அறிக்கை 2017இல் இலங்கை இரண்டாம் வரிசையிலிருந்து முதலாம் வரிசைக்கு முன்னேறியது தொடர்டபில் பரிந்துரைகள் மற்றும் தகவல்கள் பரிமாறல்கள் ஊடாக தூதரகம் இராஜாங்க திணைக்களத்துடன் கிரமமான அடிப்படையில் தொடர்புகளை பேணகின்றது.

iv. செனற் ஒதுக்கீடுகள் குழுவின் குடியரசுப் பதவியினரின் தலைவர் போல் குரோவ் (குழுத் தலைவர் லின்டசின் கிரகமின் குழுவின் கீழ் பணியாற்றும் ஊழியர்) இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டு உதவி ஆதரவிற்கான மதிப்பீடு ஒன்றிற்காக இலங்கைக்கு விஜயம் செய்தார்.

v. பிரதிநிதி பீட்டர் ரொஸ்கம் தலைமையிலான ஐக்கிய அமெரிக்க பாராளுமன்றத்தின் சனநாயக பங்குடமைப் பேராளர் குழு, 2017 பெப்ரவரி 20 தொடக்கம் 24 வரை விஜயம் செய்தது. இவ்விஜயத்தின் போது பேராளர் குழுவானது சனாதிபதி, பிரதம அமைச்சர், கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாராளுமன்றத்தின் சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமெரிக்க வர்த்தக பிரிதிநிதிகளுடன் சந்திப்புக்களை நடாத்தியது.

vi. ஐக்கிய அமெரிக்க பாராளுமன்றத்தின் நீதிக்குழு பிரதிநிதிகளின் தலைவர் பொப் கூட்லெட் தலைமையிலான ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் பேராளர் குழு, 2017

பெப்ரவரி 23 முதல் 25 வரை இலங்கைக்கு விஜயம் செய்தது. இன்றுவரை ஐக்கிய அமெரிக்க பாரிய பேராளர் குழு விஜயம் செய்த சந்தர்ப்பம் இதுவாகும்.

vii. தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவி இராஜாங்கச் செயலாளர் தூதுவர் வில்லியம் ஈ.டொட் 2017 மே 21 தொடக்கம் 23 வரை விஜயம் செய்தார்.

viii. பிரதிநிதி பில் ஜோன்சன், மே மாதம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்தார். அவர் கடந்த இரண்டு வருட காலங்களில் இலங்கையின் அணுகுமுறையினை மிக சார்பானாதாகவும் போற்றத்தக்கதாகவும் கருத்துத் தெரிவித்தார்.

ix. பாராளுமன்ற ஒதுக்கீடுகள் குழுவின் தலைவரான பிரதிநிதி ரொட்னி பிரெலிங்குய்சன் மற்றும் குழு உறுப்பினர் பிரதிநிதி ஹென்றி செயுலர் ஆகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

x. குடியரசு மற்றும் ஜனநாயக குழு தலைமைத்துவங்கள் இரண்டினையும் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற பாராளுமன்ற வெளிநாட்டு அலுவல்கள் குழுவின் பதவியினர் பேராளர் குழுவொன்று ஆகஸ்ட் மாத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தது.

xi. ஐக்கிய அமெரிக்காவின் பாராளுமன்ற ஒதுக்கீட்டுக் குழு பிரதிநிதிகளின் தலைவர் பிரதிநிதி ரொட்னி பிரெலிங்குய்சன் அவர்களின் தலைமையில் ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற பேராளர் குழு 2017 ஆகஸ்ட் 9 முதல் 11 வரை விஜயம் செய்தது.

xii. தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலாளரும் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் பதில் விசேட பிரதிநிதியுமான தூதுவர் அலிஸ் ஜி. வெல்ஸ் அவர்கள் 2017 ஆகஸ்ட் 30 முதல் செப்டம்பர் 02 வரை விஜயம் செய்தார். இவ்விஜயத்தின்போது அவர் அதிமேதகு சனாதிபதி, பிரதம அமைச்சர் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அத்துடன் சிவில் சமூகம் உட்பட அரசாங்க பிரிதிநிதிகளைச் சந்தித்தார். இந்து சமுத்திர மகாநாட்டிலும் அவர் பங்குபற்றி விசேட உரையொன்றினை நிகழ்த்தினார். தூதுவர் வெல்ஸ் இலங்கையின் நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் அனைத்து இலங்கையருக்குமான சம உரிமையினை ஊக்குவிப்பதற்கான அதன் முயற்சிகளுக்கு இலங்கை அரசாங்கத்திற்கு ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் உதவியளிக்கும் எனக் குறிப்பிட்டார்.

xiii. ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் யுஎஸ்எஸ் கொம்ஸ்டொக் 2017 மார்ச் இலங்கை துறைமுகத்திற்கு விஜயம் செய்தது.

xiv. புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இலங்கை மீதான காங்கிரசை சார்ந்த சிறு குழுக்களுடன் உறவுகளை விஸ்தரிப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் வொஷிங்டனிலுள்ள இலங்கை தூதரகம் பல காங்கிரஸ் உறுப்பினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியது. இதன் விளைவாக பிரதிநிதி டீனா அவர்கள் ஜனநாயக சிறு குழுக்களின் இணைத்தலைமை பதவியினைப் பொறுப்பேற்பதற்கு உடன்பட்டார்.

xv. பாராளுமன்ற பல கட்சி பேராளர் குழுவொன்று கௌரவ சபாநாகரின் தலைமையில் செப்டம்பர் 25 – 29 வரை வோஷிங்டனுக்குச் சென்றது.

xvi. விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த மற்றும் விவசாய அமைச்சர் கௌரவ துமிந்த திஸாநாயக்க ஆகியோர் 2017 பெப்ரவரி 01 தொடக்கம் 06 வரை நடைபெற்ற 65வது வருடாந்த தேசிய வழிபாட்டு காலை உணவு விருந்தில் பங்கேற்பதற்கு வோஷிங்டனுக்கு விஜயம் செய்தனர்.

xvii. 04 வருட இடைவெளியின் பின்னர் 2017இன் ஆரம்பப் பகுதியில் இலங்கை கடற்படையின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் கடற்படை யுத்த கல்லூரியில் இணைந்தார்.

xviii. ஜூன் மாதத்தில் இராஜாங்கச் செயலாளரினால் சர்வதேச இராணுவ கல்விப் பயிற்சிக்கான அதிகாரமளித்தல் நிதியங்களை வழங்குதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ ரீதியான நிகழ்வொன்றாகும். இக்கற்கை நெறிகள் இவ் ஆண்டின் ஜூலை மாத்ததின் ஆரம்ப காலத்தில் வழங்கப்படும்.

xix. தேசிய நீரியல் வளங்கள் அதிகார சபைக்கும் நொட்ரி டேம் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் ஐக்கிய அமெரிக்க கப்பலொன்று 2018 ஜூன் இல் இலங்கை கடற்பரப்பில் சமுத்திரவியல் ஆராய்ச்சியினை நடாத்தும்.

xx. 2017 சனவரி 09 அன்று வோஷிங்டன் டிசி இலுள்ள இலங்கை தூதரகம் 2017 ஜனவரி 08 தொடக்கம் 14 வரை தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டினை குறிக்குமுகமாக நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்தது.

xxi. 2017 ஆகஸ்ட் 4ம் திகதியன்று பாதுகாப்பு அமைச்சுக்கும் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கும் இடையில் பெற்றுக் கொள்ளுதல் குறுக்கு சேவை வழங்குதல் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

xxii. ஐக்கிய அமெரிக்காவுடன் வான் பரப்பு ஏழாவது சுதந்திர உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு உள்ளக நடைமுறைகள் தீர்க்கப்பட்டன.

xxiii. 2017 ஒக்டோபர் 11 தொடக்கம் 13ஆந் திகதி வரையான காலப்பகுதியில் தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவிற்கான பிரதி உதவி பாதுகாப்பு செயலாளர் கௌரவ ஜோசப் பெல்டர் அவர்களின் விஜயம்.

xxiv. மத்திய வங்கியின் ஆளுனர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்கள் 2017 ஒக்டோபர் 15ஆந் திகதி சர்வதேச நாணய நிதியம் / உலக வங்கியின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவும், 2017 ஒக்டோபர் 16ஆந் திகதி நியூயோர்க்கில் நடைபெற்ற “இலங்கையில் முதலீடு செய்தல்” முதலீட்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும் வொஷிங்டனுக்கு விஜயம் செய்தார்.

xxv. 2017 ஒக்டோபர் 09 தொடக்கம் 15ஆந் திகதி வரை வொஷிங்டன் டி.சி.யில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் / உலக வங்கியின் வசந்தகால கூட்டங்கள் மற்றும் ஜி 24 பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆணையாளர்கள் மாநாட்டிலும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர அவர்களின் தலைமையிலான குழுவொன்று கலந்து கொண்டதுடன், அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் விவகார கீழ் செயலாளர் தூதுவர் தோமஸ் சன்னொன் அவர்களை வொஷிங்டன் டி.சி.யில் சந்தித்தார்.

xxvi. இலங்கை இராணுவத்தின் கன்னிவெடி கண்டறியும் நாய்களின் குழுவானது அமெரிக்காவை தளமாகக் கொண்ட மார்சல் லெகசி நிறுவகத்தினால் அதன் 20ஆவது வீதியை சுத்தப்படும் நிகழ்வில் 2017 ஒக்டோபர் 24ஆந் திகதி வொஷிங்டன் டி.சி.யில் வைத்து கௌரவிக்கப்பட்டது.

xxvii. 2017 நவம்பர் 08ஆந் திகதி தொடக்கம் 11ஆந் திகதி வரை நடைபெற்ற "தேர்தல் சட்டத்தில் பூகோள வலையமைப்பு மற்றும் இபரோ - அமெரிக்க மாநாட்டில்" கலந்து கொள்வதற்காக பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி டப்ளியு. பி.சி. டெப் அவர்கள் மெக்சிகோவிற்கு விஜயம் செய்தார்.

xxviii. ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் விவகார கீழ் செயலாளரின் விஜயம்.

xxix. இலங்கையின் கொழும்பில் 2017 நவம்பர் 6ஆந் திகதி இலஙடகை மற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கிடையிலான இரண்டாவது பங்காண்மை கலந்துரையாடல் கூட்டப்பட்டது. இந்த கூட்டமானது இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் செயலாளர் பிரசாத் காரியவசம் அவர்களினாலும், ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் விவகார கீழ் செயலாளர் தோமஸ் சன்னொனினாலும் தலைமை தாங்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான ஒத்துழைப்பை உறுதிப்படுத்தல், பரந்த அளவில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி, மேம்படுத்துவதற்கு வழமையானதும், கட்டமைக்கப்பட்டதுமான ஈடுபாட்டுடன் பணியாற்றுதல் போன்றவற்றை இந்த பங்குடைமை கலந்துரையாடல் வெளிப்படுத்தி நின்றது. தூதுவர் சன்னொன் அவர்கள் தனது விஜயத்தின் போது கௌரவ பிரதமர், கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர் ஆகியோரை சந்தித்தார்.

**2. பல்பக்க உறவுகள்**

i. தேசிய ஜனநாயக நிறுவனத்தின் தலைவர் திரு.கென் வொல்லொக் 2017 மார்ச் 08 தொடக்கம் 11 வரை விஜயம் செய்து கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரை சந்தித்தார்.

ii. வொஷிங்டன் டிசி இலுள்ள இலங்கைத் தூதரகம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கான அமெரிக்க நாடுகள் அமைப்பு (OAS) பற்றிய தொடர்புடைய அமெரிக்க நாடுகள் அமைப்பு கட்டமைப்பு மற்றும் தொடர்பாடலுக்கு இசைவாக

அமெரிக்க நாடுகள் அமைப்பு மற்றும் அதன் உறுப்பு நாடுகளுடன் அவதானிப்பாளர் ஒருவராக தொடர்புகளைப் பேணியது. தூதரகம் அமெரிக்க நாடுகளின் அமைப்பின் நிரந்தர அவதானிப்பாளர் ஒருவராக இலங்கையினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

**3. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்**

i. வொஷிங்டன் டிசி இலுள்ள சர்வதேச நாணய நிதியம்/ உலக வங்கியின் தலைமையகத்தில் 2017 ஏப்ரல் 17 தொடக்கம் 23 வரை நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம்/ உலக வங்கியின் இளவேனில் கால கூட்டத்தில் பங்கேற்பதற்கு கௌரவ நிதியமைச்சரின் தலைமையிலான இலங்கை பேராளர் குழுவின் வருகைக்கு வோசிங்டன் டிசி இலுள்ள இலங்கை தூதரகம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

ii. இரண்டு நாடுகளுக்குமிடையில் விஞ்ஞான ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதற்காக நொட்ரி டேம் பல்கலைக்கழகத்திற்கும் தேசிய நீரியல் வளங்கள் அதிகார சபைக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடுவதற்கு 2017 மார்ச் 23 தொடக்கம் 25 வரை நொட்ரி டேம் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையே விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டது.

iii. 2017 ஒக்டோபர் 5இல் லொஸ் ஏஞ்சல்சிலுள்ள பிவேர்லி ஹில்ஸில் நடைபெற்ற இலங்கை சுற்றுலாத்துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கை சுற்றுலா வீதி காட்சி நிகழ்ச்சிக்கு வசதிகள் வழங்கப்பட்டன.

iv. சர்வதேச நாணய நிதிய தலைமையகத்தில் 2017 ஒக்டோபர் 12ஆந் திகதி கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் ஐரோப்பா, ஆசியா, பசுபிக் மற்றும் லத்தீன் அமெரிக்காவிற்கான பிராந்திய உப தலைவர் செல்வி. பாத்திமா இசட். சுமார் அவர்களை சந்தித்தார்.

**v. 1985ஆம் ஆண்டிலிருந்தான ஐக்கிய அமெரிக்க விமான கேரியருக்காக யூ.எஸ்.எஸ். நிமிட்ஸ் இலங்கைக்கு முதன்முறையாக விஜயம் செய்தது**

2017 ஒக்டோபர் 28ஆந் திகதி நிமிட்ஸ் கேரியர் குழுவானது தனது திட்டமிட்ட விஜயத்தை இலங்கையின் கொழும்புத் தளத்திற்கு மெற்கொண்டு வந்தடைந்தது. குறித்த குழுவானது யூ.எஸ்.எஸ். நிமிட்ஸ், த க்ருய்சர் யூ.எஸ்.எஸ். ப்ரின்ஸ்டன், அழிக்கும் எச்.எஸ்.எஸ். ஹோவார்ட், யூ.எஸ்.எஸ். சொப், யூ.எஸ்.எஸ். பிங்கி மற்றும் யூ.எஸ்.எஸ். கிட் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.

**4. கலாசார உறவுகள்**

**i. இலங்கையின் 69வது சுதந்திர தின கொண்டாட்டம்**

இலங்கையின் 69வது சுதந்திர தினத்தைக் குறிக்குமுகமாக இலங்கை சமூகத்தின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ

மதங்களைச் சேர்ந்த பிரமுகர்களினால் நடாத்தப்பட்ட சர்வமத அனுஷ்டானங்களுடன் தூதரகத்தில் கொண்டாட்ட நிகழ்வு ஒன்றினை தூதரகம் 2017 பெப்ரவரி 04 அன்று ஏற்பாடு செய்தது. விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த வோசிங்டன் டிசி இற்கு விஜயம் செய்து விசேட அதிதியாகவும் கலந்து கொண்டார்.

வொஷிங்டன் டி.சி.யில் உள்ள இலங்கைத் தூதரகம் டிசம்பர் 6இல் சர்வதேச வாணிப நிலையத்தில் நடைபெற்ற வருடாந்த வின்டர்நெசனல் தூதரக காட்சிப்படுத்தல் நிகழ்ச்சியில் பங்குபற்றியது.

**ii. வெசாக் கொண்டாட்டங்கள்**

மே 16 அன்று டிஸ்ரிக் ஒப் கொலம்பியா மற்றும் மேரிலேன்ட் இலுள்ள பௌத்த மத குருக்களின் பங்கேற்புடன் 2017 வெசாக் கொண்டாட்டத்திற்காக தூதரகம் அன்னதான நிகழ்வு ஒன்றினை ஒழுங்கமைத்தது. தூதரகம் வெசாக் பந்தல் மற்றும் தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**iii. “சிஹிநேயகி ரே” ரூபவாஹினி நிகழ்ச்சி**

அ. இலங்கை- அமெரிக்கா சமூக உறுப்பினர்களின் பங்கேற்புடன் தூதரகத்தின் வளாகத்தின் வெளிப்பகுதியில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரங்க கலா கவய மூலம் இணைந்து ஒழுங்கமைக்கப்பட்ட சிஹிநேயகி ரே என்ற இசை நிகழ்ச்சியினை பதிவு செய்வதற்கு தூதரகம் வசதியளித்தது.

ஆ. 2017 ஜுலை 09 அன்று இலங்கை- அமெரிக்கா சமூக உறுப்பினர்களின் பங்கேற்புடன் மேரிலேன்ட் பௌத்த விகாரையில் சமூக மற்றும் மத நிகழ்வு ஒன்றில் தூதரகம் கலந்து கொண்டது.

இ. 2017 ஆகஸ்ட் 20 அன்று தூதரகம், வொஷிங்டன் பௌத்த விகாரையில் இலங்கை உணவுப் பண்டிகை ஒன்றினை ஏற்பாடு செய்ததுடன் இலங்கையர்களும் வெளிநாட்டவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

ஈ. 2017 செப்டம்பர் 16 அன்று இலங்கை- அமெரிக்கா சமூக உறுப்பினர்களின் பங்கேற்புடன் வொஷிங்டன் டிசி இலுள்ள இலங்கை- அமெரிக்க அமைப்புக்களினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை இன நிகழ்வில் தூதரகம் பங்கேற்றது. இந்நிகழ்வு, கெம் மில் பாரக், 1120 கிளேபுறூக் ட்ரைவ், சிலவர் ஸ்ப்ரிங், எம்டி 20902 இல் இடம்பெற்றது.

ஆ. கனடா

1. **இருபக்க உறவுகள்**

i. இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயன்முறைகளின் முக்கிய அபிவிருத்தி பற்றியும் இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்படும் முக்கிய நடவடிக்கைகள் பற்றியும் ஒட்டாவாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரும் டொரொன்டோவிலுள்ள காவற் தூதர் நாயகமும் பல்வேறு மட்டங்களிலுள்ள சிரே்'ட கனேடிய அரசியல்வாதிகளுக்கு கிரமமாக விளக்கமளித்தனர்.

ii. அல்பேட்டாவின் லேக்லேன்ட் கல்லூரியிலிருந்து மாணவர்கள் மற்றும் பீட உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுவொன்று மகாவலி அபிவிருத்தி கருத்திட்டம் பற்றிய பாய்வு நிகழ்ச்சி ஒன்றினை நடாத்துவதற்காக 2017 பெப்ரவரி 19 தொடக்கம் 27 வரை இலங்கைக்கு விஜயம் செய்தது.

iii. இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், கடந்த வருடம் டொரொன்டோவிலுள்ள ரோயல் ஒன்ராரியோ அருங்காட்சியகத்தின் அலுவலர்களைச் சந்தித்தார், அத்துடன் ரோயல் ஒன்ராரியோ அருங்காட்சியகத்துக்கும் கொழும்பு அருங்காட்சியகத்துக்கும் இடையில் காட்சிப் பொருட்களைக் கடனுக்குப் பெற்றுக் கொள்ளுதல் உள்ளடங்கலாக பின்வரும் ஒத்துழைப்புகள் பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

iv. வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்க கனேடிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ கிறிஸ்டியா பிரிலாண்ட் அவர்களை 2017 ஆகஸ்ட் 07 அன்று பிலிப்பைன்ஸின் மனிலாவில் இடம்பெற்ற 50வது ஆசியன் அமைச்சர்கள் கூட்டம் மற்றும் 24ஆவது ஏஆர்எவ் அமைச்சர்கள் கூட்டத்தில் ஓர நிகழ்வாக சந்தித்தார்.

v. வின்னிபெக் என்ற கனேடிய கப்பல் 2017 மே 21 தொடக்கம் 25 வரை இலங்கைக்கு விஜயம் செய்தது. கிட்டத்தட்ட 10 வருடங்களின் பின்னர் இவ்விஜயம் இடம்பெற்றது.

vi. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் போக்குவரத்து, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரும் விமான சேவை ஒப்பந்தத்தின் கீழ் சேவை வழங்குவதற்கான விமான நிறுவனம் ஒன்றாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பெயர் குறிக்கப்படுவதற்கான நடைமுறைப் பிரச்சினைகளை தீர்ப்பதை முன்னெடுத்து வருகின்றன.

vii. கொழும்பிலுள்ள கனடாவிற்கான உயர்ஸ்தானிகர் அதிமேதகு ஷெல்லி வைட்டிங் 2017 ஜுன் 09 அன்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ரவி கருனாநாயக்க அவர்களை சந்தித்தார்.

viii. 2017 நவம்பர் 8 தொடக்கம் 12 வரை பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் கனேடிய கிளையிலிருந்து தூதுக்குழுவொன்று வருகை தந்திருந்தது. எமது பொதுநலவாய பங்காளியுடன் பிணைப்பை உறுதிப்படுத்தி, பரஸ்பர நன்மைக்கான கருத்துக்களை பரிமாற்றிக் கொள்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும். இந்த விஜயத்தின் போது குறித்த குழுவானது, கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய பா.உ., உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ பைஸர் முஸ்தபா மற்றும் அரசியலமைப்பு பேரவையின் வழிகாட்டல் குழுவின் உறுப்பின்ர கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன பா.உ. ஆகியோரை சந்தித்தது.

ix. 2017 நவம்பர் 14 தொடக்கம் 15 வரையான காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சிலிருந்து தூதுக்குழுவொன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அமைச்சு மட்ட மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கனடாவிற்கு விஜயம் செய்தது.

x. நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ எரான் விக்ரமரத்ன அவர்கள் "ஒரு கோள் மாநாட்டில்" கலந்து கொள்வதற்காக 2017 டிசம்பர் 11 தொடக்கம் 12 வரை பரிஸுக்கு விஜயம் செய்தார்.

## 2. பல்பக்க உறவுகள்

i. 2021 - 2022 பதவிக்காலத்திற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் கனடாவின் அபேட்சகத்திற்கு ஆதரவளிப்பதற்கு இலங்கை தீர்மானித்தது.

ii. 2017 ஜூன் இல் யுனெஸ்கோவின் அரசாங்கங்களுக்கிடையிலான சமுத்திரவியல் ஆணைக்குழுவின் 29ஆவது அமர்வின்போது நடைபெற்ற தெரிவில் 2017-2019 பதவிக்காலத்திற்காக நிறைவேற்று சபையில் கனடாவின் அபேட்சகத்திற்காக இலங்கை அதன் ஆதரவினை உறுதி செய்தது.

iii. ஒட்டாவாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மொன்ரியலில் அதன் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்புடன் தொடர்புள்ள விடயங்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தார்.

iv. 2017-2020 பதவிக் காலத்திற்காக திறந்த அரசாங்க செயற்படுத்தல் குழுவிற்கு இலங்கைக்கான அபேட்சகத்திற்கான கனடாவின் ஆதரவினை உயர்ஸ்தானிகம் நாடியது.

## 3. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்

i. நல்லிணக்கம், வர்த்தக அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்புக்களுக்கான வெளியில் சென்றடையும் பாகம் ஒன்றாக 2017 மார்ச் 10

தொடக்கம் 18 வரை கனடா-இலங்கை பாராளுமன்ற நட்புறவுக் குழுவின் தலைவியான கௌரவ யஸ்மின் ரடான்ஸி பா.உ. அவர்களின் தலைமையில் அரசியல்.'. பொருளாதார பேராளர் குழுவொன்றை இலங்கைக்கான வருகையை காவற் தூதர் நாயகத்துடன் இணைந்து உயர்ஸ்தானிகம் ஏற்பாடு செய்தது.

ii. டொரொன்டோ நகரின் நகர பிதா உத்தம திரு.ஜோன் டோரி அவர்களும் வர்த்தக பேராளர் குழுவொன்றும் 2017 மார்ச் 18 தொடக்கம் 20 வரை இலங்கைக்கு விஜயம் செய்தது. இவ்விஜயத்தின் குறிக்கோள் தென்னாசியாவில் தற்போது காணப்படுகின்ற பங்குடமையினை வலுப்படுத்தவதும் பொருளாதார நலன்களை மேலும் அதிகரிப்பதுமாகும். உயர்ஸ்தானிகர் மற்றும் காவற் தூதர் நாயகம் அத்துடன் முதலீட்டு ஊக்குவிக்குப்புச் சபையின் தலைவர் ஆகியோருடனான சந்திப்புக்களைத் தொடர்ந்து வாய்ப்புமிக்க முதலீட்டாளர் ஒருவர் கனேடியன் டொலர் 20 மில்லியன் செலவில் யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் கருத்திட்டம் ஒன்றினை கட்டுவதற்கு ஆர்வம் தெரிவித்துள்ளார். இது, 100 நிரந்தர நேரடி தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும்.

iii. 2017 ஜுலையில் டொரொன்டோவில் ஒழுங்கமைக்கப்பட்ட உலக இலங்கைத் தேயிலை வைபவ கொண்டாட்டங்களிடோன வலையமைப்பு நிகழ்வில் தேயிலை விற்பனையாளர்கள் மற்றும் ஏனையோர்கள் மத்தியில் பரந்தளவு விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது. இத்துறையில் இறக்குமதியினை மேலும் அதிகரிப்பதனை கருத்திற் கொள்வதற்கு 31 கனேடிய கம்பனிகளுடன் உயர்ஸ்தானிகம் தொடர்புகொள்ளக்கூடியதாக இருந்ததுடன் தமது உற்பத்திக்கான கொள்வனவாளர்கள் பற்றிய தகவல்களை இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கக்கூடியதாகவும் இருந்தது.

iv. 2017 மே இல் டொரொன்டோவில் நடைபெற்ற எஸ்ஐஏஎல் கனடா சர்வதேச கண்காட்சி 2017 இல் இலங்கை பங்குபற்றுவதற்காக காவற்தூதர் நாயகம், நிரல் அமைச்சுக்கள், முகவரான்மைகள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைத்து ஒழுங்குகளையும் ஏற்படுத்தினார். பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்திகள் இரண்டு இலங்கை தேசிய கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டதுடன் 13 இலங்கை கம்பனிகளிடமிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட இலங்கை தேயிலையும் காட்சிப்படுத்தப்பட்டன. இலங்கை பேராளர் குழு இரு நாள் சந்தை அடிப்படையகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டத்திலும் சந்தை பிரபல்யமாக்கல் சுற்றுலா ஒன்றிலும், கனடா சந்தையின் தகவல் அமர்வொன்றிலும் பங்குபற்றியது.

v. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் மற்றும் இலங்கை தேயிலைச் சபை ஆகியவற்றின் கூட்டிணைவுடன் மொன்றீயலில் 2016 ஒக்டோபரில் நடைபெற்ற சர்வதேச சுற்றுல மற்றும் பிரயாண கண்காட்சி 2016 இல் ஒட்டாவாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகம் பங்குபற்றியது. இதில் 400 கண்காட்சிதாரர்கள் பயணம் மற்றும் சுற்றுலா கைத்தொழிலிருந்து பிரசண்ணமாகியிருந்தனர். சில விமான நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் விளைவாக இலங்கை

உயர்ஸ்தானிகம் இணைந்த பயண அடைவிட ஊக்குவிப்பொன்றினை நோக்கியே இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டது.

vi. பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகத்தின் பயிற்சி முறைமையை கனேடிய வெளிநாட்டு சேவை நிறுவகத்தின் உதவியுடன் மேம்படுத்தப்பட்டது.

**4. கலாசார உறவுகள்**

i. ஒட்டாவாவில் தேசிய தின கொண்டாட்டம், சிங்கள தமிழ் புதுவருட கொண்டாட்டங்கள் ஒட்டாவாவில் ஹில்டா ஜயவர்தனராமயவில் வருடாந்த வெசாக் கொண்டாட்டம், ஒட்டாவாவில் இலங்கை-கனேடிய அமைப்பினால் ஒழுங்கமைக்கப்படும் 49வது வருடாந்த சிங்கள மற்றும் தமிழ் புதுவருட கொண்டாட்டங்கள், ரிடி தென்னாசியா பண்டிகை 2017, தென்னாசிய கலை கண்காட்சி பண்டிகை மற்றும் நகர மண்டபத்தில் நடைபெற்ற தென்னாசிய பண்டிகை போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒட்டாவாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகம் ஏற்பாடுசெய்தது/ உதவியளித்தது/ ஒருங்கிணைத்தது.

ii. ஸ்கார் பேர்க் இலுள்ள பெரிய சிவன் ஆலயத்தின் புதுவருட நிகழ்வுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சிகள், அதிமேதகு சனாதிபதி பதவிக்கு வந்து இரண்டாம் வருட நிறைவு, தேசிய தின நிகழ்வுகள், டொரொன்டோவின் கனடா-இலங்கை அமைப்பின் சிங்கள தமிழ் புதுவருட கொண்டாட்டங்கள், ஜீரிஏ மற்றும் சிங்கள சங்கமய இன் 4 பிரதான பௌத்த விகாரைகளில் வெசாக் கொண்டாட்டங்கள், டொரொன்டோவுக்கு விஜயம் செய்த காலி ஆண்டகை அவர்களினால் நடாத்தப்பட்ட இலங்கையின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட பிரார்த்தனை, ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்து ஆலயத்தின் தேர்த்திருவிழா மற்றும் சந்திரமூலீஸ்வர சிவாலாயம், கனடா-இலங்கை முஸ்லிம் அமைப்புடனான இப்தார் நிகழ்ச்சி, கனடா-இலங்கை மலாய் செயலாற்றுக் கலைகள் மற்றும் கலாசார நிலையத்துடன் மலாய் கலாசார நிகழ்ச்சிகள், கனடா-இலங்கை மலாய் அமைப்புகளுடனான ஈத் கொண்டாட்டங்கள், ரோயல் பொதுநலவாய சங்கத்தின் பொதுநலவாய கொண்டாட்டங்கள், கனடா-இலங்கை கத்தோலிக்க அமைப்புடன் மிட்லேன்ட் இல் தியாகிகள் அடக்கஸ்தலத்தில் இலங்கை தின பிரார்த்தனை மற்றும் கனடாவின் சிங்கள அமைப்பின் பசக வருன நிகழ்வு போன்றன டொரொன்டோவிலுள்ள காவற் தூதர் நாயகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட, உதவியளிக்கப்பட்ட நிகழ்வுகளாகும்.

**5. தொழிலாளர் நலனோம்புகை**

i. கனடாவில் தொழில் புரிவதற்கு நாடுகின்ற இலங்கையர்களுக்கு கிடைக்கப்பெறும் தொழில்களின் உண்மைத்தன்மையினை சரிபார்ப்பதன் ஊடாக Àதரகமும் காவற் தூதார் நாயகமும் இலங்கையர்களுக்கு உதவியளித்தனர்.

ii. கனேடிய கம்பனிகளில் தொழில் பெற்றுள்ள பல்வேறு இலங்கையர்களுக்கு அவர்களது நலனோம்புகை தொடர்பில் காவற் தூதார் நாயகம் உதவியளித்ததுடன் வாய்ப்பான தொழில் தருனர்கள் மற்றும் தொழில் வாய்ப்பு வசதிப்படுத்துனர்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு கலந்துரையாடல்களை அது தொடர்ந்தும் மேற்கொண்டது.

****

# மேற்குப் பிரிவு

**மேற்குப் பிரிவு**

மேற்குப் பிரிவானது (அரசியல் விவகார) மூன்று புவியியல் பிராந்தியங்களை உள்ளடக்குவதுடன், ஐரோப்பா, பொதுநலவாய சுயாதீன நாடுகள் மற்றும் கரீபியன் நாடுகளுடன் இலங்கையின் இருதரப்பு உறவுகளுடன் தொடர்புடைய பணிகளை உள்ளடக்குகின்றது. இப் பிரிவின் பணி நோக்கெல்லையானது இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை குறிக்கோள்கள் மூலம் வழிநடாத்தப்படுகின்றது, அவை விரிவாக பின்வருமாறு காணப்படுகின்றது.

I. அரசியல், பொருளாதார, சமூக, பாதுகாப்பு மற்றும் கலாச்சார விடயங்கள் மீதான ஒத்துழைப்பினை உள்ளடக்குகின்ற இருபக்க உறவுகளை ஊக்குவித்தலும் அதிகரித்தலும்.
II. வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்கு பொருளாதார இராஜதந்திரத்தினை ஊக்குவித்தல்
III. இலங்கை பற்றிய எண்ணப்பாங்கினையும் நலன்களையும் வெளிநாடுகளில் ஊக்குவித்தல்
IV. நல்லிணக்க செயன்முறைக்கான அபிவிருத்தி உதவியினைப் பெற்றுக் கொள்ளுதல்
V. ஐரோப்பிய ஒன்றியத்திலும் ஏனைய பல்பக்க மற்றும் பிராந்திய அமைப்புகளிலும் இலங்கையின் நலன்களை ஊக்குவிப்பதற்கான இருபக்க ஆதரவுக்கு உந்துசக்தியளித்தல்
VI. இலங்கையினை பூர்வீகமாக கொண்ட புலம்பெயர்ந்த சமூகங்களுடன் நல்லுறவினை ஊக்குவித்தல்

**அ. ஐரோப்பா**

**ஆள்புல அளாவுகை (43)**

அல்பேனியா, அன்டோரா, ஒஸ்ட்ரியா, பெல்ஜியம், பொஸ்னியா மற்றும் ஹெர்சேகோவினா, பல்கேரியா, க்ரோஏசியா, சைப்ரஸ், செக் குடியரசு, டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜியோர்ஜியா, ஜேர்மனி, கிறீஸ், ஹங்கேரி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, லத்வியா, லீச்டென்சீன், லித்துவேனியா, லக்ஸ்சேர்ம்பர்க், மசிடோனியா, மோல்டா, மொனாக்கோ, மொன்டெனீக்ரோ, நோர்வே, போலந்து, போர்த்துக்கல், ரோமானியா, சென் மரினோ, சேர்பியா, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா, ஸ்பெயின், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து, தி ஹோலி சீ, நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், துருக்கி.

**வதிவிட தூதரகங்களின் எண்ணிக்கை - 11**

ஒஸ்ட்ரியா, பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி (பெர்லின் மற்றும் ப்ரான்க்போர்ட்), இத்தாலி (ரோம் மற்றும் மிலான்) நோர்வே, போலந்து, சுவீடன், நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், துருக்கி

**சமகாலப்பகுயில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தூதரகங்களின் எண்ணிக்கை 25**

வியன்னாவிலிருந்து பொஸ்னியா மற்றும் ஹெர்சேகோவினா, சேர்பியா, ஸ்லோவாக்கியா் ப்ரஸெல்ஸிலிருந்து லக்ஸ்சேர்ம்பர்க் பாரிஸிலிருந்து ஸ்பெயின் பெர்லினிலிருந்து சுவிட்சர்லாந்து, க்ரோஏசியா, மசிடோனியா, மொன்டிநீக்ரோ் ஜெனிவாவிலிருந்து ஹோலி சீ ரோமிலிருந்து அல்பேனியா, சைப்ரஸ், கிறீஸ், மோல்டா, சான் மரினோ் வர்சோவிலிருந்து ரூமானியா் ஸ்டொக்ஹோமிலிருந்து டென்மார்க், எஸ்டோனியா, லத்வியா, லித்துவேனியா் ஒஸ்லோவிலிருந்து பின்லாந்து, ஐஸ்லாந்து அங்காரவிலிருந்து ஜோர்ஜியா் மற்றும் அயர்லாந்து.

## 1. பெல்ஜியம்

(அ) கௌரவ பிரதம அமைச்சரின் பெல்ஜியத்திற்கான 2016 ஒக்டோபர் 16 - 22 வரை விஜயத்திற்கான பின்னூட்டல் நடவடிக்கையாக நிதி அமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் கௌரவ மலிக் சமரவிக்ரம ஆகியோர் 2017 சனவரி 19 - 20 வரை பெல்ஜியத்திற்கு விஜயம் செய்து பெல்ஜியத்தின் நிதி அமைச்சரையும் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான இராஜாங்கச் செயலாளரையும் சந்தித்தனர்.

(ஆ) ''பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டம்'' இற்கான ஐரோப்பிய முதலீட்டு வங்கியுடனான நிதியளிப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உலக வங்கியுடன் இணைந்து ஐரோப்பிய முதலீட்டு வங்கியானது இணை நிதியளித்தல் ஒழுங்கங்கொன்றில் இலங்கைக்கு யூரோ 50 மில்லியன் தொகையுடைய சலுகை கடன் ஒன்றினை வழங்கியது. பிளான்டர்ஸ் முதலீட்டு மற்றும் வர்த்தக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பெல்ஜியத்தின் பிளான்டர்ஸ் முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கில் கௌரவ நிதி அமைச்சரும் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரும் பங்கேற்றனர்.

(இ) அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் கௌரவ மலிக் சமரவிக்ரம 2017 மார்ச் 12 தொடக்கம் 13 வரை பெல்ஜியத்திற்கு விஜயம் செய்தார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இரு பக்க வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிக்கும் நோக்குடன் பிரசல்ஸில் உள்ள ஐரோப்பிய ஆணைக்குழுவின் வர்த்தகத்திற்கான ஐரோப்பிய ஆணையாளரை சந்தித்தார்.

(ஈ) பாராளுமன்ற உறுப்பினர் / அரச தொழில்முயற்சிகள் மீதான குழுவின் தலைவர் கௌரவ சுனில் ஹன்துன்னெத்தி அவர்களின் தலைமையில் விஜயம் செய்த இலங்கை பாராளுமன்ற பேராளர் குழு 2017 ஏப்ரல் 26 அன்று பெல்ஜிய சமஷ்டி பாராளுமன்ற உறுப்பினரும் சபாநாயகரான கௌரவ செய்பிரைட் பிரேகே அவர்களை சந்தித்தது.

(உ) இலங்கை பெல்ஜிய பாராளுமன்ற நட்புறவுக் குழு மீளச் செயற்படுத்தப்பட்டது.

(ஊ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரபன 2017 செப்டெம்பர் 24 முதல் 26 வரை பெல்ஜியத்திற்கு விஜயம் செய்து 2017 செப்டெம்பர் 26 அன்று பெல்ஜிய இராஜ்யத்தின் பிரதிப் பிரதம அமைச்சர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அதிமேதகு டிடிய ரெயான்டஸ் அவர்களுடன் இருபக்க சந்திப்புக்களை மேற்கொண்டார். கௌரவ அமைச்சர், வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் பாதுகாப்பு கொள்கைகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய உயர் பிரதிநிதி அதிமேதகு திருவதி பெட்ரிகா மொக்ஹேரினி, ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தென்னாசிய பிரதிநிதித்துவத்திற்கான தலைவர் ஐரோப்பிய ஆணையாளர் அதிமேதகு திரு. கிரிஸ்டோஸ் ஸ்டைலிநாடியஸ் அவர்களுடனும் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் இலங்கை - பெல்ஜிய பாராளுமன்ற நட்புறவு குழுவுடனும் 2017 செப்டெம்பர் 25 அன்று கூட்டங்களை நடாத்தினார்.

(எ) வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனாநாயக்க 2017 டிசம்பர் 13 முதல் 18 வரை பெல்ஜியத்தின் லக்ஸ்ஸம்பேர்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

- இந்த விஜயத்தின் போது மாண்புமிகு வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அவர்கள், ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தெற்காசிய பேராளர்கள், ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவர் மற்றும் இலங்கைக் நட்புறவுக் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய அங்கத்தவர்கள் ஆகியோரை சந்திப்புகளை மேற்கொண்டார்.
- வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அவர்கள் லக்ஸ்சம்பேர்க்கில் உள்ள ஐரோப்பிய சபையின் பிரதி செயலாளர் நாயகத்தையும் சந்தித்தார்.
- ஆசிய கற்கைக்கான ஐரோப்பிய நிறுவகத்தினால் 2017 டிசம்பர் 18 ஆந் திகதி பிரசல்ஸ்ஸில் முன்னெடுக்கப்பட்ட "இலங்கை - புதிய பொருளாதார வாய்ப்புகள் மற்றும் புதிய தொலைநோக்கு" தொடர்பான செயலமர்வில் மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் சிறப்புரை ஆற்றினார்.
- இந்த விஜயத்தின் போது பெல்ஜிய வெளிநாட்டு வர்த்தகத்திற்கான பெல்ஜியம் அரச சமஷ்டி பாராளுமன்ற செயலாளரின் பிரதிநிதிகள் சம்மேளனத்தின் தலைவர் திரு.சிஜ்ப்ரைட் ப்ரேக் மற்றும் பெல்ஜியத்தின் சமஷ்டி பாராளுமன்றத்திலுள்ள பெல்ஜிய - இலங்கை பாராளுமன்ற நட்புறவுக் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் தலைவர் ஆகியோரை வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சந்தித்தார்.
- இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கள் மற்றும் பெல்ஜியத்துக்கிடையிலான இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017 டிசம்பர் 18 ஆந் திகதி இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் மற்றும் பெல்ஜிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் நாயகம் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

(ஏ) 2017 டிசம்பர் 07 ஆந் திகதி பிரசல்ஸ் நகரில் சுற்றுலா, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள், தேயிலை மற்றும் வாசனைப் பொருட்கள் ஊக்குவிப்பு நிகழ்வினை பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகம் ஒழுங்கு செய்தது.

(ஐ) பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகமானது 2017 டிசம்பர் 27 ஆந் திகதி பெல்ஜியத்தில் சுற்றுலா இயக்குநர்கள்/ஹோட்டல் துறை சார்ந்தவர்களின் பங்குபற்றலுடன் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கையின் சுற்றுலாத்துறை கவர்ந்திழுக்கும் இடங்கள், தேயிலை சுவை பார்த்தல், சமையல் மற்றும் புடைவை மற்றும் கலாச்சார நிகழ்வுகள் ஆகியவை தொடர்பான முன்வைப்புகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2. பொஸ்னியா மற்றும் ஹெர்சேகோவினா

இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரபன 2017 செப்டெம்பர் 27 தொடக்கம் 30 வரை பொஸ்னியா மற்றும் ஹெர்சேகோவினா நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு பொஸ்னியா மற்றும் ஹெர்சேகோவினா வெளிநாட்டு அலுவல்கள அமைச்சர் கௌரவ இகோர் கிர்னடக் மற்றும் பொஸ்னியா மற்றும் ஹெர்சேகோவினா வெளிநாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் கௌரவ ஜொஸ்பிரிக் உடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை நடத்தினார். இரண்டு நாடுகளுக்கு இடையில் அரசியல், வர்த்தக, கலாசார உறவுகள் மற்றும் மக்களிடமிருந்து மக்களுக்கான தொடர்புகள் போன்றவற்றினை மேலும் வலுப்படுத்துவதனையும் விஸ்தரிப்பதனையும் இக்கலந்துரையாடல்கள் நோக்காகக் கொண்டிருந்தன. இலங்கை பாராளுமன்றத்தின் பொஸ்னியா - இலங்கை நட்புறவுக் குழுவொன்றினை தாபிப்பதற்கும் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் உறுதியளித்தார்.

### 3. பல்கேரியா

புதுடில்லியில் உள்ள பல்கேரிய வதிவிட தூதுவர் அதிமேதகு பெட்கோடொய்கொவ் 2017 ஜூலை 26 - 28 வரை இலங்கைக்கு விஜயம் செய்து கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அவர்களுடன் சந்திப்பொன்றினை மேற்கொண்டார். 2017 ஆம் ஆண்டில் இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை தாபித்ததன் 55 ஆவது ஆண்டு நிறைவினை குறிக்கின்ற இருபக்க உறவுகளிலும் முக்கிய திருப்புமுனையொன்றாகவிருந்தது.

### 4. சைபிரஸ்

அ. மனிதாபிமான உணவு நிவாரண உதவியாக இலங்கைக்கு யூரோ 5,000 தொகையினை சைபிரஸ் அரசாங்கம் 2017 மே இல் வழங்கியது.

ஆ. சைபிரஸில் உள்ள இலங்கை புலம்பெயர் பணியாளர்களை சிறப்பாக பாதுகாப்பதற்கும் உரிமைகளை ஊக்குவிப்பதற்கும் சைபிரஸின் நிகோசியாவில் வதிவிட காவற்தூதரக நாயக அலுவலகம் ஒன்றினை தாபிக்கும் செயன்முறையொன்றினை இலங்கை முன்னெடுக்கின்றது. முன்மொழியப்பட்டுள்ள காவற்தூதரகத்தினை தாபிப்பதற்கும் சைபிரஸ் குடியரசின் வெளிநாட்டு அமைச்சு அதன் சம்மதத்தினை தெரிவித்துள்ளது.

இ. இலங்கை திறன்பெற்ற மற்றும் பகுதி அளவில் திறன்பெற்ற பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட தொழில் வாய்ப்புகளை நாடும் நோக்குடன் "இலங்கை மனித வலு ஊழியத் துறையின் உடன்படிக்கை" ஒன்றினை இரண்டு நாடுகளும் கலந்துரையாடி வருகின்றன. சுமார் 5,700 ஆக மதிப்பிடப்பட்டுள்ள தற்போதைய இலங்கை புலம்பெயர் பணியாளர்கள் பிரதானமாக வீட்டு உதவியாளர்களாக தொழில் பெற்றுள்ள அதேவேளை ஏனையோர் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், நிர்மாணம், வேளாண்மை மற்றும் தயாரித்தல் துறைகளில் தொழில் பெற்றுள்ளனர்.

ஈ. ஆயுதப் படையினர் பயிற்சித் துறைகளில் பாதுகாப்பு ஒத்துழைப்பினை வலுப்படுத்துவதில் இலங்கையும் சைபிரஸும் கடற்படை கப்பல்கள் துறைமுகங்களுக்கு வருதல் மற்றும் இரு நாடுகளினதும் கடல்சார் பாதுகாப்பு உடன்பாட்டு ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

## 5. செக் குடியரசு

அ. புதுடில்லியில் வசிக்கும் செக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் அதிமேதகு திரு. மிலான் ஹொவொர்கா, 2017 பெப்ரவரி 02-07 வரை இலங்கைக்கு விஜயம் செய்து அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் கௌரவ மலிக் சமரவிக்ரம, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால த சில்வா, நிலையான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா, நிதி அமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தினார்.

ஆ. புதுடில்லியில் வசிக்கும் செக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் அதிமேதகு திரு. மிலான் ஹொவொர்கா அவர்களுடன் இணைந்து செக் குடியரசின் கனிஷ்ட பிரதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ இவான் ஜங்காரேக் அவர்களும் நிதிச் சேவைகள், தயாரிப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சகோடா டூசன் பவர், அர்கொன் பிளோ சிஸ்டம், எஸ்.ஆர்.ஒ, மற்றும் செக் ஏற்றுமதி வங்கி மற்றும் எம்எஸ்ஏ ஏ.எஸ், போன்ற சக்தி கருத்திட்டங்கள், வங்கிகள் மற்றும் கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்த்தக பேராளர் குழுவும் 2017 மே 05 அன்று இலங்கைக்கு விஜயம் செய்தனர். வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத்துறை, கலாசாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் முன்னேற்றகரமான ஈடுபாடுகள் பற்றி இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் கிரீஸ் ஆசிர்வாதத்துடன் அவர் இருபக்க சந்திப்பொன்றை நடாத்தினார். அத்துடன் புதுடில்லியில் உள்ள செக் குடியரசின் தூதரகம் மற்றும் கொழும்பிலுள்ள செக் குடியரசின் கௌரவ காவற்தூதரகம் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட செக் - இலங்கை வர்த்தக மன்றத்தில் செக் வர்த்தக சம்மேளனத்தின் பங்கேற்புடன் செக் பேராளர் குழு பங்குபற்றியது. இவ்விஜயத்தின் போது, பல்வேறு துறைகளில் குறிப்பாக சக்தி துறைகளை நோக்காகக் கொண்டு இருபக்க வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை அதிகரிப்பதற்கான வழிகள் மற்றும் வசதிகளை

கண்டறிவதற்கு தொடர்புடைய இலங்கை அக்கறைதாரர்களுடன் செக் வர்த்தக பேராளர் குழு சந்திப்புக்களை மேற்கொண்டது.

இ. இலங்கையில் வெள்ள நிவாரணப் பணிக்கான மனிதாபிமான உதவிகளை வசதியளிப்படுத்துவதற்கு 2017 ஓகஸ்ட்டில் இலங்கையும் செக் குடியரசும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திட்டது.

ஈ. மாத்தறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஒன்றிற்காக சர்வதேச செஞ்சிலுவை சம்மேளத்தின் ஊடாக செக் அரசாங்கம் யூரோ 100,000 அன்பளிப்பு செய்தது.

### 6. டென்மார்க்

அ. பெருநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக அவர்களின் தலைமையிலான அமைச்சு மட்ட பேராளர் குழு 2017 ஜூன் 6 தொடக்கம் 7 வரை டென்மார்க் இற்கு விஜயம் செய்தது. இலங்கையில் பாரிய கொழும்பு பெருநகர் அபிவிருத்தி கருத்திட்டத்தில் டென்மார்க் முதலீட்டாளர்களுக்கான முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிப்பதனை கவனம் செலுத்தி டென்மார்க் கைத்தொழில் சம்மேளத்தில் 2017 ஜூன் 06 அன்று உயர்மட்ட வட்ட மேசை கூட்டத்தில் பேராளர் குழு பங்கேற்றது.

ஆ. டென்மார்க் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரொலேஸ்ரோன் அவர்கள் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ வி.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் அழைப்பின் பேரில் 2017 ஓகஸ்ட் 2 தொடக்கம் 9 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். இவ்விஜயத்தின் போது கௌரவ ரொலேஸ்ரோன் அவர்கள் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரை சந்தித்தார்.

### 7. பின்லாந்து

அ. இலங்கை ஒப்புதல் அளிக்கப்பட்ட தென்னாசியாவிற்கான பின்லாந்து சுற்றுலா வந்த தூதுவர் அதிமேதகு திரு. ரொவ்லி சுவிக்கமென் அவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தூய தொழில்நுட்பங்கள், கல்வி, நலத்துறை, நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம், சக்தி, சுரங்கத்தொழில் போன்றவற்றினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பின்லாந்து வர்த்தக பேராளர் குழுவுடன் இணைந்து 2017 பெப்ரவரி 3 தொடக்கம் 7 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். இவ்விஜயத்தின் போது பேராளர் குழுவானது இலங்கையின் கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி கௌரவ அமைச்சர் ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தியது.

ஆ. பின்லாந்தின் சமூக விவகாரங்கள் மற்றும் சுகாதார அமைச்சர் அதிமேதகு திருமதி பிர்கோ மெடீலா, பின்லாந்து சுகாதாரத் துறையின் வர்த்தகப் பேராளர் குழுவொன்றுடன் இணைந்து 2017 ஏப்ரல் 27 - 29 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். இவர் கௌரவ வைத்தியர் ராஜித சேனாரத்ன அவர்களுடன் சந்திப்பொன்றினை நடாத்தி

அரசாங்க - தனியார் பங்குடைமை ஊடாக இலங்கையின் சுகாதாரத் துறை அபிவிருத்திக்கு உதவி வழங்குவதற்கு உறுதி அளித்தார்.

இ. பின்லாந்தின் பிரதம அமைச்சர் மாண்புமிகு ஜுஹா சிப்பில்லா அவர்களின் அழைப்பின் பேரில் ஒக்டோபர் 8-11 ஆந் திகதி வரை பின்லாந்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை இலங்கையின் பிரதமர் மாண்புமிகு ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது இரண்டு அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் ஊடகக் குழுவைச் சேர்ந்த பத்து அங்கத்தவர்கள் உள்ளடங்கலாக இருபத்தியைந்து பேராளர்கள் பிரதமருடன் இணைந்து கொண்டிருந்தனர். பின்லாந்துக்கான இலங்கை தலைவர் ஒருவரின் முதலாவது விஜயமாக இதுவமைந்திருந்தது.

ஈ. இவ்விஜயத்தின் போது சக்தித்துறையில் ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டது. மேலும் பின்லாந்தின் பொதுத்துறை முதலீட்டு வசதி திட்டத்தின் கீழ் சலுகைக் கடன் தொடர்பான இருதரப்பு உடன்படிக்கையை இலங்கையும், பின்லாந்தும் கைச்சாத்திட்டன.

உ. இருதரப்பு சந்திப்புகளின் போது பரஸ்பர நலன்களுக்காக சக்தி, சுகாதாரம், தொழில்பயிற்சி கல்வி மற்றும் டிஜிட்டலாக்கம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தல் மற்றும் வலுப்படுத்தல் குறித்து இருநாடுகளும் உடன்பட்டிருந்தன.

**8. பிரான்ஸ்**

அ. பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் ஊடாக பிரான்ஸ் அரசாங்கம் இலங்கையில் அனுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக யூரோ 52 மில்லியன் சலுகை அடிப்படையிலான நாட்டுக்கான கடன் வழங்குவதற்கு முன்மொழிந்துள்ளது. மேற்குறித்த மென்கடன் வசதி வழங்கலினை தொழிற்படுத்துவதற்கான் செய்வதற்கான செயன்முறையினை இலங்கை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு முன்னெடுக்கின்றது.

ஆ. ஒவ்வொரு அரசினதும் மற்றைய அரசின் உத்தியோகபூர்வ தூதரகங்களின் முகவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்காக சம்பளம் செலுத்தப்படும் தொழில்களில் ஈடுபடுவதற்கு அங்கீகரிப்பது பற்றிய உடன்படிக்கையொன்றினை இலங்கையும் பிரான்ஸும் நிறைவு செய்துள்ளன.

இ. ஆரம்பக் கைத்தொழில்கள் அமைச்சர் கௌரவ தயா கமகே, பெற்றோலிய வளங்கள் பிரதி அமைச்சர் கௌரவ அனோமா கமகே உடன் இணைந்து 2017 சனவரி 7 தொடக்கம் 13 வரை பிரான்ஸுக்கு விஜயம் செய்தனர்.

ஈ. பிரான்ஸின் அரசியலமைப்புச் சபைத் தலைவர் கௌரவ அதிமேதகு லோரன் நடாத்தப்பட்டன. அதிமேதகு லோரன் பெபியூஸ் அவர்கள் 2017 பெப்ரவரி 14 அன்று “பிரிட்டன் வெளியேற்றத்திற்கு பிந்திய ஐரோப்பா மற்றும் சர்வதேச ஒழுங்கு” என்ற தலைப்பில் சர்வதேச உறவுகள் மற்றும் உபாய கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் விரிவுரையொன்றை நிகழ்த்தினார்.

உ. பிரான்ஸ் - இலங்கை நட்புறவு மன்றத் தலைவி மாரி கிரிஸ்டீன் பிளான்டின் அவர்களின் தலைமையில் பிரான்ஸ் செனட் சபை பேராளர் குழு 2017 பெப்ரவரி 26 தொடக்கம் மார்ச் 3 வரை இலங்கைக்கு விஜயம் செய்தது. இலங்கையின் சபாநாயகர் உள்ளடங்கலாக உயர்மட்ட பிரமுகர்களுடன் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

ஊ. 2017 ஜுன் மாதத்தில் இலங்கைக்கு மனிதாபிமான வெள்ள உதவியாக பிரான்ஸ் அரசாங்கம் 748 கிலோகிராம் விளையாட்டுப் பொருட்கள், உடுதுணிகள் மற்றும் காலணிகளை அன்பளிப்புச் செய்தது.

எ. பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை மற்றும் இலங்கை இடையிலான 4வது வருடாந்த ஆலோசனை 2017 ஜுலை 10-12 வரை பெரிஸில் உள்ள பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மையில் இடம்பெற்றது. திறைசேரியின் செயலாளரின் தலைமையில் 12 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை பேராளர் குழு சென்றது.

ஏ. பிரான்சிலுள்ள இலங்கைத் தூதரகமானது 2017 டிசம்பர் 12 ஆந் திகதி பிரான்ஸில் நடைபெற்ற ஒரே உலகு உச்சி மாநாட்டில் நிதி அமைச்சின் இராஜாங்க அமைச்சர் கௌரவ எரான் விக்ரமரத்னவினால் தலைமை தாங்கப்பட்ட இலங்கை பேராளர் குழுவின் பங்குபற்றலுக்கான வசதிப்படுத்தலை ஏற்படுத்திக் கொடுத்தது.

ஐ. பிரான்ஸ் காலாச்சார அமைச்சுடன் இணைந்து இலங்கையின் மத்திய காலாச்சார அறக்கட்டளையிலிருந்து மூன்றுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான தயார்ப்படுத்தல்களை ஒருங்கிணைத்தல்.

ஒ. சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் கௌரவ சுஜீவ சேனசிங்க அவர்களினால் தலைமை தாங்கப்பட்ட 8 இலங்கை நிறுவனங்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற “இலங்கை - பிரான்ஸ் வர்த்தக பேரவை“ மற்றும் 2017 ஒக்டோபர் 11 ஆந் திகதி பரீசின் பிரென்ஜு வர்த்தக கூட்டமைப்பில் 20 இற்கும் மேற்பட்ட பிரான்ஸ் பங்குபற்றுநர்கள் பங்குபற்றியிருந்தமை.

ஓ. இலங்கையின் பால் பொருட்கள் துறையின் (இலங்கையில் ஆறு சிறிய பால் திட்டங்களின் வளர்ச்சி) வளர்ச்சிக்காக சலுகைக் கடனாக பிரான்ஸ் குடியரசின் அரசாங்கமானது 13.9 மில்லியன் யூரோக்களை (சுமார் ரூ. 2,514 மில்லியன்) வழங்க உடன்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் சார்பாக இலங்கை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி. ஆர்.எச்.எஸ்.சமரதுங்க குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

ஔ. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமானது 2017 ஒக்டோபர் 3 - 6 ஆந் திகதி வரை லியோன், டவுலோஸ் மற்றும் பொர்டேக்ஸ் ஆகிய முக்கிய நகரங்களில் வீதி நிகழ்ச்சியை முன்னெடுத்தது. இந்த பிரான்ஸ் வீதி நிகழ்ச்சி தொடரில் இலங்கையைச் சேர்ந்த 17 பிரயாண/சுற்றுலா நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தன.

க. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமானது தூதரகத்துடன் இணைந்து 2017 டிசம்பர் 4-7 திகதி வரை கேன்ஸ்ஸில் ஒழுங்கு செய்யப்பட்ட ILTM பிரயாண சந்தையில் இலங்கை முதல் முறையாக பங்குபற்றியமை.

## 9. ஜோர்ஜியா

அ. ஜோர்ஜியாவின் பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ டேவிட் ஜலகனியா 2017 செப்டெம்பர் 15 முதல் 18 வரை இலங்கைக்கு விஜயம் செய்து கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், அப்போதைய வெளிநாட்டு அலுவல்கள் பதில் செயலாளர் மற்றும் சுற்றுலாத் துறை, கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தினார். இவ்விஜயத்தின் போது இலங்கையின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளன கூட்டமைப்பு மற்றும் ஜோர்ஜியாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனம் என்பவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

ஆ. இலங்கை மற்றும் ஜோர்ஜியாவுக்கிடையே இராசதந்திர மற்றும் உத்தியோகபூர்வ/சேவை கடவுச்சீட்டு உரிமையாளர்களின் வீசா விலக்கு தொடர்பான உடன்படிக்கை 2017 இல் ஒப்புதலளிக்கப்பட்டது.

## 10. ஜேர்மனி

அ. 'இலங்கை மற்றும் ஜேர்மனிக்கு இடையிலான முதலாவது இருபக்க ஆலோசனை அமர்வு' 2017 ஏப்ரல் 6 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

ஆ. ஜேர்மனியின் சமஷ்டி குடியரசு அரசாங்கம் பேர்லினில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் 2018 இல் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள 'இராஜதந்திரிகளுக்கான நிறைவேற்று கருத்தரங்கு' இல் பங்கேற்பதற்கு 15 இளம் இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களை அழைத்துள்ளது. ஜேர்மனி சமஷ்டி குடியரசானது மேற்குறித்த நிகழ்ச்சியில் 15 இலங்கை இராஜதந்திரிகள் பங்கேற்பதுடன் தொடர்புடைய அனைத்து செலவுகளையும் பொறுப்பேற்கும்.

இ. 2014 டிசம்பரில் இந்து சமுத்திர சுனாமியினால் அழிவுக்கு உள்ளான காலி மகப்பேற்று வைத்தியசாலையினை பூரணப்படுத்துவதற்கு ஜேர்மன் அரசாங்கம் யூரோ 13 மில்லியன் வரையான நிதியுதவினை உறுதி செய்துள்ளதுடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டத்தினையும் முன்னெடுப்பதற்கு உறுதி வழங்கியுள்ளது. இலங்கையின் தென்மாகாணத்தில் வசிக்கின்ற மக்களின் போதிய பிறப்பு கவனிப்பு சேவையினை மீளமைப்பதும் சுகாதார உட்கட்டமைப்பினையும் சுகாதார நிலையினையும் மேம்படுத்துவதும் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

ஈ. கொழும்பில் ஜேர்மன் வர்த்தக சம்மேளனத்தின் அலுவலகம் ஒன்றினை திறப்பதற்கு ஜேர்மன் அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. தொடர்புடைய நாடுகளில் புதிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை இனங்காண்பதற்கு இது வசதியளிக்கும்.

உ. இலங்கையில் பிரன்ரிச் - ஈபேர்ட் - மன்றத்தினை மீள நிறுவவதற்கும் அதன் செயற்பாடுகளை மீண்டும் செயற்படுத்துவதற்கும் ஜேர்மன் அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

ஊ. சர்வதேச சனநாயக ஒன்றிய மன்றத்தில் கலந்து கொள்வதற்கு சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்னாயக்க 2017 சனவரி 14 தொடக்கம் 18 வரை ஜேர்மனியின் முனிச் நகருக்கு விஜயம் செய்தார்.

எ. பேர்லினில் இடம்பெற்ற உணவு மற்றும் விவசாயத்திறகான உலக மன்றத்தில் பங்கேற்பதற்கு விவசாய இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த அலுவிகார 2017 சனவரி 18 தொடக்கம் 25 ஜேர்மனுக்கு விஜயம் செய்தார்.

ஏ. நோயாளர் பாதுகாப்பு மீதான உலக அமைச்சர்களின் இரண்டாவது உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ வைத்தியர் ராஜித சேனாரத்ன 2017 மார்ச் 29 தொடக்கம் 31 வரை ஜேர்மனுக்கு விஜயம் செய்தார். கௌரவ அமைச்சர், ஹைடல்பேக் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட அலுவலர்களை சந்தித்து மருத்துவத் துறையில் விசேடமாக புற்று நோய் ஆராய்ச்சி, கொள்ளளவு கட்டியெழுப்புதல் பயிற்சி போன்ற துறைகளில் ஒத்துழைப்பினை அதிகரித்தல் பற்றிய உத்தேச ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

ஐ. உயர்கல்வித் துறையில் ஹைடல்பேக் பல்கலைக்கழகத்தின் தென்னாசிய நிறுவனத்தின் இலங்கையின் அங்கத்துவமானது பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டிணைப்புடன் 2017 பெப்ரவரியில் தாபிக்கப்பட்டது. இவ் அங்கத்துவத்தினை ஆரம்பித்தலானது அதன் கல்விசார், ஆராய்ச்சி ஒத்துழைப்பினை ஹைடல்பேக் பல்கலைக்கழகம் அதிகரிப்பதற்கும் இலங்கைக்கும் ஹைடல்பேக் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் மாணவர் பரிமாற்றத்திற்கும் அதிக வாய்ப்புகளை வழங்கும்.

ஒ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் ஜேர்மன் கல்வி பரிமாற்று சேவைக்கும் இடையில் கல்விசார் ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

ஓ. இலங்கை பாராளுமன்ற சபாநாயகரின் அழைப்பொன்றின் பேரில் பாராளுமன்ற பேராளர் குழுவொன்றுடன் இணைந்து ஜேர்மன் பண்டஸ்டெக் இன் தலைவர் பேராசிரியர் கலாநிதி நோபட் லம்மேட் 2017 ஏப்ரல் 3 - 5 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். இவர் இலங்கையின் அதிமேதகு சனாதிபதியினையும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்களையும் சந்தித்தார்.

ஔ. பேராசிரியர் கலாநிதி நோபட் லம்மேட், சர்வதேச உறவுகள் மற்றும் உபாய கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் (LKIIRSS) 2017 ஏப்ரல் 4 அன்று

‘சர்வதேச உறவுகளின் சுதந்திர ஜனநாயகத்தின் எதிர்காலம்’ என்ற தலைப்பில் விரிவுரையொன்றினை நிகழ்த்தினார்.

க. கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதுவராலயம் 2017 ஏப்ரலில் கொழும்பில் ‘பிராந்திய ஜேர்மன் தூதுவர்கள் மாநாடு’ நிகழ்வுக்கு விருந்தளித்து நடாத்தியது.

ச. சமஷ்டி வெளிநாட்டு அலுவலகத்தின் இராஜாங்க செயலாளர் கலாநிதி மார்கஸ் எடரல், ஆபிரிக்கா, ஆசிய, இலத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கிற்கான தூதுவர், பணிப்பாளர் நாயகம் அதிமேதகு சபைன் இஸ்பார்வசர் ஆகியோர் கொழும்பில் 2017 ஏப்ரல் 5 முதல் 7 நடைபெற்ற ஜேர்மன் பிராந்திய தூதுவர்களின் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

ட. இலங்கையில் வான் மற்றும் நில அம்புயலன்ஸ் சேவை உள்ளடங்கலாக அவசர மருத்துவ காப்பாற்றுதல் சேவைகளை அமுலாக்குவதற்கு ஜேர்மன் அரசாங்கத்திடமிருந்து உதவியினை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ வைத்தியர் ராஜித சேனாரத்ன தலைமையிலான பேராளர் குழு 2017 மே 14 - 17 வரை ஜேர்மனுக்கு விஜயம் செய்தது.

த. 2017 ஜூனில் ‘ஜேர்மன் சமஷ்டி குடியரசில் பயிலுநர் முதுமை மருத்துவ தாதிகளுக்கான ஆளணி ஆட்சேர்ப்பு சந்தையின் கோட்பாடுகள் மீதான உத்தேச இணை பிரகடனம்’ ஒன்றினை இலங்கையும் ஜேர்மனியும் கைச்சாத்திட்டன. இந்நிகழ்ச்சித்திட்டமானது முதுமை மருத்துவ கவனிப்பில் உள்ள இலங்கை சுகாதாரத் துறை தொழில்சார் நிபுணர்களை ஜேர்மனியில் பணியாற்றுவதற்கு இயலச்செய்யும்.

ப. விருந்தினர் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொள்வதற்கு 2017 ஜூன் 25 - 30 வரை இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய தலைமையிலான இலங்கைப் பாராளுமன்ற பேராளர் குழு ஜேர்மனுக்கு விஜயம் செய்தது. இலங்கையின் வெளிநாட்டு தொழில் அமைச்சின் செயலாளர், பத்தாவது புலம்பெயர் அபிவிருத்தி மீதான உலக மன்றத்தில் கலந்து கொள்வதற்கு 2017 சனவரியில் ஜேர்மனுக்கு விஜயம் செய்தார். பத்தாவது புலம்பெயர் அபிவிருத்தி மீதான உலக மன்றத்தின் நிகழ்வில் ஓர நிகழ்வாக 2017 ஜூலை 27 அன்று ஜேர்மனியில் முதுமை மருத்துவ தாதிகளாக பயிலுவதற்கான ஆளணி ஆட்சேர்ப்பு சந்தையின் கோட்பாடுகள் மீதான உத்தேச இணை பிரகடனமானது இலங்கையின் வெளிநாட்டு தொழில் அமைச்சு மற்றும் ஜேர்மனி வெளிநாட்டு அலுவல்களுக்கான சமஷ்டி அரசு என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.

ர. பிராங்.ஃரூட் இல் உள்ள இலங்கையின் கொன்சுலர் நாயகம் மூலம் 2017 நவம்பர் 16 ஆந் திகதி “இலங்கை மாலை” ஹிடல்பேர்க் பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவகம் எனும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

ச. 2017 ஒக்டோபர் 07-11 ஆந் திகதி வரை கொலோங்கில் இடம்பெற்ற உணவு மற்றும் குடிபானங்களுக்கான அனுக சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு அபிவிருத்தி

மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மாண்புமிகு சுஜீவ சேனசிங்கவின் வருகையை பிராங்.்.ரூட்டிலுள்ள இலங்கை கொன்சுலர் நாயகத்தின் மூலம் வசதிப்படுத்தி கொடுக்கப்பட்டது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் தேயிலை சபை மூலமாக உணவு மற்றும் குடிபானங்கள் பகுதியென இருவேறாக இலங்கை மாடம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த வர்த்தக கண்காட்சியில் 52 இலங்கை கண்காட்சியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

சா. பிராங்.்.ரூட்டில் இடம்பெற்ற இரத்தினக்கல் மற்றும் ஆபணங்களுக்கான முனிச் வர்த்தக கண்காட்சி மற்றும் உணவு மூலப்பொருள் ஐரோப்பிய வர்த்தக கண்காட்சி ஆகியவற்றில் இலங்கை கண்காட்சியாளர்களின் பங்குபற்றலை பிராங்.்.ரூட்டிலுள்ள இலங்கை கொன்சுலர் நாயகம் வசதிப்படுத்தி கொடுத்தது.

### 11. அயர்லாந்து

இலங்கைக்கான மனிதாபிமான வெள்ள நிவாரண உதவியாக 2017 மே இல் அயர்லாந்து அரசாங்கம் ரூபா. 200,000/- கொடை வழங்கியது.

### 12. இத்தாலி

அ. இலங்கையின் கிராமிய/வேளாண்மை அபிவிருத்திக்காக யூரோ 20 மில்லியன் தொகைக்கான சலுகை மென் கடன் வசதியொன்றினை இத்தாலி அரசாங்கம் வழங்கியது. மேற்குறித்த மென்கடன் வசதி வழங்கலினை தொழிற்படுத்துவதற்கு வழிமுறைகளையும், நடைமுறைகளையும் கலந்துரையாடுவதற்கு 2017ஆம் ஆண்டில் தொழில்நுட்ப குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. இத்தாலிக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர, கொன்சூலர், நிருவாக மற்றும் தொழில்நுட்ப பதவியினர்களின் பதவி அங்கத்தவர்களின் குடும்ப உறுப்பினர்களின் ஊதியம் வழங்கப்பட்ட செயற்பாடுகள் மீதான உடன்படிக்கை ஒன்று இரண்டு நாடுகளுக்கிடையிலும் கைச்சாத்திடுவதற்காக நிறைவு பெற்றுள்ளன. இவ்வொப்பந்தமானது இராஜதந்திர தூதரகங்களின் மற்றும் பெற்றுக் கொள்ளுகின்ற அல்லது அனுப்புகின்ற நாடுகளில் உள்ள தொழில் ரீதியான கொன்சூலர் பதவிகளின் குடும்ப உறுப்பினர்கள் சுயதொழில் செய்வதற்கு அல்லது சம்பளத்துடனான பணியாற்றுவதற்கு அனுமதியளிக்கின்றது.

இ. உட்கட்டமைப்பு மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக சுனாமி அனர்த்தத்தின் அழிவிற்கு பின்னர் இலங்கைக்கு வழங்கப்பட்ட யூரோ 7,671,459.65 தொகையுடைய படுகடனை இரத்துச் செய்வதற்கு இத்தாலி அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. படுகடன் இரத்துச் செய்தலினை செயற்படுத்தும் செயன்முறையினை இரு நாடுகளும் தற்போது முன்னெடுக்கின்றன.

ஈ. 2011 இல் இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பரஸ்பரம் சாரதி அனுமதிப் பத்திரங்களை அங்கீகரித்தலுக்கான விஸ்தரிக்கப்பட்ட இருபக்க

உடன்படிக்கையினை 2017 மார்ச் 4 அன்று செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உடன்பாடு ஏற்பட்டது.

உ. சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் 2017 ஏப்ரல் 2-4 வரை மிலானில் நடைபெற்ற BIT சுற்றுலா சந்தையில் பங்குபற்றுவதற்கு இத்தாலிக்கு விஜயம் செய்தார்.

ஊ. இலங்கை நிதி அமைச்சின் திறைசேரிக்கான செயலாளர் 2017 ஜுன் 24 - 26 வரை இத்தாலிக்கு விஜயம் செய்தார். இவ் விஜயத்தின் போது விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையில் அ.டொ. 33.7 மில்லியன் பெறுமதியில் 'சிறு உடைமையாளர் விவசாய வியாபார பங்குடைமை' நிதியளித்தல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

எ. 2017 ஜுலை 3 - 8 வரை ரோமில் நடைபெற்ற 40 ஆவது உணவு விவசாய அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு விவசாய அமைச்சர் கௌரவ துமிந்த திசாநாயக்க இத்தாலிக்கு விஜயம் செய்தார்.

ஏ. உள்ளக விவகார, வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் இலங்கை அரச நடனக் குழு இத்தாலிக்கு பயணித்து 2017 ஜுலை 31 முதல் ஆகஸ்ட் 28 வரை நடைபெற்ற "பண்டிகை சுற்றுலா" நிகழ்வில் பங்கேற்றது.

ஐ. இலங்கை மற்றும் இத்தாலிக்கிடையிலான இராசதந்திர, கொன்சுலர், நிர்வாக மற்றும் தொழில்நுடப் பதவியினர்களின் குடும்ப அங்கத்தவர்களின் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான இருதரப்பு உடன்படிக்கை 2017 நவம்பர் 27 ஆந் திகதி ரோம் நகரிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

ஒ. நீதி ம்றறும் புத்தசாசன அமைச்சின் பிரதி அமைச்சர் மாண்புமிகு. சாரதி துஷ்மந்த அவர்கள் வட இத்தாலியின் ப்ரெஸ்சியாவிலுள்ள பௌத்த விகாரையில் நடைபெற்ற விசேட பௌத்த மத நிகழ்வில் கலந்து கொள்வதற்காக 2017 ஒக்டேபார் 01 ஆந் திகதி இத்தாலிக்கு விஜயம் செய்தார்.

ஓ. ஐக்கிய நாடுகள் முகவரமைப்புகளைத் தளமாகக் கொண்ட ரோமுடன் தொடர்புடைய ஒருங்கிணைக்கப்பட்ட பணி/சந்திப்புகள். உ+ம்: FAO, IFAD, WFP, ICCROM. 2018-2022 வரையான காலப்பகுதிக்கான இலங்கைக்கான WFP நாட்டு மூலோபாய திட்டம் நவம்பர் 15 ஆந் திகதி அனுமதியளிக்கப்பட்டது. CSP இற்கான மொத்த தொகை 46.8 மில்லியன் அ.மெ டொலராகும். இலங்கையிலுள்ள 2000 சிறுவர்களுக்கு பாடசலை உணவினை ஒரு வருடத்திற்கு வழங்கும் நோக்கில் நவம்பர் 18 ஆந் திகதி ரோட்டரி கழகம் ரோம் இன்டர்நெஷனல் ஊடாக இடம்பெற்ற நிதி சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலும் இத்தூதரகம் பங்குபற்றியது. மேலும், இலங்கையானது கொழும்பிலுள்ள அதன் பேராளர் குழுவினருடன் 29 நவம்பர் தொடக்கம் டிசம்பர் 01 ஆந் திகதி வரை நடைபெற்ற ICCROM இன் பொதுக் கூட்டத்தொடரின் 30வது

அமர்விலும் மற்றும் டிசம்பர் 4-8ஆம் திகதி வரை நடைபெற்ற 158 ஆவது FAO சபையிலும் பங்குபற்றியது.

ஔ. 2017 ஒக்டோபர் 09 - 17 ஆந் திகதி வரை இலங்கையின் சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு சுஜீவ இத்தாலிக்கு விஜயம் செய்தார். மிலான் நகரில் வர்த்தக சம்மேளனத்துடன் இடம்பெற்ற வர்த்தகச் சந்திப்புகளில் மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் கலந்து கொண்டதுடன், 2017 ஒக்டோபர் 16-17 ஆம் திகதி வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான இலங்கை வர்த்தக பேரவையிலும் பங்கேற்றார். வர்த்தக அமைச்சருடன் பங்குபற்றிய மிலானின் AICE சம்மேளனத்தின் கலாநிதி. பிரண்டோனியோ கன்டோனி 2017 நவம்பர் 27 ஆந் திகதியன்று கொழும்பில் சர்வதேச வர்த்தக அமைச்சின் மாண்புமிகு இராஜாங்க அமைச்சருடன் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார். ''இத்தாலிய சந்தையை எவ்வாறு அணுகுவது? என்பதாக தலைப்பிடப்பட்டிருந்த இச் செயலமர்வானது EDB உடன் இணைந்து 2017 நவம்பர் 27 ஆந் திகதி ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் 120 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர். ஐரோப்பாவுக்கான ஏற்றுமதி தொடர்பில் 2000 ஏற்றுமதியாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கான மேம்படுத்தல் திட்டம் கலாநிதி. பிரண்டோனியோ கன்டோனியினால் EDB இல் முன்னெடுக்கப்பட்டது.

க. 16 பிரயாண மற்றும் சுற்றுப்பயண இயக்குநர்களுடன் 2017 ஒக்டோபர் 12-14 வரை இத்தாலியின் ரிமினியில் நடைபெற்ற 54 ஆவது TTG சுற்றுலா கண்காட்சியில் இலங்கை பங்கேற்றது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் மற்றும் தூதரகம் ஆகியன கூட்டாக இணைந்து இந்நிகழ்வினை ஒழுங்கு செய்தது.

ச. இலங்கை சர்வதேச வர்த்தகத்தின் மாண்புமிகு இராஜாங்க அமைச்சரின் விஜயத்தின் போது, மிலானிலுள்ள இலங்கை கொன்சுலர் நாயகம் மற்றும் ரோமிலுள்ள இலங்கைத் தூதரகம் இணைந்து 30 தலைசிறந்த வர்த்தகர்கள்/முதலீட்டாளர்கள் பங்குபற்றியதாக 2017 ஒக்டோபர் 13 ஆந் திகதி இலங்கை வர்த்தகப் பேரவையை ஒழுங்கு செய்தது.

ட. 2017 ஒக்டோபர் 01 ஆந் திகதி புலம்பெயர்ந்த சிறுவர்களிடையே கலாச்சார விழுமியங்களை மேம்படுத்தும் வகையில் சிங்கள இலக்கிய கலை சமூகத்துடன் இணைந்து மிலான் நகரில் இலங்கை கொன்சுலர் நாயகத்தினால் சிங்கள இலக்கிய கலை விழா ஒழுங்கு செய்யப்பட்டது.

த. 2017 ஒக்டோபர் 02 ஆந் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட பிரெஸியா பௌத்த விகாரையின் திறப்பு விழாவில் புத்த சாசன அமைச்சின் பிரதி அமைச்சரின் வருகையை மிலான் நகரிலுள்ள இலங்கை கொன்சுலர் நாயகத்தின் மூலம் வசதிப்படுத்திக் கொடுக்கப்பட்டது.

### 13. ஹங்கேரி

அ. இலங்கைக்கான மனிதாபிமான வெள்ள நிவாரண உதவியாக 2017 மே இல் ஹங்கேரி அரசாங்கம் ஹங்கேரி யூனியன் பிரேன்க் 1,500,000/- கொடை வழங்கியது.

ஆ. இலங்கை மற்றும் ஹங்கேரி ஒத்துழைப்பு மீதான உடன்படிக்கை ஒன்று இரு நாடுகளுக்கு இடையிலும் கைச்சாத்திடுவதற்காக நிறைவு பெற்றுள்ளது. இரண்டு நாடுகளுக்கு இடையிலும் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பினை மேலும் முன்னேற்றுவதற்கும் இவ்வொப்பந்தம் மேலும் எதிர்பார்க்கின்றது.

இ. 2017 ஒக்டோபர் 25-26 ஆந் திகதி வரை ஹங்கேரியின் புடாபஸ்ட் நகரில் இடம்பெற்ற உலக ஏற்றுமதி அபிவிருத்தி பேரவையில் கலந்து கொள்வதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி மூலோபயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மாண்புமிகு மலிக் சமரவிக்ரம கலந்து கொண்டார். இந்த விஜயத்தின் போது, மாண்புமிகு அமைச்சர் ஹங்கேரியின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் வர்த்தக பீட்டர் ஸிஜார்ட்டோவை புடாபஸ்ட் நகரில் வைத்து சந்தித்தார்.

### 14. லித்துவேனியா

இலங்கைக்கான மனிதாபிமான வெள்ள நிவாரண உதவியாக 2017 மே மாதத்தில் லித்துவேனியா அரசாங்கம் யூரோ 10,000/- கொடை வழங்கியது.

### 15. லக்ஷம்பேர்க்

அ. இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரபன அவர்கள் 2017 செப்டெம்பர் 27 அன்று லக்ஷம்பேர்க் இற்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு லக்ஷம்பேர்க் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜோன் எசல்போனுடன் ஆக்கபூர்வமான இருபக்க சந்திப்பொன்றினை நடாத்தினார். 1972 இல் இரண்டு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் தாபிக்கப்பட்டதிலிருந்து லக்ஷம்பேர்க் இற்கு இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் மேற்கொண்ட முதல் விஜயம் இதுவாகும். பொருளாதார வாய்ப்புகள் மீது விசேட கவனம் செலுத்தி இருபக்க உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இரு அமைச்சர்களும் உடன்பட்டனர். 2018 இல் இலங்கையிலிருந்து வர்த்தகப் பேராளர் குழுவொன்று லக்ஷம்பேர்க் இற்கு விஜயம் செய்வதற்கு வசதியளிப்பதற்கும் இரு அமைச்சர்களும் உடன்பட்டனர். இலங்கையின் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷம்பேர்க் இன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ எசல்போன் அவர்களுக்கு இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு அழைப்பொன்றினையும் விடுத்தார்.

ஆ. 2017 டிசம்பர் 15 ஆந் திகதி லக்ஷம்பேர்க் நகருக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு வசந்த சேனாநாயக்க அவர்கள் லக்ஷம்பேர்க் பாராளுமன்ற சம்மேளனத்தின் தலைவர் மற்றும்

லக்ஷ்ம்பேர்க்கின் சமூக பாதுகாப்பு, அபிவிருத்தி ஒத்துழைப்பு, மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சர் ஆகியோரை சந்தித்தார்.

இ. மேலும் வர்த்தகம் மற்றும் முதலீட்டு பிரிவுகளில் லக்ஷ்ம்பேர்க் மற்றும் இலங்கைக்கிடையிலான வலுவான தொடர்புக்கான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக மாண்புமிகு வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்ம்பேர்க்கின் வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்களை சந்தித்தார்.

ஈ. விமான சேவைகள் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான லக்ஷ்ம்பேர்க்கின் கோரிக்கையைத் தொடர்ந்து, பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகம் பேச்சுவார்த்தை ஆரம்பித்தலுக்கான தயார்படுத்தல்களில் ஆரம்ப கலந்துரையாடல்களை வசதிப்படுத்தியது. இந்த உடன்படிக்கையின் முடிவானது இலங்கைக்கான வழக்கமான Cargolux விமானங்களை வசதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. ஐரோப்பாவில் மிகப்பெரிய சரக்கியல் மையமாக லக்ஷ்ம்பேர்க் காணப்படுவதுடன், லக்ஷ்ம்பேர்க் ஊடாக இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளை ஐரோப்பாவுக்கு கொண்டு செல்வதற்கான வசதியேற்படுத்துகிறது.

## 16. நெதர்லாந்து

அ. 2017 ஜுலையில் “KRO NCRV” தொலைக்காட்சி குழு (ஆவணப்படம்), ஓகஸ்டில் டச்சு தேசிய தொலைக்காட்சி பன்வாரா TV BNNVARA (ஆவணப்படம்) மற்றும் ஆகஸ்டில் NPO பொது ஒலிபரப்பு கம்பனி (இயற்கையும் வனவிலங்குகளும்) போன்றவற்றிற்காக தூதரகம் எப்.ஏ.எம் மீடியாவிற்கு வசதி வழங்கியது.

ஆ. டச்சு அரசின் அழைப்பின் பேரில், 2017 ஒக்டோபர் 24 - 28 வரை கால்நடை மற்றும் கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் மாண்புமிகு பி.ஹரிஸன் அவர்களின் நெதர்லாந்துக்கான விஜயத்தை நெதர்லாந்திலுள்ள இலங்கைத் தூதரகம் வசதிப்படுத்திக் கொடுத்தது.

இ. நெதர்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகம், 2017 நவம்பர் 27 முதல் டிசம்பர் 03 வரையான காலப்பகுதியில் BNN வரா இன் ஊடகக் குழுவைச் சேர்ந்த இரு உறுப்பனர்களின் இலங்கை விஜயத்தை வசதிப்படுத்திக் கொடுத்தது.

## 17. நோர்வே

அ. இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையில் கடற்றொழில் துறையில் பின்வரும் ஒப்பந்தங்கள் 2017 மாரச் இல் இலங்கையின் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டன.

ஆ. நோர்வேயின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் இலங்கை சனநாயக சோசலி‘ குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையில் இலங்கைக்கான புதிய கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்பு கொள்கையினை உருவாக்குவது தொடர்பில் மானிய ஒப்பந்தம்.

இ. நோர்வேயின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையில் இலங்கைக்கான புதிய கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்பு கொள்கையினை உருவாக்குவது தொடர்பில் நிறுவனசார் ஒத்துழைப்பு ஒப்பந்தம்.

ஈ. இரண்டு நாடுகளுக்கும் இடையில் கடற்றொழில் துறையின் ஒத்துழைப்பின் கீழ் நோர்வேயின் கடல்சார் ஆராய்ச்சி கப்பலான டொக்டர் பிரிஜொட் நென்சன் ஐப் பயன்படுத்தி (இத்தாலியின் ரோமில் உள்ள உணவு மற்றும் விவசாய அமைப்பு தலைமையகத்தின் கடற்றொழில் திணைக்களத்துடன்) பிரத்தியோக பொருளாதார வலயத்தில் இலங்கையின் மீன் வழங்கல் பற்றிய ஆய்வொன்றினை நடாத்துவதற்கு உணவு மற்றும் விவசாய அமைப்பு ஊடாக இலங்கைக்கு அதன் உதவி வழங்குவதற்கு நோர்வே அரசாங்கம் உறுதி அளித்தது. இலங்கையில் அனைத்தையும் உள்ளடக்கிய தேசிய கடற்றொழில் கொள்கை கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கான அதன் உதவியினை நோர்வே அரசாங்கம் உறுதி செய்தது.

உ. 2017 ஓகஸ்ட் இல் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலுக்கு செவி சாய்த்து நோர்வே அரசாங்கம் உமா ஓயா பல்நோக்கு கருத்திட்டத்தின் பிரதான சுரங்கப் பாதையில் உள்ள கசிவிற்கான காரணங்களை கண்டறிவதற்கும் அங்கு தோன்றுகின்ற பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியான தீர்வுகளை வழங்குவதற்கும் பென்ட் ஆகார்ட் தலைமையிலான தொழில்நுட்ப நிபுணத்துவ குழுவொன்றினை நோர்வே அரசாங்கம் அனுப்பியது. உமா ஓயா பல்நோக்கு கருத்திட்டம் பற்றி நோர்வே நிபுணர் குழுவினால் தொகுக்கப்பட்ட இடைக்கால அறிக்கை இலங்கையின் அதிமேதகு சனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

ஊ. நிலச் சரிவுகளை தடுத்தல், பகுப்பாய்வு செய்தல், முன்கூட்டியே எச்சரிக்கை முறைமைகள் போன்றன மீது தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பிற்கு கொள்ளளவினை கட்டியெழுப்புதல், முன்னேற்றகரமான உபகரணங்கள் போன்றவற்றுக்காக தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி அமைப்புக்கும் நோர்வே புவித் தொழில்நுட்பவியல் திணைக்களத்திற்கும் இடையில் முன்னெடுக்கப்படும் தொழில்நுட்ப ஒத்துழைப்பொன்றிற்கு கொழும்பிலுள்ள நோர்வே தூதுரகம் நிதியளித்து வருகின்றது.

எ. நோர்வே அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆய்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்கு இலங்கை பாராளுமன்றத்தில் பின்வருவம் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் 2017 மார்ச் 26 முதல் ஏப்ரல் 1 வரை நோர்வேக்கு விஜயம் செய்தனர்.

i. கௌரவ சந்திராணி பண்டார, பா.உ., மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்க்ள அமைச்சர்
ii. கௌரவ தலதா அதுகோரள, பா.உ., வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்
iii. கௌரவ சுமேதா ஜி. ஜயசேன, பா.உ., நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் பிரதி அமைச்சர்

iv. கௌரவ (கலாநிதி) அனோமா கமகே, பா.உ., பெற்றோலிய வள அபிவிருத்தி பிரதி அமைச்சர்
v. கௌரவ விஜயகலா மகேஸ்வரன், பா.உ., சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்
vi. கௌரவ ஸ்ரீயானி விஜேவிக்ரம, பா.உ.,
vii. கௌரவ (வைத்தியர்) துஸிதா விஜேமான்ன, பா.உ.

ஏ. வடமேல் மாகாணத்தின் மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் கௌரவ வர்ணகுலசூரிய ஜுட் சுமல் திசேரா நோர்வேயின் ஒஸ்லோவில் 2017 மே 29 தொடக்கம் ஜுன் 2 வரை சட்டத்திற்கு புறம்பான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடத்தப்படாத மீன்பிடித்தல் பற்றிய உணவு விவசாய அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்றார்.

ஐ. ''கொள்ளளவினை கட்டியெழுப்புதல் மற்றும் தூய சக்திக்கான நனோ பொருட்கள் ஆராய்ச்சி ஒன்றியம் ஒன்றினை தாபிப்பதல் மீது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைப்பு ஒப்பந்தம்'' ஒன்றினை 2017 ஜுலை 7ஆம் திகதியன்று மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞான பல்கலைக்கழகம் கைச்சாத்திட்டது. மூன்று வருட காலம் ஒன்றுக்காக நோர்வேஜியன் குரோனர் 6.2 மில்லியன் ''ரூபா. 112 மில்லியன்'' தொகையினை இக்கூட்டிணைப்பு கொண்டதாகும்.

xi. நோர்வே அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஊடாக மனிதாபிமான வெள்ள நிவாரண உதவியாக இலங்கைக்கு நோர்வேஜியன் குரோனர் 10 மில்லியன் (ரூபா 180 மில்லியன் ஐ.டொ. 1.2 மில்லியன்) கொடை வழங்கியது.

ஜ் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு பிரசாத் காரியவசம் மற்றும் உதவி சட்ட ஆலோசகர் திருமதி திலாணி சில்வா 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரை வெளிநாட்டு அலுவலகத்தின் ஆலோசனைகளின் இலங்கை நோர்வே முதலாவது சுற்றில் கலந்து கொள்ள ஒஸ்லோவுக்கு விஜயம் செய்தார்கள். செயலாளர் காரியவசம் நோர்வேஜியன் வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் நாயகம் திரு வெகர் ஸ்ரோமனை சந்தித்தார். அவர்கள் நோர்வேயின் உதவியுடன் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் இருதரப்பு உறவுகள் என்பனவற்றை மீளாய்வு செய்தார்கள். இரு செயலாளர்களும் இரு நாடுகளுக்குமிடையே உறவுகளை பலப்படுத்தி ஆழமாக்க பல வழி முறைகளை கலந்தாலோசித்தார்கள்.

து. நொர்வேஜியன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சட்ட திணைக்களத்தின் சிரேஸ்ட அதிகாரிகளுடான கூட்டத்தில் கண்டங்களின் வரையரைகள் பற்றி கடல் சட்ட ஐக்கியநாடுகள் உடன்படிக்கையின் கீழ் இலங்கை துாதுக்குழு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தது. இந்த துறையில் இலங்கைக்கு நோர்வே நிபுணத்துவ சட்ட உதவிகளை வழங்கியது.

கே ஒஸ்லோவிலுள்ள தூதரகத்தில் 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி நோர்வேவில் இலங்கை தூதரகம் ஒரு சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தது. முன்னணி பிரயாண முகவர்கள் பிரயாண இயக்குனர்கள் பிரசித்திபெற்ற பிரயாணம் தொடர்பான எழுத்தாளர்கள் மற்றும் பிரயாண ஊடகவியாளர்கள் இலங்கைக்கு சேவைகளை நல்கும் பெரிய விமானசேவை கம்பனிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் மேற்கூறப்பட்ட நிகழ்வில் பங்குபெறுவதற்கு தூதரகம் வசதிகள் அமைத்து கொடுத்தது. .

ஐ முன்னணி பிரயாண சஞ்சிகை பதிப்பாசிரியர் திரு தேர்ஜி மைக்கில்போஸ்டின் இலங்கைக்கு விஜயம் செய்ய தூதரகம் ஏற்பாடு செய்தது. ''குலோஸி சஞ்சிகை'' பிரமாண்டமான ஹோட்டல்களும் உணவும் '' (2018 பதப்பு) என்ற சஞ்சிகையின் பதிப்பாசிரியரினால் '' சங்கிரில்லா ஹோட்டல் அம்பாந்தோட்டை பற்றிய ஒரு அறிக்கை குறிப்பு பிரசுரமாகியிருந்தது.˙

**18. மோல்டா**

a) ''அங்கீகரிக்காது ஆட்களை மீள நாட்டிற்கு கூட்டி வருதல் மீதான ஐரோப்பிய சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஒப்பந்தம்'' அமுலாக்கம் மீது இலங்கைக்கும் மோல்டாவிற்கும் இடையிலான பட்டயத்தினை கைச்சாத்திடுதல் இரு நாடுகளும் கையொப்பமிடுவதற்காக பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

b) 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 – 6 ஆம் திகதிகளில் மோல்டாவில் நடைபெற்ற 4 வது சர்வதேச எங்கள் சமுத்திரங்களின் மாநாட்டிற்கு இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைசசர் கௌரவ வசந்தா சேனாநாயக்க இலங்கை தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கினார். கரையோர மக்களை பாதுகாத்தல் மற்றும் நீரியல் அசுத்தங்களை குறைத்தல் நீடித்து நிலைக்கக்கூடிய மீன்பிடிதொழில்களை மேம்படுத்தல் என்பனவற்றிற்ான பொறுப்புக்களை நடைமுறைபடுத்துதல் என்பனவற்றிற்காக இலங்கை மேற்கொண்டுள்ள முக்கியமான நடவடிக்கைகளை மாநாட்டிவ் தெளிவாக எடுத்தக்காட்டி ஒரு முக்கிய உரையை இராஜாங்க அமைச்சர் சேனாநாயக்க வழங்கினார்.

c) மாநாட்டின் பக்கச்செயற்பாடுகளுடன் இராஜாங்க அமைச்சர் சேனாநாயக்க மோல்டா வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கார்மிலோ அபேலாவைச் சந்தித்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மீளாய்வு செய்தனர். இரு அமைச்சர்களும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பாக கைச்சாத்திட்டனர்

**19. போலந்து**

a) வார்சோவிலுள்ள இலங்கை தூதரகமானது 2017 சனவரி முதல் ஏப்ரல் வரை போலந்திலுள்ள புரொட்டோ பிரெஸ் கம்பனிக்கு 20 இலங்கையரை சேர்த்துக் கொள்வதற்கு வசதிகளை மேற்கொண்டது.

b) இலங்கைக்கும் போலந்துக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஆரம்பித்து 60வது ஆண்டு நிறைவு 2015 ஜுன் 6ஆம் திகதியன்று வார்சோ

பல்கலைக்கழகத்தின் கூட்டிணைப்புடன் கொண்டாடப்பட்டது. போலந்து அரசாங்கத்தின் வெளிநாட்டு அலுவல்கள் கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் நூற்றுக்கணக்கான அதிதிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

c) போலந்துவிலுள்ள இலங்கைத் தூதரகம் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 – 22 ஆம் திகதியில் PTAK வோர்ஸோ எக்ஸ்போவில் நடைபெற்ற 02வது சர்வதேச சுற்றுலா சந்தை, உலக பிரயாண பொருட்காட்சி என்பனவற்றில் பங்குபற்றியது.

d) இலங்கை சுற்றுளா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து போலந்தில் உள்ள இலங்கை தூதரகம் வோசோவில் கலாச்சாரம் மற்றும் விஞ்ஞான மாளிகையில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் 23 – 25 ஆம் திகதி வரை நடைபெற்ற 25 வது சர்வதேச பிரயாண பொருட்காட்சி – டிடி வோர்சோ 2017 ல் பங்குபற்றியது.

e) போலந்திலுள்ள இலங்கை தூதரகம் முதற் தடவையாக வோசோவிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் இலங்கை உணவு வைபவத்தை ஏற்பாடு செய்தது.

f) போலந்திலுள்ள இலங்கை தூதரகம் இலங்கையிலிருந்து திறமையான ஊழியர்களை தொழிலுக்கு சேர்த்துக்கொள்வது தொடர்பாக எச்பிடிஐ பிரயாண ஸ்பூஸி மற்றும் போலந்தில் தொழிலுக்கு அமர்த்தும் எஸ் ஏ இல்லம் என்பனவற்றிற்கு இடையே கலந்துரையாடல்களை வசதிபடுத்தி இலங்கை வெளிநாட்டு வேலை பணியகத்துடன் ஒருங்கிணைத்தது.

g) போலந்திலுள்ள இலங்கை தூதரகம் இலங்கையிலிருந்து திறமையான ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக எக்ரிசோல சர்வதேச ஆர்ஓ எஸ்ஆர்எல், த பெப்ரிக்வா டி கெரோசரி எஸ்ஆர்எல் த ரோஜோப்ஸ் சிலெக்டி எஸ ஐ சிகுருட்டர், ரோமேனியாவில் த ரொம்ஜொப் குலோபல் ரிகுருட்மண்ட் மற்றும் எஸ்எல்எப்இபி 2017 என்பனவற்றிற்கு வசதியளித்து ஒருங்கிணைத்தது.

## 20. ருமேனியா

இருபக்க ஆலோசனைகளுக்காக வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனாநாயக்க 2017 ஜுன் 28 முதல் ஜுலை 2 வரை ருமேனியாவுக்கு விஜயம் செய்தார். கௌரவ இராஜாங்க அமைச்சர் ருமேனியா அரசாங்கத்தின் சக்தி, வர்த்தகம் மற்றும் தொழில் பிரதி அமைச்சர்களுடன் சந்திப்புக்களை நடாத்தினார். 2017 ஜுன் 29 இல் புஜாரஸ்டில் இடம்பெற்ற வர்த்தக மன்றத்தில் பிரதி அமைச்சர் 10 உறுப்பினர்கள் கொண்ட இலங்கை வர்த்தக பேராளர் குழுவொன்றுடன் பங்கேற்றார். டிரான்ஸில்வேனியா பல்கலைக்கழகத்திற்கும், பேராதனை பல்கலைக்கழகத்திற்கும் இடையில் கல்விசார் பரிமாற்றங்களை வலுப்படுத்துவதற்கு கௌரவ இராஜாங்க அமைச்சரின் பிராசோவிலுள்ள டிரான்ஸில்வேனியா பல்கலைக்கழகத்திற்கான விஜயம் வசதி ஏற்படுத்தியது. அத்துடன் கலந்துரையாடல்களின் போது தெரிவு செய்யப்பட்ட கற்கை துறையொன்றில் முதுமானி அல்லது தத்துவமானி கற்கைநெறியொன்றுக்கு வசதியளிப்பதற்கு இலங்கை வெளிநாட்டு அமைச்சிலுள்ள அலுவலருக்கு டிரான்ஸில்வேனியா பல்கலைக்கழகத்தினால் உதவிமானியம் வழங்குவதற்கு ரெக்டர் அப்ருவுடன் அறிவித்தார். இலங்கைக்கும் ருமேனியாவிற்கும்

இடையில் இராஜதந்திர கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போருக்கு வீசா விளக்களிப்பு மீது உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது.

**21. சொல்வேனியா**

அ. வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனாநாயக்க 12 வது பிளெட் உபாயமன்றம் 2017 இல் பங்கேற்பதற்கு 2017 ஓகஸ்ட் 30 தொடக்கம் செப்டெம்பர் 05 வரை சொல்வேனியாவிற்கு விஜயம் செய்தார். "யதார்த்தமான நம்பிக்கை – ஒருவின் எண்ணத்தை விட எவ்வாறு மாற்றம் விரைவாக இடம்பெறுகின்றது" பற்றிய குழு கலந்துரையாடலில் கௌரவ இராஜாங்க அமைச்சர் இணைந்ததுடன் உரையாடல் அமர்வு கலந்துரையாடல்களிலும் இணைந்தார். இவர் ஸ்லோவேனிய பிரதமர் மைக்ரோ செராரையும், சேர்பிய பிரதமர் அனாபிரனாபிக்கையும் பிளட் மன்றத்தின் போது சந்தித்தார்.

ஆ. விஜயத்தின் இருபக்க பகுதியின் போது வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனாநாயக்க ஸ்லோவேனிய இராஜாங்கச் செயலாளர் என்ரெச் லோகருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருபக்க ஒத்துழைப்பின் முன்னெடுக்கப்படும் விடயங்கள் பற்றி மீளாய்வு செய்தார். பிரதி அமைச்சர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் (சுற்றுலா) மற்றும் தொழில்நுட்ப இராஜாங்கச் செயலாளர் திருமதி. ஈவா ஸ்டார்வ்ஸ் போட்லோகர், ஸ்லோவேனிய உட்கட்டமைப்பு மற்றும் சக்தி அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் திரு. கிலமென் ஒஸ்டிசெக், பிரான் பீடர் பொஸ்மன்னாட் நகரபிதா கலாநிதி ஏனஸ்ட் பெட்ரிக், சர்வதேச விவகாரங்கள் மற்றும் சர்வதேச சட்டம் மீதான சனாதிபதியின் ஆலோசகர் ஆகியோருடன் இருபக்க கலந்துரையாடல்களையும் நடாத்தினார்.

இ. இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்காக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக யூரோ 30,000 கொடையாக வழங்கியது.

**22. சுவீடன்**

அ. சுவீடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அதிமேதகு திருமதி மர்கொட் வோல்ஸ்டோம் அவர்களின் அழைப்பின் பேரில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ மங்கள சமரவீர 2017 சனவரி 17-18 வரை சுவீடனுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டார். இவ்விஜயத்தின் போது கௌரவ அமைச்சர் சுவீடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அதிமேதகு திருமதி மர்கொட் வோல்ஸ்டோம், பிரதிப் பிரதம அமைச்சர் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி மற்றும் காலநிலைக்கான அமைச்சர் அதிமேதகு திருவதி இஸ்ஸபெல்லா லொபின், ஐரோப்பிய ஒன்றிய விவகாரங்கள் மற்றும் வர்த்தக அமைச்சர் அதிமேதகு திருமதி ஏன்ட்லின்டே மற்றும் சுவீடன் பாராளுமன்றத்தின் சபாநாயகர் திரு. ஏபன்ட் அஹ்லின் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன் சந்திப்புக்களை நடாத்தினார்.

ஆ. ''இலங்கையில் தற்கால அரசியல் அபிவிருத்தியும் நல்லிணக்க செயன்முறையும்'' என்ற தொனிப்பொருளில் சுவீடனின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி கொள்கைக்கான நிறுவனத்தின் கௌரவ அமைச்சர் உரையொன்றினை நிகழ்த்தினார். நன்கு அறியப்பட்ட சுவீஷ் கம்பனிகள்

முதலீட்டாளர்களின் பங்கேற்புடன் ஸ்டக்ஹோமின் ஸுஜோஸ்டாவின் *ஸுஜோஸ்டாவினால்* நடாத்தப்பட்ட *ஹம்மர்* இல் ''ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் நிலைத்திருக்கத்தக அபிவிருத்தி'' என்ற தொனிப்பொருளின் கீழ் வட்ட மேசை கலந்துரையாடல்களிலும் அவர் கலந்து கொண்டார்.

இ. இலங்கையில் எதிர்கால முதலீட்டிற்கான சாத்தியவள ஆய்வொன்றினை நடாத்துவதற்கு 2017 பெப்ரவரி 20 முதல் 23 வரை IKEA இலிருந்து பேராளர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது.

ஈ. பெருநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பாட்டளி சம்பிக் ரணவக 2017 ஜுன் 8-9 வரை சுவீடனுக்கு விஜயம் செய்தார். 2017 ஜுன் 8 அன்று சுவீடினில் கொதன்பேர்க் இல் உள்ள வர்த்தக பிராந்தியத்தில் நடைபெற்ற இலங்கையின் பெருநகர் கருத்திட்டங்களின் முதலீட்டு வாய்ப்புகளை நோக்காகக் கொண்ட செயலமர்வின் போது சுவீடன் வர்த்தக பிரதிநிதிகளுடன் உயர்மட்ட சந்திப்புகளையும் அமைச்சர் நடாத்தினார்.

உ. சுவீடனைத் தளமாகக் கொண்ட நற்பெயர்மிக்க சக்தி கம்பனியொன்றான போட்டம் கம்பனியிலிருந்த பல பேராளர் குழுக்கள் இலங்கையில் எதிர்கால ஒத்துழைப்பு மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய சாத்தியமான துறைகளை கண்டறிவதற்கு 2017 பெப்ரவரி, ஏப்ரல், ஓகஸ்ட் மாதங்களில் விஜயம் செய்தது. பேராளர் குழுக்கள் பெருநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அலுவலர்கள் இலங்கையின் நிதி அமைச்சர் ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தியது.

ஊ. சுவீடனிலுள்ள இலங்கை தூதரகம் இலங்கையின் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையுடன் இணைந்து கொழும்பில் 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற பெசட் இரத்தினகற்கள் மற்றும் ஆபரண பொருட்காட்சி சந்தையில் சுவிடனில் இரத்தினக்கல் வியாபாரியான திரு ஜோனான்ஸ் ஓர்ஸ்டாடியஸ் பொருட்காட்சியில் பங்குபற்றி ஒரு பயிற்ச்சி செயலமர்வை நடத்த வசதிகள் அமைத்தது. 2017 ஆம் ஆண்டின் பெஸட்டின் பக்கச்செயற்பாடுகளுடன் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 01 ஆம் திகதி இந்த செயற்திட்டம் நடைபெற்றது.

எ. சுவிடனிலுள்ள இலங்கைத் தூதரகம் இலங்கை வர்த்தக திணைக்களத்துடன் இணைந்து சுவிடனில் மல்மோவில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 -16 ஆம்

திகதிகளில் நடைபெற்ற 'இயற்கையான உணவுப்பொருட்கள் ஸ்காண்டிநேவியா 2017'' வர்த்தக பொருட்காட்சிக்கு இலங்கை காட்சி கூடாரங்களை ஏற்பாடு செய்தது.

ஏ. சுவிடனிலுள்ள இலங்கைத் தூதரகம் சுவிடனில் உப்சலா பல்கலைக்கழகம் அங்ஸ்டுரோம் ஆய்வகூடத்தின் பேராசிரியர் வேர்ணம் குரே வுடன் கலந்தாலோசித்து இலங்கையில் எரிசக்தி அலையை அறிமுகப்படுத்தும் சாத்தியத்தை ஆராய்நது கண்டுபிடிக்க 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி தெற்கு சுவிடனில் லைசேகில் அமைந்துள்ள அலை எரிசக்தி இயந்திர நிலையத்திற்கு விஜயத்தை மேற்கொள்ள இலங்கை மின்சார சபையிலிருந்து ஒரு பிரதிநிதியை ஏற்பாடு செய்தது.

ஐ. கொழும்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி இலங்கை மற்றும் சுவிட்ஸலாந்துக்கு இடையே வெளிநாட்டு அலுவலக ஆலோசனைகளின் முதலாவது அமர்வு கூட்டப்பட்டது. சுவிஸ் தூதுக்குழு தூதரகர் திரு ஜோஹான்ஸ் மெட்டிஸியின் வழிகாட்டலுடன், உதவி இராஜாங்க செயலாளர், மற்றும் ஆசிய பசுபிக் பிரிவின் தலைவர் வெளிநாட்டு அலுவல்கள் பெடரல் திணைக்களம் மற்றும் இலங்கை தரப்பு ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய மற்றும் பலதரப்பட்ட உடன்படிக்கைள் அரசியல் அலுவல்கள் (மேற்கு) மேலதிக செயலாளர் திரு ஏ எல் ஏ அஸீஸ் தலைமையில் நடைபெற்றது.

## 23. சுவிட்சர்லாந்து

அ. புலம்பெயர்ந்த ஊழியர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு மீது கவனம் செலுத்தி இலங்கையில் பாதுகாப்பான தொழிலாளர் புலம்பெயர்தல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றுக்கு சுவிட்சர்லாந்து நிதியளித்து ஆதரவளித்து வருகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டமானது இலங்கை அரசாங்கம், சர்வதேச அமைப்புகளின் தொழில்நுட்ப உதவி மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பங்குடைமை கூட்டிணைப்புடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டத்தின் நோக்கம் சமூக, உளவியல் அத்துடன் பொருளாதார செலவுகளை குறைப்பதனை நோக்காகக் கொண்டும் தொழிலாளர் புலம்பெயர்தலை அதிகரிப்பதற்கும், புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் பாதுகாப்பான புலம்பெயர் தகவல்களையும் தொடர்புடைய சேவைகளையும் வழங்குவதாகும்.

ஆ. புலம்பெயர் விடயங்கள் மீதான இருபக்கு ஒத்துழைப்பு உடன்படிக்கையின் கீழ் ''இலங்கைக்கும் சுவிட்சலாந்துக்கும் இடையில் முதலாம் சுற்று நிபுணத்துவ ஆலோசனைகள்'' கொழும்பில் 2017 ஏப்ரல் 4 அன்று இடம்பெற்றன.

இ. ''உலகப் பொருளாதார மன்றம்'' இல் கலந்து கொள்வதற்கு பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க 2017 சனவரி 16 தொடக்கம் 22 வரை சுவிட்சர்லாந்தின் டாவோஸுக்கு விஜயம் செய்தார்.

ஈ. விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த 2017 சனவரி 31 தொடக்கம் பெப்ரவரி 9 வரை ஜெனீவாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இவ்விஜயத்தின் போது இலங்கையின் விஞ்ஞான சமூகத்திற்கும் அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பிற்கும் இடையில் அணுசக்தி பௌதீகத்தில் விஞ்ஞான ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

உ. “புனருத்தாபனம் 2030 : நடவடிக்கை திட்டத்திற்கான அழைப்பு” பற்றிய உலக சுகாதார அமைப்பு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு சுகாதார, போசணை, சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ வைத்தியர் ராஜித சேனாரத்ன 2017 பெப்ரவரி 6 தொடக்கம் 7 வரை ஜெனீவாவுக்கு விஜயம் செய்தார்.

ஊ. விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த 2017 மே 2 முதல் 8 வரை ஜெனீவாவுக்கு விஜயம் செய்தார்.

எ. சுகாதார, போசணை, சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ வைத்தியர் ராஜித சேனாரத்ன மற்றும் சுகாதார, போசணை, சுதேச மருத்துவ பிரதி அமைச்சர் கௌரவ எம்.சி.எம். பைஸல் 17வது உலக சுகாதார ஒன்றுகூடலில் கலந்துகொள்வதற்கு 2017 மே 22 தொடக்கம் 31 வரை ஜெனீவாவுக்கு விஜயம் செய்தனர்.

ஏ. சர்வதேச தொழில் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் கௌரவ டப்ளியு.டி.ஜெ. செனவிரத்ன 2017 ஜூன் 5-17 வரை சுவிட்சர்லாந்துக்கு விஜயம் செய்தார்.

ஐ. துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் கௌரவ மஹிந்த சமரசிங்க 2017 செப்டெம்பர் 5 தொடக்கம் 14 வரை ஜெனீவாவுக்கு விஜயம் செய்தார்.

**24. துருக்கி**

அ. இலங்கையின் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள அமைச்சரினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் துருக்கிக் குடியரசின் முன்னாள் பிரதம அமைச்சர் அதிமேதகு திரு. அஹ்மட் டொவ்டோகுலு 2017 ஓகஸ்ட் 4 தொடக்கம் 11 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். அதிமேதகு திரு டெவ்டோகுலு இலங்கையில் வெளிநாட்டு அலுவல்கள அமைச்சரை இவ்விஜயத்தின் போது சந்தித்தார். தேசிய ஐக்கியம் மற்றும் தேசிய ஐக்கியத்திற்கான பாக்கிர் மாக்கார் நிலையத்தினாலும் தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தினாலும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட காலஞ்சென்ற தேசமான்ய மொஹமட் பாக்கிர் மாக்காரின் வருடாந்த ஞாபகார்த்த தினத்திற்காகவும் அகில இலங்கை கட்டுரை மற்றும் சித்திரப் போட்டி பரிசளிப்பு விழாவிற்காகவும் அதிமேதகு திரு டெவ்டோகுலு நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

ஆ. சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் கௌரவ சுஜீவ சேனசிங்க அவர்கள் 2017 ஓகஸ்ட் 13 தொடக்கம் 19 வரை துருக்கிக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டார். கௌரவ இராஜாங்க அமைச்சருடன் இலங்கை முதலீட்டு சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் இலங்கையின் இணைந்த ஆடைத் தொழிற்சாலை அமைப்புக்களின் மன்றப் பிரதிநிதிகளும் சென்றனர். கௌரவ இராஜாங்க அமைச்சரும் பேராளர் குழுவும் துருக்கியின் வர்த்தக மற்றும் சுங்க அமைச்சரையும் அமைச்சின் சிரேஷ்ட அலுவலர்களையும் சந்தித்ததுடன் துருக்கியின் ஸ்மிரில் ஒவ்வொரு கோடை காலத்திலும் இடம்பெறுகினற் ஸ்மிர் வருடாந்த சர்வதேச வர்த்தக சந்தையிலும் பங்கேற்றனர்.

இ. 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற துருக்கி ஏற்றுமதியாளர் சபையின் 24வது பொதுக் கூட்டத்தில் துருக்கியில் உள்ள இலங்கைத் தூதரகம் பங்கபற்றியது.

ஈ 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13 – 19 ஆம் திகதிகளில் நடைபெற்ற இஸ்மீர் சர்வதேச வர்த்தக பொருட்காட்சி சந்தையில் துரருக்கியில் உள்ள இலங்கைத் தூதரகம் பங்குபற்றியது.

உ 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 -10 திகதிகளில் நடைபெற்ற இஸ்தான்புல் உலக உணவு பொருட்காட்சியில் துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் இலங்கை பங்குபற்றுவதற்கான வசதிகள் வழுங்கியது.

ஊ துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் ''இலங்கைத் தேயிலை'' மற்றும் ''இலங்கை 2017 ஆம் ஆண்டின் ஒரு சுற்றுலா தளம்'' என்று மேம்படுத்த அங்கராவில் சுவிஸ் ஹோட்டலில் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்தது.

எ 2017 ஆம் ஆண்டு துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் இஸ்தான்புல் தேயிலை வைபவ விழாவில் பங்குபற்றியது.

ஏ 2017 ஆம் ஆண்டு “ இலங்கையில் வர்த்தக முதலீட்டு வாய்ப்புகள் “ பற்றிய கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

ஐ 2017 ஆம் ஆண்டின் கைத்தொழில் கம்பனிகள் உரிமையாளர்களான பெண் வர்த்தகர்கள் மற்றும் பல வர்தககம்பனிகள் அமைப்பின் வர்த்தகர்களுடன் இணைந்து “ இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு அரங்கு:'' நடைபெற்றது.

ஒ 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி இலங்கையை சுற்றுலா. பயணிகளின் வருகை தளமாக ஊக்குவிக்க துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் “எழில்மிகு மனதை கவர்ந்திடும் தீவு” என்ற தலைப்பில் ஒரு புகைப்பட கண்காட்சியை ஏற்பாடு செய்தது.

ஓ “ எழில்மிகு மனதை கவர்ந்திடும் தீவின் இரண்டாவது கட்டத்தின் இரண்டாவது கட்டம் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி துருக்கி, அன்டாலியா மூரத்பாஸாவில் “செபநெம் பஹார் கலை மற்றும் வடிவமைப்பு கூடத்தில் நடந்தேறியது.

ஔ 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி துருக்கியில் உள்ள இலங்கைத் தூதரகம் “ இலங்கை ஊக்குவிப்பு தினத்தை ஈர்சுரம் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அவையில் ஏற்பாடு செய்தது. இதில் இலங்கை புகைப்படகலை கண்காட்சி மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு கருத்தரங்கு என்பன அடங்கின.

க துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் அங்காரா சுவிஸ் ஹோட்டலில் ஒரு சம்பிராயபூர்வமான நடனநிகழச்சிக்கு வசதியளித்தது.

கா துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் அங்காரா சுவிஸ் ஹோட்டலில் இலங்கை உணவு பொருட்காட்சிக்கு வசதிகள் வளங்கியது.

கி அங்காராவில் உள்ள நடுநிலை கிழக்கு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் “ “எதிர்காலத்திற்கான சரித்திர தொடர்புகள் மூலம் துருக்கியர்கள் மற்றும் இலங்கையர்கள்: என்ற தலைப்பில் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தது.

கீ இஸ்மீரில் உள்ள இலங்கை கொன்சுலின் மனைவி திருமதி நாஸில் அக்குரா என்பவரால் முதன் முதலாக துருக்கிய மொழியில் இலங்கை பற்றிய “ இலங்கையை கண்டுபிடியுங்கள்” என்ற புத்தகம் எழுதப்பட்டு பிரசுரமானது.

**25. ஐக்கிய இராச்சியம்**

அ. இலங்கைக்கான அனைத்து கட்சி பாராளுமன்றக் குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற கௌரவ லோட் நஸபி அவர்கள் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற நல்லிணக்க செயன்முறை, நல்லாட்சி மாற்ற நீதி பொறிமுறைகள் பற்றிய முதல் மட்ட புரிந்துணர்வினை பெற்றுக் கொள்வதற்காக 2017 சனவரி 1-9 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.

ஆ. வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ மங்கள சமரவீர 2017 சனவரி 10 முதல் 15 வரை ஐக்கிய இராச்சியத்திற்கு விஜயம் செய்தார். இவ்விஜயத்தின் போது அவர் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டினை முன்னேற்றுவதற்கான முன்னோக்கிய நோக்கு உள்ளடங்கலாக இருபக்க உறவுகளின் அபிவிருத்திகளை நோக்கி வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவல்களுக்கான இராஜாங்கச் செயலாளர் ஓய்வுபெற்ற கௌரவ பொரிஸ் ஜொன்சன் உடன் சந்திப்பொன்றினை நடாத்தினார். இவ்விஜயத்தின் போது பொதுநலவாய செயலாளர் நாயகம் ஓய்வுபெற்ற கௌரவ பெடீசியா ஸ்கொட்லாந்த் அவர்களையும் சந்தித்தார். ‘‘இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு ஐக்கிய அரசாங்கத்தின் முயற்சிகள்’’ என்ற தலைப்பில் இலண்டனில் உள்ள சர்வதேச விவகாரங்களுக்கான றோயல் நிறுவனத்தின் சொதம் இல்லத்தில் விசேட உரையொன்றினையும் கௌரவ அமைச்சர் நிகழ்த்தினார்.

இ. ஐக்கிய இராஜியத்தின் கல்வி இராஜாங்கச் செயலாளர் ஓய்வுபெறற கௌரவ ஜஸ்டின் கிரீனிங் அவர்களின் அழைப்பின் பேரில் கல்வி அமைச்சர் கௌரவ அகில விராஜ் காரியவசம் அவர்கள் 2017 சனவரி 21 முதல் 25 வரை லண்டனில் நடைபெற்ற கல்வி உலக மன்றத்தில் கலந்துகொள்வதற்கு ஐக்கிய இராஜ்ஜியத்திற்கு விஜயம் செய்தார்.

ஈ. திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் கௌரவ மஹிந்த சமரசிங்க 2017 சனவரி 22-23 வரை ஐக்கிய இராச்சியத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

உ. 2017 மார்ச் 27 தொடக்கம் 31 வரை இலண்டனில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு மற்றும் இணையத்தள பாதுகாப்பு தினம் பற்றிய சர்வதேச பாராளுமன்ற மாநாட்டில் பங்கேற்பதற்கு சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்னாயக்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ருவன் விஜேரத்ன, தொலைத்தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சர் கௌரவ ஹரின் பிரணாந்து, பா.உ. கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகியோர் ஐக்கிய இராச்சியத்திற்கு விஜயம் செய்தனர்.

ஊ. லண்டன் வெஸ்ட்மினிஸ்டரில் நவீன அடிமைத்துவம் பற்றிய ஆசிய-பசுபிக் செயலமர்வில் கலந்துகொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ மயந்த திசாநாயக்க மற்றும் கௌரவ ரொசான் ரணசிங்க ஆகியோர் 2017 ஏப்ரல் 26 தொடக்கம் 28 வரை ஐக்கிய இராஜ்ஜியத்திற்கு விஜயம் செய்தனர்.

எ. லண்டனரில் நடைபெற்ற பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர் காங்கிரஸ் மற்றும் கண்காட்சி 2017 இல் கலந்து கொள்வதற்கு பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைசசர் கௌரவ சுசந்த புஞ்சிநிலமே 2017 மே 3 தொடக்கம் 4 வரை ஐக்கிய இராச்சியத்திற்கு விஜயம் செய்தார்.

ஏ. லண்டனில் நடைபெற்ற "முன்நகருகின்ற உலக மாநாடு 2017" இல் பங்குபற்றுவதற்கு உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ மொஹான் லால் கிரேரு 2017 மே 21 தொடக்கம் 24 வரை ஐக்கிய இராச்சியத்திற்கு விஜயம் செய்தார்.

ஐ. உள்ளக ஆலயத்தின் கௌரவ சங்க பொருளாளர் திரு. டேவிட் விடாவே QC, 2017 செப்டெம்பர் 1 தொடக்கம் 8 இலங்கைக்கு விஜயம் செய்தார். இவர் இலங்கையின் கௌரவ நிதி அமைச்சர், உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஏனைய நீதித்துறை அலுவலர்களைச் சந்தித்தார்.

ஓ ஐக்கிய இராஜ்ஜியத்தின் வெளிநாடு மற்றும் பொதுநலவாய அலுவலக தெற்கு ஆசிய இருதரப்பு பிரிவுகளின் தலைவர் திரு நிக் மெலர் இலங்கைக்கு விஜயம் செய்து 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி கௌரவ இராஜாங்க வெளிநாட்டு அமைச்சரை அமைச்சில் சந்தித்தார்

ஓ ஐக்கிய இராஜ்யத்தின் ஆசியா மற்றும் பசுபிக் என்பனவற்றிற்கான அமைச்சரும் மற்றும் வெளிநாடு மற்றும் பொதுநலவாய அலுவலகம் என்பவற்றிற்கான பொறுப்பு செயலாளர் ஹொன் மார்க் பீல்ட் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி தனது முதலாவது இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரை அமைச்சில் சந்தித்தார்.

ஔ 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 -24 ஆம் திகதிகளில் தென்மாகாண முதல் அமைச்சர் கௌரவ ஷான் விஜயலால் மாகாணசபையிலுள்ள ஐந்து உத்தியோகத்தர்களுடன் ஒரு கற்றறிருந்து ஆராயும் பிரயாண கருத்திடத்தில் கலந்துகொள்ள ஐக்கிய இராஜ்யத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டார்

**ஆ பொதுநலவாய சுதந்திர அரசுகள்**

**உள்ளடக்கப்படும் ஆள்புலங்கள்: 11**

ஆர்மேனியா, அசர்பைஜான், பெலாரஸ், கசகஸ்தான், கிரிகிஸ்தான், மோல்டோவா, ரஷ்யா, தஜிகிஸ்தான், டேர்க்மெனிஸ்தான், உக்ரெய்ன், உஸ்பெகிஸ்தான

**வதிவிட தூதரகங்களின் எண்ணிக்கை:01**

மொஸ்கோ

**சமகாலப்பகுயில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தூதரகங்களின் எண்ணிக்கை 09**

மொஸ்கோவிலிருந்து ஆர்மேனியா, பெலாரஸ், மோல்டோவா மற்றும் உஸ்பெகிஸ்தான் ˙ தெஹறானிலிருந்து அசர்பைஜான், டேர்க்மெனிஸ்தான் இஸ்லாமாபாத்திலிருந்து கிரிகிஸ்தான், தஜிகிஸ்தான் அங்காரவிலிருந்து உக்ரெய்ன்.

**1. ரியோ சம்மேளனம்**

அ. தொழில் மற்றும் தொழில்சங்க அமைச்சிலிருந்து சிரேஸ்ட மட்ட பேராளர் குழுவொன்று ரியோ சம்மேளனத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு ரஷ்யாவின் தொழில் மற்றும் சமூக அகடமியில் ரியோ சம்மேளனத்தின் தொழில் மற்றும் சமூக அகடமிக்கும் இலங்கையின் தேசிய தொழில் கல்வி நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

ஆ. 2017 ெப்பரவரி 6-10 வரை மொஸ்கோவில நடைபெற்ற 24 ஆவது “ உற்பத்தி ஏற்றுமதி” என்ற உணவு மற்றும் குடிபான கண்காட்சியில் கலந்து கொள்வதற்கு இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக வரத்தக பேராளர் குழுவொன்றுடன் ரஷ்யாவிற்கு விஜயம் செய்தர். கௌள அமைச்சர், ரஷ்யாவின் கௌரவ விவசாய அமைச்சர், வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் சிரேஸ்ட அலுவலர்கள் மற்றும் முக்கிய வரத்தக பங்காளிகளுடன்

சந்திப்புகளை நடாத்தினர். மொஸ்கோவில் நடைபெற்ற "இலங்கை தேயிலை வலையமைப்பு அமைத்தல் இராப்போசனம்" இலும் கலந்துகொண்டார்.

இ. ரியோ சம்மேளனத்தின் அதிமேதகு சனாதிபதி விலாடிமிர் புடின் அவர்களால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் அதிமேதகு சனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள், ரியோ சம்மேளனத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொன்டார். 1974 ஆம் ஆண்டு தொடக்கம் ரியோ அரச தலைவரின் அழைப்பின் பேரில் இலங்கை தலைவர் மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும். சனாதிபதி ரஷ்யா சம்மேளனத்தின் அதிமேதகு சானாதிபதி, கௌரவ பிரதமர், மற்றும் ஏனைய சிரேஸ்ட அரச அரசியல் தலைவர்களையும் சந்தித்தார்.

ஈ. இரண்டு நாடுகளுக்குமிடையில் பின்வரும் உடன்படிக்கைகள்.். புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இவ் விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்டன.

1. கடற்றொழில் துறை ஒத்துழைப்பு மீதான உடன்படிக்கை
2. விஞ்ஞானம், தொழில்நுடபம் மற்றும் புதுமைபடைத்தல் மீதான
   புரிந்துணர்வு ஒப்பந்தம்
3. சுற்றுலா துறை ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம்
4. கலாசார ஒத்துழைப்பு மீதான பட்டயம்.

உ. ரஷ்ய அரச வானியல் கூட்டுத்தாபனத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த ரியோ சம்மேளனத்திற்கு 2017 மார்ச் 29 அன்று விஜயம் செய்தார். இவ் விஜயத்தின் போது, " வெளி வான்பரப்பினை கண்டறிதல் மற்றும் சமாதான நோக்கங்களுக்காக பயன்படுதத்தல்" துறை பற்றிய ஒத்துழைப்பின் மீது ரஷ்ய அரச வானியல் கூட்டுத்தாபனம் மற்றும் நவீன தொழில்நுட்பத்திற்கான ஆதர் சீ கிளாரக் நிறுவனம் என்பவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

ஊ. 2017 ஜுன் 19-21 வரை நடைபெற்ற ஐஓ சர்வதேச மன்றம் அணு எக்ஸ்போ-2017 இல் கலந்து கொள்வதற்காக விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த ரியோ சம்மேளனத்திற்கு விஜயம் செய்தார். ரஷ்ய அரச அணுசக்தி கூட்டுத்தாபனததின் சர்வதேச உறவுகளுக்கான பிரதிப்பணிப்பாளர் நாயகத்துடன் அவர் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

ஊ. உடற்கல்வி மற்றும் விளையாட்டுக்கு பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் சிரேஸ்ட அலுவலர்களின் ஆறாவது சர்வதேச அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு விளையட்டுத் துறை அமைச்சரும் பேரளர்குழுவும் ரியோவிற்கு விஜயம் செய்தனர். 2017 ஜுலை 13-15 வரை இம் மாநாடு இடம்பெற்றது.

எ. இலங்கையில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரியோ சம்மேளன அரசாங்கம் மனிதாபிமான உதவிகளை வழங்கியது. பொருட்கள், 02 எடுத்துச்

செல்லக்கூடிய மின் பிறபாக்கிகள் 200 படங்குகள் மற்றும் 400 சமயலறைப் பொருட்கள் தொகுதியனை இது உள்ளடக்கியிருந்தது.

ஏ. 2017 செப்டம்பர் 4-8 வரை டுபானாவில் இடம்பெற்ற “ அணு ஆராய்ச்சி சர்வதேச பயிற்சி கற்கைநெறிக்கான முன்றாவது இணைந்த நிறுவனத்தில்” பங்குபற்றுவதற்கு விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி கௌரவ இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன ரியோவிற்கு விஜயம்செய்தார்.

ஐ. 3017 செப்டம்பர் 17-19 வரை ‘இரன்டாவது உலக அஞ்சல் ஒன்றியத்தின் உலக பி. நி அ. மன்றம்’ இல் கலந்து கொள்வதற்காக இலங்கையின் அஞ்சல் மா அதிபர் ரியோவிற்கு விஜயம் செய்தார்.

ஒ 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 – 18 ஆம் திகதியில் நடைபெற்ற 137 வது சர்வதேச பாரளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் கூட்டத்தில் பங்குபெற இலங்கையின் பாராளுமன்ற பேச்சாளர் கௌரவ கரு ஜயசூரிய மற்றும் துாதுக்குழு சென் பீட்டர்ஸ்பேக், ரஸ்ஸியாவுக்கு ஒரு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டனர்

ஓ சர்வதேச பாரளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் கூட்டத்தின் உள்கட்டமைப்பில் கௌரவ பேச்சாளர் சென் பீட்டரபேக்வின் உப ஆளுணர், சம்மேளணத்தின் அவை உப தலைவர்கள், மற்றும் ரஸ்ஸய சம்மேளத்தின் இராஜாங்க என்டீபார் அடங்களாக ரஸ்ஸிய அதிகாரிகளுடன் ஒரு தொடர் கலந்துரையாடல்களை நடத்தினார்

ஔ 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி இலங்கை திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி கௌரவ அமைச்சர் சந்திமா வீரக்கொடி மொஸ்கவ் வர்த்தக சங்க சம்மேளனதின் பயிற்ச்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பணிப்பாளர் நாயகம் திரு வால்டிமிர் பொக்டசின் அழைப்பை ஏற்று சர்வ தேச மாநாடு: “ சமுதாய பொருப்பு மற்றும் தொழில்புரியும் சுற்றாடல் - நீடித்த அபிவிருத்தியின் முக்கிய காரணிகள் போன்ற நிகழ்வில் கலந்து கொள்ள மொஸ்கவ் சென்றார்

ஃ தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ நிரோஷன் பெரேரா தலைமையிலான துாதுக்குழு 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 – 17 ஆம் திகதிவரை ரஸ்ஸிய சம்மேளனத்தின் கல்வி மற்றும் விஞ்ஞானம் என்பனவற்றின் அமைச்சரினால் வழங்கப்பட்ட அழைப்பிதலை ஏற்று இளைஞர் கொள்கைகள் மற்றும் இளைஞர் மற்றும் மாணவர்கள் உலக விழா என்பதன் அமுழாக்கத்திற்கு பொறுப்பான உயர் மட்ட அதிகாரிகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்குபெற ரஸ்ஸியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டார்கள்.

க சோச்சி ரஸ்ஸியாவில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 – 22 வரை நடைபெற்ற இளைஞர் மற்றும் மாணவர்களின் உலக விழா ஓ1ஓ வில் பங்குபெற ரஸ்ஸியாவிலுள்ள இலங்கை தூதரகம் வசதியளித்தது.

கா கௌரவ கலாநிதி ரஜித்த சேனாரத்ன மற்றும் தூதுக்குழு 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 – 18 ல் நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி சகாப்தத்தில் காசநோயை முடிவுக்கு கொண்டுவருதல் : பலதரப்பட்ட துறையின் பதில்" என்ற தலைப்பில் மொஸ்கவ் ரஸ்ஸிய சம்மேளனத்தில் நடைபெற்ற முதலாவது உலக சுகாதார அமைப்பின் அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள ரஸ்ஸியாவுக்கு ஒரு விஜயத்தை மேற்கொண்டார்கள்.

கி 2017 ஆம் ஆண்டின் உலக உணவு வைபவத்தில் இலங்கை பங்குபெற ரஸ்ஸியாவிலுள்ள இலங்கை தூதரகம் வசதி வழங்கியது. பிரதிநிதித்துவப்படுத்தபட்டவைகள் கடல் உணவு, உணவுக்கான வாசணைபொருட்கள் தேங்காய் மற்றும் இனிப்புகள். தேங்காய் மற்றும் வாசனைதிரவியங்கள் என்பனவற்றின் உற்பத்தி துறைகளின் 45க்கும் அதிகமான ரஸ்ஸிய வர்த்தக தரப்புகளது வருகையுடன் உலக உணவு 2017 க்கு சமமான வர்த்தக வலையமைப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

கீ. எஸ்பெஸ்டோவின் பாதுகாப்பான கைத்தொழில் பாவனை தொடர்பான தொழில்நுட்ப மட்டத்திலான கலந்துரையாடல்களுக்கு வேறுபட்ட அரசாங்க அமைப்புகளிலிருந்து 14 நிபுணத்துவ அதிகாரிகளைக் கொண்ட இலங்கை தூதுக்குழு 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 – 29 ஆம் திகதிகளில் மொஸ்கவ் மற்றும் எக்டெரின்பெர்க் டின்பனவற்றிற்க விஜயம் செய்தன.

கு. 1017 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆ திகதி ரஸ்ஸியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் இராணுவ பொறுப்பதிகாரிகள் மொஸ்கவ் சங்கத்திற்காக இலங்கை தேயிலையை சுவைபார்க்கும் வைபவத்தை ஏற்பாடு செய்தது. மோஸ்கவ்விலுள்ள 30க்கும் மேற்பட்ட வெளிநாட்டு தூதரகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜதந்திர மற்றும் இராணுவ பொறுப்பதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

கூ. இலங்கை தேயிலை பற்றி ஒரு ஆவண படத்தை தயாரிக்க ரஸ்ஸியாவின் என்டிவி அலைவரிசையின் ஐந்துபேர் அடங்கிய தொலைக்காட்சி குழு 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 – 25 ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்தது. ரஸ்ஸியாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் தேயிலை ஊக்குவிக்கும் பிரிவின் ஒருங்கிணைப்புடன் இலங்கை தேயிலை சபையால் தொலைக்காட்சி குழுவின் விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது.

கே. ரஸ்ஸிய இரண்டாவது அமர்வு - 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர மாதம் 24 – 16 ஆம் திகதி வர்த்தகம் பொருளாதாரம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப

ஒத்துழைப்புக்கள் தொடர்பான இலங்கை அரசாங்கங்களுக்கு இடையேயான ஆணைக்குழு நடந்தேறியது.

கொ. ரஸ்ஸியா ஒரு தற்காலிகமான தடையை தேயிலை உட்பட இலங்கையிலிருந்து இறக்குமதியாகும் விவசாய பொருட்கள் யாவற்றிற்கும் 2017 ஆம் ஆண்டு 18 ஆம் திகதி விதித்தது. இது இலங்கையிலிருந்து வந்த தேயிலைப் பொதியில் கப்புரா பீட்டில் என்றழைக்கப்படும் பூச்சியின் கண்டுபிடிப்பைத தொடர்ந்தாகும்.

கோ. அதே நாளில் அதிமேதகு இலங்கை சனாதிபதி ஒரு விசேட வேண்டுகோளொன்றை சஸ்ஸிய சம்மேளனத்தின் சனாதிபதிக்கு தடையை நீக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதேவேளை இலங்கை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் அடங்களாக ஒரு நிபுணத்துவ தூதுக்குழு கலந்துரையாடல்களுக்காக ரஸ்ஸிய சம்மேளனத்திற்கு கலந்துரையாடல்களுக்காக விஜயம் செய்தது. பல சுற்று உரையால்களுக்கு பின் ரஸ்ஸிய அதிகாரிகள் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி தடையை நீக்கினார்கள்.

கௌ. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி இலங்கை மற்றும் ரஸ்ஸிய விற்கிடையேயான இராஜதந்திர உறவுகளின் ஸ்தாபிப்பின் 60 வது ஆண்டுநிறைவை குறிப்பிட்டு ரஸ்ஸியா நினைவு கூறும் முத்திரையை வெளியிட்டது.

**2. உக்ரெய்ன்**

அ. 2017 ஆம 17 தொடக்கம் 21 வரை கியிவு இல் இடம்பெற்ற “ உலக சட்டவாக்க மாநாட்டில்” கலந்து கொள்வதற்கு இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய அவர்கள் உக்ரெய்னுக்கு விஜயம் செய்தார். இலங்கைப் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகமும் பிரதம உபசரணை அலுவலரும் அவருடன் சென்றனர்.

ஆ. சட்டமா அதிபரின் திணைக்களத்திலிருந்து சிரேஷ்ட அலுவலர் மட்டத்திலான பேராளர் குழுவொன்று 2017 செப்டம்பரில் உக்ரெய்னுக்கு விஜயம் செய்தது.

இ 2017 ஆம் ஆண்டு உக்ரேனியன் சுற்றுலா கண்காட்சியில் இலங்கை பங்குபெற துருக்கியில் உள்ள இலங்கைத் தூதரகம் வசதியளித்தது.

ஈ மனதைக் கவரும் எழில்மிகு தீவு என்ற புகைப்பட கண்காட்சியின் 3வது கட்டம் உக்ரெயின் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

3. டேர்க்மெனிஸ்தான்

விஜயம் செய்தார். 2017 செப்டம்பர் 17-27 வரை நடைபெற்ற 5 ஆவது ஆசிய உள்ளக மற்றும் அாச்சியல் வலை விளையாட்டுகளின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்வதற்காக கௌரவ தயாசிறி ஜயசேகர டேர்க்மெனிஸ்தானுக்கு விஜயம் செய்தார்.

**இ. லத்தீன் அமெரிக்கா**

**உள்ளடக்கப்படும் ஆள்புலங்கள்:33**

கியூபா, பிரேசில், ஆர்ஜென்ரினா, அன்டிகுவா மற்றும் பார்புடா, பஹாமாஸ், பார்படோஸ், பெலிஸ், பொலிவியா, சிலி, கொலம்பியா, கொஸ்தாரிக்கா, டொமினிக்கா, டொமினிக்கன் குடியரசு, ஈகவடோர், எல்சல்வடோர், கிரிநாடா, கோத்தமாலா, கயானா, ஹெயிட்டி, ஜமேய்க்கா, மெக்சிக்கோ, நிக்கராகுவா, பனாமா, பராகுவே, பேரு, புனித கிட்ஸ் மற்றும் நெவிஸ், புனித வின்சென்ட் மற்றும் கிரினடைன்ஸ், சென்லூசியா, ஹொன்டூராஸ், சுரினாம், திரினாட், மற்றும் டுபாக்கொ, உருகுவே, வெனிசுவேலா

**வதிவிட Àதரகங்களின் எண்ணிக்கை:02**

கியூபா, பிரேசில்

**சமகாலப்பகுயில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தூதரகங்களின் எண்ணிக்கை 08**

ஹவானாவிலிருந்து ஜமேய்கா, வெனிசுவேலா, எல்சல்வடோர், டொமினிக்கன் குடியரசு, ஈகுவடோர் பிரேசிலியாவிலிருந்து ஆர்ஜெனதினா, சிலி, கொலம்பியா, சுரினாம்

**1. பிரேசில்**

அ. யுனஸ்கோவின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட “சுற்றாடல் முறைமைகள் மற்றும் சமூகங்களின் பாதுகாப்புக்காக சுற்றாடல்- நீரியல்” மாநாட்டில் கலந்து கொளவதற்கு நீர்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்தவ இராஜாங்க அமைச்சர் கௌரவ வீ என் பி சேனாநாயக 2017 மார்ச 21-24 வரை பிரேசிலுக்கு விஜயம் செய்தார்.

ஆ. APAS வர்த்தக கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்கும் சவோ போலோ நகரில் *எக்ஸ்போ சென்டர் நோர்ட்டேயில்* 2017 மே 2 முதல் 5 வரை நடைபெற்ற APAS வர்த்தக கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பினை இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து பிரேசிலில் உள்ள இலங்கை தூதரகம் ஏற்பாடுசெய்தது. இக் கண்காட்சியில் தேயிலை மற்றும் தெங்கு உற்பத்திகளை ஆறு இலங்கை கண்காட்சிப்படுத்துநர்கள் காட்சிப்படத்தினர். இந் நிகழ்விக்கான பேராளர் குழுவிற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் பிரதி அமைச்சர் கௌரவ லக்ஸ்மன் வசந்த பெரேரா தலைமைதாங்கினார்.

இ. இலங்கை இறப்பர் கைத்தொழிலில் பங்குடமை மற்றும் முதலீட்டு சாத்தியம் பற்றி கண்டறிவதற்கான ‘இறப்பர் துறை வர்த்த தூதுக் குழுவொன்று மீதான தெங்கு, இறப்பர், தேயிலை வர்தத்க சந்தையில் கலந்து கொள்வதற்கு 2017 ஆகஸ்ட் 11-13 வரை அரசாங்கம் மற்றும் தனியார் துறை இரண்டிணையும் உள்ளடக்குகின்ற உத்தியோகபூர்வ பேராளர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது. கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருடன் இப் பேராளர்குழு விசேட சந்திப்பொன்றினை நடாத்தியதுடன் இடங்கையின் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் விஜயம் செய்தது.

ஈ உப கப்பட்படைத் தலைவர் ஆர் சி விஜேகுணவர்தன 11வது லத்தீன் அமரிக்க விண் மற்றும் பாதுகாப்பு கண்காட்சியை பார்வையிட சியோ டி ஜனிரோ பிரேசில் சென்றார்

உ 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 – 17 திகதிகளில் கரையோர சர்வதேச பொலிஸ் ஒத்துழைப்பு செயற்திட்டத்தில் கலந்துகொள்ள இலங்கை பொலிஸ தலைமையக்திலிருந்து ஒரு தூதுக்குழு சா போலோ பிரேசிலுக்கு பயமானது.

ஊ சட்டத்தில் இராணுவ நீதி பற்றி ஆராய்ச்சி செய்ய சியோ டி ஜெனிராவில் இராணுவ சட்ட நீதி அலுவலகத்தின் இராணுவ நீதிச் சட்டங்களின் வழக்குதொடருனர் கலாநிதி ஓஸ்டாவோ ஓகஸ்டோ டி கெஸ்ரோ பிராவோ 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆ் திகதி ஒரு படித்து கண்டறியும் ஒரு பிரயாணத்தை இலங்கைக்கு மேற்கொண்டார்

ஏ 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அனாபோலிஸ் கோயாஸ் பிரேசில் என்பனவற்றில் ஒரு வர்த்தக ஊக்குவிப்பு கருத்திட்டத்தை பிரேஸிலில் உள்ள இலங்கைத் தூரதரகம் ஏற்பாடு செய்தது.

**2. கொலம்பியா**

கொலம்பிய துணை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அதிமேதகு பட்டி லொன்டோனோ 2017 மாரச் 28-30 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். இவ் விஜயத்தின நோக்கம், இருபக்க உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இரு நாடுகளினதும் பொது நலன்கள் பற்றிய விடயங்களை கலந்துரையாடுவதும் இரண்டு வரைவு சாதனங்கள் மீதம் பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்வதுமாகும்.

**3. கியூபா**

இலங்கைக்கும் கியூபாவிற்கும் இடையில் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புதுமைபடைத்தல் ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஓப்பந்தமொன்றினை கைச்சாத்திடுவதனைத் தொடர்ந்து, ஒத்துழைப்பினை வலுப்படுத்துவதற்கு, குறிப்பாக உயிரியல் தொழில்நுட்பம், நனோ தொழில்நுட்பம் மற்றும் மருத்து விஞ்ஞானம் ஆகிய துறைகளில் குறிப்பாக நோய்பரவலில் காணப்படும் கியூபாவின் விரிவான

நிபுணத்துவத்திலிருந்து தொழில்நுட்ப உதவியினை பெற்றுக்கொள்வதற்கு இனங்காணப்பட்டுள்ளது.


பி மருந்துப்பொருட்கள் மருத்துவ மற்றும் உயிரியல் தொழில்நுட்ப பொருட்களை தயாரிக்க ஒரு இலங்கை கம்பனி மற்றும் இரண்டு கியூபா நிறுவனங்களுக்கிடையே கலந்துரையாடல்களை தொடர்ந்தும் வசதிப்படுத்தி வருகின்றது.

சி. கியூபாவிலுள்ள இலங்கை தூதரகம் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுடன் கட்டிட பொருட்கள், (குழாய்கள், கம்பிகள், மின்சார கம்பிகள்) மரப்பொருட்கள் தளபாடங்கள் வீட்டுப் பொருட்கள் ஆடை துணிகள் (நடுத்தர வகை) மென்மையான பொறியியல் பொருட்கள் பிலாஸ்டிக் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் என்பனவற்றை குயபா சந்தையில் அறிமுகப்படுத்தி ஊக்குவிக்க தொடர்ந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளது.

**4. மெக்ஸிகோ**

கன்குன்னில் நடைபெற்ற “ அனர்த்த இடர் குறைப்பிற்கான 5 ஆவது உலக தளம்” நிகழ்வில் கலந்து கொள்வதற்காகக, அனர்த்த முகாமைத்து அமைச்சர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா 2017 மே 22- 26 வரை மெக்ஸிகோவிற்கு விஜயம் செய்தார்.

****



வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் / அலுவலகங்கள்
ஒஸ்லோ
ஸ்டொக்ஹோல்ம்
பேர்லின்
பிராங்க்பேர்ட்
வோர்சோ
ஹேக்
பிரசல்ஸ்
மொஸ்கோ
ஜெனீவா
ஒட்டாவா
டொரொன்டோ
நியூயோர்க்
வொஷிங்டன் டி.சி.
லொஸ் ஏஞ்சல்ஸ்
ஹவானா
பிரேசிலியா
லண்டன்
பாரிஸ்
மிலான்
ரோம்
நிகோசியா
கெய்ரோ
வியன்னா
அங்காரா
ரமல்லா
டெல் அவீவ்
பெய்ரூட்
அம்மான்
பக்தாத்
மஸ்கட்
குவைத்
தெஹ்ரான்
மனாமா
ரியாத்
ஜெத்தா
தோஹா
அபூ தாபி
டுபாய்
அபூஜா
அடிஸ் அபாபா
நைரோபி
கராச்சி
காபூல்
இஸ்லாமாபாத்
காத்மண்டு
யங்கொன்
புது டில்லி
மும்பாய்
மாலி
டாக்கா
சென்னை
கோலா லம்பூர்
ஜகார்த்தா
பெங்கொக்
ஹ னோய்
மனிலா
சிங்கப்பூர்
குவாங்சோ
ஷங்ஹாய்
பெய்ஜிங்
சியோல்
டோக்கியோ
விக்டோரியா
ப்ரிடோரியா
Ministry of Foreign Affairs
சிட்னி
கென்பரா
மெல்போர்ன்
உயர்ஸ்தானிகராலயங்கள்
தூதரகங்கள்
ஐ.நா.விற்கான நிரந்தர வதிவிடங்கள்
துணைத்தூதரகங்கள்
இணை உயர்ஸ்தானிகராலயங்கள்
இலங்கை பிரதிநிதித்துவ அலுவலகம்
திறக்கப்படவுள்ளது
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
© comersis.com

2017.01.01 தொடக்கம் 2017.12..31 வரை ஒவ்வொரு தூதரகத்ததாலும் சேகரிக்கப்பட்ட வருவாய்கள் (ரூபா)

| தூதரகம் | வருமானக் குறியீடு | | | | | | | | | கூட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002-01-01 | 2002-02-99 | 2003-02-07 | 2003-02-13 | 2003-02-99 | 2003-99-00 | 2004-01-00 | 2004-02-00 | 2006-02-00 | |
| கன்பேரா | - | 19,268 | 18,730,030 | - | 5,889,185 | 3,079,860 | 181,248 | - | - | 27,899,592 |
| சிட்னி | - | 10,840 | 27,126,078 | - | 7,969,837 | 1,891,061 | 130,715 | 21,126 | - | 37,149,657 |
| கெய்ரோ | - | 49,296 | 2,243,340 | - | 229,036 | 150,404 | 70,785 | - | - | 2,742,861 |
| பாரிஸ் | - | 21,276 | 133,091,447 | 561,193 | 13,281,732 | 4,381,397 | 265,772 | 78,962 | - | 151,681,779 |
| ஹேக் | - | 2,920 | 12,360,504 | - | 2,458,085 | 96,316 | 108,589 | - | - | 15,026,413 |
| டோக்கியோ | - | 33,717 | 19,041,552 | - | 11,976,012 | 6,324,003 | 123,140 | 18,199 | - | 37,516,622 |
| அம்மான் | - | 8,357 | 5,904,899 | - | 420,889 | 2,506,304 | 59,419 | - | - | 8,899,867 |
| காத்மண்டு | - | 6,020 | 3,470,375 | - | 21,153 | 1,601,520 | 80,918 | - | 7,045,650 | 12,225,637 |
| பேர்லின் | - | 36,208 | 31,160,709 | - | 2,994,066 | 859,283 | 109,393 | 23,451 | - | 35,183,111 |
| வியன்னா | - | 32,703 | 2,942,189 | - | 453,558 | 948,598 | 136,706 | - | - | 4,513,755 |
| பீஜிங் | - | 15,823 | 12,578,227 | - | 4,451,788 | 1,378,427 | 238,651 | 19,025 | - | 18,681,941 |
| ஹவானா | - | 4,938 | 59,549 | - | 197,096 | 92,844 | 57,215 | 12,909 | - | 424,552 |
| கோலாலம்பூர் | - | 9,553 | 18,713,647 | - | 2,411,582 | 5,020,707 | 219,635 | - | - | 26,375,124 |
| சிங்கப்பூர் | - | 28,963 | 7,693,005 | - | 4,363,257 | 2,194,109 | 174,486 | - | 201,430 | 14,655,251 |
| நிவ் யோர்க் | 23,123 | 51,230 | 10,390,889 | - | 2,465,278 | 655,074 | 313,870 | - | - | 13,899,464 |
| வாசிங்டன் | - | 21,945 | 27,052,496 | - | 4,733,383 | 1,706,645 | 402,579 | - | - | 33,917,048 |
| லொஸ் ஏன்ஜல்ஸ் | - | 13,339 | 13,780,824 | - | 1,151,084 | 106,533 | 96,300 | - | - | 15,148,080 |
| டாக்கா | - | | | - | | | | | | |

| தூதரகம் | வருமானக் குறியீடு | | | | | | | | | கூட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002-01-01 | 2002-02-99 | 2003-02-07 | 2003-02-13 | 2003-02-99 | 2003-99-00 | 2004-01-00 | 2004-02-00 | 2006-02-00 | |
| | | 4,129 | 14,163,269 | | 669,709 | 403,241 | 72,330 | - | 158,410 | 15,471,087 |
| மும்பாய் | - | 458 | 1,755,870 | - | 1,304,060 | 162,144 | 117,712 | - | 1,207 | 3,341,453 |
| நைரோபி | - | 20,388 | 1,303,237 | - | 166,740 | 118,400 | 72,079 | 17,191 | - | 1,698,036 |
| யன்கொன் | 33,337 | 14,581 | 1,474,107 | - | 32,301 | 560,779 | 105,268 | 15,434 | - | 2,235,807 |
| ஸ்டொக்ஹோம் | - | 13,597 | 13,394,084 | - | 1,861,198 | 779,173 | 161,442 | - | - | 16,209,494 |
| பாங்கொக் | - | 25,430 | 6,466,334 | - | 1,108,386 | 4,281,332 | 201,484 | 16,912 | - | 12,099,877 |
| பிரஸல்ஸ் | - | 21,962 | 3,773,420 | - | 375,680 | 670,931 | 186,155 | - | - | 5,028,148 |
| சென்னை | - | 18,580 | 8,037,186 | - | 14,184,666 | 315,710 | 350,636 | 23,209 | 81,261 | 23,011,247 |
| ஜகார்த்தா | - | 22,583 | 1,981,413 | - | 257,607 | 907,193 | 132,540 | - | - | 3,301,337 |
| மாலே | - | 21,746 | 2,142,906 | - | 1,442,153 | 825,037 | 57,988 | 23,308 | - | 4,513,137 |
| ஜெனீவா | - | 16,534 | 44,771,806 | - | 13,953,794 | 8,035,527 | 448,949 | 21,557 | - | 67,248,167 |
| அபுதாபி | - | 19,960 | 18,001,018 | - | 2,298,836 | 16,897,450 | 153,596 | 17,552 | - | 37,388,412 |
| டுபாய் | - | 46,472 | 59,102,231 | - | 10,877,810 | 3,718,863 | 212,144 | - | - | 73,957,520 |
| லண்டன் | - | 67,309 | 60,655,417 | 1,001 | 68,386,567 | 1,325,305 | 372,280 | 6,769 | - | 130,814,648 |
| புது தில்லி | 15,061 | 32,668 | 3,137,138 | - | 3,699,277 | 3,431,569 | 341,762 | 42,213 | - | 10,699,688 |
| சோல் | - | 24,870 | 31,521,024 | - | 8,181,597 | 12,835,268 | 353,469 | - | - | 52,916,228 |
| குவைட் | - | 52,867 | 95,071,057 | - | 17,131,194 | 1,104,288 | 330,358 | - | 736,551 | 114,426,315 |
| ரியாத் | - | 21,424 | 69,549,533 | - | 2,765,786 | 4,660,651 | 293,589 | - | 363,163 | 77,654,145 |
| மொஸ்கொவ் | - | 28,195 | 1,290,749 | - | 480,670 | 2,311,830 | 99,451 | 18,658 | - | 4,229,554 |

| தூதரகம் | வருமானக் குறியீடு | | | | | | | | | கூட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002-01-01 | 2002-02-99 | 2003-02-07 | 2003-02-13 | 2003-02-99 | 2003-99-00 | 2004-01-00 | 2004-02-00 | 2006-02-00 | |
| ஒட்டாவா | - | 8,130 | 25,399,431 | - | 2,369,311 | 2,405,678 | 169,852 | 39,569 | - | 30,391,970 |
| பக்தாத் | - | 337 | 583,121 | 2,150 | 152,144 | 125,761 | 28,049 | 17,704 | - | 909,265 |
| ரோம் | 432,148 | 16,009 | 93,205,834 | - | 21,493,235 | 4,318,231 | 235,990 | - | - | 119,701,447 |
| ஓமான் | 7,315 | 40,830 | 9,481,541 | - | 3,710,273 | 276,454 | 241,874 | 10,962 | 443,137 | 14,212,386 |
| இஸ்லாமாபாத் | - | 2,133 | 2,633,655 | - | 292,434 | 2,107,918 | 152,068 | 23,479 | 44,696 | 5,256,383 |
| ககாரச்சி | - | 13,062 | 2,900,131 | - | 193,647 | 130,793 | 76,585 | 21,785 | - | 3,336,002 |
| ஜெட்டா | - | 14,056 | 25,194,161 | - | 1,725,138 | 187,833 | 107,776 | - | - | 27,228,962 |
| கட்டார் | - | 69,327 | 57,489,806 | - | 17,412,288 | 5,214,508 | 136,147 | - | - | 80,322,077 |
| பிரிட்டோரியா | - | 5,660 | 3,291,907 | - | 511,575 | 1,960,340 | 169,489 | - | - | 5,938,970 |
| பெய்ரூட் | - | 32,065 | 6,928,190 | - | 419,137 | 599,199 | 139,002 | 27,579 | - | 8,145,173 |
| தெஹ்ரான் | - | 14,041 | 1,624,461 | 1,065 | 100,398 | 85,726 | 46,814 | 5,943 | - | 1,878,448 |
| மனிலா | - | 25,733 | 3,398,668 | - | 670,116 | 15,732,854 | 137,700 | - | 30,440 | 19,995,512 |
| வார்சோ | - | 4,040 | 667,757 | - | 460,229 | 1,989,143 | 15,055 | 16,755 | - | 3,152,980 |
| ஒஸ்லோ | - | 16,615 | 9,577,420 | - | 556,089 | 175,894 | 44,599 | 41,098 | 268,437 | 10,680,152 |
| பிரன்ங்போர்ட் | - | 12,510 | 39,934,089 | - | 1,540,337 | 455,371 | 160,742 | - | - | 42,103,050 |
| டெல்அவிவ் | - | 4,705 | 12,782,138 | - | 1,376,469 | 1,841,612 | 101,303 | - | - | 16,106,227 |
| டொரான்டோ | - | 32,699 | 92,660,217 | - | 5,310,873 | 846,181 | 163,241 | - | - | 99,013,211 |
| பிரேசில் | - | 10,681 | 224,151 | - | 75,882 | 216,894 | 110,594 | 12,543 | - | 650,745 |
| ஹனோய் | - | 10,315 | 2,087,931 | - | 808,417 | 961,658 | 127,040 | 23,093 | - | 4,018,454 |

| தூதரகம் | வருமானக் குறியீடு | | | | | | | | | கூட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002-01-01 | 2002-02-99 | 2003-02-07 | 2003-02-13 | 2003-02-99 | 2003-99-00 | 2004-01-00 | 2004-02-00 | 2006-02-00 | |
| ரமல்லாஹ் | - | 1,743 | 45,713 | - | - | 84,222 | 18,045 | - | - | 149,723 |
| சங்ஹாய் | - | 11,607 | 4,644,894 | - | 345,571 | 528,068 | 69,734 | - | - | 5,599,874 |
| அங்காரா | - | 17,759 | 342,073 | - | 363,399 | 144,070 | 165,278 | - | - | 1,032,579 |
| குவான்சூ | - | 6,000 | 1,356,025 | - | 290,182 | 47,161,583 | 85,125 | - | - | 48,898,915 |
| மெல்போன் | - | 864,474 | 57,064,325 | - | 14,554,768 | 2,231,146 | 123,281 | - | - | 74,837,995 |
| மனாமா | - | 11,035 | 9,030,211 | - | 1,605,398 | 142,957 | 116,232 | 18,834 | - | 10,924,668 |
| அபூஜா | - | 9,231 | 4,879,658 | - | 10,478 | 84,222 | 94,683 | - | - | 5,078,272 |
| விக்டோரியா | - | 1,512 | 1,068,692 | - | 338,457 | 102,220 | 16,986 | - | - | 1,527,867 |
| காபூல் | - | 323 | 416,537 | - | - | 84,226 | 14,983 | - | - | 516,069 |
| மிலான் | - | 9,118 | 69,254,920 | - | 26,798,937 | 1,267,086 | 99,073 | - | - | 97,429,135 |
| அடிஸ் அபாபா | - | 9,888 | 410,284 | - | 158,716 | 2,499,623 | 75,223 | - | - | 3,153,734 |
| **மொத்தம்** | **510,983** | **2,115,789** | **1,322,509,500** | **565,409** | **318,288,951** | **190,299,249** | **10,075,218** | **635,819** | **9,374,381** | **1,854,375,299** |

**வருமானக் குறியீடுகள்**

| | |
|---|---|
| **2002-01-01** | அரசாங்க கட்டங்கள் மற்றும் வீடுகள் மீதான வாடகை |
| **2002-02-99** | ஏனைய வட்டி |
| **2003-02-07** | கடவுச்சீட்டுகள், விசாக்கள் மற்றும் இரட்டை பிரசாவுரிமை கட்டயங்கள் |
| **2003-02-13** | பரீட்சைகளும் ஏனைய கட்டணங்களும் |
| **2003-02-99** | கொன்சியூலர் கட்டணங்கள் |
| **2003-99-00** | ஏனைய பெறுகைகள் |
| **2004-01-00** | சமூக பாதுகாப்பு பங்களிப்புகள்(மத்திய அரசாங்கம்) |
| **2004-02-00** | சமூக பாதுகாப்பு பங்களிப்புகள்(மாகாண அரசாங்கம்) |
| **2006-02-00** | மூலதன சொத்துகள் விற்பனை |

| 2017 ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களினால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியூலர் செயற்பாடுகள்<br>2017 சனவரி 01 – திசெம்பர் 31 | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாடுகள் | தூதரகம் | தொழில் ஒப்பந்தம் | வழங்கப்பட்ட விசாக்கள் | வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள் | இயந்திரம் வாசிக்க முடியாத கடவுச்சீட்டு | வழங்கப்பட்ட அடையாளச் சான்றிதழ்கள் | கடவுச்சட்டுகளில் மேற்கொள்ளப்பட்ட புறக்குறிப்புகள் | கடவுச்சீட்டு புதுப்பித்தல்கள் | தாயகத்திற்கு திருப்பி அனுப்புதல் | பிறப்பு பதிவுகள் | திருமணப் பதிவுகள் | மரணப் பதிவுகள் | ஆவணங்கள் சான்றுப்படுத்தல் | பொலிஸ் இசைவுச் சான்றிதழ்கள் | ஏனையவை |
| ஆப்கானிஸ்தான் | காபுல் | 0 | 35 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| அவுஸ்திரேலியா | கன்பேரா | 0 | 191 | 740 | 6 | 103 | 4 | 0 | 0 | 247 | 0 | 8 | 247 | 225 | 0 |
| அவுஸ்திரேலியா | மெல்பொர்ன் | 0 | 979 | 2,046 | 204 | 0 | 59 | 8 | 0 | 524 | 0 | 3 | 2,873 | 291 | 1,454 |
| அவுஸ்திரேலியா | சிட்னி | 0 | 785 | 779 | 63 | 92 | 16 | 0 | 0 | 198 | 0 | 4 | 1,551 | 214 | 0 |
| ஆஸ்திரியா | வியன்னா | 0 | 309 | 29 | 6 | 0 | 1 | 0 | 1 | 6 | 0 | 0 | 109 | 3 | 0 |
| பஹ்ரேன் | மனாமா | | 118 | 643 | 30 | | | 3 | 63 | 83 | 4 | 5 | 325 | 13 | 1,380 |
| வங்காளதேசம் | டாக்கா | | 4,008 | 53 | 4 | 0 | 4 | 0 | 0 | 12 | 0 | 1 | 192 | 5 | 5 |
| பெல்ஜியம் | பிரசல்ஸ் | 0 | 439 | 41 | 0 | 9 | 0 | 0 | 3 | 8 | 0 | 0 | 84 | 0 | 0 |
| பிரேசில் | பிரேசிலியா | 0 | 10 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 25 |
| கனடா | டொரான்டோ | 0 | 3,197 | 1,863 | 146 | 68 | 53 | 4 | 0 | 226 | 0 | 10 | 1,533 | 176 | 502 |
| கனடா | ஒட்டாவா | | | | | | | | | | | | | | |
| சீனா | பீஜிங் | 0 | 2,438 | 58 | 5 | 0 | 4 | 0 | 0 | 23 | 0 | 1 | 1,135 | 0 | 17 |
| சீனா | குவான்சூ | | 272 | | 6 | | | 1 | 1 | | | 1 | 97 | | |
| சீனா | சன்ஹாய் | | | | | | | | | | | | | | |
| கியூபா | ஹவானா | 0 | 5 | 1 | 2 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 50 | 0 | 0 |
| எகிப்து | கெய்ரோ | 30 | 216 | 47 | 26 | 7 | 8 | 0 | 11 | 11 | 0 | 1 | 54 | 54 | 0 |
| பிரான்ஸ் | பாரிஸ் | | 1,085 | 3,775 | 90 | 54 | 328 | | 9 | 1,093 | 188 | 2 | 670 | 34 | 3,440 |
| ஜேர்மனி | பேர்லின் | | 1,078 | 86 | 3 | 0 | 2 | 0 | 0 | 5 | 0 | 1 | 163 | 2 | 1 |

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜேர்மனி | கிராங்பேர்ட் | | 1,384 | 1,224 | 41 | | 56 | | 26 | 117 | 2 | 1 | 107 | 2 | |
| இந்தியா | புது தில்லி | | 2,005 | 15 | 31 | | | 7 | 4 | 9 | | 27 | 1,051 | 7 | |
| இந்தியா | சென்னை | 0 | 2,721 | 2,275 | 60 | 0 | 5 | 9 | 1,513 | 3,520 | 17 | 13 | 0 | 0 | 0 |
| இந்தியா | மும்பாய் | 0 | 1,291 | 12 | 7 | 0 | 0 | 6 | 4 | 5 | 1 | 1 | 355 | 2 | 7 |
| இந்தோனேசியா | ஜகார்தா | | 294 | 10 | 74 | | | | 71 | 7 | | | 24 | | |
| ஈரான் | தெஹரான் | 0 | 309 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 2 | 0 | 0 |
| ஈராக் | பக்தாத் | 0 | 51 | 0 | 0 | 0 | 0 | 11 | 1 | 0 | 0 | 0 | 45 | 0 | 0 |
| இஸ்ரேல் | தெல்அவிவ் | 1 | 10 | | 43 | | | 484 | | 31 | 4 | | | | 1,028 |
| இத்தாலி | ரோம் | 0 | | 3471 | 301 | | 380 | | | 1,005 | 13 | 23 | 62 | 336 | 3,831 |
| இத்தாலி | மிலான் | | 11 | | 715 | | 435 | 2750 | | 855 | 53 | 45 | 2,019 | 445 | 622 |
| ஜப்பான் | டோக்கயோ | | 697 | 562 | 173 | 20 | 12 | | 18 | 189 | 44 | 5 | 970 | 20 | |
| ஜோர்தான் | அம்மான் | 392 | 119 | 496 | 64 | 0 | 13 | 1 | 25 | 9 | 0 | 0 | 67 | 4 | 5 |
| கென்யா | நைரோபி | 0 | 69 | 19 | 10 | 0 | 0 | 0 | 5 | 6 | 0 | 3 | 20 | 2 | 0 |
| கொரியா | சியோல் | 0 | 404 | 1,054 | 139 | 0 | 0 | 1 | 0 | 52 | 6 | 9 | 1,901 | 41 | 38 |
| குவைட் | குவைட் | | 1,564 | 6,197 | 6,165 | | 745 | 256 | 1,286 | 377 | 4 | 90 | 3,094 | 74 | 7,832 |
| லெபனான் | பெய்ரூட் | 671 | 25 | 619 | 586 | 7 | 23 | 4 | 411 | 52 | 7 | 15 | 120 | 34 | |
| மலேசியா | கோலாலம்புர் | 40 | 156 | 118 | 143 | 0 | 0 | 0 | 11 | 9 | 2 | 6 | 46 | 0 | 0 |
| மாலைதீவுகள் | மாலி | | 181 | 112 | 26 | 0 | 9 | 0 | 14 | 7 | 2 | 2 | 369 | 5 | 0 |
| மியன்மார் | யன்கொன் | | 350 | 4 | 6 | | | | | 1 | | | 11 | | |
| நேபாளம் | காத்மண்டு | 0 | 889 | 4 | 7 | 0 | 1 | 3 | 2 | 1 | 1 | 3 | 4 | 0 | 0 |
| நெதர்லாந்து | ஹேக் | 0 | 829 | 66 | 16 | 5 | 0 | 0 | 5 | 31 | 0 | 0 | 312 | 0 | 3 |
| நைஜீரியா | அபுஜா | 0 | 898 | 5 | 5 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| நோரவே | ஒஸ்லோ | | 458 | 171 | 13 | | 2 | | 6 | 35 | | 1 | 56 | 1 | |
| ஓமான் | மஸ்கற் | 5,171 | 133 | 608 | 123 | 0 | 35 | 0 | 91 | 61 | 1 | 2 | 957 | 18 | 0 |
| பாக்கிஸ்தான் | இஸ்லாமாபாத் | 1 | 843 | 15 | 2 | 0 | 2 | 3 | 1 | 4 | 0 | 0 | 104 | 2 | 0 |
| பாக்கிஸ்தான் | காராச்சி | 0 | 836 | 14 | 7 | 0 | 3 | 0 | 0 | 3 | 0 | 0 | 27 | 1 | 1 |
| பிலிப்பைன்ஸ் | மனிலா | 0 | 736 | 34 | 6 | 0 | 3 | 9 | 0 | 21 | 2 | 0 | 111 | 3 | 64 |

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போலந்து | வார்சோ | 6 | 51 | 13 | 1 | 0 | 1 | 1 | 58 | 2 | 0 | 0 | 100 | 0 | 0 |
| பலஸ்தீனம் | ரமல்லஹ் நகரம் | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| கட்டார் | டோஹா | 19,856 | 77 | 4299 | 1150 | 0 | 239 | 6 | 0 | 319 | 8 | 3 | 1,710 | 17 | 0 |
| ர்'ய சம்மேளனம் | மொஸ்கோ | 0 | 187 | 8 | 5 | 0 | 0 | 1 | 0 | 6 | 0 | 0 | 491 | 5 | 0 |
| சவூதி அரேபியா | ரியாத் | 268 | 394 | 3,302 | 4,791 | | 421 | 145 | 777 | 235 | 1 | 114 | 442 | 62 | |
| சவூதி அரேபியா | ஜெட்டா | 3 | 629 | 1,225 | 2116 | | 25 | 10 | 52 | 113 | 1 | 10 | 241 | | |
| சீ செல்ஸ் | விக்டோரியா | 34 | 23 | 45 | 9 | | | 0 | 12 | 11 | | 2 | 26 | 4 | 0 |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் | 575 | 246 | 237 | 86 | | 135 | 5 | 31 | 59 | 14 | 9 | 572 | 20 | 0 |
| தெனனாபிரிக்கா | பிறிடோரியா | 0 | 90 | 82 | 17 | 0 | 9 | 76 | 0 | 32 | 0 | 2 | 58 | 20 | 0 |
| சுவீடன் | ஸ்டொக்ஹோம் | 0 | 1,149 | 149 | 14 | 0 | 7 | 6 | 7 | 55 | 0 | 0 | 189 | 0 | 38 |
| தாய்லாந்து | பேங்கொக் | 0 | 1,122 | 23 | 34 | | 16 | 17 | 14 | 15 | 5 | 3 | 292 | 2 | 0 |
| துருக்கி | அங்காரா | 2 | 79 | 3 | | | | | 57 | 3 | | 2 | 99 | | |
| ஐக்கிய அரபு இராஜ்சியம் | அபுதாபி | | 302 | 1,242 | 122 | | 90 | | | 139 | 27 | 3 | 351 | 22 | 189 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | டுபாய் | 422 | 748 | 3,522 | 690 | | 374 | 59 | 84 | 441 | | 36 | 462 | 31 | 469 |
| ஐக்கிய இராச்சியம் | லண்டன் | | 2,906 | 2,496 | | | 328 | 575 | 109 | 917 | | 7 | | 139 | 1469 |
| ஐக்கிய நாடுகள் | ஜெனீவா | 0 | 811 | 1147 | 89 | 0 | 136 | 0 | 190 | 314 | 1 | 6 | 721 | 2 | 0 |
| ஐக்கிய நாடுகள் | நியூ யோர்க் | 0 | 219 | | | | | 301 | | 71 | | 2 | 0 | 6 | 178 |
| ஐக்கிய அமெரிக்கா | வாசிங்டன் | | 1204 | 728 | 65 | 15 | 20 | 0 | 15 | 212 | 0 | 2 | 457 | 23 | 346 |
| ஐக்கிய அமெரிக்கா | லொஸ் ஏன்ஜல் | 0 | 344 | 285 | 96 | 0 | 9 | 0 | 1 | 53 | 0 | 8 | 97 | 0 | 209 |
| வியட்நாம் | ஹனோய் | 0 | 349 | 8 | 2 | 0 | 5 | 0 | 2 | 7 | 0 | 0 | 280 | 2 | 0 |